

# அம்மா, ப்ளீஸ், எனக்காக..

சிவசங்கரி

# அம்மா, ப்ளீஸ், எனக்காக...

## 1

மணி என்ன?

ஒன்பதா?

நாழியாகிவிட்டது.. ரொம்ப நாழியாகிவிட்டது. சரியாய் ஒன்பதேகாலுக்கு பாங்க் கார் வந்து விடும்; எல்லா டிரைவர்களையும்போல முத்தையன் வாசலில் காரை நிறுத்தி பேம்- பேம்- என்று ஹாரனை அடிக்கமாட்டான் என்றாலும், அவன் வரும்போது நான் ரெடியாய் இல்லாவிட்டால் எப்படி?

பரக்கப்பரக்கக் கொண்டையைப் போட்டுக் கொண்டு, கௌரி சாப்பாட்டு மேஜையின் முன் வந்து அமர்ந்தாள்.

மாது, மெத்துமெத்தென்ற சூடான இட்லிகளைத் தட்டில் வைத்துச் சட்னி, எண்ணெய் பரிமாறினான்.

"விஜய் காபி குடிச்சானா, மாது?"

"கார்த்தால கொண்டு வெச்சதைக் குடிக்கவே யில்லைம்மா.. செத்த முன்னாடி 'டிபன் சாப்பிட வரேளா'னு கேட்கப்போனபோது ஆறி ஏடு படிஞ்ச காபி அப்படியே இருந்தது. அதைச் சுடப்பண்ணலை.

தாயிகிட்டே கொடுத்துட்டு வேற கலந்து எடுத்துண்டு போய், கிட்ட நின்னு குடிக்க வெச்சேன்.. விஜய்க்கு உடம்பு சரியில்லையாம்மா? நாலைஞ்சு நாளாய் என்னமோ மாதிரி இருக்காரே? நா கேட்டா அவர் ஏதோ சொல்லி மழுப்பறார்.."

மாதுவின் கேள்விக்கு என்ன பதில் கூறுவது என்று கௌரிக்குப் புரியவில்லை. பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள். கை, இட்லியோடு விளையாடியது. பசி இல்லை.

எப்படி இருக்கும்? ஒரே பிள்ளை, உயிருக்கு உயிராய், இந்த உலகமே அவன்தான், தன் வாழ்வின் அர்த்தமே அவன்தான் என்று இவள் வாழும் பிள்ளைக்குச் சில நாட்களாய் மனசில் ஏதோ கஷ்டம் இருக்கிறது என்று புரிந்த பிறகு பசி எப்படி எடுக்கும்? இல்லை, வயிறாரச் சாப்பிடத்தான் எப்படிப் பிடிக்கும்?

சாதாரணமாய் விஜய் ஒருத்தன் வீட்டில் இருப்பது கூடப் பத்துப்பேர்கள் இருப்பதற்குச் சமம். அத்தனை கலகலப்பு, அத்தனை சிரிப்பு, அத்தனை பேச்சு.

ஸ்டீரியோ ரெகார்ட் பிளேயரில் 'அப்பா' பாடல்களைப் போட்டுவிட்டு, இருக்கிற சப்தம் போதாதென்று தானும் கிதார் ஒன்றைக் கையில் வைத்துக்கொண்டு அலறுவான்

எட்டு மணிக்கு முன் தூக்கத்திலிருந்து அவன் எழுந்துகொள்வது வழக்கம் இல்லை. கண் விழித்து ...டால் உடனே காபி வேண்டும்.



"மாது, காபி" என்று படுக்கையில் படுத்தபடியே கத்துவான். காபி வந்ததும் அதைக் குடித்துவிட்டு, கொசுறு போலப் பத்து நிமிஷம் திரும்பக் கண்மூடிப் படுத்திருப்பான்.

அம்மாவோடு டிபன் சாப்பிடும் பழக்கத்தைக் கொண்டவன் ஆதலால், எட்டே முக்காலுக்குள் அடித்துப்பிடித்துக்கொண்டு ஷேவ் செய்து, குளித்து, ஈர உடம்பில் ஒட்டும் துணியோடு வந்து உட்காருவான்.

"ஹாய் மம்மி" - என்பான். "யு லுக் நைஸ் டுடே" என்பான். "நாளுக்கு நாள் நீ அழகாயிண்டே வரேம்மா.. அது எப்படி? ரெக்ஸோனா உபயோகிக்கறியா? நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமும் உங்கள் மேனியின் அழகு வளர ரெக்ஸோனா - டட் டடாண்.." என்று விளம்பரத்தில் சொல்லுவதுபோலப் பேசி அவளைச் சிரிக்க வைப்பான்.

தனக்கு ஆகவேண்டிய காரியங்களைஎல்லாம் விஜய் அம்மாவிடம் சாதித்துக்கொள்வது டிபன் நேரத்தில்தான். அந்தக் கால்மணிக்குள் அம்மாவைச் சிரிக்க வைத்து, மனசு பூரிக்க வைத்து, நெகிழ வைத்துத் தனக்கு என்ன காரியம் ஆகவேண்டுமோ அதையும் கூறி, சம்மதம் வாங்கிவிடுவான்.

அப்புறம் மாலையில் கௌரி பாங்கிலிருந்து வரும்போது அவன் எங்கே வீட்டில் இருப்பான்!

நண்பர்களோடு சினிமா, க்ளப் என்று எங்கு சுற்றுவானோ தெரியாது.. இரவு பதினொன்றுக்குக் குறைந்து அவன் வீட்டுக்கு வந்து கௌரி பார்த்ததில்லை.

கல்லூரியில் படிக்கும் சமயத்தில், இப்படி நண்பர்களுடன் சுற்றுவது, இரவு லேட்டாய் வருவது என்பதெல்லாம் அதிகமாகிய சமயத்தில், பத்துமணி வரை பிள்ளைக்காகக் காத்திருந்து அலுத்தவளாய், மறுநாள் காலை கௌரி அவனை லேசாய்க் கோபித்துக் கொண்டதுண்டு.

"என்ன விஜய், படிக்கிற பிள்ளை இப்படி ஊர் சுத்தினா அப்புறம் படிக்க நேரம் ஏது? ஐ டோண்ட் லைக் ஆல் திஸ்-" என்றால், கண்களை மலர்த்திக்கொண்டு அழகாய்ச் சிரிப்பான் விஜய், 'கோபமா? உனக்கா, என் மேலாம்மா?' என்று வியக்கிற மாதிரி.

சிரிப்பதோடு சரி. அம்மாவின் கோபத்துக்கு ஆழமே கிடையாது என்பது அவனுக்குத் தெரியுமாத லால், தொடர்ந்து தன் இஷ்டம்போலத்தான் செய்வான்.

மிஞ்சிப்போய் ஒருமுறை, "என் ஃப்ரெண்ட்ஸ் யார் வீட்டிலேயும் என்ன, ஏதுனு கேள்வி யாரும் கேட்கற தில்லேம்மா... நீயும் ஃபஸ் பண்ணாதயேன்... நாங்க இன்னும் சின்னக் குழந்தைகளில்லே... மம்மி... ப்ளீஸ் அண்டர்ஸ்டாண்ட்" என்றான்.

அந்தப் பேச்சில் 'அம்மா, நீ தொணதொணப்பது எனக்குப் பிடிக்கவில்லை' - என்ற எச்சரிக்கை கலந்திருப்ப தாய்த் தோன்ற, அப்புறம் கௌரி அவனை ஏன், என்ன என்று கேட்பதைக் குறைத்துக்கொண்டாள்.

என்றைக்கு கௌரி அவனைக் கண்டித்திருக் கிறாள், இன்றைக்குப் புதிதாய்க் கண்டிக்க? அதுவும் தலைக்குமேலே வளர்ந்து நிற்கும் பிள்ளை, இருபத்தி ரண்டு வயசான பிள்ளை, தகப்பன் இல்லாத பிள்ளை,



என்ற நினைப்புகள் தோன்றிவிட்டால் அவனை அதட்டுவது என்பது ரொம்ப சங் சமாச்சாரம்.

இப்படி சங்கடப்பட்டு, சங்கடப்பட்டுத்தான் அவன் பள்ளிப் படிப்பைப் பதினேழாவது வயசில் ஒரு தினுசில் பாஸ் செய்தபோதுகூட, பியூஸி. படிக்கும் போதே ஸ்கூட்டர் வேண்டும் என்று பிடிவாதம் பண்ணி வாங்கிக்கொண்டபோதுகூட, படிக்காமல் சிகரெட்டும் சினேகிதர்களுமாய்த் திரிகின்றபோதுகூட கௌரி அதிகம் தன் அதிருப்தியை மகனிடம் காட்டிக் கொண்டவள் இல்லை.

'விஜய் செய்வது நன்றாக இல்லை, வயசுக்கு ஏற்ற பொறுப்பு இல்லை; என்ன இதெல்லாம்? வரட்டும் - இன்றைக்கு உறைக்கிறமாதிரி ஒரு வார்த்தை கேட்கவேண்டும்' என்று கௌரி தீர் மானித்துக் கொண்ட நாட்கள் அனேகம். தீர்மானம் தான் பெரிதாய் இருக்கும்... மகனை நேரில் பார்த்து விட்டால், அவன் 'ஹாய் மம்மி' என்று கழுத்தைக் கட்டிக்கொண்டுவிட்டால், அந்தச் சிரி'ப்பில், அந்தக் குழந்தைத்தனத்தில், அவள் தன் தீர்மானத்தைக் காற்றில் பறக்கவிட்டுவிடுவதுதான் நிஜம்.

என்றைக்காவது அதிசயமாய் மகன் ஒன்றைக் கேட்டு கௌரி இல்லை என்று சொன்னதும் உண்டு.

அப்போதெல்லாம் தலைமீது கூரை இடிந்து விழுந்துவிட்ட துக்கத்தோடு விஜய் அறைக்குள் அடைந்துகிடப்பான். சோகமாய் முகத்தை வைத்துக் கொள்வான். ஆட்டம், பாட்டம்? ம்ஹூம், ஒன்றும்

இருக்காது. எல்லாம் ஒரு அரை நாளுக்குத்தான். ஒன்று, மகனின் ஏக்கம் தாங்காது கௌரி விட்டுக்கொடுத்து விடுவாள்; அல்லது அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு, 'அம்மா... ப்ளீஸ்ம்மா... எனக்காகம்மா... ஒன்லி திஸ் டைம் மம்மி..' என்று விஜய் தன் ட்ரம்ப் கார்ட் கெஞ்சலை, கண்களும், முகமும் ஒருசேரக் கெஞ்சும் கெஞ்சலைக் கெஞ்சி அவளைச் சரிக்கட்டி விடுவான்.

விஜய்யின் அந்தப் பார்வைக்குத்தான் எத்தனை சக்தி! அந்த முகத்துக்குத்தான் எத்தனை சக்தி!

'அம்மா, ப்ளீஸ்' என்று கெஞ்சும் குரலுக்குத்தான் எத்தனை சக்தி!

கௌரி முதலில், மாட்டேன் என்று சொல்லி, பிறகு ஸ்கூட்டரில் பெங்களூர் போனது, நண்பர் களுடன் நேபாள் போனது போன்றவற்றுக்கெல்லாம் சம்மதித்தது இந்த தினுசில்தான்.

ஏன்? அந்த ஸேட்டிடம் விஜய் கடன்பட்டிருந்ததை அறிந்து, இவள் அக்கடனைத் தீர்த்ததும் இந்தக் கெஞ்சலின் காரணமாய்த்தானே?

விஷயம் தெரிந்த அன்று கௌரி அதிர்ந்துதான் போனாள்.

விஜய்யா? ஸேட்டிடம் கடன் வாங்கியிருக் கிறானா?

பாங்க்குக்கு ஸேட் போன் பண்ணி, "உங்க மகன் கடனை நீங்க பொறுப்பெடுத்துக்கறிங்களா, இல்லை நான் ஆக்ஷன் எடுக்கட்டுமா?" என்று கேட்டபோது



தான் அவளுக்கு உண்மை தெரியவந்தது. அன்று முழுவதும் அவளுள் விவரிக்கத் தெரியாத ஒரு படபடப்பு.

ஏன் கடன் வாங்கவேண்டும்? நான் கொடுக்காத பணமா? ஏன்?

இரவு மகன் வரும்வரை காத்திருந்து அவனோடு இது பற்றிப் பேசினாள்.

"என்ன விஜய் இதெல்லாம்? ஸேட்கிட்டே கடன் வாங்கினாயா? அவர் பாங்க்குக்கு போன் பண்ணினார். எனக்கு அவமானமா இருந்தது."

விஜய் முகத்தில் லேசாய் சலனம். உடனேயே சமாளித்துக் கொண்டான்.

"ஓ! அதுவா அம்மா! அதுபத்தி நானே உன்கிட்டே சொல்லணும்னு நினைச்சேன். ஆனா மறந்துட்டேன். சதிஷ் இல்லே மம்மி, சதிஷ்? அவனோட அப்பாவுக்கு உடம்பு முடியாம இருந்தப்போ வைத்தியத்துக்காக இந்த ஸேட்கிட்டே பணம் வாங்கினான். ஷ்யூரிட்டி போடுனு என்னைக் கேட்டான். ஆபத்துக்கு உதவாட்டா எப்படி மம்மி, அதான் போட்டேன்."

"காலேஜ் பசங்க கடன் வாங்க முடியுமா? எதை நம்பிப் பணத்தைக் கொடுப்பான்?"

ஒரு நிமிஷம் தயங்கினான் விஜய். பின் மெதுவாய்ப் பேசினான்.

"என் ஸ்கூட்டர்மேலே கடன் கொடுத்தான், மம்மி... வைத்தியத்துக்குனு கேட்கறப்போ மறுக்க எனக்கு மனசு இல்லே.. ஐம் ஸாரி.."

"......"

ஸ்கூட்டரை வைத்து ஸேட்டிடம் கடன் வாங்கும் அளவுக்கு விஜய் போயிருக்கிறான் என்பதை கௌரியால் நம்ப முடியவில்லை.

இந்தச் சின்னப் பையனா? இவனுக்கா இத்தனை தைரியம்?

கௌரி மௌனமாய் நிற்கையில் விஜய் அவள் கிட்டத்தில் வந்து, கழுத்தைக் கட்டிக்கொண்டான்.

"ஐம் ஸாரி, மம்மி.. உன்கிட்டே பணம் கேட்க பயமா இருந்தது... ஐம் ஸாரி... இனிமே இப்படிப் பண்ணமாட்டேன்.."

பயமா? இவனுக்கா? ஸ்கூட்டரை வைத்துப் பணம் வாங்க இல்லாத பயம், என்னிடம் சொல்ல மட்டுமா?

"அம்மா... ப்ளீஸ்... கோவிச்சுக்காதேம்மா... இந்த ஒரு தடவை மட்டும் ஸேட்டுக்குப் பணம் கொடுத்துடும்மா.. அம்மா.. ப்ளீஸ், எனக்காகம்மா... இன்னொரு தடவை இப்படி நடக்காது.. ஐ ப்ராமிஸ்."

வழக்கம்போலப் பிள்ளையின் கெஞ்சலுக்கு கௌரி அடிபணிந்து, ஸேட்டின் கடனைத் தீர்த்தாலும் இனி மகனிடம் கண்டிப்பாக இருக்க வேண்டும் என்று மனசுக்குள் தீர்மானித்தது உண்மைதான். இப்போது கிட்டத்தட்ட ஆறு மாசங்களாய் விஜய் கொஞ்சம் ஒழுங்காய் இருக்கிற மாதிரிதான் தெரிகிறது.

ஒழுங்கு என்றால், அர்த்தராத்திரி வரை சுற்றல் இல்லை. பத்துக்குள் வந்துவிடுகிறான். சிநேகிதனோடு அங்கே போகிறேன், இங்கே போகிறேன்



என்று ஒருநாள், இரண்டு நாள் போய்வரும் கூத்து இல்லை.

டிகிரி படிப்பைக்கூட முடிக்காமல் விஜய், ஏப்ரல், செப்டம்பர் என்று மாற்றிமாற்றி இரண்டு வருஷங்களாய் முற்றுகை இடுவது பற்றி கௌரிக்கு ஏக குறைதான். இருந்தாலும், என்ன செய்ய?

கௌரியின் அங்கலாய்ப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கும் தினுசில் விஜய் போன நான்காம் மாசம் பேசினான்.

"டிகிரி முடிச்சு என்னம்மா ஆகப்போறது? எம்ஏ., எம்.எஸ்ஸி. முடிச்சவனெல்லாம் வேலைக்குப் பறக்கற நாடு இது.. ஸோ.. நா இனிமே இந்தப் படிப்போடு மண்டையை உடைச்சிக்கப் போறதில்லை. என் ஃப்ரெண்ட் மதுசூதன் தெரியுமாம்மா? அவனோட அப்பா ஆந்திராவில் ஒரு பிஸினெஸ் மாக்னெட்... அவருக்கு மெட்றாஸிலே பெரிய ஆட்டோமொபைல் ஏஜன்ஸி இருக்கு. அதை மதுசூதன்தான் கவனிச்சுக்கறான். 'என் கம்பெனிலே ட்ரெய்னிங்குக்குச் சேருடா - ஒரே வருஷத்திலே நீ முன்னுக்கு வந்துடலாம்'ங்கறான் - ஐம் கோயிங் டு ஜாயின் ஹிம்... என்னம்மா?" -

இந்தமட்டுக்கும் பிள்ளைக்குப் பொறுப்பு வந்ததே என்ற சந்தோஷம் எழ, கௌரி சம்மதித்தாள்.

ஒழுங்காய்ப் பயிற்சிக்குப் போய் வந்த பிள்ளை நான்கு நாட்களாய் இப்படி என்னவோபோல இருப்பது தான் கௌரிக்குக் கவலையாய் இருக்கிறது.

என்னாயிற்று?

நண்பனுக்கும் இவனுக்கும் சண்டையா? மனஸ்தாபமா?

ட்ரெயினிங்குக்குப் போகாமல், சரியாய்ச் சாப்பிடாமல், அறையோடு அறையாக முடங்கிக் கொண்டு, சிரிக்காமல், ஒரு வார்த்தை பேசாமல்- என்ன இதெல்லாம்?

இரண்டு நாட்களுக்குமேல் இந்த மாற்றத்தை அவளால் தாங்கமுடியாது போனதும் இரவு சாப்பாட்டுக்கு உட்கார்ந்த சமயத்தில் "ஏதாவது பிரச்சினையா, விஜய்?" என்று சின்னக் குரலில் கேட்டாள்.

விஜய் தலை நிமிராமலேயே 'நோ' என்றான். சில விநாடிகள் கழித்து 'எனக்குப் பசிக்கலை' என்று முனகிவிட்டு எழுந்து போய்விட்டான்.

சாப்பிட உட்கார்ந்த பிள்ளையிடம் எதையோ கேட்டு, அவனைச் சாப்பிட விடாமல் செய்து விட்டோமே என்று கௌரிக்கு வருத்தம்.

அப்புறம், போன் அடித்தால் விஜய், 'யார் கேட்டாலும் நான் இல்லைனு சொல்லு' என்கிறானே, இது ஏன்?

முதல் நாள் இரவு போன் ஒலித்தபோது கௌரியே எடுத்துப் பேசினாள்.

"விஜய்கிட்ட பேசலாமா" என்றது ஒரு பெண் குரல். அவன் வீட்டில் இல்லை என்ற பதிலைக் கேட்டுவிட்டு, "இப்பவும் வெளியே போயிட்டானா? ஆல் ரைட்! எங்க போனாலும் விடமாட்டேன்னு சொல்லுங்க" என்று கூறியவள், கௌரி மேற்கொண்டு ஏதும் கேட்க இடமில்லாமல் போன் தொடர்பைத் துண்டித்துவிட்டாள்.



ரிஸீவரை வைத்த கௌரிக்கு வெலவெலத்துப் போயிற்று.

'எங்கு போனாலும் விடமாட்டேன்' என்றால் என்ன அர்த்தம்?

விஜய் ஏதாவது பெண் விவகாரத்தில் மாட்டிக் கொண்டுவிட்டானா?

என்ன விஷயம்?

மனசை திடப்படுத்திக்கொண்டு காலையில் முதல் வேலையாய் விஜய்யின் அறைக்கதவைத் தட்டினாள் கௌரி. கதவைத் திறந்த விஜய்யின் கண்கள் சிவந்திருந்தன. முகம் ஜிவுஜிவுத்து உப்பியிருந்தது.

கொட்டும் அருவியாய்க் கலகலக்கும் பிள்ளை அடிபட்டுப்போய் வதங்கிக் கிடப்பதைப் பார்த்த கௌரி பரிதவித்துப் போனாள்.

"என்ன விஷயம், விஜய்? என்கிட்டே சொல்லுப்பா.."

"..................."

"சொல்லுப்பா..... என்ன பிரச்சினை?"

"நீ பாங்குக்குப் போக வேண்டாமாம்மா? நாழி ஆகலை?"

"பேச்சை மாத்தாதே, விஜய்! எனக்கு இன்னிக்கு விஷயம் என்னன்னு தெரிஞ்சாகணும். பாங்க்குக்கு

லீவு போட்டுடட்டுமா, சொல்லுப்பா... நாலு நாளா நீ படற வேதனையைத் தாங்க எனக்கு சக்தி இல்லை... என்னவானாலும் சரி, மனசிலே இருக்கறதைச் சொல்லிடு..."

தலையை நிமிர்த்தி அம்மாவைப் பார்த்த விஜய்யின் கண்கள் லேசாய்க் கலங்கின. உதட்டை அழுந்தக் கடித்துக்கொண்டான். பார்வையைக் கீழே தாழ்த்தினான்.

"நீ இப்போ பாங்க்குக்கு போம்மா... சாயங்காலம் விவரமா சொல்றேன்... ப்ராமிஸ்... இப்ப வேண்டாம்... ப்ளீஸ் மம்மி..."

இரண்டு வரி பேசின விஜய், பாத்ரூமுக்குள் சென்று கதவைத் தாளிட்டுக்கொண்டுவிட்டான்.

"இட்லி அப்படியே இருக்கேம்மா; அதை வெச்சிடுங்கோ - வேற சூடாப் போடறேன்..."

மாதுவின் குரல் கேட்டு கௌரி திரும்பினாள்.

"ம்? பசி இல்லே, மாது... மோர் மட்டும் குடு" என்றவள், எழுந்து கையை அலம்பிக்கொண்டே, "மத்தியானத்துக்கு விஜய்க்குப் பிடிச்சதா பிஸிபேளாவும் உருளைக்கிழங்கு சிப்ஸூம் பண்ணிடு... சாயங்காலம் வந்து நா அவன்கிட்டே பேசறேன்" என்று சொல்வதற்கும், வாசலில் பாங்க்கிலிருந்து கார் வந்து விட்டதற்கு அடையாளமாய் முத்தையன் காலிங் பெல் அடிப்பதற்கும் சரியாக இருந்தது.

## 2

கௌரி ஏறுவதற்குச் சௌகரியமாய் முத்தையன் கதவைத் திறந்து பிடித்திருந்தான்.

முன் ஸீட்டில் அமர்ந்திருந்த சீஃப் காஷியர் சந்திரமௌளியிடம் "குட்மார்னிங்" - என்று 'விஷ்' செய்த கௌரி, பின் ஸீட்டில் உட்கார்ந்து, பின்னோடு வந்த மாது நீட்டிய மதியச் சாப்பாட்டுக் கூடையை வாங்கித் தன் பக்கத்தில் வைத்துக்கொண்டாள்.

கார் நகர்ந்தது.

இவள் பாங்க்கில் இப்படி ஒரு பழக்கம். அன்றாடம் காலை பத்து மணிக்கு பாங்க்கின் வியாபாரம் தொடங்க முக்கிய காரணகர்த்தாக்களாக இருக்கும் இவ்விருவரும் - பாங்க்கின் ஸ்ட்ராங் ரூமைத் (Strong Room) திறக்க அதிகாரம் உள்ள இவ்விருவரும் - நேரம் தவறாமல் பாங்க்குக்கு வந்துவிடவேண்டும் என்பதற்காக, சாந்தோமில் வசிக்கும் தலைமைக் காஷியர் சந்திரமௌளிக்கும், தலைமை அக்கௌண்டண்ட் ஆன கௌரிக்கும் காலையில் டாணென்று பாங்க் ஸ்டாஃப் கார் வந்துவிடும்.

சந்திரமௌளியை அழைத்துக்கொண்டு, இவளுக்கு வண்டி ஒன்பதேகாலுக்கு வரும். அடையாற்றிலிருந்து மௌண்ட் ரோடில் உள்ள பாங்க்குக்கு நிதானமாய், அவசரப்படாமல் செல்லக் கால்மணி நேரம். உள்ளே போய்ச் சாவிகளை எடுத்துக்கொண்டு, கீழே இறங்கிப் போய் கீழ்த்தளத்தில் உள்ள ஸ்ட்ராங் ரூமை அடைய இன்னொரு கால்மணி நேரம். அப்புறம்,

வழக்கமான வைபவங்களுடன் இரும்புப் பெட்டியைத் திறந்து, பணத்தை எண்ணி, மேலே கௌண்டர்களுக்குப் பத்து மணிக்குக் கொண்டுவருவதற்குள் வாடிக்கையாளர் கூட்டம் சேர்ந்திருக்கும்.

அறுபது வருஷங்களுக்கு முன்னால் மலேசியா, சிங்கப்பூர் நாடுகளில் ஏராளமான ரப்பர், தேயிலைத் தோட்டங்களில் பணத்தை முதலீடு செய்து, ஏகமாய்ச் சம்பாதித்துக் கொண்டிருந்த சில முதலாளிகளுக்கு, ஏன் நமக்கென்று ஒரு தனி பாங்க்கை நாமே ஆரம்பிக்கக்கூடாது, நம் செல்வத்தை பத்திரப்படுத்தி வைக்க, அக்கரைச் சீமையில் நாம் சம்பாதிக்கும் பணத்தைத் தாய்நாட்டுக்கு அனுப்பி வைக்க, இன்னும் பல விஷயங்களுக்கும் சௌகரியமாய் இருக்க நாமே ஏன் பாங்க் ஒன்றை உருவாக்கக் கூடாது? - என்ற நினைப்பு தோன்றியதன் விளைவுதான் இந்த வங்கி.

சின்னதாய்த் தொடங்கியது விரைவிலேயே தமிழ்நாட்டில் மட்டும் இருநூற்றுப்பத்தும், இந்தியாவின் இதர பகுதிகளில் முப்பத்திரண்டும், கோலாலம்பூர், பினாங்க், ஈப்போ, சிங்கப்பூர், ஸிலோன், லண்டன் முதலிய இடங்களில் கிளைகளும் கொண்ட ஆலமரமாய் பிரமிக்கத்தக்க விதத்தில் படர்ந்து, உயர்ந்து, வளர்ந்து, விரிந்தது.

பாங்க்குகள் பத்தாண்டுகள் முன் தேசியமயமாக்கப்பட்டபோது இதற்கும் அந்த முத்திரை குத்தப் பட்டுவிட்டது என்றாலும், இந்த பாங்க் மற்ற பாங்க்குகளிலிருந்து கொஞ்சம் அலாதியாய் நிற்பது என்னவோ நிஜம்தான்.



ஆதியில் பல வருஷங்களுக்கு, மேல்நாட்டுப் பழக்க வழக்கங்களில் மோகம் கொண்டு பலரால் நிர்வகிக்கப்பட்டு வந்ததாலோ என்னவோ, தோற்றத்தில் மட்டுமல்லாமல், திறமையிலும், சுறுசுறுப்பிலும் கூட இந்த பாங்க் வித்தியாசமாய் இருப்பதோடு, தொடர்ந்து மக்களின் அபிமானத்தை நல்ல முறையில் பெற்று வருவதும் இதன் தனி விசேஷம்.

அமெரிக்க பாங்க்குகளைத் தவிர வேறு எந்த இந்திய பாங்க்குகளிலும் டெல்லர் வசதி இல்லாத போது, அதை தைரியமாய் முதலில் மேற்கொண்டது இந்த பாங்க்தான்.

பணத்தை ஆயிரக்கணக்கில் போட்டுவிட்டு, அதை எடுக்கவேண்டுமானால், வாடிக்கையாளர்கள் மணிக்கணக்கில் காஷியரிடம் காத்திருப்பதை மாற்றி, இரண்டே நிமிஷத்தில் பணத்தைப் பட்டுவாடா செய்த பெருமை இந்த பாங்க்குக்கு உண்டு.

ஆரம்பத்தில் டெல்லர் வழக்கத்தை இந்த பாங்க் அறிமுகப்படுத்தியபோது மற்ற பாங்க்குகளிலிருந்து 'ஆஹா ஊஹூ' என்று எதிர்ப்புகள் எழுந்தன.

"ரிஸ்க் அதிகம் - இந்தப் பழக்கம் நம் நாட்டுக்குச் சரிப்படாது" என்றார்கள்.

"செலவு அதிகமாகும் - புலியைப் பார்த்துப் பூனை சூடு போட்டுக்கொண்ட கதைதான். அமெரிக்கர், பணத்தில் புரள்பவர்; அவர் பழக்கவழக்கம் நமக்கெதற்கு?" என்றார்கள்.

ஒன்றையும் பாங்க்கின் சேர்மன் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

"ஒரு ரிஸ்க்கும் இல்லே.. சும்மா விவரம் புரியாமல் பேசுகிற பேச்சு இது- அன்றாடம் லெட்ஜரில் கணக்கு பதிவான பிறகு தப்பு எங்கிருந்து வரும்? அதேபோலச் செலவும் அப்படி ஒன்றும் அதிகம் இல்லே... தலைப்பொறுப்பாய் தினம் லெட்ஜர் போஸ்டிங் பண்ண ஒரு ஆள்; அப்புறம், பத்திலிருந்து இரண்டு வரை, பணப்பட்டுவாடா முடியும் வரை, லெட்ஜரைப் பார்த்து டெல்லர்களுக்கு உடனடியாக போன் மூலம் விவரம் சொல்ல உள்ளே ஒரு ஆள்; இவ்வளவுதானே? ஜனங்களை அநாவசியமாய் அரைமணி, ஒருமணி காக்க வைப்பதுதான் பெரிய குற்றம். அவர்களைச் சுருக்க மற்ற வேலைகளை கவனிக்க அனுப்ப ஏதுவான இந்த ஏற்பாடு எத்தனை சிறப்பானது!" என்று சேர்மன் போர்ட் மீட்டிங்கில் ஒரே போடாய்ப் போட்டதும், மற்றவர்களும் தலையாட்டி வரவேற்றனர்.

இந்த பாங்க், தான் செயலாற்றும் விதத்தில் அமெரிக்க பாணியை வெகுவாகப் பின்பற்றியது, பற்றுகிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

வதவதவென்று க்ளார்க், ப்யூன், இதர ஊழியர்கள் கிடையாது. மற்ற பாங்க்குகளில் நூறுபேர்கள் இருந்தால் இதில் ஐம்பதுபேர்கள்தான். அநாவசிய பேச்சு, அரட்டை, காண்டீன் விஸிட் - ம்ஹூம், ஒன்றும் கிடையாது.

பெரிய பட்டப் படிப்பு படித்தவர்களுக்குத்தான் இங்கு வேலை என்பதும் இல்லை; திறமைக்கும், சுறுசுறுப்புக்கும் முதல் இடம். கவர்ச்சி, படிப்பு, யார் வீட்டுப் பிள்ளை என்பதெல்லாம் அப்புறம்.



ஒரு வேலையைக் கெட்டிக்காரத்தனமாய் ஒருவர் முடித்துவிட்டால் மானேஜர் நேரில் வந்துவிடுவார், முதுகில் தட்டிக்கொடுக்க... தட்டிக்கொடுத்து, தட்டிக் கொடுத்து இன்னும் வெகு சிறப்பாய் வேலை செய்யத் தூண்டும் சாமர்த்தியம்..

ஜெமினியைக் கார் தாண்டும்போது, குறுக்கே வந்த பாதசாரியைத் தவிர்க்க, முத்தையன் திடீரென்று ப்ரேக் போட்டான்.

"இடியட் - ஏண்டா காலங்கார்த்தாலே எங்க கார்லே வந்து விழப் பாக்கறே? வேற வண்டி கிடைக்கலை உனக்கு?" என்று உரக்க அவனைத் திட்டின சந்திர மௌலியை கௌரி நிமிர்ந்து பார்த்தாள்.

அவர் தலையைத் திருப்பி இவளை நோக்கவும் சின்னதாய்ப் புன்னகைத்தாள்.

"என்ன, கௌரி? உடம்பு சரியில்லையா? ஏன் என்னமோ மாதிரி இருக்கேள்?"

அவளைவிட வயதில் பெரியவர் சந்திரமௌலி. அதனால் இவளை அவர் கௌரி என்றும், அவரை இவள் மௌலி சார் என்றும் அழைப்பதுதான் வழக்கம்.

மற்றபடி பாங்க்கில் இவள் வயசை ஒத்தவர்கள் இவளை கௌரி என்பார்கள். கொஞ்சம் சின்னவர்கள் மிஸஸ். சங்கர் என்பார்கள்; அதற்கும் சின்னவர்கள் மேடம் என்பார்கள்.

"ஒன்னுமில்லையே, மௌலி சார்."

சிரிக்க முயன்ற கௌரியைப் பார்த்து, "நான் நம்பமாட்டேன்" என்று தலையாட்டினார் மௌலி.

"காரிலே ஏறினதிலேந்து நானும் பார்க்கறேன் - யூ ஆர் நாட் ஆல் ரைட்"

"இல்லை... வந்து விஜய்க்குக் கொஞ்சம் உடம்பு சரியில்லே... அதான்."

"ஓ! ஐம் ஸாரி... ஜுரமா? எங்கயாவது மழைலே நனைஞ்சானா?"

நிஜமான கரிசனத்துடன் அவர் கேட்டதற்கு கௌரி பதில் சொல்வதற்குள் அவர்கள் பாங்க் பக்கவாட்டு வாசல் முன் வண்டி நின்றது.

இண்டியன் ஓவர்ஸீஸ் பாங்க்குக்கும், பாங்க் ஆஃப் அமெரிக்காவுக்கும் நடுவில், ஆனந்தவிகடன் அலுவலகத்துக்கு முன்னால், எட்டு மாடிகளைத் தன் உடம்பாகக் கொண்டு பிரும்மாண்டமாய் நின்றிருந்தது பாங்க்.

காரிலிருந்து இறங்கிக்கொண்டே கௌரி சொன்னாள்:

"லேசாய் ஜுரம்... அவ்வளவுதான்... நத்திங் டு வொர்ரி..."

வாசலில் நின்ற செக்யூரிடி இவர்களுக்கு சலாம் வைத்தான்.

உள்ளே நுழைந்ததும் இதமான ஏ.ஸி. அவர்களைத் தழுவியது. புஸுபுஸுவென்று கார்பெட், சௌகரியமான மேஜை, இருக்கைகள், நீளநீளமாய்த் தொங்கின கர்ட்டன்கள், கண்ணைக் குத்தாமல் எங்கேயோ மறைந்துகொண்டு வெளிச்சத்தை வீசும் விளக்குகள், ங்குமங்குமாய் க்ரோட்டன்ஸ் தொட்டிகள்.



"நாலுபேர்கள் வீணாய்ப் பேசிக் கழிக்கும் நேரத்தில் ஒருவன் உருப்படியாய் வேலை செய்ய வேண்டுமென்றால் முதலில் அவனுக்குச் சௌகரியங்கள் தேவை. வேலையின் அலுப்பு தெரியாதிருப்பது ரொம்ப முக்கியம்" என்று, பாங்க் ஆரம்பித்த நாளில் இருந்த சேர்மன் எண்ணியதால், வெளிநாட்டு பாங்க்குகளுக்கு நாங்கள் கொஞ்சமும் சளைத்தவர்கள் இல்லை என்று பறைஅடிக்கும் அலங்காரம். வியர்வையைத் தலைதூக்க விடாமல் குளிர்சாதன வசதி.

பக்கவாட்டு வாசல் வழியாய் உள்ளே நுழைந்தவர்கள் மெயிலிங் டிபார்ட்மெண்ட், பர்ஸனல் டிபார்ட்மெண்ட், க்ளார்க்குகள் அமரும் இடம் என்று ஒவ்வொன்றையும் தாண்டியதும், சந்திரமௌலி இடப்பக்கம் திரும்பித் தம் டேபிளுக்குச் சென்றார். கௌரி, கண்ணாடித் தடுப்புக்குள் நுழைந்து முன்பக்கம் வந்தாள்.

பிரதான வாயிலைக் கொண்ட அந்தக் கூடம் ரொம்ப நேர்த்தியாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. வலது கோடியில் டெல்லர்கள், கௌண்டர்கள். நடுவில் ஜனங்கள் நிற்க, உட்கார இடம். இடப்பக்கம் மானேஜர் அறை. அதற்கு நேர் எதிரில் சீஃப் அக்கௌண்டண்ட் கௌரியின் இருக்கை. பக்கத்தில் இன்னொரு அக்கௌண்டண்ட் இருக்கை. சற்றுத் தள்ளி இரண்டு டைப்பிஸ்டுகளின் மேஜை; மானேஜர், இவர்கள் தேவைக்காக.

அந்தக் கிளை பாங்க்குக்கு மொத்தம் இரண்டு அக்கௌண்டண்ட்கள். அக்கௌண்டண்ட் பார்த்த

சாரதி, கடன்கள் வெளி விவகாரம் முதலியவற்றை கவனிப்பார். சீஃப் அக்கௌண்டண்ட் கௌரியின் முக்கியப் பொறுப்பு காஷ் டிபார்ட்மெண்டும் உள் நிர்வாகமும்.

மணி ஒன்பது நாற்பது. தன் கைப்பையிலிருந்த சாவிக்கொத்தை எடுத்து மேஜையைத் திறந்து, அதனுள்ளிருந்து இன்னொரு பெரிய சாவிக்கொத்தை எடுத்துக்கொண்டதும், பிரதான வாயிலில் நின்ற காவலாளியை நோக்கித் தலையை ஆட்டிவிட்டு கௌரி உள்ளே போனாள்.

காவலாளி வாயிற்கதவைப் பூட்டினான். விவரம் அறிந்தவர்களுக்கு, பணம் இரும்புப் பெட்டியிலிருந்து மாடி கௌண்டர்களுக்கு வந்துசேரும் அந்தப் பத்து நிமிஷ காலத்துக்கு பாங்க்கின் எந்தக் கதவும் திறக்காது என்று தெரியும்.

கௌரி உள்ளே வருவதற்குள் சந்திரமௌலி தன் சாவிக்கொத்தோடும், அன்றைக்குக் கூடவரும் காஷியரோடும் தயாராய் இருந்தார்.

செக்யூரிடி ஆட்கள் நான்குபேர் உடன்வர, அருகே இருந்த மாடிப்படி வழியாய்க் கீழே, கீழ்த்தளத்துக்குப் போனார்கள்.

கீழ்த்தளத்தில்தான் ஸ்ட்ராங் ரூம், லாக்கர் அறைகள் இருக்கின்றன.

அகலமும், உயரமுமாய் நின்ற இரும்புக் கதவிடம் சென்று கதவின் மண்டையில் இருந்த குமிழ்களைத் தனக்குப் பாடமான நம்பர் சேர்க்கைகளுடன் கௌரி



திருகினாள். கீழே வயிற்றுப் பகுதியில் இருந்த குமிழ்களை சந்திரமௌலி திருகினார். கைப்பிடிக்கு அருகிலிருந்த மேல்துவாரத்தில் தன் சாவியைப் போட்டு கௌரி திறந்ததும், அடித்துவாரத்தில் தம் சாவியைப் போட்டுத் திறந்தார் சீஃப் காஷியர்.

இப்போது செக்யூரிடி ஆள் ஒருவன் முன்னால் வந்து, கதவில் பொருத்தியிருந்த சக்கரத்தை அழுத்திச் சுழற்ற, 'க்ளக்' என்ற சின்ன ஒலியுடன் கதவின் பூட்டு திறந்துகொண்டது.

செக்யூரிடி கதவைத் திறந்தான். அந்தக் கதவின் தடிமன் முக்கால் அடி.

உள்ளே இன்னொரு கம்பிக் கதவு. இதையும் கௌரி, மௌலி இருவரும் தம் தம் சாவியைப் போட்டுத் திறந்தனர்.

ஸ்டராங் ரூம் பெரிய அறைதான். கனத்த இரும்புத் தகடுகளைச் சுவராகக் கொண்ட பாதுகாப்பான அறை.

வலது பக்கம் பூராவும் தனித்தனி சின்ன அறைகளைக் கொண்ட சுவர் அலமாரி. ஒவ்வொரு கம்பார்ட்மெண்டிலும் கட்டுக்கட்டாய்ப் பணம். நூறு, ஐம்பது, இருபது, பத்து, ஐந்து, இரண்டு, ஒன்று என்று ஒவ்வொன்றுக்கும் நான்கைந்து அறைகள். லட்சம் லட்சமாய்க் கட்டிவைக்கப்பட்ட பண்டில்கள்.

கீழே உதிரிச் சில்லறை வைக்கும் பெட்டிகள். நேர் எதிரில் ரிஸர்வ் பாங்க்கிலிருந்து வந்திருக்கும் சில்லறை நாணய மூட்டைகள். இடதுபக்கம் வீணாய்ப் போன நோட்டுகளை வைக்கும் அலமாரி. அதற்குப் பக்கத்தில்

அடமான நகைகள் சின்னச் சின்ன மூட்டைகளாய், சரம் சரமாய் ஹாங்கரில் சட்டை தொங்குவது மாதிரித் தொங்கிக் கொண்டிருந்தன.

பணம் வைத்திருக்கும் அறைகளை கௌரியும், மௌலியும் இரட்டைச் சாவி போட்டுத் திறந்ததும், அன்றைக்கு எவ்வளவு வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டபடி மௌலி கட்டுகளை எண்ணி எடுத்துத் தம் குறிப்புப் புத்தகத்தில் குறித்துக்கொண்டார்.

அன்று வியாழக்கிழமை, ரொம்பப் பணத்தேவை இல்லாத நாள். இப்போதைக்கு முப்பது லட்சம் போதும். தேவையானால் திரும்ப வந்து எடுத்துக் கொள்ளலாம்.

வரிசையாய், அவரவர் செய்யவேண்டிய காரியங்களைச் செய்து முடித்ததும், அதே பத்ததியுடன் கதவுகளை மூடிவிட்டுப் பணத்துடன் மாடிக்குப் போகக் கிளம்பினார்கள்.

செக்யூரிடி ஆள் ஒருவன் மணி அடித்துக் கொண்டே முன்னே போக, மற்றவர் பின்னே பெட்டியில் பணத்துடன் போக, ஊர்வலத்துக்குக் கடைசியில் கௌரி சென்றாள்.

ஆதிநாட்களிலிருந்தே இருக்கும் இந்தப் பழக்கம் சிறு பிள்ளைத்தனமானதாக எப்போதும் கௌரிக்குத் தோன்றும்.

எதற்காக இப்படி மணி அடித்துக்கொண்டு ஊர்வலமாய்ப் போக வேண்டும். 'பணம் வருகிறது, பாரா உஷார்!' - என்று எல்லோருக்கும் சொல்லவா?



உதட்டைக் கீறிக்கொண்டு எழுந்த சிரிப்பை அடக்கிய வண்ணம் கௌரி படியேறினாள்.

## 3

சுதந்திரப் போராட்ட வீரர் வேதாசலத்தின் ஒரே பெண்ணாக ஜனித்த கௌரிக்கு, கல்யாணமாகும்போது பதினெட்டு வயசு.

வேதாசலம், காந்திஜியின் பரம பக்தர். தீரர் சத்திய மூர்த்தியின் ஆப்த சிநேகிதர்.

வாரிக் கொழித்த வக்கீல் தொழிலைத் துச்சமாய் உதறி விட்டுச் சுதந்திர வேள்வியில் குதித்தவர்.

நினைவு தெரிந்த நாளிலிருந்து, வாசல் திண்ணையில் கதர் அணிந்த தலைவர்கள் எந்நேரமும் 'ஜே ஜே' என்று அமர்ந்து உரையாடியதை கௌரி நிறையக் கண்டிருக்கிறாள். எத்தனை திட்டங்கள், எத்தனை பேச்சுக்கள்! என்னென்னவோ காரியங்கள்! எல்லாம் அந்தத் திண்ணையில் உருவாகியிருக்கின்றன.

கௌரியின் அம்மா, அவளுக்கு ஐந்து வயசு நடக்கும் சமயத்தில், டி.பி. வந்து இறந்துபோனாள்.

அம்மா என்ற மனுஷியை நன்றாக, ஆணி அடித்த மாதிரி நினைவு இல்லாவிட்டாலும், அவள் சதா கட்டிலோடு கட்டிலாய்ப் படுத்து, ரத்த ரத்தமாய்த் துப்பி, 'குடும்பத்தை கவனிக்க நேரமில்லாத மனுஷனுக்குக் கல்யாணம் எதுக்கு, குழந்தை குட்டி

எதுக்கு?" என்று வாய் ஓயாமல் முனகியது மட்டும் பளிச்சென்று ஞாபகத்தில் இருக்கிறது. மற்றபடி ஒரு குழந்தைக்குச் சாதாரணமாய் அம்மாவிடமிருந்து கிடைக்கும் கொஞ்சல், சீராட்டு, பாராட்டு- ம்ஹூம், எதுவும் கௌரிக்குக் கிடைத்ததில்லை.

பிற்காலத்தில் தாத்தா - அம்மாவைப் பெற்றவர் - சொல்லிக் கேட்டிருக்கிறாள்: "உங்கம்மா செத்த போது உங்கப்பன் ஜெயில்லே இருந்தான்ம்மா. கொள்ளி வைக்கப் புருஷன் இருந்தும், அந்த பாக்கியம்கூடக் கிட்டாம அவ போய்ச் சேர்ந்தா. நாடு நன்னா இருக்கணும், நாடு சுதந்திரமடையணும்னு பாடுபடறவனுக்கு முதல்லே வீட்டை கவனிக்க நேரம் இல்லையே! யாரைச் சொல்லறது போ- அவ தலைவிதி அனுபவிச்சுட்டுப் போனா...ம்..."

அம்மா செத்தபிறகு தாத்தா, கௌரியை வளர்க்கிறேன் என்றுதான் சொன்னாராம்; ஆனால், அப்பா ஒத்துக்கொள்ளாமல், தன் வயசான அக்காவை ஊரிலிருந்து வரவழைத்தார்: கௌரிக்கும் அப்பாவை விட்டுப் போக இஷ்டமில்லை.

ஆயிரம் இருந்தாலும் அப்பாவை விட்டுவிட்டு எப்படி இருக்க முடியும்? சாதாரணமாய் அமைகிற தொத்தல் அப்பாவா! அப்பா என்றால் எப்படிப்பட்ட அப்பா!

வீட்டில் இருக்கிற சமயத்தில் பாரதியாரின் பாடல்களை அப்பா ராகம் போட்டு, கம்பீர த்வனியில் பாடுவார்.

'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே-' என்று பாடுகையில் உணர்ச்சிவசப்பட்டுப் போவார். தொண்டை அடைக்கும், கண்கள் பனிக்கும். அப்பாவின் இந்த வேகம், கேட்பவர்களுக்கும் தாவி அப்படியே மயிர்க்கூச்சல் எடுத்துவிடும்!



பிற்காலத்தில் நாட்டின் சிறந்த தலைவர்களாய்க் கருதப்பட்டவர்கள் எல்லோரும் அப்பாவைப் பார்க்க வருவார்கள்.

ராஜாஜி வருவார்; காமராஜ் வருவார் - இன்னும் யார் யாரோ!

ராட்டையில் நூல் நூற்றுக்கொண்டே, வட்டமாய் உட்கார்ந்து, மெல்லிய குரலில் ஓயாமல் பேசுவார்கள்.

நீர்மோர் கரைத்து, அத்தை கொடுத்ததைச் செம்பில் எடுத்துப்போய் டம்ளர்களில் விட்டுத் தலைவர்களிடம் நீட்டுவாள் கௌரி.

"அட! கௌரிக் குட்டி - எப்படி இருக்கே?" என்று ஆசையுடன் கேட்டு ராஜாஜி மடியில் இருத்திக் கொள்வார்.

"இவ பாடி நீங்க கேட்கலியே! கௌரி, வந்தேமாதரம், இல்லைனா தண்ணீர் விட்டோ வளர்த்தோம் - பாடும்மா" அப்பாவின் குரலில் பெருமை எட்டிப் பார்க்கும்.

கௌரி பாடுவாள்.

இரண்டு வரிகளை அவள் பாடுவதற்குள் அப்பாவும் கூடவே முனகலாய்த் தொடங்கி, வேகம் தாங்காமல் வாய்விட்டுப் பாட முற்படுவார்.

'எண்ணற்ற நல்லோர் இதயம் புழுங்கியிரு, கண்ணற்ற சேய்போற் கலங்குவதுங் காண்கிலையோ?' என்ற வரிகளைப் பாடும்போது நிஜமாகவே வேதாசலம் கண்களில் தாரை தாரையாய் நீர் பெருகும்.

பொதுக்கூட்டங்களில் அப்பா பேசி கௌரி நிறையக் கேட்டிருக்கிறாள்.

ஆயிரமாயிரம் தலைகள்... திரும்பின இடங்களெல்லாம் தலைகள்.

'வந்தேமாதரம்' என்று அப்பா குரல் கொடுத்தால், லட்சோபலட்சம் வந்தேமாதரங்கள் திரும்பச் செவிப் பறையில் முழங்கும்.

'ஒளி படைத்த கண்ணினாய் வா வா வா' - என்று அப்பா தொடங்கிவிட்டால் கூட்டம் தேன் குடித்த நரியாக மாறுவதை எத்தனையோ முறைகள் கௌரி கண்டிருக்கிறாள்.

'கிலி பிடித்த நெஞ்சினாய் போ போ போ
கீழ்மை என்றும் வேண்டுவாய் போ போ போ'

அப்பா சிங்கக் குரலில் முழங்கும்போது வானம், வையம், அண்டசராசரம் எல்லாம் 'போ போ போ' என்று ஒலித்து, வெள்ளையனை வெளியேற ஆணையிடுவது போல இருக்கும்.

உப்புச் சத்தியாக்கிரகம், வெள்ளையனே வெளியேறு, அந்நிய உடைமைகள் பஹிஷ்காரம் என்று ஒன்று விடாமல் அத்தனையிலும் சம்பந்தப்பட்டு, முன்னணியில் நின்று ஊர்வலத்தை நடத்தினவர் வேதாசலம்.

எத்தனை தடியடிகள், எத்தனை சிறைவாசங்கள்?



எதைச் சொல்ல, எதை விட?

47 ஆம் ஆண்டு சுதந்திரம் வந்த அன்று, இமையோடு இமை சேர்க்காமல் வேதாசலம் உழைத்து, சுதந்திர நாளைக் கொண்டாடினார்.

நகரின் முக்கியத் தெருக்களில் கூட்டம், ஊர்வலம், கொண்டாட்டம், ஏழைகளுக்கு அன்னதானம்.

ஒலிபெருக்கி ஒன்றை வீட்டு வாசலில் பொருத்தி, ஓயாது கௌரியும் மற்றவர்களும் வந்தேமாதரம் சொல்லக் கட்டளை இட்டார்.

'ஆடுவோமே, பள்ளுப் பாடுவோமே, ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம்' என்று கூத்தாடினார்.

இந்தப் பூரிப்பை அவர் அனுபவிக்க இறைவன் எங்கே அவகாசம் கொடுத்தான்?

மறு வருஷம் காந்தி மகான் சுட்டுக் கொல்லப்பட்டபோது, அந்த அதிர்ச்சியைத் தாங்க இயலாதவராய் வேதாசலம் மனசில் ரொம்ப அடிபட்டுப்போய்ப் படுத்த படுக்கையானார்.

மேற்கொண்டு வருஷங்கள் நான்கு போவதற்குள், எந்த ஒரு தினுசிலும் வருவாய் இல்லாமல் போகவே, குடும்பம் நடத்த அவர்கள் திண்டாடித்தான் போனார்கள்.

இண்டரில் கௌரி தங்கப் பதக்கங்களுடன் தேர்வு பெற்றும், உதவிப் பணம் கிடைத்து மேலே படிப்பைத் தொடர வழி இருந்தும், அவள் அதை விரும்பாமல் பள்ளி ஒன்றில் ஆசிரியை உத்தியோகம் தேடிக்

கொண்டு அப்பாவை கவனிக்க வீட்டோடு இருக்கத் தொடங்கியது அப்போதுதான்.

கௌரிக்குப் பதினெட்டு வயசு நடக்கையில், ஒருநாள் அதிருஷ்ட தேவதை அவர்களிடம் வலிய வந்தாள்.

தஞ்சாவூரைப் பூர்விகமாகக் கொண்ட சங்கரின் பெற்றோர், ஒரு நல்ல நாளில் வெற்றிலை, பழம், மஞ்சள், பூவுடன் கௌரியைப் பெண் கேட்டு வந்தனர்.

வேதாசலத்தைத் தன் மானசீக குருவாகக் கொண்டு அரசியலில் இறங்கியவனாம் சங்கர்.

பட்டப்படிப்பைப் பாதியில் விட்டு விட்டு, தேச சுதந்திரப் போரில் ஈடுபட்டவன். சுதந்திரம் வந்தபிறகு டில்லிப் பக்கம் வேலை கிடைத்துப் போய்விட்டான். இப்போது சென்னையிலேயே வேறு உத்தியோகம் கிடைத்ததால் வந்துவிட்டவன், கௌரியை மணக்க விரும்புகிறானாம். சம்மதம் என்றால் உடனே முகூர்த்தத்தை வைக்கலாம் என்றனர் சங்கரின் பெற்றோர்.

வேதாசலத்துக்கும் கௌரிக்கும் பூரண சம்மதம்.

சுதந்திரத்துக்கு முன் வேதாசலம் நிறைய சங்கருடன் பழகியிருக்கிறார். துடிப்பானவன், நேர்மையானவன், தேச பக்தி கொண்டவன் என்று அவனிடம் அவருக்குத் தனி அன்பு உண்டு.

சங்கர் ஆஜானுபாஹு. நல்ல சிவப்பு. தூய கதர் ஆடையில் பளிச்சென்று ஆயிரம்பேர்கள் நடுவிலும் தெரிவான்.



சுபயோக சுபதினத்தில், வடபழனி கோவிலில், சங்கர், கௌரியின் கழுத்தில் மூன்று முடிச்சுகளைப் போட்டான்.

கூறைப் புடைவையும், மாப்பிள்ளை முகூர்த்த வேஷ்டியும்கூடக் கதர்தான்.

சம்பிரதாயத்துக்கு இரண்டு மந்திரங்கள் சொல்லித் தாலி கட்டினபிறகு, முதலில் காந்திஜி படத்தை நமஸ்கரித்த பின்பே பெற்றவர்களிடம் ஆசிக்கு வந்தான் சங்கர்.

அப்பனுக்குத் தப்பாத பிள்ளை என்று சொல்வார்கள், ரொம்பச் சரி. ஆனால், மாமனாருக்குத் தப்பாத மாப்பிள்ளை என்று எங்காவது உண்டோ? வேதாசலத்துக்குக் குன்றுமணி குறையாத தேச பக்தி, எளிமை, மற்ற குணங்களோடு சங்கர் இருப்பதைப் பார்த்த எல்லோரும் மாய்ந்துதான் போனார்கள்.

காலையில் ஐந்து மணிக்கு கௌரியை எழுப்பி விட்டு, தானும் எழுந்திருப்பான். அரை மணி பிரார்த்தனை; அரை மணி நூல் நூற்பு. அப்புறம் வீட்டு வேலைகள்.

பள்ளிக்குச் சென்று வந்த பிறகு மாலை நேரங்களில், விடுமுறை நாட்களில் சுற்றுப்புறங்களில் இருந்த ஏழைக் குழந்தைகளை ஒன்றுகூட்டி வைத்துப் பாடங்கள், தேசியப் பாடல்கள், தலைவர்களின் வரலாறுகள் முதலியவற்றைச் சொல்லிக்கொடுக்கும்படி சங்கர் கௌரியைத் தூண்டுவான்.

விடுமுறை நாட்களில் கூட்டமாய் மொட்டை மாடிப் பந்தலின்கீழ் அமர்ந்து தேசியப் பாடல்களைப் பாடிய வண்ணம் நூல் நூற்பது ஒரு வழக்கம்.

கல்யாணமாகி, முதல் இரவு ஏற்பாடு செய்திருந்த அன்றே கௌரியிடம் மனம் விட்டுப் பேசிவிட்டான் சங்கர்.

பயத்தால் நடுங்கி, நெற்றி முழுவதும் குண்டூசி, குண்டூசியாய் வியர்வை துளிர்க்க நின்றிருந்த கௌரியின் கையைப் பற்றி மெல்லத் தன் பக்கம் இழுத்து, அருகில் அமர்த்திக்கொண்டான். வியர்வையைக் கைக்குட்டையால் துடைத்தான்.

பின், "ஏன் பயப்படறே, கௌரி? நா உன்னை ஒண்ணும் பண்ணமாட்டேன். தைரியமா இரு" என்றான்.

கொஞ்ச நேரம் சாதாரணமாய் எவ்வளவோ பேசிக் கொண்டிருந்துவிட்டு, "உன்கிட்டே நா சில முக்கியமான விஷயங்களைப் பத்திப் பேசலாம்னு இருக்கேன்.. நா சொல்றதை நீ சரியா புரிஞ்சுக்கணும், என்ன கௌரி?" என்றவன், தாம்பத்தியம் என்றால் என்ன, ஆண் பெண் உறவின் அவசியம் என்ன, இவற்றைப் பற்றி காந்திஜி போன்ற பெரியோர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பனவற்றையெல்லாம் நீளமாய்ப் பேசினான்.

"சங்கராச்சாரியார் என்ன சொல்லியிருக்கார் தெரியுமா, கௌரி? தாம்பத்திய உறவைக் குழந்தையை உண்டாக்கற, வம்சத்தை விருத்தி பண்ணற ஒரு புனிதமான செயலாக் கருதி மட்டுமே அதில் ஈடுபடணுமே தவிரவும், மத்தபடி இன்பம்னு நினைச்சு அதை வளர்த்துக்கறது தவறான எண்ணம்னு சொல்லியிருக்கார்... இந்தத் தினுசிலேதான் நம்ப உறவும் அமையணும்னு நா ஆசைப்படறேன், கௌரி. உடம்புக்கு நாம அடிமை ஆயிட்டா அதனாலே பல கஷ்டங்கள், சங்கடங்கள் உண்டாகறது நிஜம்தான். மனசுக்கு உடம்பு அடிமையாகணுமே தவிரவும், உடம்புக்கு புத்தி அடிமை ஆகக்கூடாது; என்ன, கௌரி?

"நீ தியாகியோட பெண்; உனக்கு நா சொல்லி எதுவும் தெரியணுங்கிறது இல்லை, கௌரி. ஆனாலும் உன் கணவன்ங்கற முறையிலே சில விஷயங்களை உன்னோடு பேசித் தீர்வு காண விரும்பறேன்... காந்திஜியின் சத்தியசோதனையும், மத்த புஸ்தகங்களும் நீ படிச்சிருப்பே.. அதுலே அவர் என்ன சொல்றார்னா, நாற்பது வயசுக்கு மேலே உடல் உறவு இருக்கிறது தேவை இல்லேங்கறார்.

"இதையெல்லாம் நம்ம வாழ்க்கைலே நாம் கடைப்பிடிச்சுப் பார்க்கணும்னு எனக்கு ஆசையா இருக்கு.. மனசின் வலிமையை வளர்த்துக்க முதல் மூணு வருஷம் நாம்ப தாம்பத்திய உறவு இல்லாம இருந்துட்டு, பிறகு வம்ச விருத்திக்காக மட்டும் உறவு கொள்ளணும்னு நா நினைக்கறேன்.. உன் ஒத்துழைப்பு எனக்குப் பரிபூரணமாய்க் கிடைச்சா நா ரொம்ப சந்தோஷப்படுவேன், கௌரி..."

கௌரி யாருடைய பெண்? வேதாசலத்தின் அன்பு மகள் அல்லவா? சங்கரின் இந்தத் திட்டத்துக்கு அவளா முகம் சுளுங்குவாள்?

தெளிந்த முகத்தோடு கணவனை நிமிர்ந்து பார்த்தவள் உதடுகளில் சின்னச் சிரிப்பு... 'உங்கள் இஷ்டம் வேறு, என் இஷ்டம் வேறா?' என்று கேட்கும் சிரிப்பு... 'பூ - எத்தனை சின்ன விஷயம்... இதற்கு இவ்வளவு பீடிகையா' என்று கேட்கும் சிரிப்பு.

கௌரியின் சம்மதம் தனக்கு அளித்த குதூகலத்தைக் காட்டிக்கொள்ளும் நினுசில் அவள் கைகளை எடுத்துத் தன் நெஞ்சில் பதித்துக் கொண்டான் சங்கர்.

"ஜெயப்ரகாஷ் நாராயணன், தெரியும் இல்லையா? திருமணமான நாளிலிருந்தே அவரும் அவர் மனைவியும் அண்ணன் தங்கை போல வாழ்கிறார்களாம். நமக்கு அந்த மாதிரி வாழ்வு தேவையில்லை. மனசைக் கட்டுப்படுத்திய கணவன், மனைவியாகவே நாம் இருக்கணும், என்ன கௌரி?"

இருந்துதான் காட்டினார்கள்.

அந்த மூன்று வருஷமும் சின்ன முகச்சுளிப்பு கூட இல்லாமல், உதடுகளில் நெளியும் புன்னகையுடன், நிர்மலமான மனசுடன் இருவரும் இருந்துதான் காட்டினார்கள்.

கணவனின் தூண்டுதலால் பள்ளி, மற்ற வேலைகள் செய்தது போக பாக்கியிருந்த நேரத்தில் டைப்பிங் இன்ஸ்டிட்யூட்டுக்குப் போய் இரண்டே வருஷத்தில் ஹையர் பாஸ் செய்தாள். அருகிலிருந்த குப்பத்துப் பிள்ளைகளுக்குச் சுகாதாரமும், ராட்டை நூற்பும், பாரதியார் பாடல்களும் கற்றுக் கொடுத்தாள்.

இப்படி ஒரு இனிமையான தாம்பத்தியம் அமைவது சாத்தியமா என்று அனைவரும் வியக்கும்



வண்ணம் அந்த மூன்று வருஷங்களை வாழ்ந்து காட்டிவிட்டு, திட்டமிட்டபடி நான்காம் வருஷம் அழகான ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தபோது கௌரியின் சந்தோஷத்துக்கு எல்லை இல்லாமல் இருந்தது.

## 4

"அம்மா.."

கல்கியின் சிவகாமியின் சபதத்தில் லயித்திருந்த கௌரி திரும்பினாள்.

அவளுடைய ஆறு வயசுப் பிள்ளை விஜய்தான்.

மைதானத்தில் விளையாடிக்கொண்டிருந்தவன் பாதியில் வேகுவேகென்று ஓடி வந்திருந்ததால் மூச்சிறைத்தது.. முகம் ஜிவுஜிவுத்திருந்தது.. வியர்வை ஆறாகப் பெருகியது.

"என்னடா, கண்ணா? ஏன் இப்படி ஓடிவரே? பாரு, மூஞ்சி உடம்பெல்லாம் ஒரே வேர்வை!"

வாஞ்சையோடு மகனைக் கிட்டத்தில் இழுத்துத் தலைப்பால் கௌரி ஒற்றும் முன் விஜய், "அம்மா - ஐஸ் க்ரீம் வண்டி வந்திருக்கு - எல்லாரும் வாங்கிச் சாப்பிடறாம்மா.." என்றான்.

கண்களை முட்டைகளாய் விரித்துக்கொண்டு ஐஸ்க்ரீமின் ருசி நாவில் தங்கப் பேசும் மகனைப் பார்த்தால், கௌரிக்குப் பாவமாய் இருந்தது

"ஐயையோ... அப்பா வைவார்டா, கண்ணா... வேண்டாம்பா... சமத்து இல்லே!"

சங்கருக்கு இப்படித் தெருவில் விற்பதையெல்லாம் வாங்கித் தின்பது அடியோடு பிடிக்காத விஷயம்.

'பூம் பூம்' என்று தகரக் கூம்பை வாயில் வைத்து ஊதிக்கொண்டு வரும் பம்பாய் மிட்டாய்க்காரன், தன் கையால் கம்பத்தில் சுற்றியிருக்கும் பாகு மிட்டாயை இழுத்து, காசை நீட்டும் பையன்களின் கையில் ரிஸ்ட் வாட்ச் என்றும், மோதிரம் என்றும் சுற்றிவிடுவதையும், கை வண்டியில் பத்தை போட்ட மாங்காய்த் துண்டங்களை வைத்துக்கொண்டு மிளகாய், உப்பு தூவித் தருவதையும், குச்சி ஐஸ் விற்பதையும், ஈ மொய்க்க மொய்க்கப் பள்ளிகளின் வாசலில் அமர்ந்து கமர்கட், தேங்காய் பர்பி விற்பதையும் காண நேரிடும்போது சங்கரிடம் சுர்ரென்ற கோபம் எழுவதுண்டு.

"மூக்கைச் சிந்திப் போடற கையைத் துடைக்கறது கூட இல்லே... அந்தக் கையாலேயே மிட்டாயை எடுக்கறான், பிஞ்சுக் குழந்தைகள் கையிலே கட்டறான்! ஈ மொய்ச்ச மாங்காய்த்துண்டு, கமர்கட், பர்பி எல்லாத்தையும் வெயில் நேரத்துலே குழந்தைகள் வாங்கித் தின்னா உடனே தாகம் எடுக்கும், கிடைச்ச தண்ணீரைக் குடிக்கும். அப்புறம் வேற வினையே வேண்டாம்! இந்த ஐஸ்க்ரீமைச் சொல்லு-நல்ல தண்ணி விட்டு எங்கே பண்ணறான்? சாக்கடைத் தண்ணி மாதிரி ஒரே அழுக்கு... அன்னிக்கு ஐஸ் கட்டி வாங்கப் போனபோது இதைச் செய்யற விதத்தையும் பார்த்துத் தொலைச்சிட்டேன்! சுத்தம் சுகாதாரம் தெரியாதவா



எதுக்காக இப்படி திங்கற பதார்த்தங்களைத் தயாரிக்கிற தொழில்லே இறங்கணும்? பேசாம செங்கல் சூளை வைக்கக் கூடாதா? அட, வேற ஏதாவது பண்ணக் கூடாதா? வளர்ற சின்னக் குழந்தைகளோட பல வீனத்தைக் காசாக்கற இந்தக் கூட்டத்தைத் தடுக்க அரசாங்கம் ஒண்ணும் நடவடிக்கை எடுக்கமாட்டேங்கறதே! நமக்குச் சுதந்திரம் கிடைச்சு என்ன பிரயோஜனம்?"

தெரியாத்தனமாய், 'குழந்தை ஆசைப்படுகிறானே, ஷர்பத் வாங்கித் தரலாமா' என்று பீச்சுக்குப் போன ஒரு சமயம் கௌரி கேட்டதற்கு, சங்கரிடமிருந்து இந்த தினுசில் நீளமான பதில் ஒன்று கிடைத்த பிறகு, திரும்பவும் இது குறித்துக் கணவனிடம் அவள் பேசினவளில்லை.

ஆனால், மற்றொரு நாள் எதிர்வீட்டுப் பையன்கள் குச்சி ஐஸ் சாப்பிடுவதைக் கண்டு, தனக்கும் அது வேண்டும் என்று பிழியப்பிழிய விஜய் அழுவதைத் தாளமுடியாமல், கணவனுக்குப் பிடிக்காததைச் செய்கிறோமே என்ற குற்ற உணர்வையும் மீறிக்கொண்டு அன்று ஒரு ஐஸ்க்ரீமை வாங்கி விஜய்யிடம் தந்து, "அப்பாகிட்ட சொல்லாதே!" என்று மெள்ளக் கிசுகிசுக்கவும் செய்தாள்.

விஜய்க்கு வயசு ஏற ஏற, இப்படி கணவனுக்குத் தெரியாமல் இங்குமங்கும் சில காரியங்களைப் பிள்ளையின் சந்தோஷத்துக்காக கௌரி செய்வது வழக்கமாக ஆயிற்று.

பின்னே? ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு என்பது போல, இருப்பது கறிவேப்பிலைக் கொத்தாய்

இவன் ஒருத்தன்தான். இவனைச் சீரோடும் சிறப்போடும் ஊரார் மெச்சும் நன்னடத்தையோடும் வளர்க்க வேண்டும்தான். நான் இல்லை என்றோ, வேண்டாம் என்றோ சொல்லவில்லை. ஆனால் பச்சைக் குழந்தை; இப்போதுதான் ஆறு முடிந்து ஏழாவது நடக்கிறது. அந்த வயசுக்கு எத்தமாதிரி கொஞ்சம் விட்டுக் கொடுத்து நடத்தினால் என்ன?

திருமணமானதும் இருந்த கறார்ப் பழக்கங்களில் பல இப்போது அவர்கள் வீட்டில் குறைந்துவிட்டன என்றாலும், இன்னும் கொஞ்சம் கரிசனத்தோடு கணவர், பையனிடம் நடந்துகொண்டால் என்ன என்ற ஆதங்கம் கௌரியினுள் அவ்வப்போது தோன்றவே செய்தது.

காலை ஐந்துக்கு எழுந்து பிரார்த்தனை நடத்தி, ராட்டையில் நூல் நூற்பது, பள்ளியில் ஆசிரியையாய் இருந்து அக்கம்பக்கக் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தது எல்லாம் இப்போது அடியோடு நின்றுவிட்டதுதான்.

இவன் பிள்ளை உண்டான சமயத்தில் மசக்கை, வாந்தி, அது, இது என்று தலை தூக்காமல் படுத்திருந்த போது கொஞ்சம்கொஞ்சமாய் விட்டுப் போனவை, போனது போனதுதாண்டா என்று நின்றுபோயே விட்டன.

மசக்கைக்கு அப்புறம் குழந்தை பிறந்துவிட்டது. குழந்தைக்கு ஐந்து மாசங்கள் ஆன சமயத்தில் ராத்திரி படுத்த அப்பா, காலையில் எழுந்திருக்கவே இல்லை. தூக்கத்திலேயே நிம்மதியாய்ப் போய்விட்டார் அப்படியொரு அபூர்வமான சாவு.



அப்பாவை இழந்த துக்கத்தைக் குழந்தையின் சிரிப்பில், விளையாட்டில் மறக்க கௌரி முற்பட்டாள். காணாததைக் கண்ட மாதிரி தாயன்பு அவள் நெஞ்சில் பீறிட்டதால், அவள் உலகமாக விஜய் ஆனான். அவனோடு எழுந்து, அவனோடு உண்டு, அவனோடு உறங்கி- எல்லாம் விஜய்தான்.

ஏழைக் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பது, அவர்களுக்குத் தேவையான உபகாரங்களைச் செய்வது எல்லாம் கொஞ்சம்கொஞ்சமாய்த் தேய்ந்து அடியோடு மறைந்த நாளில், சங்கர் அவளிடம் இது விஷயமாய்ப் பேசவே செய்தான்.

"இப்படி குழந்தைக்கு ரொம்ப அளவுக்கு மீறின கவனிப்புக் கொடுக்கறது அனாவசியம்னே நா நினைக்கறேன், கௌரி. மடியைவிட்டு எறக்காம இருக்கறது எதுக்காக? பால் குடிச்ச நேரம் தவிர குழந்தையை விளையாட விட்டா நீயும் வேற வேலையை கவனிக்கலாமே! என்ன கௌரி? பக்கத்துத் தெரு ஹையர் செகண்டரி பள்ளிக்கூடத்துலே ஒரு டீச்சர் வேணுமாம்... காரத்தால எட்டிலிருந்து பன்னெண்டு வரைதான் வேலை. நீ வேணா போய்ப் பார்க்கறியா...என்னம்மா?"

கௌரி சில நிமிஷங்களுக்கு பதில் பேசவில்லை பின் சின்னக் குரலில் பேசினாள்:

"ஒரு வயசுகூட ஆகாத குழந்தையை விட்டுட்டுப் போறது சரினு மனசுக்குத் தோணலை.. எனக்கு அந்த வேலை வேண்டாம்."

"தனியாவா விட்டுட்டுப் போகப்போறே, கௌரி..? பக்கத்து வீட்டம்மாகிட்டே பார்த்துக்கச் சொல்லி விட்டுட்டுப் போனாப் போறது.. அவர் தங்கமா பாத்துப்பாரே?"

ம்ஹூம் என்று தலையை அசைத்தாள் கௌரி.

"என்ன கௌரி.. இப்படிப் பிடிவாதம் பண்ணினா அப்புறம் நா என்ன செய்யறது, சொல்லு?"

தலையை நிமிர்த்திக் கணவனைப் பார்த்த கௌரியின் கண்களில் நீர் நிறைந்திருந்தது.

"தாய்ப்பாசம் இல்லாம நா ரொம்பக் கஷ்டப் பட்டிருக்கேன்.. எனக்கு நினைவு தெரிஞ்சப்புறம்தான் அம்மா செத்துப்போனா.. ஆனா அந்த வயசிலேயே நா அம்மாவோட கவனிப்பு இல்லாம எத்தனை தவிச் சிருக்கேன், தெரியுமா? வயசான அத்தை இருந்தா... ஆனாலும், அம்மா இருந்திருந்தா எத்தனை நன்னா இருக்கும்ன்னுதான் நினைச்சுப்பேன்... ஒரு வயசுகூட ஆகாத குழந்தையை இன்னிக்கு ஒரு வேளை தனியா யார்கிட்டயோ விட்டுட்டு வேலைக்குப் போற பழக்கம் உண்டாயிடுத்துன்னா, நாளைக்கு முழுநாளும் போகத் தோணும். நன்னா அலங்காரம் பண்ணிண்டு வெளிலே கிளம்பற சமயத்துலே குழந்தை 'என்னைத் தூக்கிக்கோ'னு சொல்றதுகூடக் கஷ்டமா இருக்கும்.. என் பிள்ளை என் மாதிரி தாய்ப்பாசத்துக்கு ஏங்கக் கூடாதுனு நா நினைக்கறேன்.. நீங்க நா சொல்றதைச் சரியா புரிஞ்சிண்டேளா?"

தான் சொல்ல வருவதைக் கோர்வையாகச் சொல்லத் தெரியாமல் நிறுத்திநிறுத்திப் பேசின



கௌரி, முடிவில் சின்னதாய் விசும்பிவிசும்பி அழ முற்பட்டதும், சங்கர் கிட்டத்தில் வந்து உட்கார்ந்து, அவளை அணைத்துக் கொண்டான்.

"அசடே... இதுக்காக யாராவது அழுவாளா? உனக்கு இஷ்டம் இல்லைனா வேண்டாம், கௌரி.. உன் மனசு எனக்குப் புரியறது."

அவன் குரல் இதமளிப்பதாய் இருந்தது. அணைத்திருந்த கையால் தோளில் தட்டிச் சமாதானம் செய்தான்.

விஷயம் அதோடு முடிந்துவிட்டது.

"அம்மா.."

கௌரியின் கைகளைப் பிடித்து உலுக்கினான் விஜய்.

"ஐஸ்க்ரீம் வண்டிக்காரன் நம்மாத்தைத் தாண்டிப் போயிட்டான்.. சீக்கிரம்மா.. எழுந்து பணம் தாம்மா..."

"இன்னிக்கு வேண்டாம், விஜய்.. எண்ணெய் தேய்ச்சுத் தலைக்கு விட்டிருக்கேன்.. ஜில்லுனு தின்னா ஜுரம் வந்துடும்..."

"அம்மா... அம்மா... ஜுரம் வராதும்மா... இது பிஸ்தா ஐஸ்க்ரீம்மா.. சாதாரண குச்சி ஐஸ் இல்லே.. ரொம்ப ஒசத்தி..."

"அப்பாக்குத் தெரிஞ்சா கோச்சுப்பார், கண்ணா.. சமர்த்தோன்னோ; பிடிவாதம் பண்ணாதேடா..."

"அப்பாக்கு எப்படிம்மா தெரியும்? அவர் ஆபீஸ்லேந்து வரத்துக்கு நாழியாகுமே... அம்மா..

எனக்காகம்மா... இந்த ஒரு தடவை மட்டும்மா... எனக்கு ஆசையாயிருக்கும்மா..."

இப்படிக் கண்களை விரித்துக்கொண்டு, பரிதாப மாய் முகத்தை வைத்துக்கொண்டு, 'அம்மா... எனக் காகம்மா...' என்று கெஞ்சும் கெஞ்சலைத் தவிர்க்க மனசு வரவில்லையே!

என்ன பார்வை இது! நெஞ்சை ஊடுருவிப் பார்த்து, அதைத் தன் வசப்படுத்திக்கொள்கிற மாதிரி இது என்ன பார்வை?

அந்தப் பார்வையையும், கெஞ்சலையும் தாங்க முடியாதவளாய் எழுந்த கௌரி, காசைப் பிள்ளையிடம் கொடுத்து. "சீக்கிரம் சாப்டுட்டு, கை வாயெல்லாம் அலம்பிண்டுடு..." என்றும் சொன்னாள்.

குதித்துக்கொண்டு விஜய் ஓடினான்.

விஜய் அப்படியே சங்கர்தான். ஒரே அச்சில் அப்பாவையும், பிள்ளையையும் முக்கிச் செய்ய வேண்டும் என்ற ஆசை, படைத்தவனுக்கு உண்டாகி யிருக்குமோ? அதுதான் இப்படி ஒரே நிறம், ஒரே முகம், ஒரே குரல் என்று எல்லாம் ஒரே தினுசாய் இருக்கிறதோ?

ஆமாம், இவன் பெரியவனானால் குணத்தில் யார் மாதிரி இருப்பான்?

சங்கர் மாதிரி இருப்பானா?

மனசில் பெரிய சங்கரையும், பெரிய விஜய்யை யும் நிறுத்திப் பார்க்கையில் பிள்ளையின் குணம்



அப்பாவினுடையதிலிருந்து ரொம்ப மாறுபட்டிருக்கும் என்றே கௌரிக்கு நினைக்கத் தோன்றிற்று.

ஏன் வித்தியாசமாய் விஜய் இருப்பான் என்று நான் நினைக்கிறேன்? எல்லாவற்றுக்கும் அப்பாவைக் கொண்டிருப்பவன், ஏன் குணத்துக்கும் கொள்ளக் கூடாது? இப்போது சின்னக் குழந்தை; விளையாட்டு புத்தியாய் இருக்கிறதை வைத்துக்கொண்டு பின்னால் இவன் எப்படி இருப்பான் என்று கணிப்பது தப்பில்லையா?

என்ன தப்பு? விளையும் பயிர் முளையிலே என்று சொல்வார்களே! விஜய்க்கு ஆசைகள் ரொம்ப அதிகம்... அந்தக் கணக்குப்படிப் பார்த்தால் இவன் அப்பா மாதிரி இருக்கமாட்டான் என்று தோன்றுகிறது-

வாஸ்தவம்தான். விஜய்க்கு நெஞ்சு பூராவும் ஆசை. இந்த ஆறு வயசில் தனக்கு இந்த மாதிரியெல்லாம் ஆசைகள் இருந்தனவா என்று கௌரி யோசித்ததுண்டு- இல்லை. இத்தனை இல்லைதான்.

"அம்மா, நா பெரியவனானதும் மஹாராஜா மாதிரி அரண்மனையில இருப்பேன்; பெரீய கார்லே போவேன்; ப்ளேன் வெச்சிருப்பேன்; குதிரைலே சவாரி செய்வேன்..." என்று நீளமாய் விஜய் தன் எதிர் காலத்தைப் பற்றிப் பேசும்போது கௌரி, 'பிள்ளைக்கு எத்தனை விஷயம் தெரிந்திருக்கிறது' என்று பூரித்துப் போவாள். "முதல்லே புஸ்தகத்தை எடுத்து வெச்சிண்டு படிக்கறதைப் பாரு, விஜய்... நாளைக்கு டெஸ்ட் இருக்கு - அதுலே நல்ல மார்க் வாங்கறதை விட்டுட்டு,

எதிர்காலத்தைப்பத்தி அளவுக்கு மீறிக் கனவு காண்ற துலே என்ன உபயோகம்?" என்பான் சங்கர்.

தூரத்தில் ஐஸ்க்ரீம் தின்றபடி வரும் விஜய்யைப் பார்த்த நிமிஷத்தில், மறுநாள் அவனுக்குக் கணக்கில் பரிட்சை இருப்பது ஞாபகத்துக்கு வந்தது.

படிப்பில் விஜய் ஏனோ ரொம்ப சுமாராய்த்தான் இருக்கிறான். விளையாட்டு புத்தி, சின்ன வயசு என்று விட்டுக் கொண்டே இருந்தால் எப்படி?

நாளைய பரிட்சையில் போனமுறை மாதிரி சுழித்துக் கொண்டு வந்தால் கணவன் என்ன தண்டனை கொடுப்பான் என்பது நினைவில் மின்னலிட்டது.

சங்கர், பிள்ளையைத் திட்டியோ கை நீட்டி அடித்தோ கௌரி இத்தனை வருஷங்களில் பார்த்த தில்லை. விஜய் ரொம்பக் குழந்தையாய் இருக்கையில் தப்பு செய்தால் தீர்க்கமாய் ஒரு பார்வை பார்ப்பான்; நான்கு வயசு ஆன பிறகு அரை மணிக்குச் சுவரைப் பார்த்துக்கொண்டு அறையின் ஒரு மூலையில் உட்கார வைப்பான். அவ்வளவுதான். ஆனால், இப்போது ஆறு வயசு பூர்த்தியாகிவிட்ட இந்தச் சில மாசங்களாய் சங்கர் விஜய்க்குக் கொடுக்கும் தண்டனை ரொம்ப நூதனமாய் இருக்கிறது. விஜய் தப்பு செய்திருப்பதை சங்கர் உணர்ந்துவிட்டால் அன்று பூராவும் பிள்ளைக்கு வெறும் மோர்சாதம்தான். தொட்டுக்கொள்ளக்கூட ஒன்றும் கிடையாது.

தூங்கி எழுந்தால் காபியில் ஆரம்பித்து, நன்றாய் வக்கணையாய் ருசித்துச் சாப்பிட விஜய்க்குப் பிடிக்கும்.



அதனால் 'வருகிற ஞாயிறு பூராவும் விஜய்க்கு மோர்சாதம்தான்' என்று ஒரே வரியில் சங்கர் சொல்லிவிட்டால் கௌரியின் மனசு பரிதவித்துப் போகும்.

மனசு கேட்காமல், தான் அறியாதபடி விஜய்க்கு அவள் உணவு கொடுக்க முயற்சிக்கலாம் என்பது தெரிந்த சங்கர், தண்டனையை ஞாயிற்றுக்கிழமைதான் வைத்துக்கொள்வான்.

பிள்ளைக்கு மோர்சாதத்தை வைத்துவிட்டு அவனுக்கெதிரிலேயே தாங்கள் அறுசுவையோடு உண்ண வேண்டும் என்பான் சங்கர்.

"நாக்கைக் கட்டுப்படுத்தத் தெரிஞ்சுட்டா உலகத்துலே பிரச்சினையே இருக்காது. உன் பிள்ளையை நா பட்டினியா போடறேன்? நாலு வேளை மோர்சாதம் சாப்பிட்டா என்ன குறைஞ்சிடும்? நீ இதுலே தலையிடாதே, கௌரி-" என்று முதல் நாளே ரொம்பக் கண்டிப்புடன் சங்கர் பேசிவிட்டான்.

நாளைக்குப் பரிட்சையில் நல்ல மார்க் வாங்கா விட்டால், அந்த ஞாயிறு பிள்ளைக்கு இந்தத் தண்ட னையைக் கணவன் விதித்துவிடலாம் என்ற பயம் எழ, "விஜய், உள்ளே வா... விளையாடினது போதும். ஹோம்வொர்க் பண்ணு, வா-" என்று குரல் கொடுத்தாள் கௌரி.

## 5

கௌரி, கையில் வைத்திருந்த ப்ராக்ரஸ் ரிப்போர்ட்டையும், எதிரில் நின்ற விஜய்யையும் மாறி மாறிப் பார்த்தாள்.

வயிறு பக்கென்றது, மனசு படபடவென்று துடித்தது.

"என்னடா இது, விஜய்?"

விஜய் பதில் சொல்லாமல் தரையைப் பார்த்தான்.

கணக்கு - இருபத்து எட்டு, ஆங்கிலம் - பதினாறு, தமிழ் - முப்பது, சரித்திரம் - இருபது...

விஜய் அரை ஆண்டுத் தேர்வில் வாங்கியிருந்த மார்க்குகள் சிவப்புக்கோடு வாங்குவதில் ஒன்றுக்கொன்று அக்காவாக இருந்தன. கால் ஆண்டுப் பரிட்சையில் இவ்வளவு மோசமில்லை. தடுக்கி விழுந்து பாஸ் லைனை எல்லாம் தொட்டிருந்தன. அன்று இவள் கையில் ரிப்போர்ட்டைக் கொடுத்து விட்டு விஜய் என்னென்னமோ காரணங்களை முனகினான்.

டீச்சருக்கு அவனைக் கண்டால் பிடிக்கவில்லையாம். இவன் எழுந்து சந்தேகம் கேட்டால் காதில் விழாதது மாதிரி நடந்துகொள்கிறாராம். காரணமில்லாமல் அடிக்கிறாராம். திட்டுகிறாராம். ஒண்ணரை முழத்துக்கு நீளமாய்க் காரணங்களைச்



சொல்லி, "அப்பாகிட்ட சொல்லாதேம்மா... ப்ளீஸ்ம்மா... அடுத்த பரிட்சையிலே நன்னா படிச்சு, நிறைய மார்க் வாங்கறேன்ம்மா... ப்ராமிஸ்... ப்ளீஸ்ம்மா... ப்ளீஸ்..." அவள் தாவாக்கட்டையைப் பிடித்துக்கொண்டு பிழியப்பிழிய அழுதான்.

கௌரிக்குப் பாவமாகப் போய்விட்டது. பத்து வயசுச் சின்னப்பிள்ளை - ஒரே பிள்ளை, அபூர்வமாய் பிறந்திருக்கும் ஒரே பிள்ளை, விளையாட்டு புத்தியால், படிக்காமல் இருந்துவிட்டான் போலிருக்கிறது; தன் தப்பை உணர்ந்துவிட்டான், அடுத்த முறை நன்றாய்ப் படிப்பதாய்ச் சொல்கிறான், கொஞ்சம் விட்டுப் பிடித்தால் என்ன?

கௌரி யோசித்தாள். வசையாய் சங்கர் வேலை விஷயமாய் வெளியூர் போயிருப்பது சௌகரியமாய் இருந்தது. திரும்ப நாலு நாளாகும்.

'நீங்க ஊர்லே இல்லே; மறுநாளே கையெழுத்துப் போட்டு ரிப்போர்ட்டைக் கொண்டு வரணும்னுட்டா, அதான் நானே கையெழுத்துப் போட்டு அனுப்பிச்சுட்டேன்' என்றால்?

மார்க் எல்லாம் என்ன என்று கேட்பாரே!

'சுமாராய்த்தான் வாங்கி இருக்கான்' என்று அரைகுறையாய்ச் சொல்லி மழுப்பிவிட்டால்? உடனடியாய் வகுப்பு ஆசிரியரைச் சந்தித்து ட்யூஷனுக்கு ஏற்பாடு பண்ணிவிட்டால்!

அதுதான் சரி.

இந்த விதத்தில் கணவனுக்கும் ரொம்ப மனசு வேதனை உண்டாகாது, பிள்ளையும் இந்த முறை

தப்பிவிடுவான். அடுத்த பரீட்சைக்குள் அவனை நன்றாய்த் தயார் செய்து, சிறப்பாய் மார்க் வாங்க வைத்து, 'பார்த்தேளா, நம்ம பையன்மேலே தப்பு இல்லை. அந்த வாத்தியார்தான் குணம் கெட்டவர்; இப்போ டியூஷன் அவர்கிட்ட எடுத்துக்கறதாலே, மனுஷனுக்குக் கோபம் இல்லை' என்று சொல்லிக் காட்டினால்?

மனசுக்குள் நூறு வேண்டாத யோசனைகளைப் பண்ணி ஒரு முடிவுக்கு வந்த கெளரி, அந்த முறை ரிப்போர்ட்டில் தானே கையெழுத்துப் போட்டுக் கொடுத்தாள்.

தொடர்ந்து மறுநாள் பள்ளிக்குப் போய் விஜய் யின் வகுப்பாசிரியரைக் கண்டு பேசினாள்.

தான் இன்னாரின் மகள், விஜய் இன்னாரின் பேரன் என்று பேச்சுவாக்கில் கெளரி சொன்னதும், அவர் மகிழ்ந்துபோனார்.

வகுப்பாசிரியர் வேதாசலத்தின் பக்தராம். சுதந்திரப் போராட்டத்தின்போது குடும்பம், வேலை என்று அத்தனையும் விட்டுவிட்டுத் தீவிரமாய் அதில் ஈடுபட்டவராம், சொன்னார்.

சாதுவாய், அடக்கமாய்ப் பேசும் இவரா விஜய்யைக் காரணமில்லாமல் திட்டுகிறார், அடிக்கி றார்? கெளரிக்கு நம்புவது கஷ்டமாய் இருந்தது.

ஆசிரியர் விஜய்க்காகப் பரிந்து பேசினார். "விஜய் ரொம்ப கெட்டிக்காரன்தான்; ஆனா போன வருஷம் வரைக்கும் பாடத்திலே காட்டின அக்கறையை இந்த



வருஷம் காட்டமாட்டேங்கறான். வகுப்புலே பாடம் நடக்கறப்போ கவனமா இருக்கமாட்டேங்கறான். வேண்டாத சகவாசம் இருக்கும்போலத் தோணறது. சின்னப் பிள்ளை தானே! மனசு அப்படி இப்படி அலை பாயறது சகஜம்தான். கொஞ்சம் வீட்டிலே நீங்க கண்டிப்பா நடந்துண்டா சரியாயிடும்-"

"ட்யூஷன் வெச்சா தேவலைனு நீங்க நினைக்க றேளா, சார்?"

"நீ படிச்சவளாச்சே; நீயே சொல்லித்தரலா மேம்மா."

'சொல்லித்தரலாம்தான், ஆனா உங்ககிட்ட இருக்கற பயம் என்கிட்ட இருக்காது பாருங்கோ!"

"அப்ப உன் இஷ்டம். வாரம் மூனு கிளாஸ் எடுக்கறேன். போதுமா?"

"எதேஷ்டம்! பீஸ் எவ்வளவு வேணும், சார்?"

ஆசிரியர், கெளரி கேட்கக்கூடாததைக் கேட்டு விட்ட மாதிரி பதறினார்.

"தியாகி வேதாசலத்தோட பேரனுக்கு ட்யூஷன் சொல்லிக்கொடுத்து நா காசு வாங்கிக்கறது தர்மமாம்மா?"

ஆக, அந்த முறை சங்கர் டூரிலிருந்து வந்தவுடன், விஜய் மார்க் கம்மியாய் வாங்கியிருப்பதால், தான் ஆசிரியரைச் சந்தித்ததாகவும், அவர் ட்யூஷன் வைத்தால் தேவலை என்று சொன்னதாகவும் பட்டும் படாமலும் கெளரி கூறிச் சமாளித்துவிட்டாள்.

சங்கர் அலுவலகத்தில் புதிதாய் என்னென்னவோ பொறுப்புகள் எடுத்துக்கொண்டுவிட்டதால், அவனுக்குத் தலைக்குமேல் வேலை. கௌரி படித்தவள், விவரம் அறிந்தவள், சரியாய்ப் பார்த்துக்கொள்வாள் என்ற எண்ணத்தில் குடும்ப, குழந்தைப் பொறுப்பை அவளிடம் மொத்தமாய் விட்டுவிட்டான்.

திங்கள், புதன், வெள்ளி பள்ளியிலேயே ட்யூஷன் என்று பெயர். முதல் சில நாட்கள் எல்லாம் சரியாய் இருக்கிற மாதிரி தெரிந்தது. அப்புறம் அந்த நாட்களில் நான்குமணிக்கே வீட்டுக்கு வரத்தொடங்கினான் விஜய்.

"என்னப்பா... ட்யூஷன் இல்லை?" என்றால், ரெடியாய் பதில் வரும்.

"இன்னிக்கு வாத்தியார் லீவும்மா..." என்றான்.

"ரொம்ப வயித்த வலிக்கறதும்மா, அதான் வந்துட்டேன்" என்றான்.

"சார் ஹெச். எம்மைப் பார்க்கப் போயிட்டார்" என்றான்.

"சார் வீட்டுக்கு இன்னிக்கு யாரோ விருந்தாளி வராளாம்... ட்யூஷன் வேண்டாம்னுட்டார்" என்றான்.

விரிந்த கண்களும், குழந்தை முகபாவமுமாய் எதிரில் நின்று பேசும் பிள்ளைமேல் கடுகத்தனை சந்தேகம் தோன்றாததால் கௌரி மேற்கொண்டு எதையும் துருவித் துருவவில்லை.

ஒழிந்த சமயத்தில் பிள்ளையை உட்கார வைத்துக் கொண்டு ஹோம் வொர்க் பண்ண வைத்தாள். பரிட்சைக்கு முன் ரிவிஷன் செய்யச் சொன்னாள்.



என்ன பண்ணி என்ன?

பரிட்சை முடிந்து இப்போது இவன் கொண்டு வந்திருக்கும் ரிப்போர்ட்டைப் பார்த்தால் மானம் கப்பல் ஏறுகிறதே!

"என்ன விஜய்... நா கேக்கறதுக்குப் பதில் சொல்லாம நின்னா என்ன அர்த்தம்?"

விஜய் அம்மாவை ஒருமுறை நிமிர்ந்து பார்த்தான். அப்புறம் விசும்பிவிசும்பி அழ ஆரம்பித்தான்.

"தப்புதாம்மா - நா இப்படி மார்க் வாங்கி இருக்கறது ரொம்பத் தப்புதான்... நன்னாதான் படிச்சேன்... ஆனா ஏன் இப்படி மார்க் கொடுத்திருக்கானு புரியலைம்மா..."

திக்கித் திக்கிப் பேசினான்.

கௌரிக்கு ஆயாசமாக இருந்தது.

இப்போது என்ன பண்ணுவது? இவர் ஊரில்தான் இருக்கிறார். அதனால் போன தடவை செய்த மாதிரி நானே கையெழுத்துப் போட்டுக் கொடுக்க முடியாது... ஆபீஸிலிருந்து வந்தால் காட்ட வேண்டியதுதான்... என்ன சொல்லப்போகிறாரோ?

கௌரியின் மன ஓட்டம் புரிந்த மாதிரி விஜய் பேசினான்.

"தயவு பண்ணி இந்த ரிப்போர்ட்டை அப்பாகிட்டே காட்டாதேம்மா... கெஞ்சிக் கேக்கறேன்ம்மா... நீ காட்டினா அவர் 'காந்தி வைத்தியம்' பண்ணறேன்னு, பத்து நாளைக்குச் சாப்பிடாம இருக்கப் போறேம்பார்.

என்னால அப்பா ஏன் பட்டினி கிடக்கணும்? ப்ளீஸ்ம்மா.. ப்ளீஸ்.. போன தடவை மாதிரி நீயே கையெழுத்துப் போட்டுக் குடுத்துடு.. நா முழுப் பரிட்சையிலே நன்னா படிச்சு மார்க் வாங்கறேன். ப்ராமிஸ்.. காட் ப்ராமிஸ்..."

பேசிக்கொண்டே கிட்டத்தில் வந்து, அவள் கழுத்தைக் கட்டிக்கொண்ட விஜய், கன்னத்தோடு கன்னம் வைத்து, 'ப்ளீஸ்ம்மா' என்றான் திரும்பத் திரும்ப.

விஜய் சொல்வதும் வாஸ்தவம்தானே?

வரவர சங்கரிடம் ஒரு புதுப் பழக்கம் வந்திருக்கிறது. கௌரியோ, அல்லது விஜய்யோ அவன் ஏதொன்றும் சொல்லிக் கேட்காமல் இருந்தால், அவனுக்குப் பிடிக்காத ஒன்றைச் செய்தால், முதல் முறை 'எனக்குப் பிடிக்கலை, இது தப்பு' என்பான். மீறி அவர்கள் இன்னொரு முறை செய்துவிட்டால் அன்று முழுவதும் அவன் பச்சைத் தண்ணீர் வாயில் படாமல் பட்டினியாக இருந்துவிடுகிறான்.

இது என்ன பழக்கம்? எதற்காகப் பிறர் செய்யும் குற்றத்துக்கு இவர் தம்மைத் தண்டித்துக்கொள்ள வேண்டும்? ஓரிரு முறைகள் பொறுத்துப் பார்த்து விட்டுத் தாளமுடியாமல் கௌரி கேட்டபோது சின்னதாய்ப் புன்னகைத்தான். பிறகு, "இதுக்குப் பேர் காந்தி வைத்தியம். நானும், என்னைச் சுத்தி இருக்கிற வாளும் மனுஷாளா இருக்க இந்த வைத்தியம் ரொம்ப அவசியம்" என்றான்.



CPL 619569

நகத்தைக் கடிக்காதே என்றான் விஜய்யிடம் ஒருநாள். அப்போது, 'சரிப்பா' என்று சொல்லிவிட்டு அரைமணிக்கெல்லாம் திரும்ப வாயில் விரலை வைத்து சுவாரஸ்யமாய் அவன் கடித்ததும், "தப்புக்காரியத்தைச் செய்யாதேனு சொன்னா, அதிலே கவனமாய் இருந்து செய்யாம இருக்கணும். மீறிப் பண்ணினா, நம்ப உடம்பு நம் வசமில்லேனு ஆறது. நா சொல்லி நீ கேட்காததால - அது சின்ன விஷயமா, உப்புப்பெறாத விஷயமா, இருக்கலாம் - நா இன்னிக்கு ராத்திரி சாப்பிடப்போறதில்லை. இனி தண்டனை உங்களுக்கு இல்லை; எனக்குத்தான்" என்றான். இப்படித்தான் இந்த காந்தி வைத்தியம் ஆறு மாசத்துக்கு முன் திடுமென்று தொடங்கியது.

619569

தனக்காக அப்பா பட்டினி கிடக்கிறார் என்ற உதைப்பில் விஜய், அத்துடன் நகம் கடிப்பதை விட்டு விட்டான் என்றாலும், இது என்ன, ஊரில் இல்லாத தண்டனை என்று கௌரி வருத்தப்பட்டது நிஜம்தான்.

மீண்டும் மறுவாரம், சங்கர் பட்டினி கிடக்கும் நிலைமை உண்டாகவே செய்தது.

894.8113 SIV

அன்று காலை ஆபீஸுக்குப் புறப்படும் சமயத்தில் சங்கரின் பார்வை பீரோவுக்கு மேல் வைத்திருந்த ராட்டைகளின்மேல் விழுந்தது.

ஒரு நிமிஷம், முன்போலக் காலையில் எழுந்து பிரார்த்தனை செய்வதில்லை, நூல் நூற்பது இல்லை என்று மனசு குறுகுறுத்தது.

என்னவோ தோன்ற, கௌரியை அழைத்தான்.

"நம்ப நாட்டுக்குச் சுதந்திரம் வந்திருக்கவே கூடாது, கௌரி... சுதந்திரம் கிடைச்ச குஷியிலே நாமெல்லாம் மனுஷத்தன்மையை இழந்துட்டோம். தேசப்பற்று, தியாக உணர்ச்சி, எளிமையான வாழ்க்கை-எல்லாம் குறைஞ்சு போய், மிஷின் மாதிரி இருக்க ஆரம்பிச்சுட்டோம்" என்றவன், "ராட்டையைத் துடைச்சி வை, கௌரி... சாயங்காலம் நா வந்ததும் ரெண்டுபேரும் ஒண்ணா உட்கார்ந்துண்டு கொஞ்ச நேரம் நிம்மதியா நூற்கலாம்" என்றும் சொல்லிச் சென்றான்.

சாதாரணமாய் சங்கர் சொல்லும் எந்த வேலையையும் செய்ய மறப்பவள் இல்லை கௌரி. ஆனால், அன்று மறந்துதான் போனாள். மத்தியானம் தலையை வலித்ததால் ஸாரிடான் போட்டுக்கொண்டு கொஞ்சம் தூங்கி எழுந்தவள், ராட்டையைத் துடைப்பதுபற்றிச் சுத்தமாய் மறந்து போனாள்.

மாலையில் சங்கர் வரும்போது இவள் ரேடியோ கேட்டுக்கொண்டிருந்தாள்.

உள்ளே நுழைந்து பார்வையை ராட்டையிடம் ஓட்டின சங்கருக்கு லேசாய்க் கோபம்.

சொரேர் என்றது கௌரிக்கு.

"தலைவலி... அதான்.... இப்போ, இதோ.... ஒரு நிமிஷத்துல துடைச்சிடறேன்..."

சங்கர் வாயைத் திறந்து ஒரு வார்த்தை சொல்லவில்லை. ராட்டையைத் தானே கைப்படத் துடைத்தான், நூற்றான். ஆனால் அன்று இரவும் மறுநாளும் அவன் கொலைப் பட்டினிதான்.



அதன்பிறகு நான்கைந்து முறைகள் இப்படி உண்ணாவிரதம் இருந்துவிட்டான் சங்கர்.

ஒருநாள் தாங்க முடியாமல் கௌரி, "இது என்ன நியாயம்! தெரியாம நாங்க பண்ணற தப்புக்கு காந்தி வைத்தியம்ங்கற பேர்ல உங்களை நீங்க தண்டிக்கறது என்ன நியாயம்?" என்றபோது, அன்றும் அவன் சின்னதாய்ச் சிரித்தான்.

"சில மாசங்களாவே என் மனசு சரியா இல்லே, கௌரி. சுதந்திரம் கிடைச்சுட்ட திமிர்லே நாம அந்த மகானைக்கூட மறக்க ஆரம்பிச்சுட்டோமேங்கற வேதனை... இந்த மாதிரி உண்ணாவிரதம் இருக்கிறபோது என் மனசு பூராவும் அவர் நிறைஞ்சு நிக்கறார், கௌரி! நான் நினைச்சுக்கிறதோட உங்களுக்கும் அவரை ஞாபகமூட்ட இந்தப் பழக்கம் உதவறது... அவ்வளவுதான். வீணா தண்டனை, அது, இதுனு பெரிய வார்த்தைகளை உபயோகிக்காதே..."

விஜய் சொல்வதுபோல, இப்போது ரிப் போர்ட்டை நீட்டினால் இவருக்குக் கோபம் வரும்! அதைத் தன்மேல்தான் காண்பித்துக்கொள்வார். நாமே கையெழுத்துப் போட்டுவிட்டால்? நாளைக்கு ஆசிரியரைப் போய்ப் பார்த்து என்ன விஷயம் என்று கேட்டால்?

"அப்பாவுக்கு தெரிஞ்சா ரொம்ப வருத்தப்படப் போறார், விஜய்... போனாப்போறதுன்னு நா இந்த முறையும் கையெழுத்துப் போடறேன்... ஆனா... நீ உன் வார்த்தையைக் காப்பாத்தணும்... சரியா?"

விஜய் பலமாய்த் தலையை ஆட்டினான்.

"நாளைக்கு நா ஸ்கூலுக்கு வந்து, உன் டீச்சர் கிட்டே பேசப்போறேன்."

அம்மாவை முடிக்க விடாமல் விஜய் குறுக்கே பேசினான்.

"அவர் லீவுலே போயிட்டார்ம்மா... ரெண்டு மாசமாகுமாம், திரும்பி வர."

அந்த முறை ரிப்போர்ட்டில் கையெழுத்துப் போட்டதைக் கூட கௌரி கணவரிடம் சொல்ல வில்லை. பயம், தன்னைத் தானே வருத்திக்கொள்வாரே என்ற பயம்.

கணவன்மேல் இருந்த மரியாதையும் அன்பும் ஒரு பக்கம், பிள்ளைமேல் இருந்த பாசம் மறுபக்கமாய் அவளை அலைக்கழிக்க, அடுத்து வந்த நாட்களில் விஜய்யிடம் கண்டிப்புடன் நடந்துகொண்டு தினம் படிக்கச் சொல்லி மன்றாடினாள்.

கௌரி மனசில் திட்டமிட்டது நடக்க இய லாதபடி அந்தப் பதினைந்தாம் நாள் திடுமென்று மார்புவலியால் கிராமத்தில் இருந்த மாமியார் காலமானார்.

தொடர்ந்து வந்த மாசத்தில் இங்குமங்குமாய் அல்லாட்டம். வருவோர் போவோர்.

ஒரு வழியாய் அமளி முடிந்து மாமனார், இங்கு இவர்களோடு இருக்க வந்து சேருவதற்கும், விஜய்க்கு ஆண்டுத் தேர்வு நடந்து முடிவதற்கும் சரியாய் இருந்தது.



முடிவைப்பற்றிப் புதிதாய் என்ன சொல்ல இருக்கிறது!

விஜய் அந்த வருஷப் பரிட்சையில் தேறவில்லை.

முடிவு தெரிந்தவுடன் கணவனின் முகத்தை எப்படிப் பார்ப்பது என்ற துடிப்போடு ஆசிரியரின் விலாசத்தை விசாரித்துக்கொண்டு கௌரி ஓடினாள்.

"நா என்னம்மா பண்ணுவேன்? படிப்பில் சிரத்தையே இல்லாத பிள்ளை, நாலு க்ளாஸ்தான் ட்யூஷனுக்கு வந்தான்; அப்புறம் நீயே ட்யூஷன் வேண்டாம்னு நிறுத்திடச் சொன்னியாம் - 'அப்பாவை யாவது, அம்மாவையாவது ஸ்கூலுக்கு வரச் சொல்லுனு எத்தனை தடவை பையன்கிட்டே சொல்லி அனுப்பி னேன்? யாராவது எட்டிப் பார்த்தேளா? பிள்ளைக்கு ஈடுபாடு இல்லாததுகூட ஆச்சரியம் இல்லை, ஆனா பெத்தவா இப்படி ஏனோதானோனு இருந்தா சரிப்படுமா?"

சலிப்புடன் அவர் பேசப்பேச கௌரி அதிர்ந்து போனாள்.

ட்யூஷனை நான் நிறுத்தச் சொன்னேனா? நான் வந்து பார்க்கவில்லையா? அப்படியானால் இவர் லீவில் போயிருப்பதாய் விஜய் சொன்னதெல்லாம் பொய்யா? பிள்ளைமேல் எங்களுக்குப் பொறுப்பு இல்லையா! ஐயோ - கடவுளே! நான் என்ன செய்வேன்?

அவரிடம் ஒன்றுமே பேசாமல் இருந்தவள், அன்று இரவு கணவனிடம் விஜய் ஃபெயில் என்பதை மட்டும் சொல்லிவிட்டு, அவன் கேட்கும் கேள்வி எதற்கும் பதில்

சொல்ல இயலாதவளாய் ஒரு பக்கமாய் அமர்ந்து, தன் தவற்றை எல்லாம் மனசில் நினைத்துக் கதறிவிட்டாள்.

ரொம்ப நேரத்துக்கு ஒன்றுமே பேசவில்லை சங்கர். அப்புறம் சின்னக் குரலில் நிறுத்திப் பேசினான்:

"உடம்புக்கு ஜுரம் வந்தா அல்வாவும், குலாப் ஜாமூனும் கொடுத்தா சரியாகாது, கௌரி... கசப்பு மருந்தும், ஊசியும் கொடுத்துத்தான் கெட்டுப்போன உடம்பைச் சரியாக்கணும்! குழந்தை நமக்கு ரொம்ப உசத்திதான்... அதுக்காக அவனுக்குத் தேவைக்கு மீறின செல்லத்தைக் கொடுத்துக் குட்டிச்சுவராக்கறதும், நோய்ப்பட்ட உடம்புக்கு அல்வா கொடுக்கறதும் ஒண்ணுதான்! ஆதிலேந்தே நா உனக்குச் சொல்லிண்டு வரேன்; பாசத்தை அளவோடு கொடுக்கத் தெரியணும், இல்லைணா நாளைக்கு நம்ப மகன் வாழ்க்கை கெடறதுக்கு நாமே காரணமாயிடுவோம்னு நா சொல்றதை நீ நன்னா சரியா புரிஞ்சுக்கணும், கௌரி... என்ன, இப்பவாவது புரிஞ்சுதா?"

கௌரி புரிந்துகொள்ளத்தான் முயன்றாள். ஆனால், பாழும் அஞ்ஞானம் அவளை எங்கே விட்டது?

## 6

அந்த ஞாயிற்றுக்கிழமை தன் வாழ்க்கையைச் சூன்யமாக்கும் அரக்கத்தன்மையைக் கொண்டதாய்



இருக்கப் போகிறது என்று சத்தியமாய் கௌரி எண்ணத் துணியவில்லை.

ஒவ்வொரு ஞாயிறன்றும் பாலவிஹாருக்குச் சென்று, அரைநாள் போல அங்கு கணக்கு எழுதி, நோய்வாய்ப்பட்டிருக்கும் குழந்தைகளை டாக்டரிடம் அழைத்துச் சென்று, பாரதி பாடல்கள் அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்து, மற்ற உபரி வேலைகளைச் செய்வது ஆதிநாள் தொட்டே சங்கரின் வழக்கம்.

இன்றுதான் ஒரு ஆபீஸராகிவிட்டோம் என்பதற்காக அவன் அந்த வேலையை விட்டுவிடவில்லை. ஊரில் இல்லாத நாட்களைத் தவிர, மற்றபடி வீட்டில் எந்த முக்கிய வேலை இருந்தாலும், முக்கிய நபர் வந்திருந்தாலும் பாலவிஹாருக்கு அவன் போவது மட்டும் நிற்காது.

அப்படி இந்த வாரம் கிளம்பிப் போனவன், போனவன்தான். மாலையில் பிணமாய்த்தான் அள்ளிப் போட்டுக் கொண்டு வந்தார்கள்.

மின்சார வண்டியில் இவன் ஏறியதும் வண்டி புறப்பட்டுவிட்டதாம். ஓடும் வண்டியில் ஏறி, இளைஞன் ஒருவன் தன் வீரதீர பிரதாபத்தைக் காட்டிக்கொள்ள நினைத்திருக்கிறான். கணக்குத் தப்பிவிட்டது. ஒரு கை பிடியைப் பிடித்திருக்க, கால் ஃபுட்போர்டில் வைத்தது நழுவிவிடவே, அந்தரத்தில் ப்ளாட்ஃபாரத்துக்கும், ரயிலுக்கும் இடுக்கில் தொங்கிவிட்டானாம். பிடியைப் பிடித்திருக்கும் கையும் உடல் பாரம் காரணமாய் நழுவத் தொடங்கின கணத்தில், சற்றுத் தள்ளி இருந்த சங்கர் பாய்ந்து அந்தக் கையைப் பிடித்து உள்ளே இழுக்க

முயன்றிருக்கிறான். சங்கரைவிட அந்த இளைஞன் கனம் அதிகம். வண்டி ஃப்ளாட்பாரத்தைத் தாண்டி விட்டதால் வேகத்தை அதிகரிக்க, கண் மூடித் திறக்கும் நாழிகையில் சங்கரையும் இழுத்துக்கொண்டு இளைஞன் வெளியே விழுந்துவிட்டான்.

விழுந்ததுதான் விழுந்தார்களே, இரண்டுபேரும் தண்டவாளத்துக்கு அந்தப் பக்கமாய் விழுந்திருக்கக் கூடாது?

முதலில் விழுந்த காரணத்தால் இளைஞன் ஓடும் ரயிலிலிருந்து நான்கடி தள்ளி விழுந்து சில்லறைக் காயங்களோடு தப்பித்தான்.

ஆனால், அவன் கூடவே தொத்திக்கொண்டு வந்த சங்கர், எசகுபிசகாய் விழுந்து, சரியாய்ச் சக்கரங்களின் அகோரப் பசிக்குத் தீனியாகி, தக்ஷணமே உயிரை விட்டான்.

மதியம் விபத்து நடந்திருக்கிறது.

'உன்பாடு என்பாடு' என்று போலீஸ் வந்து, உடலை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்ற பிறகு, பர்ஸிலிருந்த ஆபீஸ் விலாசத்துடன் போலீஸ் தொடர்பு கொள்ள, ப்யூன் மானேஜருக்கு விவரம் தெரிவிக்க, அவர் போஸ்ட் மார்ட்டம் ஆன பிரேதத்துடன் வீட்டுக்கு வந்து இறங்கிய போது மாலை மணி ஆறு.

விஷயம் தெரிந்து ஆபீஸ் சிநேகிதர்கள் வந்தார்கள்; மற்ற நண்பர்கள் வந்தார்கள். இதுநாள்வரை எட்டிக்கூடப் பார்க்காமல் இருந்த சில அரசியல்வாதிகளும் சுதந்திரப் போராட்ட வீரன் என்பதனால் வந்தார்கள்.



என்ன வந்து என்ன?

கணவர் இருக்கிறார்; எந்தக் கஷ்டம் வந்தாலும் அவர் துணையுடன் அதைச் சமாளித்துவிடலாம். ஆயுசு பர்யந்தம் அவர் கூட இருக்கையில் எனக்கு என்ன கவலை என்ற நினைப்பில், இத்தனை வருஷங்களை ஒன்றுமே தெரியாதவளாய் ஓட்டிவிட்ட கௌரி இடிந்துதான் போனாள்.

காரியங்கள் ஒரு தினுசாய் முடிந்தன.

சங்கரும், வேதாசலமும் வாழ்ந்த வாழ்க்கை சத்தியமானதுதான், அவர்கள் ஊருக்காக உழைத்தது வீண் போகவில்லை என்று சொல்லுகிற மாதிரி அன்று கோபாலன் வந்து சேர்ந்தார்.

கோபாலன், ஊரில் முக்கியப் புள்ளிகளில் ஒருத்தர். செல்வந்தர். உள்நாட்டில் மட்டுமன்றி வெளி நாடுகளிலும் வியாபாரம் உள்ளவர். நேர்மையானவர். முக்கியமாய் நல்ல மனசு கொண்டவர்.

வேதாசலமும் கோபாலனும் ஒரே பள்ளியில் ஒன்றாய்ப் படித்தவர்கள். இந்த விஷயம் கௌரிக்கே தெரியும்.

அப்பா இருக்கும் காலத்தில் அடிக்கடி [illegible]டுக்கு வருவதுண்டுதான்.

"வீணாய் அரசியல்லே புகுந்துண்டு உன் வாழ்க்கையைக் கெடுத்துக்கறே, வேதா... உன் புத்தி எனக்குக் கிடையாது. ஆனாலும், நா எப்படி இருக்கேன், நீ எப்படி இருக்கேனு ஒரு நிமிஷம் யோசிச்சுப் பாரு! நீ வக்கீல் தொழிலை விடாம பண்ணினா, என்னை

முழுங்கற அளவுக்குப் பணக்காரனா ஆயிடுவே!. தேசத்துக்குத் தொண்டு பண்ணு, நா வேண்டாங்கலை; ஆனா, தலைக்கு மிஞ்சிதான், வேதா, தர்மம்... உன் பெண்டாட்டி, குழந்தையோட எதிர்காலத்தைக் கொஞ்சம் யோசிச்சுப் பாரு... அவாளுக்கு ஒரு வழி பண்ணிட்டு நீ சுதந்திரப் போராட்டத்துலே நன்னா குதி..."

கோபாலன் பேசுவதைக் கேட்டு வேதாசலம் சிரிப்பார். 'உன் போக்கு வேறு, என் போக்கு வேறு' என்று அந்தச் சிரிப்பு சொல்லும்.

அப்புறம் தேசத்துக்குச் சுதந்திரம் வந்த பிறகு, அப்பா படுக்கையோடு படுக்கையாய்க் கிடக்கும் நோயாளியாய் ஆன பிறகும், கோபாலன் வீட்டுக்கு வந்திருக்கிறார்.

அதற்குள் கோபாலன் அந்தஸ்து ரொம்ப உயர்ந்து விட்டிருந்தது.

ஆனால், பணத்திமிரோடு ஒரு வார்த்தை கோபாலன் பேசி கௌரி கேட்டதில்லை.

"நாடு நாடுனு உசிரை விட்டயேடா... இப்ப என்னாச்சு! குழந்தை மாதிரி சிரிச்சுண்டே பிரார்த்தனைக்கு வந்த காந்தி மகானையே இவா தொலைச்சுக் கட்டிட்டா - இனி வேற என்ன பாக்கி? படிக்காத, சோம்பேறியான நம்ப ஜனங்களை மிரட்டி, உசிருக்கு பயமுறுத்தி வெச்சிண்டு இருந்தாதான் ஒழுங்கா இருப்பா - நீ வேணா பாரு, வெள்ளைக்காரன் கண்டிப்பு இல்லேன்னு தெரிஞ்சதும், இன்னும் பத்து வருஷத்துலே குரங்கு கைலே பூமாலை அகப்பட்டுண்ட மாதிரி



நம் நாட்டு ஜனங்க நடுவிலே இந்த சுதந்திரம் என்ன பாடுபடப்போறதுன்னு! சரி, அதை விடு.. பெண்ணுக்குக் கல்யாணத்துக்கு வயசாச்சே, என்ன சேர்த்து வெச்சிருக்கே? அவளை ஒருத்தன் கையிலே பிடிச்சுக் கொடுக்கற எண்ணமாவது இருக்கா இல்லையா? நீ மட்டும் சரினு சொல்லு - நா நடத்தறேன் கௌரியோட கல்யாணத்தை ஜாம் ஜாம்னு! அவ எனக்கும் பெண்மாதிரிதானேடா?"

இப்போதும் அப்பா சிரித்தார், 'என் பெண்ணுக்குனு ஒருத்தன் எங்காவது பிறந்திருப்பாண்டா, நீ வீணா கவலைப்படாதே!' என்கிற மாதிரி.

கௌரி - சங்கர் கல்யாணத்துக்கு, முகூர்த்தத்துக்கே வந்திருந்தார் கோபாலன்.

ஐயாயிரம் ரூபாயை ஒரு கவரில் வைத்து, வெற்றிலை பாக்கு, பழம், பூ, புடவை, வேஷ்டி, ரவிக்கைத்துண்டோடு கொடுத்து, "புதுக் குடித்தனம்னா ஆயிரம் செலவு இருக்கும்; அதுக்கு வெச்சிக்கோங்கோ" என்றபோது, எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டு பணத்தை மட்டும் திருப்பிக் கொடுத்து, "நீங்க புரிஞ்சுப்பேள்ங்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு" என்று சொல்லி, சங்கர் சிரித்தான், 'என் பெண்டாட்டியைக் காப்பாற்ற எனக்கு வக்கில்லையா என்று கே' கிறமாதிரி.

"மாமனாருக்கு ஏத்த மாப்பிள்ளை! எப்படியானு சௌக்கியமா இருந்தால் சரி" என்று வாழ்த்திவிட்டு கோபாலன் போனார்.

வேதாசலம் இறந்த பிறகு, கோபாலன் வருவதும் போவதும் மெள்ள மெள்ளத் தேய்ந்து மறைந்துபோய் விட்டது.

இப்போது அந்த கோபாலன்தான் சொல்லாமல் கொள்ளாமல் திடுமென்று வந்து நின்றார்.

பதினைந்து நாட்களாக வெளிநாடுகளுக்குப் போய்விட்டு நேற்றுத்தான் ஊர் திரும்பினாராம்.

பழைய பேப்பர்களில் என்ன சேதி என்று புரட்டினபோது, சங்கர் அகாலமாய் மரணமடைந்தது தெரியவர, போட்டது போட்டபடி ஓடி வந்திருக்கிறார்.

"கௌரி... கௌரி..." என்றவருக்குத் தொண்டை அடைப்பது தெளிவானது.

சொந்தத் தந்தையே நேரில் வந்து உட்கார்ந் திருக்கும் பிரமை எழ, கௌரி வாய்விட்டு அழுது விட்டாள்.

தொடர்ந்து பத்து நாட்களுக்குத் தினம் அங்கு வந்த கோபாலன், அன்று கௌரியையும், அவள் மாமனாரையும் உட்கார வைத்துக்கொண்டு தம் எண்ணத்தை வெளியிட்டார்.

"இண்டர் படிச்சவள்; கோல்ட் மெடலிஸ்ட்; டைப்பிங் ஹையர் பாஸ் பண்ணியிருக்கே. நல்ல வேலையா பார்த்து நா உன்னைச் சேர்த்துவிடறேன். நீ போயிட்டு வரது நாலுத்துக்கும் நல்லதுனு எனக்குத் தோணறது. கௌரி, வீட்டுலேயே இருந்தா மனசு இன்னும் நொந்துபோகும். நாலுபேரோடப் பழகினா



துக்கம் கொஞ்சம் குறைஞ்ச மாதிரி இருக்கும்... என்னம்மா சொல்றே?"

'நானா? வேலைக்குப் போவதா? அதுவும் இந்த முப்பத்திரண்டு வயசிலா? இது சாத்தியமா?'

தலையை நிமிர்த்தி மாமனாரைப் பார்த்தாள் கௌரி.

"அவரை ஏம்மா பாக்கறே? அவர் ஒண்ணும் சொல்லமாட்டார். அவர்கிட்ட நா ஏற்கனவே இதுபத்தி பேசி, சம்மதமும் வாங்கிட்டேன். நீ 'ம்'னு சொன்னா விஷயம் முடிஞ்சிடும்..."

ரொம்ப நாழிகைக்கு கௌரி ஏதும் பேசவில்லை.

"உன் மனசுலே இருக்கறதை தைரியமா சொல்லும்மா..."

"யோசிச்சுப் பார்த்துட்டு நாளைக்குச் சொல்றேன், மாமா."

கௌரி சொன்னதற்குக் கட்டுப்பட்டு கோபாலன் புறப்பட்டுப் போனார்.

இரவெல்லாம் தூக்கம் இல்லாமல் கௌரி சிந்தனை செய்தாள்.

இனி என் எதிர்காலம் என்ன?

தீ என்று சொன்னால் நாக்கு வெந்துவிடாது என்று சொல்லுவார்கள்; இப்போது நிஜமான தீ நான்கு பக்கமும் சூழ்ந்துகொண்டுவிட்டது. இனி என்ன பண்ணவேண்டும்?

ஆஹா, ஊஹூ என்ற வசதிகளோடு நாங்கள் வாழாவிட்டாலும், வயிற்றைக் காயப்போடாமல், மானமாய், கௌரவமாய் இத்தனை வருஷங்களை ஓட்டிவிட்டது நிஜம்தானே? இப்படி திடுதிப்பென்று வீட்டு ஆண் தவறிப்போனதில், இந்த வீட்டுக்கு வந்துகொண்டிருந்த எழுநூறு ரூபாய் வரும்படியும் நின்றுபோய்விட்டதே; இனி சாப்பிட, விஜய் படிக்க, உடம்பு முடியாத மாமனாருக்கு மருந்து வாங்க, மற்ற செலவுகளுக்கெல்லாம் என்ன பண்ணுவது! யாரிடம் போய் உபகாரத்துக்கு நிற்பது? சே, ஒருத்தரிடம் கை நீட்டி ஒரு காசு வாங்குவது அசிங்கமில்லையா?

இவர் ஆபீஸிலிருந்து இருபதாயிரமோ, இருபத்தையாயிரமோ வரும் என்று சொன்னார்கள். அது எத்தனை நாளைக்கு இட்டு நிரப்பும்? நல்லவேளையாக அப்பாவின் சொத்தாக இந்த வீடு இருக்கிறது. வாடகை வீட்டில் இருந்தால் அதுவே கஷ்டம்.

வேதாசலம் மாதிரி ஒருவருக்குப் பெண்ணாகப் பிறந்துவிட்டு, சங்கர் மாதிரி ஒருவருக்கு மனைவியாக வாழ்ந்துவிட்டு, அனாவசியமாக ஒருத்தரிடம் ஒரு பைசா கை நீட்டி உபகாரம் பெற வேண்டும் என்ற எண்ணமே கௌரிக்குக் குமட்டியது.

கை இருக்கிறது. உழைத்துச் சாப்பிடுவதை விட்டுவிட்டு எதற்காகக் கண்டவரிடம் பல்லைக் காட்ட வேண்டும்?

ஆமாம், வேலைக்குப் போய் ஒழுங்காக, புத்திசாலித்தனமாக எனக்கு வேலை பார்க்கத் தெரியுமோ?



பல ஆண்கள் நடுவில் வேலை செய்ய நேரிடுமே, எல்லாரும் ஒருத்தரைப்போல அடக்கமாக, பண்பானவராக இருப்பார்களா?

மண்டையை உடைத்துக்கொண்டாள் கௌரி.

யோசிக்க யோசிக்க வேலைக்குப் போவதைத் தவிர வேறு வழி இல்லை என்பது தெளிவாக, மறுநாள் வந்த கோபாலனிடம், வேலைக்குச் செல்ல தனக்குச் சம்மதம் என்று சொன்ன கௌரி, மெதுவாகத் தன் மனதை அரித்த இன்னொன்றையும் வெளிப்படுத்தினாள்.

"இவர் போய் ஒரு மாசம்தான் ஆறது, மாமா... அதுக்குள்ளே வேலைக்குப் போக ஏன் ஒத்துண்டேன்னா, அதைவிட்டா கௌரவமான வழி வேற எனக்குத் தோணலை. கூடுமானவரை ரொம்ப ஆண்கள் இருக்கிற இடமா இல்லாம இருந்தா தேவலைனு தோணறது. நீங்க என்ன மாமா சொல்றேள்?"

"உன்னைக் கண்ட இடத்துக்கு வேலைக்கு நா அனுப்புவேனாம்மா? சத்தியமாச் சொல்றேன், நீ என் பெண் மாதிரி. நீ எங்கேயும் போக வேண்டாம்மா, உன் செலவுகளை நா பாத்துக்கறேன், நீ ஆத்தோட இருந்துடுனு நா சொல்லுவேன். ஆனா, நீ அந்த மானி வேதாசலம் பெண்; அதைவிட மானி சங்கர் பெண்டாட்டி... இதை எல்லாம் யோசிச்சுட்டுத்தான் நா பேசறேன், கௌரி. பாங்க்லே போர்ட் ஆஃப் டைரக்டர்ஸ்லே ஒருத்தனா நா இருக்கறது உனக்குத் தெரியுமோ, என்னவோ... அந்த பாங்க்லே உனக்கு கிளார்க் வேலைக்கு ஏற்பாடு பண்ணிட்டேன். மாசம் முன்னூத்தி அம்பது ரூபா சம்பளம்.

கௌரவமான வேலை. ஆறு மாசத்திலே கன்ஃபர்ம் ஆனா, எல்லாமா அறுநூறு ரூபாய் கிடைக்கும். முன்னுக்கு வரக்கூடிய வேலை. உனக்குச் சரியானதுனு நா நினைக்கிறேன், கௌரி-"

கோபாலனின் ஊகத்தை கௌரி பொய்க்க வில்லை.

எண்ணி ஆறாம் மாசம் வேலை உறுதியானது. அடுத்த ஐந்து ஆண்டுகளில் ஹெட் க்ளார்க் ஆனாள். கூடவே, பாங்க் பரிட்சையான ஸி.ஏ.ஐ.ஐ.பி. படித்துப் பாஸானதில், மேற்கொண்டு நான்கு வருஷங்கள் போவதற்குள் அந்தஸ்தான அக்கௌண்டண்ட் பதவியில் அமர்த்தப்பட்டாள்.

கொடுத்த வேலையை மிகப் பொறுப்பாகச் செய்ததன் காரணமாய் இரண்டு வருஷங்களுக்கு முன் சீஃப் அக்கௌண்டண்ட்டாகப் பதவி உயர்த்தப்பட்டு, கௌரி இப்போது எல்லாமாகப் பெறும் சம்பளம் இரண்டாயிரத்து இருநூறு ரூபாய்!

## 7

மேலே வந்து தன் இருக்கையில் அமர்ந்தாள் கௌரி. அதற்குள் மேஜை மேல் பைல்கள், போட்டா போட்டி போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தன.

டெலிக்ராபிக் ட்ரான்ஸ்பர்ஸ், டெலிக்ராம்ஸ், ஹூண்டி பத்திரங்கள்...

'ஒரு ஃபைலையும் தூக்கமாட்டேன்' என்று மனசு சண்டி பண்ணியது.



இல்லை... இது தப்பு. ஆபீஸ் நேரத்தில் வீட்டு நினைப்பும், பழைய நினைப்பும், தப்பில்லையா?

கௌரி தலையை மெள்ள அசைத்து, தன்னை ஒரு தினுசாய்ச் சமாதானப்படுத்திக்கொண்டு, முதலில் தந்திகளையும் டெலக்ஸ் சமாச்சாரங்களையும் கொண்ட பைலை எடுத்தாள்.

டெலிபோன் அழைத்தது.

"எஸ்..."

"கௌரி! லாக்கர் திறக்க வரலியா நீங்க? மிஸஸ் காமேஸ்வரன் வந்து பத்து நிமிஷமா காத்துண்டு இருக்கார்... வரேளா?"

"ஓ, ஸாரி... இதோ வரேன்..."

இது என்ன அசட்டுத்தனம்? ஸ்ட்ராங் ரூமைத் திறந்து, பணம் எடுத்து, மாடிக்குக் கொண்டு வந்து சேர்த்த பிறகு முதல் காரியமாய் லாக்கர் ரூமைத் திறந்து விடுவதுதானே வழக்கம்! மிஸஸ் காமேஸ்வரன் வந்து காத்துக்கொண்டு இருக்கிறாராமே... கடவுளே!

மிஸஸ், காமேஸ்வரன், பாங்கின் முக்கிய வாடிக்கையாளர்களில் ஒருவர்.

மிஸ்டர் காமேஸ்வரன், ஷிப்பிங் கம்பெனியின் மானேஜிங் டைரக்டர். இங்கு டெபாசிட், கணக்கு இவற்றோடு, நான்கோ, ஐந்தோ லாக்கர்களைச் சொந்த உபயோகத்துக்கு எடுத்திருப்பவர்கள் வேறு!

அவர் மனைவியா வந்து காத்திருக்கிறார்?

லாக்கர் ரூம் சாவிகளை மட்டும் எடுத்துக் கொண்டு மேஜையைப் பூட்டின கௌரி, அகல

அகலமாய்க் காலை வைத்துப் பின்பக்கம் சென்று படிகளில் இறங்கினாள்.

மிஸஸ் காமேஸ்வரன் மருமகளுடன், கீழ் வரவேற்பறையில் காத்திருந்தார்.

கோபமாய் இருக்கிறாரா? அவரைக் குளிர்விக்க மௌலி கூல்ட்ரிங்க்ஸ் தருவித்திருப்பதும், சிரிக்கச் சிரிக்கப் பேசுவதும் புரிந்தது.

'குட்மார்னிங்' என்ற கௌரி, 'ஸாரிம்மா' என்கிற தினுசில் சிரித்துக்கொண்டே அறைக் கதவிடம் சென்றாள்.

"காலைலே ஒன்பது பத்தரை முகூர்த்தம்... ட்ரெஸ் பண்ணிட்டு வந்து, நகைகளை மாட்டிக்கிட்டு இப்படியே நேரா போயிடலாம்னா, என்னம்மா லேட் பண்ணிட்டீங்க... எத்தனை நேரம் காத்திருக்கறது?"

மிஸஸ் காமேஸ்வரன் இல்லையா? பத்து நிமிஷங்கள் காத்துவிட்டதற்கு இத்தனைகூடப் பேசாவிட்டால் எப்படி!

இரட்டைச் சாவிகளைப் போட்டு அறையைத் திறந்து, லாக்கர் ரூம் புஸ்தகத்தில் கையெழுத்துப் போட்டதும், லாக்கர் ஆபீஸரிடம் பொறுப்பை விட்டுவிட்டு மௌலியும், கௌரியும் மாடிக்குப் போகத் திரும்பினார்கள்.

"ஒன்பது-பத்தரை முகூர்த்தத்துக்கு, இவா முன்னாடியே கிளம்பினா என்ன? பத்துக்குக் கிளம்பி இங்கே வந்துட்டு இப்போ நாழியாச்சுன்னு மூஞ்சி தூக்கறா... காமேஸ்வரான்னா ஏது பண்ணினாலும் - நியாயம் போலிருக்கு..."



சலிப்புடன் மௌலி பேசியது கௌரிக்குச் சிரிப்பை உண்டாக்கியது.

மாடிப்படி திருப்பத்தில் ஏறினவளுக்குத் தான் காலையில் ஸ்ட்ராங் ரூமைத் திறந்து மூடினபோது, டெல்டேல் க்ளாக்கைச் சரிபார்க்கவில்லை என்ற எண்ணம் திடுமென்று தோன்ற, "நீங்க போங்கோ, ஸார். எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு" என்று சொல்லிப் பரபரவென்று கீழே இறங்கி ஸ்ட்ராங் ரூம் பக்கம் போனாள்.

அந்த அறையின் கதவுக்குப் பக்கத்தில் சின்னதாய், கடிகாரம் மாதிரி மாட்டப்பட்டிருப்பதுதான் டெல்டேல் க்ளாக்.

தன் கொத்திலிருந்த சாவியைப் போட்டுக் கடிகாரத்தை கௌரி திறந்தாள். உள்ளே இருந்த மெல்லிய அட்டையை எடுத்துவிட்டு அருகிலிருந்த அலமாரியிலிருந்து இன்னொரு அட்டையை எடுத்து, அதில் ஒரு ஓரமாய்த் தன் இனிஷியலைப் போட்டுக் கடிகாரத்துக்குள் வைத்து, திரும்ப அதைப் பூட்டினாள்.

கையிலிருந்த அட்டையைச் சரிபார்த்துக் கொண்டே மாடிப்படியை அடைந்து, ஏறத் தொடங்கினாள்.

இரவு எல்லோரும் வீட்டுக்குப் போனபிறகு பாங்க் பூட்டப்பட்ட பிறகு, காவலாய் உள்ளே தங்கும் இரண்டு காவலாளிகளும் ஒழுங்காய், தூங்காமல் தம் வேலைகளைக் கவனிக்கிறார்களா என்பதைத் தெரிவிக்க பாங்க் வைத்திருக்கும் பல வழிகளில் இதுவும் ஒன்று.

மாலையில் பணத்தை உள்ளே பூட்டிய பின், இந்த கடிகாரத்தோடு இணைக்கப்பட்டுள்ள கருவியில் உள்ள பட்டன் ஒன்றை அமுக்கி, ஓட வைக்க வேண்டும். அதன் பிறகு சரியாய் கால் மணிக்கு ஒருமுறை காவலாளி ஒருவன் வந்து அந்த பட்டனைத் திரும்ப அமுக்கி விடவிட, உள்ளே வைத்திருக்கும் அட்டையில் அது பதிவாகும். காலையில் பணம் எடுத்த கையோடு, டெல்டேல் க்ளாக்கைத் திறந்து, கால்மணிக்கு ஒரு மார்க் இருக்கிறதா என்று கவனித்து, காவலாளிகளின் சுறுசுறுப்பைக் கண்காணிக்க வேண்டியது சீஃப் அக்கௌண்டண்டான கௌரியின் வேலைதான்.

அட்டையில் கால்மணிக்கு ஒரு துவாரம் பதிவாகி இருப்பது தெளிவாக, பர்ஸனல் டிபார்ட்மெண்டில் அந்த அட்டையைக் கொடுத்துவிட்டுத் தன் இடம் நோக்கிப் போனாள்.

டெல்லர் கௌண்டரில் கூட்டம் அதிகமாய் இருந்தது. சக அக்கௌண்டண்ட் பார்த்தசாரதியின் மேஜை முன் நான்கைந்து நபர்கள் அமர்ந்திருந்தனர்.

டைப்பிஸ்ட் மாதவியின் டைப்ரைட்டர் வள வளவென்று பேசிக்கொண்டிருந்தது.

இன்னொரு டைப்பிஸ்டைக் காணோம்... டிக்டேஷனுக்கு மானேஜர் அறைக்குள் போயிருக்கிறாளோ?

முதலில் தந்தி மூலம் வந்திருக்கும் பண மாற்றங்களைப் படித்து, அவற்றிற்கான உத்தரவுகளைக் கொடுத்து முடித்தாள் கௌரி. நடுவில் நான்கு டெலிபோன்கள்... ரிசர்வ் பாங்க்கிலிருந்து இரண்டு,



ஐ.ஓ.பியிலிருந்து ஒன்று, வாடிக்கையாளரிடமிருந்து ஒன்று.

ஒரு பாங்க்குக்கும், மற்ற பாங்க்குக்கும் இடையில் கொடுக்கல் வாங்கல் அன்றாடம் இருக்குமாதலால் அது குறித்து டெலிபோன்கள்.

ஒருசிலவற்றுக்குத் தானே பதில் சொன்னாள். ஒருசிலவற்றுக்குச் சம்பந்தப்பட்டவரிடம் பேசிவிட்டுச் சொல்வதாகக் கூறினாள்.

சந்திரமௌளியை அழைத்தாள்.

"இண்டர் பாங்க் டிஸ்கௌண்டிங் லிமிட்ஸ்" பத்தி ஒரு சந்தேகம் கேட்கணும், ஃப்ரீயா இருக்கேளா, வரட்டுமா?" என்று கேட்டுவிட்டு, உள்ளே போய் அதை நிவர்த்தி செய்துகொண்டு வந்தாள்.

"கௌரி, ஒரு நிமிஷம்... கொஞ்சம் வரமுடியுமா?" அறைக்கு வெளியே வந்து மானேஜர் பாலாஜி அழைத்ததால், அங்கு போய்விட்டு வந்தாள்.

டெல்லர் சாம்பசிவம் ஒரு டி.டி. யோடு வந்து நின்றான்.

"இந்த டிடிஐப் பாருங்க, மேடம். கையெழுத்துப் போட அதிகாரம் இருக்கறவங்க போட்டதாய்த் தெரியலை. யாரு இந்த பாஸ்கரன்? இவர் ஆபீஸரா?"

சாம்பசிவம் நீட்டிய டிமாண்ட் டிராப்டை வாங்கிப் பார்த்தாள் கௌரி.

அவர்களுடைய கோயமுத்தூர் பிராஞ்சில் கொடுக்கப்பட்ட டிடி தொகை முப்பதாயிரம். பார்ட்டி யாரோ அங்கமுத்து அண்ட் கோ.

மேஜையின் இடதுபக்க அறையில் இருந்த மாதிரிக் கையெழுத்து புத்தகத்தை எடுத்துப் பார்த்தாள். ஒவ்வொரு கிளையிலும் யார்யார் கையெழுத்துப் போடத் தகுதி உடையவர் என்ற விவரமும், மாதிரிக் அவர் கையெழுத்தும் உள்ள அந்தத் தடித்த புத்தகத்தில் பாஸ்கரன் என்ற பெயரைத் தேடினாள்.

ம்ஹூம், இல்லை.

உள்ளே போய் பாலாஜியிடம் கேட்டாள். அவருக்கும் புரியவில்லை.

"கோயமுத்தூருக்கு போன் பண்ணி 'செக்' பண்ணிடுங்களேன்."

கௌரி தன் மேஜைக்கு வந்து, டெலிபோன் ஆபரேட்டரை அழைத்தாள். கோயமுத்தூர் கிளைக்கு கால் போடச் சொன்னாள்.

தொடர்பு கிடைத்து, அந்த பிராஞ்ச் சீஃப் அக்கௌண்டண்ட் பேசினார்.

பாஸ்கரன் கையெழுத்துப் போடத் தகுதி உள்ளவர்தானாம், பத்து நாட்களுக்கு முன்புதான் பதவி உயர்வு பெற்றிருந்ததால், அடுத்த புத்தகத்தில் தான் அவரின் மாதிரிக் கையெழுத்து இருக்குமாம்.

"தாங்க்யூ, ஸாரி ஃபார் த ட்ரபிள்" என்று சொல்லி போனை வைத்தாள் கௌரி.

பதவி உயர்வு எத்தனை பேர்களுக்கு வேண்டுமானாலும் கொடுக்கட்டும், யார் தடுக்கிறார்கள்! ஆனால், இவர்கள் எல்லாம் புத்தகத்தில் மாதிரிக் கையெழுத்து வெளியான பின்புதான் செக் அல்லது டிடியில் கையெழுத்துப் போட வேண்டும் என்று நிர்வாகம் விதி கொண்டுவந்தால் என்ன? இப்படி அரை மணி அனாவசியமாகத் தவிக்க வேண்டாம், இல்லையா?



ஒவ்வொன்றையும் கண்குத்திப் பாம்பாக கவனிக்க வேண்டி அல்லவா இருக்கிறது!

போன வாரம் செங்கற்பட்டில் கொஞ்சம் அசிரத்தையாக இருந்த கணத்தில், அக்கௌண்டண்ட் பன்னிரண்டாயிரம் ரூபாய்க்கான பொய்ச் செக்கை பாஸ் செய்ய, பணம் நிமிஷமாகப் போய்விட்டதே! அப்புறம் யாரைக் குறை சொல்லி என்ன?

இப்படி இங்கே அங்கே பறிகொடுக்காமல் இருக்க பாங்க்கும் எவ்வளவோ ஜாக்கிரதையாகத்தான் இருக்கிறது. என்ன இருந்து என்ன? ஏமாற்றுகிறவர்களும் தில்லுமுல்லு பண்ணுகிறவர்களும் எப்படியோ எங்கோ புகுந்துவிடுகிறார்களே!

பதினோரு மணிக்கு காண்டீன் நாயர் காபி கொண்டுவந்து கொடுத்ததைக் குடிக்க கௌரி ஸீட்டில் சாய்ந்த நிமிஷத்தில் பிரதான வாசலில் கண்ணாடிக் கதவுகள் வழியாகச் சந்துரு உள்ளே நுழைவது தெரிந்தது.

"ஹலோ ஆண்ட்டி... குட்மார்னிங்..."

"குட்மார்னிங் சந்துரு- எப்படி இருக்கே? படிப்பு எப்படி இருக்கு?"

"ஓ ஃபைன்... வெரி இண்டரஸ்டிங்... விஜய் என்ன பண்றான்? எங்கேயோ ட்ரெயினிங் போறதா அப்பா சொன்னாரே- அவனுக்குப் பிடிச்சிருக்கா?"

கௌரியிடம் மேற்கொண்டு இரண்டு நிமிஷங்கள் நின்று மரியாதையுடன் பேசின சந்துரு, 'வரேன் ஆண்ட்டி' என்று விடை பெற்றுக்கொண்டு தந்தையிடம் சென்றான்.

பார்த்தசாரதியின் மூத்த மகன் இந்த சந்துரு என்கிற ராமச்சந்திரன். இவனுக்குக் கீழ் ஒரு பெண், ஒரு பிள்ளை உண்டு.

பி.ஏ. எக்னாமிக்ஸ் முடித்துவிட்டு, இன்று ஐஐடியில் படிக்கிறான். படிப்பில் படுசுட்டி. தான் ஒரு முயற்சியும் எடுக்காமல் பிள்ளை பொறுப்பாகப் படிப்பது குறித்து பார்த்தசாரதிக்குப் பெருமை அதிகம்.

அப்பாவிடம் என்னவோ கேட்டுக்கொண்டு நிற்கும் சந்துருவைப் பார்க்கையில் கௌரியின் மனசை விஜய் நிறைத்துக்கொண்டான்.

நான் கோல்ட் மெடலிஸ்ட், சங்கரும் படிப்பில் கெட்டிக்காரர். விஜய்க்கு மட்டும் ஏன் படிப்பில் நாட்டமே இல்லை? படிப்பு ஏறவில்லை என்று நான் ஒப்புக்கொள்ளமாட்டேன்; புத்தியைப் படிப்பில் ஓடவிடமாட்டேன் என்கிறான். அவ்வளவுதான். விஜய் கெட்டிக்காரன்தான், புத்திசாலிதான்... ஆனாலும்... ஆனாலும்?

என்ன புத்தி இருந்து என்ன? யார் ஒப்புக் கொள்வார்கள்? பளிச்சென்று மார்க் வாங்கி, இப்படி சந்துரு மாதிரி படித்து முன்னுக்கு வந்தால் மற்றவர்கள், 'யெஸ், இவன் புத்திசாலி' என்று ஒப்புக்கொள்வார்கள்!



படிக்காவிட்டாலும், உருப்படியாக வேறு எதிலாவது புத்தி போனால் சரி, ஒழிந்து போகட்டும் என்று விட்டுவிடலாம். ம்ஹூம், அதற்கும் வழி இல்லையே!

நன்றாக ட்ரெஸ் பண்ணிக்கொள்கிறான். ஒரு சினிமா, ஒரு க்ளப் விட்டுக்கொள்வதில்லை. ராஜா வீட்டுக் கன்றுக்குட்டி மாதிரி ஸ்கூட்டரில் சுற்றாத இடம் இல்லை... மனசைக் கெடுத்துக்கொண்டு, உடம்பையும் கெடுத்துக்கொண்டு என்ன இதெல்லாம்?

இருபத்திரண்டு வயசுப் பிள்ளைக்கு இன்னும் எந்தத் தினுசில் புத்தி சொல்லுவது சாத்தியம்?

பிள்ளை இப்படி ஒன்றுக்கும் உதவாக்கரையாய் அலைந்து சீரழிகிறானே என்று ஓயாமல் வேதனைப் பட்டது ஒரு வழியாய்த் தீர்ந்துபோனது என்று, மதுசூதனிடம் ட்ரெயினிங்குக்குப் போனபோது சந்தோஷப்பட்டதுக்கு, அல்ப ஆயுசுதானா?

நான்கு நாளாக ஏன் விஜய் இப்படி இருக்கிறான்?

போனில் பேசிய அந்தப் பெண் யார்?

இவனுக்கும் அவளுக்கும் என்ன தொடர்பு?

ஒருவேளை காதலியோ? காதலித்துவிட்டு, இப்போது, 'அம்மா திட்டுவாள், கல்யாணம் வேண்டாம்' என்கிறானோ? அதுதான், 'அவன் எங்கு போனாலும் விடமாட்டேன்' என்று அவள் போனில் சொன்னாளோ?

வெறும் மனசுக் காதலோடு நிற்கிறதா, இல்லை வேறு ஏதாவது கன்னாபின்னா என்று ஆகிவிட்டதா?

சினிமாவில் வருகிற மாதிரி, 'நீங்கள் பாட்டியாகப் போகிறீர்கள்' என்று சொல்லிக்கொண்டு வந்து நிற்பாளோ?

அவள் யார் வீட்டுப் பெண்?

ஏதாவது விவரம் தெரிந்தால் தேவலை போல கௌரிக்குத் தோன்றியது.

முன்பு ஸேட்டிடம் பணம் வாங்கின மாதிரி இந்தத் தடவையும் எங்கேயாவது ஏடாகூடமாக மாட்டிக்கொண்டு விட்டானோ?

அப்படித்தான் என்றால் சொல்லித் தொலைப்பது தானே! வசவுக்கும், திட்டுக்கும் பயந்து வாயை மூடிக்கொண்டிருந்தால் எப்படி?

தப்புதான் - விஜய் செய்வது தப்புதான் - ஆனாலும், நான் சம்பாதிப்பது, இத்தனை சேர்த்து வைத்திருப்பது எல்லாம் யாருக்காக? அவனுக்காகத் தானே? அவன் சந்தோஷத்துக்குத்தானே?

என்ன பிள்ளை இவன்? ஏன் இப்படிச் சதா எனக்கு ஒரு பிரச்சினையாக இருக்கிறான்?

இந்த சந்துரு போல சமர்த்தாக, கெட்டிக் காரனாக, பெரியவர்களுக்கு அடங்கின பிள்ளையாக ஏன் இவன் இல்லை?

சந்துருவைப் பார்த்துக்கொண்டே அமர்ந்திருந்த கௌரி, பலத்த சிரிப்புச் சப்தம் கேட்டு, கௌண்டர் பக்கம் பார்வையைத் திருப்பினாள்.

சில இளசுகள்... தலைமுடியைப் பிய்த்து விட்டுக்கொண்டு, அழுக்கு ஜீன்ஸ்ஸும், மார்பு தெரியும்



ப்பு இல்லாத பனியனுமாக இரண்டு பெண்கள்- தாடியும், மீசையுமாக அழுக்காக ஒரு பையன்...

வெளிநாட்டுப் பசங்கள் இல்லை... நம் ஊர்ப் பிள்ளைகள் தான். ஒரு பெண்ணின் குடும்பம், கௌரிக்கு ஓரளவு தெரிந்ததுதான். தகப்பனார், தொழிலதிபர். இந்த பாங்க் வாடிக்கையாளர். லட்சாபதிக்கு இப்படி ஒரு பெண்!

இந்தக் காலத்தில் பல வயசுப்பெண்களும், பிள்ளைகளும் ஏன் இப்படித் தத்தாரிகளாக இருக்கிறார்கள்? சடங்குகளில், மதத்தில், தெய்வத்தினிடத்தில், பெரியவர்களிடத்தில், கட்டுப்பாட்டில் என்று எதிலும் நம்பிக்கை இல்லாமல் ஏன் இப்படி இருக்கிறார்கள்?

இவர்களோடு ஒப்பிடுகையில் விஜய் ரொம்ப நல்ல பையன் என்றுதான் சொல்லவேண்டும், இல்லையா?

படிக்கவில்லை, கொஞ்சம் ஊர் சுற்றுகிறான் என்பதைத் தவிர வேறு என்ன குறை?

அம்மாமேல் உசிராக இருக்கும் பிள்ளை. அம்மா அம்மா என்று தலைப்பைப் பிடித்துக்கொண்டு இன்றைக்கும் கொஞ்சி விளையாடும் பிள்ளை.

அன்றைக்கு மிஸ்டர் எத்திராஜ்-ஸ்டேட் பாங்க் ஆபிஸர்-என்ன சொன்னார்?

"இந்தக் காலத்துக் குழந்தைகளை, 'ஏண்டா படிக்கலை, ஏண்டா இப்படிச் சுற்றுகிறாய்' என்றுகூடக் கேட்க முடிவதில்லை. கேட்டால், 'என்னைப் பெற்றது

நீதானே! நானா பெறச் சொன்னேன்? நன்றாக அனுபவி. நான் என் இஷ்டம் போலத்தான் இருப்பேன்' என்று கூசாமல் சொல்கிறார்கள்" என்றுதானே!

நல்லவேளை, அந்த மட்டுக்கு விஜய் இப்படிக் கேட்கக்கூடிய பிள்ளை இல்லைதான். சந்துரு ஓர் அபூர்வப் பிறவி. அவனோடு என் விஜய்யை ஒப்பிட்டுப் பார்த்து மனசு கஷ்டப்பட வேண்டும்?

கையிலிருந்த காபி கப்பைக் கீழே வைத்துவிட்டு, திரும்ப கவனத்தை பாங்க் வேலைகளில் செலுத்த கௌரி தயாரானபோது, அவள் நெஞ்சில் சற்று முன் இருந்த கனம் லேசாகக் குறைந்த மாதிரிதான் தோன்றியது.

## 8

"எக்ஸ்க்யூஸ் மீ, மேடம்"!-

ஷாம்ஸுதீன் எக்ஸ்போர்ட்ஸ் ஃபைலை கவனத்துடன் படித்துக்கொண்டிருந்த கௌரி தலை நிமிர்ந்தாள்.

சுதாகர்... பர்ஸனல் டிபார்ட்மெண்ட் க்ளார்க்...

"எஸ்?"

"மிஸ்டர் ராமசாமி லீவில் இருக்கிறார், மேடம்; அவர் சம்பளத்தைக் கணக்கில் கட்டிவிடட்டுமா? பாதி நாட்கள் லாஸ் ஆஃப் பே லீவ். அதைக் கழிச்சுத்தானே கட்டணும்?"

சுதாகர் ஒரு பேப்பரை அவள்முன் நீட்டினான்.



ராமசாமியின் வருமானத்திலிருந்து, பதினேழு நாட்களுக்குச் சம்பளம் கழிக்கப்பட்ட தொகை விவரம் அதில் இருந்தது.

இந்த ராமசாமி ஒரு நோஞ்சான் மனுஷர். புசுக்கென்றால் ஜுரம் வந்துவிடும். நான்கு வருஷங்களுக்கு முன்னால் டைஃபாய்டில் கிடையாகக் கிடந்தாராம்! அப்போது அவரை கவனித்த கத்துக்குட்டி டாக்டர் ஏகமாக ஆண்டிபயாடிக்ஸ் மருந்துகளைக் கொடுத்துவிட்டாராம். கிருமியை அழித்த மருந்துகள், உடம்பில் உண்டாகும் எதிர்ப்புச் சக்தியையும் அழித்துவிடவே, அதிலிருந்து மனுஷருக்கு நோய் எதிர்ப்பு சக்தி சுத்தமாகக் குறைந்துபோய், நின்றால் கால்வலி, உட்கார்ந்தால் தலைவலி, கொஞ்சம் உடம்பைச் சிரமப்படுத்தி வேலை செய்துவிட்டால் ஜுரம் என்றாகிவிட்டது.

பாவம்! அதுவும் கடந்த இரண்டு வருஷங்களாக அவர் ரொம்பவும்தான் கஷ்டப்படுகிறார். மாசாமாசம் ஒருத்தருக்கு ஜுரம். அது, இது என்று வந்துகொண்டே இருந்தால் யாரால்தான் தாக்குப் பிடிக்க முடியும்?

பாங்க் என்ன மாமனார் வீடா, நினைத்தபோது லீவு போட்டுவிட்டு, முழுசாய்ச் சம்பளம் வாங்கிக் கொள்ள?

இத்தனைக்கும் கௌரி அதிகக் கரிசனத்துடன்தான் ராமசாமியை நடத்துவாள். எக்கச்சக்கமாய் வேலை, அலைச்சல்? ம்ஹூம். ஒன்றையும் அவரிடம் தருவதில்லை.

ஆனாலும், மாசத்தில் பாதி நாட்கள் லீவு எடுக்கும்படி நேர்ந்தால், ஒருசமயம் இல்லாவிட்டாலும் மறுசமயம் இப்படி சம்பளக்குறைப்பு, ஊதிய உயர்வு தகராறு என்று எல்லாம் வரத்தானே செய்யும்?

ராமசாமிக்குக் குடும்பம் பெரியது. மனைவி, மூன்று பிள்ளைகள், இரண்டு பெண், வயசான தாயார், வீணாய்ப் போன அக்காக்காரி... போதுமா? பாதிச் சம்பளத்தில் அவர் எப்படி இந்த மாசத்தைத் தள்ளப்போகிறார் என்ற வேதனையோடு சுதாகரிடம் பேப்பரைத் தந்து, "பணத்தைக் கழிச்சு அவர் கணக்குலே கட்டிடுங்கோ... நாம என்ன செய்றது!" என்றவளின் மனசில் லேசாய்ச் சங்கடம்.

கையை நீட்டி பேப்பரை வாங்கின சுதாகரின் கைவிரல்கள் மஞ்சள் பூசிக்கொண்டிருப்பதை கௌரி கவனித்தாள்.

விரல் நுனிகள், நகங்கள் எல்லாம் காமாலை வந்த மாதிரி மஞ்சள்!

நிமிர்ந்து அவன் உதடுகளைப் பார்த்தவளுக்குச் சின்னதாய் வயிற்றில் ஒரு குமட்டல்.

சுதாகர் ஒரு செயின் ஸ்மோக்கர். பர்ஸனல் டிபார்ட்மெண்டில் அவன் வேலைபார்க்கும் இடத்துக்குப் போனாலேயே சிகரெட் நாற்றம் ஆளைக் கவ்விக்கொள்ளும்.

பர்ஸனல் மானேஜர் டேவிட் ராஜ் அவனைக் கண்டித்துப் பார்த்துச் சலித்துவிட்டாராம்.



"இவ்வளவு சிகரெட் குடிக்கிறது உடம்புக்குக் கெடுதல், சுதா; குறைச்சிக்க" என்று சொல்லிச் சொல்லி அலுத்துப்போனவராக அவர் இப்போதெல்லாம் வாயைத் திறப்பதில்லையாம்.

இந்த சுதாகருக்கு என்ன வயசு, இருபத்து ஏழோ, எட்டோதானே! அதற்குள் ஒரு நாளைக்கு நாற்பதிலிருந்து ஐம்பது சிகரெட் குடிக்கிறானாமே! கடவுளே, இது அவனைக் கொன்றுவிடுமே!

கௌரிக்கு சுதாகர் அவ்வளவாகப் பழக்கம் இல்லை; ஹைதராபாத் கிளையிலிருந்து மாற்றல் ஆகி வந்து ஒரு வருஷம்கூட ஆகாததால் அவனோடு அத்தனை பேச்சு வார்த்தைகள் கிடையாது. கொஞ்சம் நெருக்கமாகப் பழகிவிட்டாலும், 'இதோ பார் சுதாகர், நான் உன் அம்மா மாதிரி; அதனால் நான் சொல்லுவதைத் தப்பாக எடுத்துக்கொள்ளாதே; எதற்காக இத்தனை சிகரெட் பிடித்து நல்ல உடம்பைப் பாழாக்கிக்கொள்கிறாய்? ப்ளீஸ், வேண்டாமப்பா! விட முடியாவிட்டாலும் குறைத்துக்கொண்டுவிடு' என்று அன்போடு கரிசனத்தோடு சொல்லலாமோ?

அது சரி-உடனே தாஸானுதாஸனாக 'எஸ் மேடம்' என்று தலையை ஆட்டி விடுவானாக்கும்! நல்ல ஆசை!

அன்போடு, பாசத்தோடு 'சிகரெட் பிடிக்காதேடா' என்று ஆயிரம் முறைகள் கெஞ்சி, கொஞ்சி, கண்டிப்பாக, அதட்டலாக இவள் கேட்ட பின்பும் சொந்தப் பிள்ளையே அந்தத் தீய பழக்கத்தை

விடவில்லை; யாரோ பெற்ற இந்தச் சுதாகரா கேட்டு விடப் போகிறான்? ம்ஹூம், ஒன்றுமில்லை.

ஆமாம்.. கிட்டத்தட்ட ஒன்பது வருஷங்களுக்கும் மேலாக விஜய் சிகரெட் பிடிக்கிறானே, ஏன் அவன் விரல்களும், நகங்களும் சுதாகருடையவை மாதிரி மாறவில்லை?

விஜய் விரல்கள் இன்னமும் ரோஜாப்பூ நிறத்தில்தான் இருக்கின்றன; நகங்கள் அழகாக, நீளநீளமாக, மஞ்சள் குளிக்காமல் பளிச்சென்று இருக்கின்றன.. உதடுகளிலும் கருமை பாயவில்லை.

ஒருவேளை, விஜய், சுதாகர் அளவுக்குச் சிகரெட் பிடிக்காமல் இருப்பதுதான் காரணமோ? தாங்க்காட்! அந்த மட்டுக்குக் கொஞ்சம் சந்தோஷப்பட வேண்டியதுதான்.

முதன்முதலில், சுமார் பத்து வருஷங்களுக்கு முன், அதாவது விஜய்க்குப் பன்னிரண்டு வயசில், சங்கர் இறந்து போன ஒரு வருஷத்துக்கெல்லாம், ஒருநாள் சற்றும் எதிர்பார்க்காத தினுசில் விஜய்யின் மேஜை டிராயரில் சிகரெட் பாக்கெட்டைத் தான் பார்த்து அதிர்ந்துபோனது கௌரிக்கு ஞாபகம் வந்தது.

பால் கணக்கு எழுதப் பேனாவை எடுத்தவள், அதில் இங்க் இல்லாமல் இருந்ததால், உடனே ஊற்றச் சோம்பல் பட்டுக்கொண்டு, பிள்ளையின் டிராயரில் பேனாவோ பென்ஸிலோ கிடைக்குமா என்று தேடின கணத்தில்தான், சிகரெட் பாக்கெட்டைப் பார்த்தாள்.

எடுத்துப் பிரித்து உள்ளே நான்கு சிகரெட்டுகள் இருப்பதைக் கண்டவளுக்கு உடம்பு ஆடிப்போயிற்று.



சிகரெட்டா? விஜய்யின் மேஜையிலா? இது எப்படி சாத்தியம்? சங்கரின் பிள்ளை விஜய் சிகரெட் பிடிக்கிறானா? அதுவும் பன்னிரண்டு வயசிலா? இது சாத்தியமா?

மனசு பாறையாய் கனத்துப்போக அப்படியே உட்கார்ந்துவிட்டாள்.

பள்ளிக்குப் போயிருந்த விஜய் திரும்பி வந்ததும், மாமனார் 'வாக்' போவதாய்க் கிளம்பினதும், பிள்ளையிடம் போனாள்.

சுற்றி வளைக்கவில்லை. நேரடியாகக் கேட்டு விட்டாள்.

"இது ஏது, விஜய்?"

"எது?"

அம்மா நீட்டின சிகரெட் பாக்கெட்டைப் பார்த்த விஜய் தவித்துப் போனது தெளிவானது.

"இதும்மா.. வந்தும்மா.."

ஒரே நிமிஷம்தான். விஜய் சுதாரித்துக்கொண்டு விட்டான்.

"ஓ! இதுவா? என் மேஜை ட்ராயர்லேந்து தானேம்மா எடுத்தே? அன்னிக்கு அப்பா ஃப்ரெண்ட் மிஸ்டர் குப்தா வீட்டுக்கு வந்தப்போ இதை விட்டுட்டுப் போயிட்டார்ம்மா.. நா பத்திரமா எடுத்து வெச்சிருக்கேன்.. அவர் அடுத்த தடவை வந்தா குடுக்கலாம்னும்மா.."

அப்படியா விஷயம்! குப்தா விட்டுப்போனதைப் பொறுப்பாய் அவரிடம் கொடுக்க விஜய் எடுத்து வைத்திருக்கிறானா? அது புரியாமல் நான் வீணாய் அவஸ்தைப்பட்டேனா!

கண்களை விரித்துக்கொண்டு, 'எனக்கு ஒன்றுமே தெரியாதும்மா!' என்ற பாவனையோடு மகன் பேசியதைத் தான் அப்படியே அன்றைக்கு ஏற்றுக் கொண்டதை இப்போது நினைத்துப் பார்த்த கௌரிக்குத் தான் எத்தனை அசடாய், விவரம் புரியாதவளாய் இருந்திருக்கிறோம் என்று தோன்றியது.

விஷயத்தை கௌரி அன்று அதோடு விட்டு விட்டாள்.

ஆனால், வெகு சீக்கிரத்திலேயே, மாலை விளையாடிவிட்டு வரும் மகனை அணைக்கக் கிட்டத்தில் வந்தால், லேசாய்ப் புகை நாற்றம் எழுவதை அவளால் புரிந்துகொள்ள முடிந்தது.

ஆறு மாசங்கள் போல ஆனதும், பொறுக்க முடியாதவளாய் ஒருநாள் கேட்டுவிட்டாள்.

"என்ன விஜய், உன்கிட்ட சிகரெட் நாத்தம் வாரது?"

"சிகரெட் நாத்தமா? என் மேலயாம்மா?" கொஞ்சம் யோசித்த விஜய், "மைதானத்துலே எனக்குப் பக்கத்திலே சில காலேஜ் பசங்க உட்கார்ந்துண்டு சிகரெட் பிடிச்சாம்மா... ஒருவேளை அந்தப் புகை வாசனைதான் என்மேலே வரதோ?" வெகுளித் தனமாய் அவன் பேசவும், 'ஓ! அப்படியும் இருக்குமோ?'



என்ற நினைப்பில் அன்றும் விஷயத்தை கௌரி அதோடு விட்டுவிட்டாள்.

விஜய்க்குப் பதினாறு வயசாகையில் மொட்டை மாடியில், அம்மா வெளியே போயிருக்கிறாள் என்ற தைரியத்தில் புகைபிடித்துக்கொண்டிருந்தவன் எதிர் பாராத விதமாய்ச் சீக்கிரமே வீடு திரும்பிவிட்ட கௌரி, மகனைத் தேடிக் கொண்டு மேலே வந்த சமயத்தில் வகையாய், கையும் களவுமாய் மாட்டிக் கொண்டான்.

கௌரிக்குப் பேச்சே எழவில்லை.

"என்னப்பா...வி...விஜய்...என்னப்பா... இது?" என்றவளுக்குக் கண்களில் நீர் ஊறியது. தொண்டையை அடைத்துக்கொண்டது.

'என்னடா, ராஸ்கல், என்ன பழக்கம்டா இது? இத்தனை நாளாக இல்லை இல்லை என்று என்னை ஏமாற்றின படவா கழுதை' என்று கோபத்துடன் ஒரு வார்த்தைகூடக் கேட்கவிடாமல் அவள் விஜய்மேல் வைத்திருந்த அன்பு தடுக்கவே, லேசாக விசும்புவதைத் தவிர கௌரியால் வேறு ஏதும் செய்ய இயலாமல் போனது.

டக்கென்று கையிலிருந்த சிகரெட்டை வீசி எறிந்த விஜய், அம்மாவிடம் ஓடி வந்தான். "ஸாரிம்மா... என்னை மன்னிச்சிடும்மா... தெரியாம பிடிச்சிட்டேன். என் ஃப்ரெண்ட்ஸ் எல்லாரும் 'சிகரெட் பிடிக்காட்டி நீ ஒரு பொம்பளை'னு கேலி பண்ணறாம்மா... அவாளுக்கு பதில் சொல்லத் தெரியாமத்தான் நா

இதைப் பிடிக்க ஆரம்பிச்சேன். நீ அழாதேம்மா... நா இனிமே இதைப் பிடிக்கமாட்டேன்-ஸாரிம்மா..." என்று சொல்லி அவள் கையைப் பற்றிக்கொண்டான். கண்களில் நீர் பூத்து பளபளத்தது.

நாசமாப்போகிற சினேகிதன்; இப்படியா சின்னப் பிள்ளைகளின் மனசைக் கெடுப்பான்? அவனவனுக்கு வேண்டுமானால் பிடித்துத் தொலைக்கட்டுமே... ஏன் மற்ற பையன்களையும் பிடிக்கச் சொல்லிக் கட்டாயப் படுத்துகிறான்? பிடிக்காவிட்டால் 'உனக்கு தைரியமில்லை, நீ ஒரு பொட்டை' என்று கேலி பண்ணி ஏன் ரோஷத்தை உண்டாக்குகிறான்?

அன்றைக்கும் மகனின் பேச்சையும், கண்ணால் அவன் கொட்டின கண்ணீரையும் பைத்தியம்போல நம்பி, கௌரி அதோடு பேச்சை விட்டாள்.

விஜய் பியூசி. படிக்கும்போது தொடர்ந்து அவன் பாக்கெட்டில் சிகரெட்டுகளைக் காண நேர்ந்த பிறகு, இனியும் சும்மா இருந்தால் எப்படி என்ற நினைப்பில் கௌரி, திரும்ப மகனிடம் இந்தப் பேச்சை எடுக்கவே செய்தாள்.

"ரெண்டு மூணு தடவை உன் ஷர்ட் பாக்கெட்ல சிகரெட் பாக்கெட் பார்த்தேன், விஜய்; என்ன பழக்கம் இது?"

சாதத்தைப் பிசைந்து வாயருகே கொண்டு போன விஜய், தொப்பென்று அதைக் கீழே தட்டில் போட்டான். அம்மாவை நேருக்கு நேர் ஒரு பார்வை பார்த்தான்.

"லிஸன் மம்மி... நா சின்னக் குழந்தை இல்லே. எனக்கு வயசு பதினெட்டு ஆகப்போறது... இன்னமும் என்னைச் சின்னப்பிள்ளையா நினைச்சுண்டு நீ நிறைய கேள்வி கேக்கறே...ஐ டோண்ட் லைக் திஸ்...வயசுக்கு வந்துட்டா பசங்க சிகரெட் பிடிக்கறதும், வெளிலே சுத்தறதும் சகஜம்தான். என் ஃப்ரெண்ட்ஸ் வீட்டுலே யாரும் எதுவும் தொண தொணங்கறது இல்லே... நீயும் புரிஞ்சிக்கணும், மம்மி..."



ரொம்பப் பெரிய மனுஷன் மாதிரி, கண்டிப்பாய், கறாராய் இப்படி விஜய் பேசுவான் என்பதை எதிர்பார்க்காத கௌரி திகைத்துப் போனாள்.

எங்கேயிருந்து வந்தது இத்தனை தைரியம் இவனுக்கு?

யார் சொல்லிக்கொடுத்தார்கள் இத்தனை பேச்சுப் பேச?

அம்மா அடிபட்டுப்போய் உட்கார்ந்துவிட்டது கொஞ்சமும் புரியாத மாதிரி விஜய் சாப்பிட்டான்-எழுந்து கையை அலம்பிக்கொண்டான். அவளிடம் வந்தான். ஒன்றுமே நடக்காததுபோல அவள் கழுத்தைக் கட்டிக்கொண்டான்.

"ரிலாக்ஸ் மம்மி.... இப்படிச் சின்ன விஷயத்துக்கெல்லாம் அப்ஸெட் ஆறது உனக்கு நல்லதில்லை... நாங்க இன்னும் சின்னக் குழந்தைகளில்லே... மம்மி... என்னை, என் ஃப்ரெண்ட்ஸை சரியா நீ புரிஞ்சுண்டுட்டா, அப்புறம் உனக்கு எந்த வேதனையும் இருக்காது... அம்மா ப்ளீஸ்..."

கௌரியும் புரிந்துகொள்ளத்தானே முயற்சி செய்தாள்! அதனால்தானே வீட்டுக்குப் பெரியவராய்

அப்போது இருந்த மாமனாரிடம் 'விஜய்யின் பழக்கவழக்கங்கள் சரியாக இல்லை, கொஞ்சம் கண்டியுங்கள்' என்று சொல்லவில்லை. சரி, இந்தக் காலத்தில் எல்லாப் பிள்ளைகளுக்கும் இந்தப் பழக்கம் உண்டு போலிருக்கிறது... இதை நாம் பெரிசு பண்ணக் கூடாது என்று தீர்மானித்ததும் அதனால்தானே?

என்ன முயற்சி பண்ணி என்ன? என்ன விட்டுக் கொடுத்து வாழ்ந்து என்ன? என்ன மூடி மறைத்து என்ன?

ஒன்றுக்கும் பலன் இருப்பதாய்த் தெரிய வில்லையே! நான் இப்படி விஜய்யே உலகமாய், உசிராய் வாழ்வதும், இவனுக்காக எதையும் பாராட்டாமல் இருப்பதும் இவனுக்கு ஏன் புரியவில்லை?

புரிந்திருந்தால் ஒழுங்காகப் படிக்காமல் இருந் திருப்பானா? இருபத்திரண்டு வயசில் வேலை வெட்டி, படிப்பு என்று எதுவும் இல்லாமல் கோவில் காளை யாய்த் திரிவானா?

சங்கர் உயிரோடு இருந்திருந்தால், விஜய்யை வித்தியாசமாய் வளர்த்திருப்பாரோ? வழி காட்டும் அப்பா, அவரின் கண்டிப்பு இல்லாமல்தான் இன்றைக்கு விஜய் இப்படிப் பொறுப்பில்லாமல் ஆகிவிட்டானோ?

கௌரி உதட்டைக் கடித்துக்கொண்டாள்.

இன்றைக்கு எனக்கு என்ன ஆகிவிட்டது? ஏன் இப்படி ஒரு வேலையும் ஒழுங்காய் கவனிக்காமல் விஜய் பற்றியே நினைத்துக்கொண்டிருக்கிறேன்? ஆபீஸ் நேரத்தில் என்ன இதெல்லாம்? சே! நான்கு நாளாய் விஜய் என்னவோ மாதிரி இருப்பதுதான் தன்னை இப்படி அலைக்கழிக்கிறது என்று நினைத்த கௌரி, இன்றைக்கு என்னவானாலும் வீடு திரும்பி யதும் முதல் காரியமாய் அவனிடம் பேசிவிட்டுத்தான் மறுவேலை என்றும் நினைத்துக்கொண்டே எழுந்த போது மணி ஐந்து.



## 9

மாலையில் கௌரியும் சந்திரமௌலியும் அவரவர் இஷ்டப்படி டாக்ஸியிலோ, ஆட்டோ விலோதான் வீடு திரும்புவது வழக்கம். விரல் அசைத்தால் அலுவலகக் கார் வரும். ஆனால், அதில் போக இரண்டுபேருக்குமே விருப்பமில்லை. காலையில் ஸ்ட்ராங் ரூமைத் திறக்க, ஒரு நிமிஷம் தப்பாமல் டாணென்று வரவேண்டும், சரி. மாலையில் என்ன அவசரம்? நான்கு மணிபோலப் பணத்தை எண்ணி, கணக்குப் பார்த்து உள்ளே வைத்துவிட்டால் பாக்கி வேலைக்குத் தக்கபடி ஐந்திலிருந்து எப்போது வேண்டுமானாலும் சாவகாசமாகப் புறப்படலாம் என்கிறபோது, பாங்க் காரை உபயோகிப்பது தவறு என்ற எண்ணம் கௌரி, சந்திரமௌலி இருவருக்குமே உண்டாக, ஆபீஸ் வாகனத்தில் வீடு திரும்ப மறுத்து விட்டார்கள்.

"நாங்க ரெண்டுபேர் மட்டும்தான் அந்த பாங்கில் ஆபீஸர்களா? பர்ஸனல் ஆபீஸர் இல்லையா?

இன்டர்னல் ஆடிட்டர் இல்லையா? அக்கௌண்டண்ட் பார்த்தசாரதி இல்லையா? இப்படிப் பட்டியலை நீட்டிக்கொண்டே போகலாமே! அவாளுக்கு இல்லாத வசதி எங்களுக்கு மட்டும் எதுக்கு? காலையில் வண்டி அனுப்புங்கோ, ஒப்புக்கொள்றோம். ஆனா— சாயங்காலம் வேண்டாம்!"

மானேஜர் பாலாஜி இரண்டு வருஷங்களுக்கு முன் பம்பாய்க் கிளையிலிருந்து சென்னைக்கு மாற்றல் ஆகி வந்த உடன், "எல்லா ப்ராஞ்ச்லேயும் கார்த்தால காரை உபயோகிக்கறவா, சாயங்காலமும்தான் உபயோகிக்கிறா. நீங்க ரெண்டுபேர் மட்டும் என் வேண்டாங்கறேள்?" என்றபோது, கௌரியின் சார்பிலும், தன்சார்பிலும் சந்திரமௌலி மேலே சொன்னவாறு கூறிவிட்டார்.

சந்திரமௌலியின் தம்பி, ப்ரஸிடென்ஸி காலேஜில் லெக்சரர். மாலையில் அவர் வீடு திரும்பும்போது அண்ணாவை அழைத்துக்கொண்டு போய்விடுவார். அவர் வராத நாட்களில் மௌலி டாக்ஸியில் வீடு திரும்பிவிடுவார்.

பார்த்தசாரதிக்கும், பாலாஜிக்கும் சொந்த வாகனம் உண்டு.

கௌரி வழக்கமாய் ஆறு ஆறரைக்கு ஆட்டோவில் வீடு திரும்புவாள்.

"உன் கூட வேலை செய்யறவா எல்லாரும் கார்லே ஜம்னு போறப்போ ஏம்மா நீ மட்டும் ஆட்டோலே வரணும்? ஒரு கார் வாங்கிடும்மா-உன்னை தினமும் சாயங்காலம் நா கூட்டிண்டு வரேன்..."



மூன்று வருஷங்களுக்கு முன்னால் முதன்முதலில் விஜய் இந்தப் பேச்சை எடுத்தபோது, 'நமக்கெதுக்குப்பா காரும், கீரும்' என்கிற மாதிரி பார்த்துவிட்டுவிட்டாள் கௌரி.

ஆனால், நாளாக ஆக இந்தத் தொணதொணப்பு அதிகமானபோது ஒருநாள் கோபாலனிடம் இது குறித்துப் பேசினாள்.

கோபாலன் இப்போது வெறும் போர்ட் மெம்பர் இல்லை, அந்த பாங்க்கின் சேர்மனே அவர்தான். என்றைக்காவது அத்தி பூத்த தினுசில் ஏழாவது மாடியில் இருக்கும் அவர் அறைக்கு, அவர் நான்கு தரம், "நீ வருகிறாயா, இல்லை நான் கீழேவந்து உன்னைப் பார்க்கட்டுமா?" என்று அதட்டினபிறகு, கௌரி போவது உண்டு.

அப்படித்தான் அன்றைக்கும் போனாள். பேச்சுவாக்கில் "விஜய் கார் வேணும்னு ரொம்ப ஆசைப் படறான், மாமா.... வாங்கலாமா, என்ன சொல்றேள்?" என்றாள்.

நெற்றியில் சுருக்கங்கள் விழ கோபாலன் யோசித்தார். பிறகு, "ம்ஹூம், வேண்டாம்மா. ஏற்கனவே படிக்காம சுத்தறான். கார் வாங்கினா இது அதிகமாயிடும். அவன் டிகிரியை முடிச்சு ஒரு வேலையில் உட்கார்ந்தப்புறம் இதப்பத்தி யோசிக்கலாம்னு சொல்லிடு... என்ன?" என்றார்.

கோபாலன் சொன்ன காரணத்தைப் பிள்ளையிடம் சொல்லாமல், வேறு தினுசாய்க் கார் வாங்க முடியாத நிலையை எடுத்துரைத்தாள் கௌரி.

"நம்ம சக்திக்குக் கார் வெச்சிக்க முடியாதுனு எனக்குத் தோணறது, விஜய். திடீர்னு நாற்பதாயிரம் பணத்துக்கு எங்கே போறது, சொல்லு?"

"ஏம்மா, பாங்க் டெபாசிட்லே நீ நிறைய பணம் வெச்சிருக்கியே."

"அது எமர்ஜென்ஸிக்கு வேணும்பா. ஒரு அவசரம்னா வேண்டாமா?"

"சரி, உன் பாங்க்லே கடன் தரமாட்டாளா?"

"தருவா... ஆனா, கோபால் மாமாவுக்கு நா கார் வாங்கறதிலே இஷ்டம் இல்லே... 'தனிப் பொம்பளையா கார் வெச்சிண்டா கஷ்டப்படுவே; வேணும்னா பாங்க் காரை உபயோகப்படுத்திக்கோ'னு சொல்றார்."

"ஏன், நா ஒரு ஆம்பிளை இருக்கறது அவர் கண்ணுலே படலையா?"

கௌரி சிரித்தாள்.

"எங்க எல்லார் கண்ணுக்கும், மனசுக்கும் நீ இன்னும் குழந்தையாதான் தெரியறே... என்ன பண்ணறது, சொல்லு?"

"டாம் திஸ் குழந்தை பிஸினஸ்! எனக்கு வயசு இருபது ஆயிடுத்து.... குழந்தையாம் குழந்தை...." கத்திக் கொண்டே கோபத்தோடு தன் அறைக்கு விஜய் எழுந்து போய்விட்டாலும், அப்புறம் திரும்பக் கார் வாங்கலாம் என்று நச்சரிக்கவில்லை. கோபாலனிடம் அவனுக்கு பயம். ஆனால், கார் இல்லாதது அவன் மனசில் பெரிய குறைதான் என்பது கௌரிக்குத் தெரியும்.



ஐந்து மணிக்கெல்லாம், 'தலையை வலிக்கிறது, நான் வீட்டுக்குப் போகிறேன்' என்று சொல்லிவிட்டுக் கிளம்பின கௌரி, ஆட்டோ பிடித்து வீட்டுக்கு வரும்போது மணி ஐந்தே முக்கால்.

வீடு மௌனமாய் இருந்தது.

கதவைத் திறந்த மாதுவிடம் கூடையைக் கொடுத்துவிட்டு உள்ளே போனாள்.

கை, கால், முகத்தை அவள் அலம்பிக்கொண்டு வருவதற்குள் மாது காப்பியுடன் வந்தான்.

"விஜய் ஆத்துலே இருக்கானா, இல்லே, வெளிலே போயிட்டானா? சத்தத்தையே காணோமே!"

"உள்ளேதான் இருக்கார்ம்மா..... நீங்க காபி சாப்பிடுங்கோ..."

கௌரி குடித்துக்கொண்டே, "விஜய் காபி சாப்பிட்டானா?" என்றாள்.

மாது, இல்லை என்று தலையை ஆட்டினான்.

"மத்தியானத்துக்கு நீங்க சொன்ன மாதிரி பிஸிபேளாவும், சிப்ஸும் செய்துட்டுச் சாப்பிடக் கூப்பிட்டேன்ம்மா... எத்தனை சொல்லியும், எனக்குப் பசிக்கலை வேண்டாம்னுட்டார். ரெண்டு மணி சுமாருக்கு வெளிலே போயிட்டு அஞ்சு மணிக்கு வந்தார். 'காபி தரட்டுமா'னு கேட்டேன். வேண்டாம்னுட்டார். நா என்னம்மா பண்ணுவேன்? அவருக்கு மனசு சரியில்லைனு நினைக்கறேன்..... மூஞ்சியும் கண்ணும் நன்னாவே இல்லை.... நீங்க கொஞ்சம் பேசிப்

பார்க்கப்படாதா? எனக்கு மனசு கேட்கமாட்டேங்கறது–"

மாமனார் இருந்தபோதே இந்த வீட்டுக்குள் நுழைந்தவன் மாது. கிட்டத்தட்ட பத்து வருஷங்களாய் இந்த வீட்டில் நடக்கும் நல்லது கெட்டது அத்தனையிலும் ஒன்றிப்போய் வாழ்பவன். விஜய்மேல் அலாதி அன்போடு பழகும் மாதுவின் வேதனை கௌரிக்குப் புரியவே செய்தது.

பாதி குடித்த காபியை மாதுவிடம் நீட்டினாள். எழுந்து நின்றுகொண்டாள்.

"பேசணும்னுதான் சுருக்க வந்திருக்கேன், மாது" என்று முனகியவள், விஜய் அறையை நோக்கி நடந்தாள்.

அறைக்கதவு தாளிடப்பட்டிருந்தது. கிட்டத்தில் நின்றபோது உள்ளுக்குள் விஜய் நடமாடுவது புரிந்தது. பாட்டில் ஒன்றைக் கீழே வைக்கும் சப்தம்.

பாட்டிலா? என்ன பாட்டில்?

கௌரி கதவைத் தட்டினாள்.

"யாரு?"

"நான்தான்–அம்மா!"

அரை நிமிஷத்தில் கதவை விஜய் திறந்தான்.

அழுதிருப்பான் போலிருக்கிறது; கன்னம், சட்டைக் காலரில் ஜலம். கண்களில் சிவப்பு.

பிள்ளையின் கோலம் கௌரியைக் கரைய வைத்தது.



இவனுக்கு என்ன வேதனை? இப்படித் தானும் கஷ்டப்பட்டு, என்னையும் கஷ்டப்படுத்தி.... என்ன இதெல்லாம்?

கௌரி உள்ளே நுழைந்து கட்டிலில் உட்கார்ந்துகொண்டாள்.

டீபாய்மேல் இருந்த ஆஷ்ட்ரே சிகரெட் துண்டுகளால் நிரம்பி வழிந்தது.

அறையில் புகை நாற்றம், சேர்மேல் நான்கு அழுக்குச் சட்டைகள், ஒரு பக்கமாய் ஆங்கிலப் பத்திரிகைகள், தண்ணீர் ஜக், எல்லாம் தூசி தட்டப்படாமல் போர்வை போர்த்திக்கொண்டிருந்தன.

நான்கு நாட்களாய் வேலைக்காரியோ, மாதுவோ உள்ளே வந்து சுத்தம் செய்ய விஜய் எங்கே இடம் கொடுக்கிறான்? கதவைத் தாளிட்டுக்கொண்டு உள்ளேயே மருகிக் கொண்டல்லவா இருக்கிறான்?

"கதவைச் சாத்தி தாப்பா போட்டுட்டு என்கிட்டே வந்து உட்காரு, விஜய்."

"அம்மா.... வந்து...." பிள்ளை ஏதோ சொல்ல வந்ததைக் கையை நீட்டி கௌரி தடுத்தாள்.

"போதும்பா...'வந்து போயி'னு எந்த சால்ஜாப்பு நீ சொன்னாலும் நா எத்துக்கப் போறதில்லே. எனக்கு உண்மை தெரிஞ்சாகணும்! உன்னை ஆட்டி வைக்கறது என்னனு என்கிட்டே நீ இன்னிக்குச் சொல்லியே ஆகணும்! விஜய்.. என்னப்பா இதெல்லாம்? என்கிட்ட சொல்லாம நீ யார்கிட்டே சொல்லப்போறே?...ம்?"

விஜய் கதவைத் தாளிட்டான். மூடின கதவுமேல் சாய்ந்துகொண்டவன் கண்களில் சரம் சரமாய் நீர்.

கௌரி பதறிப்போனாள்.

"விஜய்...... என்னப்பா விஷயம்? சொல்லேன்..."

எழுந்து போய், அவன் கையைப் பிடித்து அழைத்து வந்து படுக்கையில் உட்கார வைத்தபோது, கௌரியின் கண்களும் கலங்கத் தொடங்கின.

இப்படிப் பிள்ளை அவஸ்தைப்பட வேண்டுமென்றால் நிச்சயம் விஷயம் ஏதோ கோணா மாணாதான்!

"என்னப்பா?"

"ஆல்ரைட், சொல்றேன், மம்மி.... நீ மனசு கஷ்டப்படுவேன்னுதான் நாலு நாளா சொல்லாம இருந்தேன்... இப்ப வேற வழி இல்லே... என் ஃப்ரெண்ட் மதுசூதன் இல்லியாம்மா? அவன் போன வாரம் சில ஃப்ரெண்ட்ஸுக்கு ஒரு பார்ட்டி குடுத்தான்... மகாபலிபுரத்துக்குப் பக்கத்திலே. நா போயிருந்தேன். சாயங்காலம் ஆறு மணிக்கு ஆரம்பிச்ச பார்ட்டி முடிஞ்சு நா அன்னிக்கு வீட்டுக்கு வரத்துக்கு ராத்திரி ஒண்ணாயிடுத்து. நீகூட ஒருநாள் கோவிச்சுண்டே, ஞாபகம் இருக்காம்மா?"

நடந்து ஒரு வாரம்கூட ஆகாத சமாச்சாரத்தை அதற்குள் எப்படி மறக்க முடியும்? பதினோரு மணி வரை பிள்ளைக்காகக் காத்துப் பார்த்தபிறகு, காலையில் எழுந்ததும் மாது, விஜய் ஒரு மணிக்குத்தான் திரும்பினான் என்று சொல்லவும், 'உடம்பைக் கெடுத்துண்டு இத்தனை நாழி என்ன பண்ணினே?' என்று அதட்டினாளே!



"மதுசூதன் பார்ட்டியா? ஏதோ நைட் ஷோ போயிட்டு இல்லே வந்தேன்னு சொன்னே?"

விஜய், அம்மாவைப் பார்க்காமல் பூமியைப் பார்த்தான்.

"பொய் சொன்னேம்மா... உனக்கு மதுசூதன் மேலே கோபம் வருமோன்னு அப்படிச் சொன்னேம்மா..."

இந்த மதுசூதனை கௌரி பார்த்ததில்லை. ஒரு வருஷமாகத்தான் விஜய்க்குப் பழக்கம். போன வருஷம் சோழவரத்தில் இவன் மோட்டார் சைக்கிள் ரேஸில் பங்கெடுத்தபோது அவன் கார் ரேஸில் கலந்துகொண்டானாம். அப்போதிலிருந்துதான் பழக்கம். அடிக்கடி மதுசூதன் 'இது சொல்றான், அது செய்தான்' என்று விஜய் சொல்வதிலிருந்து அவன் மஹா பெரிய பணக்காரன், அவன் அப்பாவுக்கு ஆந்திராவில் மைக்காச் சுரங்கங்கள் சொந்தமானவை, இங்கும் தொழிற்சாலை உண்டு என்றெல்லாம் புரிந்துகொண்ட பிறகு, "அவனை வீட்டுக்கு ஒருநாள் அழைச்சுண்டு வாயேன், விஜய்" என்று இவள் சொன்னதுண்டு. கேட்டுவிட்டு, "போம்மா... அவன் கோடீஸ்வரன். நம்மாத்துக்கு வான்னு அவனை எப்படிக் கூப்பிடறது?" என்று கூறி விஜய் சிரிப்பான்.

இந்த மதுசூதனின் ஏஜன்ஸி கம்பெனியில் பயிற்சிக்குச் சேருகிறேன் என்று விஜய் சொன்னபோது கௌரிக்குச் சந்தோஷமாய் இருந்தது நிஜம்; மதுசூதன் கறுப்பா, சிவப்பா என்று தெரியாவிட்டாலும் அவன்மேல், 'பணக்கார வீட்டுப் பிள்ளை,

கெட்டிக்காரன், புத்திசாலி' என்ற நல்ல அபிப்பிராயம் விழுந்துவிட்டதும் நிஜம்தான்.

அந்த மதுசூதனா பார்ட்டி கொடுத்தான்?

"சரி, மேல சொல்லு."

"பார்ட்டிலே ரொம்பப்பேர் இல்லேம்மா– ஆறு ஏழு பேர்தான்– ட்ரிங்க்ஸ் இருந்தது. கொஞ்ச நாழி கழிச்சி... கௌதம்ங்கற ஃப்ரெண்ட் வித்தியாசமான சிகரெட் ஒண்ணைக் குடுத்து எல்லாரையும் பிடிக்கச் சொன்னான். நானும் பிடிச்சேன். அப்புறம் மம்மி– எங்கேயோ பறக்கிற மாதிரி இருந்தது. கலர்கலரா எல்லாமே, ஜோராய் இருந்தது. எனக்குள்ளே என்னன்னு சொல்லத் தெரியாம ஒரே சந்தோஷம்... அப்புறம்... அப்புறம்.. என்ன நடந்ததுன்னே தெரியலை, மம்மி..."

கௌரி பதில் பேசவில்லை. என்ன சொல்கிறான் இவன்?

"ராத்திரி பன்னெண்டு மணி இருக்கும்.. மதுசூதன் சாப்பிட வெச்சான். கார்லே இங்கே கொண்டுவந்து விட்டான். மறுநாளைக்கு ஃப்பிரான்ஸிஸ்-அவனும் பார்ட்டிலே இருந்தான்-என்னைத் தனியா சந்திச்சு, 'என்னடா இப்படிப் பண்ணிட்டே'ன்னு கேட்டான். 'என்ன பண்ணேன்னு' கேட்டேன். விளக்கமா ஒண்ணுமே சொல்லாம தலைலே அடிச்சுண்டான்... அவன் பேசினதுலேந்து முதல் நாள் மயக்கத்துலே நா ஏதோ எசகுபிசகா ஒரு காரியம் பண்ணிட்டேன்னு புரியறதும்மா... கௌதம் கொடுத்தது சாதாரண சிகரெட் இல்லையாம்.. மரிவானா சிகரெட்டாம். அதைக் குடிச்சதும் உண்டான போதை என்னை என்னவோ பண்ண வெச்சிடுத்துனு நினைக்கறேன்..... அது என்னனு நானும் ஃப்பிரான்ஸிஸ்கிட்டே கேட்டுட்டேன். 'சொல்ல மாட்டேன்; மதுசூதனே உன்கிட்ட சொல்லுவான். ஆனா, அவன் உன் மேலே ரொம்பக் கோவமா இருக்கான். உன்னை அடிச்சி நொறுக்கிடுவான் போலிருக்கு, அத்தனை கோபம். ஜாக்கிரதையா இரு'னு சொல்றான். எனக்கு பயமா இருக்கும்மா.. நா என்ன பண்ணேன் அப்படி? நாலு நாளா ரம்யா வேற போன் பண்ணி, 'உன்னை விடமாட்டேன்'னு மிரட்டறா. ஐயோ மம்மி.. எனக்கு ஒண்ணும் புரியலை- நா என்ன பண்ணிட்டேன், இவாளெல்லாம் என்மேலே இத்தனை கோவமா ஆத்திரமா இருக்க? வெளிலே போய் யாரையும் பார்க்க, பேசக்கூட பயமா இருக்கு– கொஞ்ச நாள் போனா மதுசூதன் கோவம் அடங்கிடும். அப்புறமா என்ன விஷயம்னு தெரிஞ்சிக்கலாம்னு இருக்கேன்.... அம்மா..... ஐம் ஸாரி... இந்த மாதிரி நா வேணும்னு நடந்துக்கலை.... நா என்னம்மா பண்ணுவேன்? எனக்கு பயமா இருக்கும்மா!"

விஜய் பச்சைக் குழந்தைபோல விசும்ப, என்ன ஏது என்று தெளிவாய் விவரம் ஒன்றும் புரியாமல் கௌரி திகைத்துப் போய் உட்கார்ந்தாள்.

## 10

கிட்டத்தட்ட பத்து நிமிஷங்களை மௌனத்தில் கரைத்த பின்னர் கௌரி பேசினாள்.

"நீ சொல்றதுலேந்து எனக்குத் தலையும் புரியலே, வாலும் புரியலே... பார்ட்டிக்குப் போனே, சரி; மரிவானா சிகரெட் பிடிச்சே சரி... அப்புறம் அங்கே என்ன நடந்துடுத்துனு நீ பயப்படறே? மரிவானா சிகரெட்டை எல்லாருந்தானே பிடிச்சா, நீ மட்டும் இல்லையே? அப்புறம் உன்னை மட்டும் எதுக்காக மிரட்டணும்? சொல்லு..... நன்னா யோசிச்சுப் பாரு, விஜய்; நீ என்ன பண்ணேனு, உனக்கு ஞாபகம் இல்லையா?"

உதட்டைப் பிதுக்கி, இல்லேம்மா என்கிற தினுசில் விஜய் தலையாட்டினான்.

இவன் நிஜத்தைத்தான் சொல்கிறானா? அல்லது தெரிந்துகொண்டே சொல்ல பயப்படுகிறானா? என்ன பயம்! வெள்ளம் தலைக்குமேல் சாண் போனால் என்ன, முழம் போனால் என்ன? தப்போ செய்தாகிவிட்டது. அப்புறம் தயக்கம் என்ன, பயம் என்ன? பட்டென்று சொல்லிவிட்டால் நாலு வசவு வைது விட்டு மேற்கொண்டு ஆவதையாவது பார்க்கலாமே! இந்தப் பிள்ளைக்கு இது ஏன் புரியவில்லை!

"என்ன நடந்திருந்தாலும் நீ பயப்படாம சொல்லு, விஜய். மூடி மறைக்கறதுலே லாபம் இல்லேப்பா.... பிரச்சினையை எப்படியாவது தீர்க்க வேண்டாமா?"

தடக்கென்று விஜய் எழுந்தான். 'உன்கூடப் பேசி என்னம்மா ஆகப்போகிறது' என்கிற தினுசில் ஒரு பார்வை பார்த்தான். ஜன்னலிடம் போய் நின்று கொண்டான். அம்மாவுக்கு முதுகைக் காட்டினபடி மெதுவாய்ப் பேசினான்.



CPL 619589

"எனக்கு ஞாபகம் இல்லே, ஒண்ணுமே நினைவு இல்லேங்கறேன்; நீ மேம்மேலே சொல்லு சொல்லுனா என்ன அர்த்தம்? அப்படீன்னா, நா சொல்றதை நீ நம்பலே, இல்லியா மம்மி?"

"நா அப்படிச் சொல்லலை, விஜய். ஞாபகப் படுத்திப் பாரேன்னுதானே கேட்டேன்! ஆல் ரைட், அதை விடு. யார் இந்த ரம்யா? அவ எதுக்கு உனக்கு போன் பண்ணி மிரட்டணும்?"

விஜய் திரும்பி அம்மாவைப் பார்த்தான். கொஞ்சம் முன்னால் வரை ஆயாஸமும், வேதனையும் மட்டும் பரவி இருந்த கண்கள், இப்போது மிரண்டுபோய் லேசாய்ப் படபடப்பதை கௌரியால் உணர முடிந்தது.

"அவம்மா... வந்து... அவளும் அன்னிக்கு அந்தப் பார்ட்டிக்கு வந்திருந்தா..."

"மதுசூதனுக்குத் தெரிஞ்சவளா இந்த ரம்யா?"

விஜய் ரொம்பச் சங்கடத்துடன் கண்களைத் தரையில் தவழவிட்டவாறு பேசினான்:

"ரம்யா ஒரு ஸ்ட்ரிப்டீஸ் டான்ஸர், மம்மி..."

என்னது! ஸ்ட்ரிப்டீஸ் டான்ஸரா? ஹோட்டலில் நூறு பேர்களுக்கு முன் உடைகளை உரித்துப்போட்டு ஆடும் ஆட்டக்காரிக்குச் சின்னப் பசங்களின் பார்ட்டியில் என்ன வேலை?

கௌரி மனசுக்குள் திகைத்துத்தான் போனாள்.

"என்ன உளர்றே, விஜய்! ஸ்ட்ரிப்டீஸ் டான்ஸர் உங்க பார்ட்டிக்கு ஏன் வந்தா?"

"........"

"பதில் பேசாம இருந்தா என்ன அர்த்தம்? எனக்குத் தெரியக்கூடாதுன்னு மறைச்சே; இப்போ கொஞ்சம் தெரிஞ்சாச்சு, பாக்கியும் சொல்லிடறது தானே சரியானது?"

"........"

ஜன்னல் விளிம்பைப் பற்றிக்கொண்டு தனக்கு முதுகைக் காட்டின வண்ணம் நிற்கும் பிள்ளையைப் பார்க்கையில் கௌரிக்குக் கொஞ்சம் கோபம் எழுந்தது.

செய்வதையும் செய்துவிட்டு, இது என்ன அடம்? சட்டென்று சொல்லித் தொலைத்தால் பிரச்சினைக்குத் தீர்வு என்ன என்றாவது யோசித்துச் செயல்படலாமே!

"விஜய், நா கேக்கறதுக்கு நீ இப்போ பதில் சொல்லப்போறயா..... இல்லே, நா எழுந்து போயிடட்டுமா?"

விஜய் திரும்பாமலேயே பேசினான். குரல் கிசுகிசுப்பாய் வந்தது.

"அன்னிக்கு, அந்தப் பார்ட்டியிலே அவ ஸ்ட்ரிப்டீஸ் ஆடினா, மம்மி..."

"என்னப்பா சொல்றே? உங்க ஏழுபேர் நடுவிலே ஸ்ட்ரிப் பண்ணி இந்த ரம்யா ஆடினான்னா சொல்றே?"

"................................"

இருபத்திரண்டு, இருபத்து மூன்று வயசுப் பிள்ளைகள் ஆறு ஏழு பேர்கள் ஒன்றுகூடுவது, அவர்கள் மத்தியில் கோழிக்குஞ்சு மாதிரி தன் வெள்ளை உடம்பைக் காட்டிக் கொண்டு ஒரு பெண் உடுப்புகளைக் களைந்து போட்டு ஆடுவது, மரிவானா சிகரெட் பிடிப்பது... என்ன இதெல்லாம்! சே-டிஸ்கஸ்டிங்...... பணம் இருந்துவிட்டால் இன்னதுதான் செய்வது என்ற விவஸ்தைகூடவா போய்விடும்!



மேற்கொண்டு விஜய்யிடம் ஏதும் பேச கௌரிக்குப் பிடிக்கவில்லை. பிள்ளையிடம் ஒரு தாய் பேச வேண்டிய பேச்சா இது! ஸ்ட்ரிப்டீஸும், மதுவும், சிகரெட்டும்.....சேச்சே...!

அன்றைக்கு பார்ட்டியில் என்ன நடந்திருக்கும் என்பதை ஓரளவுக்கு கௌரியால் ஊகிக்க முடிந்தது.

போதை ஊட்டும் தினுசில், வெட்கம் கெட்டவளாய் ஒரு சின்னப் பெண் ஆடியிருக்கிறாள், மரிவானா சிகரெட் மயக்கம், இளரத்தம், இன்னும் வேறு என்ன வேண்டும்?

எல்லாமாகத் தூண்டிவிட விஜய் அந்தப் பெண்ணிடம் தவறாக நடந்துகொள்ள முயன்றிருப்பானோ?

ஆமாம்-அப்படித்தான் இருக்க வேண்டும்.

இவன் அவள் கையைப் பிடித்து இழுக்க, அவள் ரொம்பப் பத்தினி மாதிரி அலற, நண்பன் மதுசூதனுக்குக் கோபம் வந்திருக்குமோ?

யெஸ்-அப்படித்தான் இருக்கும்.

கௌரிக்கு அடிவயிற்றில் குமட்டல் தோன்றியது.

என் சங்கரின் பிள்ளையா இப்படி? எங்கள் விஜய்யா இப்படி நடந்துகொண்டிருப்பான்?

இருக்கவே இருக்காது!

அப்புறம் வேறு என்னதான் நடந்திருக்கும்?

ஒருவேளை, வேறொரு பையன் ரம்யாவிடம் தாறுமாறாக நடக்க முயன்று, விஜய் அதைத் தடுக்கும் தினுசில் சண்டை, கிண்டையில் இறங்கியிருந்தால்?

அப்படிக்கூட நடந்திருக்க வாய்ப்பு இருக்கிறதே?

கௌரிக்கு இந்தக் கற்பனை கொஞ்சம் திருப்தியைத் தந்தது.

ஆனால், இந்தத் திருப்தி சில கணங்களுக்குத் தான். விஷயம் இப்படி என்றால் ரம்யா இவனுக்கு நன்றி அல்லவா சொல்ல வேண்டும்... அதை விட்டு விட்டு மிரட்டுவது எதற்காக என்ற நினைப்பு வந்ததும் பழையபடி மனசு கனத்துப்போயிற்று.

கும்மென்றிருந்த அறையில் இன்னும் சில நிமிஷங்கள் இருந்தால் மூச்சு அடைத்துப் போய்விடும் போலத் தோன்ற கௌரி எழுந்து நின்றாள்.

காற்றாட கொஞ்சம் வெளியே உலாவிவிட்டு வந்தால் என்ன? தெளிவாய் யோசனை பண்ணியபிறகு திரும்ப இவனிடம் பேசினால் என்ன?

கதவை நோக்கி கௌரி நடக்கையில் ஆங்கிலப் பத்திரிகைகள் பக்கத்தில் மேஜைமேல் இருந்த அந்தப் புட்டியைப் பார்த்தாள்.



சற்றுமுன் தாள்போட்ட கதவுமுன் தான் நின்றபோது, அறைக்குள் விஜய் ஏதோ பாட்டிலை எடுத்து வைக்கும் சத்தம் கேட்டது நினைவுக்கு வர, கிட்டத்தில் சென்று அந்த புட்டியை எடுத்துப் பார்த்தாள்.

க்ளிஸரினா? இவனுக்கு எதற்கு இது?

பாட்டிலைத் திறந்து முகர்ந்து பார்த்தாள் கௌரி. க்ளிஸரின்தான்.

"எதுக்குப்பா க்ளிஸரின்?" என்று கேட்க எண்ணி அவள் வாயைத் திறந்த அதே சமயத்தில், கூடத்தில் போன் அடித்தது. எடுத்துப் பேசிய மாது, அரை நிமிஷத்தில் அறைக்கதவைத் தட்டினாள்.

"என்ன மாது?"

"உங்களுக்குத்தான் போன்... யாரோ ரம்யாவாம்!"

எனக்கா? ரம்யாவா?

திகைப்புடன் கௌரி கதவைத் திறந்தாள்.

"மொதல்லே விஜய் இருக்கானான்னுதான் கேட்டா... இல்லேன்னேன். 'எப்ப போன் பண்ணாலும் அவன் இருக்கறதில்லை-சரி, மிஸஸ் கௌரி சங்கர் இருக்காங்களா'ன்னா... கூப்பிடறேன்னேன்."

"வரேன்னு சொல்லு, மாது."

மாது அந்தப் பக்கம் போனபிறகு, பார்வையை நிமிர்த்தி விஜய்யைப் பார்த்தாள் கௌரி. இப்போது என்ன செய்வது என்று அந்தப் பார்வை கேட்டது

"வேண்டாம்மா – நீங்களும் வீட்டுலே இல்லேனு சொல்லிடச் சொல்லுங்கோ." விஜய் அவசரம் அவசரமாய்ப் பேசினான்.

நோ-என்று தலையாட்டினாள் கௌரி.

"இப்படி ஓடி ஓடி ஒளிஞ்சுண்டே இருந்தா, விஷயத்தை எப்படித் தெரிஞ்சுக்கறது? ம்? அவகிட்ட நா பேசப்போறேன்..... அப்படி என்னதான் அவ சொல்லப்போறா?"

விஜய்யிடம் தைரியமாய் பேசிவிட்டாலும் கூடத்துக்கு வந்து ரிஸீவரைக் கையில் எடுத்தபோது கௌரிக்கு ரொம்பப் படபடப்பாகத்தான் இருந்தது.

"ஹலோ...."

"ஹலோ-ஈஸ் இட் மிஸஸ் கௌரி சங்கர்?"

அவளேதான். முதல் நாள் இரவு போன் செய்து 'விஜய் இல்லையா? அவன் எங்கே போனாலும் விடமாட்டேன்' என்று சொன்ன அதே குரல்தான்.

"ஆமாம்-கௌரிதான் பேசறேன்."

"என் பேர் ரம்யா. என்னைப்பத்தி உங்க பிள்ளை உங்ககிட்ட சொல்லியிருப்பார்னு நினைக்கிறேன், சரிதானே?"

"....."

"பேசினாரா, இல்லியானு நீங்க சொன்னா தானே, மேலே என்னால விஷயத்தைச் சொல்ல முடியும்?"



"விஜய் என்கிட்ட எதுவும் சொல்லலை-நீங்க யாரு? உங்களுக்கு என்ன வேணும்? எதுக்காக உங்களைப்பத்தி அவன் என்கிட்ட பேசணும்?"

"ஓ, ஒண்ணுமே சொல்லலியா? சரியான கோழை! காரியம் செய்யத் துணிச்சல் இருக்கு, ஆனா, அதைப்பத்திப் பேச மட்டும் தைரியம் இல்லையா?"

"....."

"நானும் நாலு நாளா அவனோட பேசணும்னு போன் பண்ணறேன், எப்பக் கேட்டாலும் 'விஜய் வீட்டுலே இல்லே'ன்னே சொல்றீங்க–ஏம்மா, வீட்டுலே பிள்ளையை ஒளிச்சு வெச்சிகிட்டே இப்படிப் பேசறது உங்களுக்கு நல்லா இருக்கா? பாங்க்ல பொறுப்பான பதவியில இருக்கறவங்க நீங்க..... நீங்களே இப்படிப் பொய் சொல்றது நல்லாயிருக்கா, சொல்லுங்க..."

கௌரிக்குக் கோபம் சுர்ரென்று எழுந்தது. முகம் தெரியாத சின்னப் பெண், மரியாதை இல்லாமல் என்ன பேச்சுக்கள் பேசுகிறாள் என்ற ஆத்திரம் தோன்ற, "ஷட்அப்.... நானும் போனாப்போறது, போனாப் போறதுன்னு சும்மா இருக்கேன்னு, நீ பாட்டுக்குப் பேசிண்டே போனா என்ன அர்த்தம்? வாட் டு யு வாண்ட்? எதுக்காக விஜய்யைக் கூப்பிடறே? ம்?" என்று அதட்டும் குரலில் பேசினாள்.

"அடேயப்பா, ஒண்ணுமில்லாததுக்கே உங்களுக்கு இத்தனை கோபம் வருதே, அப்ப பாதிக்கப்பட்ட எனக்கு ஏன் வரக்கூடாது...? சரி.... சரி.... உங்களோட எனக்கு என்ன அனாவசிய பேச்சு... விஜய் இருக்கானா, இல்லையா?"

"இல்லே..."

"இல்லையா-ஆல் ரைட்-உங்ககிட்ட விஜய் போன வாரம் நடந்த விஷயத்தைப் பத்தி ஏதாவது சொன்னானா?"

"இல்லே!"

"இல்லையா? நிஜமாவா? சரி-விடுங்க-கௌதம்னு ஒரு ஆள் போன் பண்ணி விஜய்கிட்ட ஏதாவது சொன்னானா? பார்க்கறத்துக்கு எதையாவது கொடுத்தானா?"

"நோ-யார் இந்த கௌதம்? அவன் என்ன சொல்லணும்? எதை நா பாக்கக் கொடுக்கணும்?"

"நீங்க நிஜம்தான் பேசறீங்களா, மிஸஸ் சங்கர்? என்னோட நாலு நாள் முன்னாலயே தொடர்பு கொண்டுட்ட கௌதம், இன்னும் விஜய்கிட்ட பேசலியா! என்னால நம்ப முடியலையே!"

ரம்யாவின் குரலில் நிஜமான வியப்பு கலந்திருப்பதாக கௌரிக்குத் தோன்றியது.

"கௌதம் யார்? ரம்யா, நீங்க பேசறது எனக்கு ஒண்ணுமே புரியலை.... கொஞ்சம் விளக்கமா பேசுங்களேன்."

"பேசத்தானே போன் பண்ணியிருக்கேன். இனிமே விஜய்யை நம்பிப் பிரயோஜனம் இல்லே..... உங்ககிட்ட பூரா விவரத்தையும் சொல்லி மேற்கொண்டு என்ன பண்ணறதுனு கேட்கணும்..."

"கேட்கணும், பேசணும்னு சொல்லிண்டே இருந்தா எப்படி? கமான், ஸ்பீக் அவுட்"



"இல்லே, மிஸஸ் சங்கர். இப்படி ஒரு நிமிஷத்துலே போன்லே பேசற விஷயம் இல்லே இது... நேரே பார்த்துத் தான் விளக்கணும்...."

"அப்போ சரி.... நேரே வாங்கோ..."

"மணி என்ன? ஓ, காட்! எட்டா? இன்னிக்கு முடியாது. நாளைக்கு ஈவ்னிங் ஆறு மணிக்கு உங்க வீட்டுக்கு நானே வரேன்-இருப்பீங்க இல்லே?"

இருப்பதாய்ச் சொல்லி கௌரி போனை வைத்துவிட்டுத் திரும்பினாள்.

அறை வாசலில் நகத்தைக் கடித்துக்கொண்டு, பரக்கப்பரக்க விழித்துக்கொண்டு நிற்கும் பிள்ளை மேல் பார்வை பட்டதும் இதயத்துள் சிலீர் என்றது.

ஒன்றுமே பேசத் தெரியாமல் சோபாவில் கௌரி உட்கார்ந்துகொண்டாள்.

எண்ணி ஐந்து நிமிஷங்கள் போவதற்குள் மீண்டும் டெலிபோன் அடித்தது.

கௌரி எழுந்து எடுத்தாள்.

"யெஸ்."

"மிஸஸ் சங்கர்?"

கனமாய் ஒரு ஆணின் குரல்.

"யெஸ்."

"என் பேர் கௌதம்..."

ஒருவிநாடி இதயத் துடிப்பு நின்றுவிட்ட மாதிரி கௌரிக்குத் தோன்றியது. சமாளித்துக்கொண்டாள்

"எந்த கௌதம்? உங்களுக்கு என்ன வேணும்?"

அழுத்தமாய்ச் சிரித்தான் கௌதம்.

"நா யாருனு உங்களுக்குத் தெரியும், மிஸஸ் சங்கர். சும்மா காதிலே பூ சுத்தாதீங்க.... விஜய் உங்ககிட்ட இதுக்குள்ளாற கண்டிப்பா பேசியிருப்பான். அதுக்காகத்தானே முழுசாய் அஞ்சு நாள் டைம் தந்தேன்... விஜய்யாலே உங்ககிட்ட இருந்து எதையும் மறைக்க முடியாது-அவன் ஒரு அம்மா பிள்ளை. இல்லியா, மிஸஸ் சங்கர்?"

தொடர்ந்த கௌதம் சிரித்த சிரிப்பு கௌரியின் எலும்பில் புகுந்து குறுகுறுக்க வைத்தது.

"உங்களுக்கு என்ன வேணும், மிஸ்டர் கௌதம்? வெளிப்படையா பேசிட்டா நல்லது இல்லையா? டெல் மி... வாட் டு யூ வாண்ட்?"

சில கணங்கள் கௌதம் மௌனமாய் இருந்தான். பிறகு நிதானமாய்ப் பேசினான்.

"உங்ககிட்ட இருந்து எனக்கு நிறைய வேணும், மிஸஸ் சங்கர். ரொம்ப நிறைய..... ஆனா நா அவசரப்படமாட்டேன். ஐ ஷால் வெயிட். மொதல்லே நீங்க ரம்யாவைச் சந்திச்சு, பேசி, விஷயத்தைப் புரிஞ்சிக்கங்க.... அப்புறம் நா பேசறேன். அதுக்குள்ளே எனக்குச் செய்ய வேண்டிய வேலை இன்னொண்ணு இருக்கு. மதுசூதனைப் பார்க்கணும், பேசணும். கடைசியாதான் உங்ககிட்ட வருவேன். ஸோ, அவசரம் இல்லே... டேக் யுவர் டைம், மிஸஸ் சங்கர்..."



தான் பேசியதைத் தானே ரஸிக்கிற மாதிரி சிரித்த கௌதம், கௌரி பேச இடம் கொடாமல் தொடர்பைத் துண்டித்துவிட்டான்.

யார் இந்த கௌதம்?

ஏன் இப்படி முரட்டுத்தனமாகப் பேசுகிறான், சிரிக்கிறான்?

நிமிர்ந்து பிள்ளையைப் பார்த்த கௌரி, அவன் அடிபட்ட முயல்குட்டிபோலப் பரிதவிப்பதை உணர்ந்தாள்.

## 11

**கா**லையில் தூங்கி எழுந்த கௌரிக்குத் தலை பாரமாக இருந்தது. இரவு ரொம்ப நேரத்துக்குத் தலையணையில் முகத்தைப் பதித்துக்கொண்டு அழுததில் கண்கள் எரிந்தன, முகம் உப்பியிருந்தது.

எழுந்திருக்கவே மனசு இல்லை. பேசாமல் அக்கடா என்று படுக்கையில் உடம்பை நீட்டிவிட்டால் தேவலைபோல இருந்தது.

பொழுது ஏன் விடிந்தது? ராத்திரி நீண்டுகொண்டே போயிருக்கக்கூடாதோ? தலைவலியோ, கண் எரிச்சலோ பொறுத்துக்கொண்டு கம்மென்று கிடக்கலாமே!

பொழுது விடிந்து, மதியம் போய் மாலை வந்தால் அந்த ரம்யா வந்து தொலைத்துவிடுவாளே!

அவள் எந்த மாதிரி குண்டைத் தலையில் தூக்கிப் போடப்போகிறாள்?

வேண்டாத நினைப்புகளையும், கற்பனைகளையும் இரவு முழுக்க வளர்த்துக்கொண்டு தவித்த கௌரிக்குச் சூடாக அரை டம்ளர் காபி அருந்தினதும் கொஞ்சம் தெம்பு வந்தது.

ஆமாம், எதற்காக நான் இப்படி பயந்து சாகிறேன்? இப்போது என்ன நடந்துவிட்டது? அந்த ரம்யா வந்து அப்படி என்ன சொல்லிவிடப் போகிறாள்? வரட்டும்.

ஜில்லென்று கொட்டிய ஷவரின் கீழ் நின்று குளித்தபோது மனசுக்கு இன்னும் கொஞ்சம் தைரியம் வந்தது.

---

ராத்திரி ஒன்றுமே சாப்பிடாமல் படுத்ததிலும், வெகு நாழிகைக்குக் கொட்டுக்கொட்டென்று விழித்திருந்ததிலும் வயிறு பசியில் அலறவே, குளித்து, ஸ்வாமி விளக்கை ஏற்றி நமஸ்கரித்தவள் டைனிங் ஹாலுக்கு வந்தாள்.

"என்ன டிபன் பண்ணியிருக்கே, மாது?"

"வெஜிடபிள் போட்டு ரவா உப்புமாம்மா!"

"சரி-டேபிள்லே தட்டுப் போட்டுப் பரிமாறு-நா விஜய்யைக் கூட்டிண்டு வரேன்"

ராத்திரி அவனைப்போலவே விஜய்யும் வெறும் வயிற்றோடுதான் படுத்துக்கொண்டான்.

அறைக்கதவிடம் சென்று தட்டியதும் அவன் கதவைத் திறந்தான்.



அப்படியே, முதல் நாள் இருந்த தினுசிலேயே கலைந்து போய்த்தான் விஜய் இருந்தான்.

"டிபன் சாப்பிட வாப்பா."

"எனக்கு வேண்டாம்மா..."

"இப்ப வரப்போறயா, இல்லையா? நேத்து பூரா ஒரு வாய் சாப்பிடலை. இப்பவும் வேண்டாம்னா எப்படி, விஜய்? எனக்குப் பசிக்கிறது... நீ வந்தா நா சாப்பிடறேன்... இல்லேன்னா, எனக்கும் வேண்டாம்..."

என்னம்மா இது என்று கெஞ்சுகிற மாதிரி விஜய் பார்த்தான்.

மறுநிமிஷம் ஒன்றுமே பேசாமல் டைனிங் டேபிளை நோக்கி நடந்தான்.

இரண்டுபேரும் உப்புமாவைச் சாப்பிடத் தொடங்கினார்கள்.

தன் கலகலப்பான சுபாவத்தால் தினமும் காலைச் சிற்றுண்டி சாப்பிடும் சமயத்தில் தன்னையும், மாதுவையும் சிரிக்க வைக்கும் விஜய், இப்படி மௌனியாக இருப்பது தனக்கு மட்டுமல்ல, மாதுவுக்கும் வேதனையைத் தருவதை கௌரியால் புரிந்துகொள்ள முடிந்தது.

ஆர்ப்பரித்துக் கொட்டும் பிள்ளை இப்படி ஒரு வார்த்தை பேசாமல் மனசில் காயம் பட்டுவிட்டவனாய் மறுகுவது கண்களில் நீரை ஊறச் செய்ததால், புடைவைத் தலைப்பால் கண்களை ஒற்றிக்கொண்ட கௌரி, மாது உள்ளே போனதும் "நா இன்னிக்கு பேங்க்குக்கு லீவு போடட்டுமா, விஜய்?" என்றாள்.

காபி டம்ளரில் நுனி விரலால் தட்டி ஓசை எழுப்பினான் விஜய். பின், "வீட்டுலே இருந்து என்னம்மா பண்ணப் போறே? பாங்க்குக்குப் போனா வேலை மும்முரத்துலே உன் டென்ஷனைக் கொஞ்சம் குறைச்சிக்கலாம்..... இன்னிக்கு வெள்ளிக்கிழமை.... உனக்கு க்ரெடிட் கமிட்டி டிஸ்கஷன் இருக்கிற நாள்...... சாயங்காலம்தான் அவ வருவா.... அது வரைக்கும் வீட்டுலே என்ன பண்ணுவே? நா வேதனைப்படறது போதாதா, மம்மி? நீ வேற என்னோட அவஸ்தைப் படணுமா? டெல் மி" என்றான்.

கௌரி யோசித்தாள். விஜய் சொல்வதும் சரிதான்.

இன்று வெள்ளிக்கிழமை...... வாரத்துக்கு ஒரு நாள், பாங்க் மானேஜர், சில ஆபீஸர்களுடன் கூடிப் பதினொன்றிலிருந்து பன்னிரண்டு வரை முக்கியமான வாடிக்கைக்காரர்களைப் பற்றியும், அவர்களுக்குக் கொடுத்திருக்கும், கொடுக்கப்போகும் கடன் வசதிகளைப்பற்றியும் விவாதித்து முடிவு எடுக்கும் நாள். தீராது என்றால் ஒழிய, கூடுமானவரையில் எந்த ஆபீஸரும் வெள்ளிக்கிழமை அன்று விடுமுறை எடுக்க மாட்டார்கள்.

அதுவும் இன்றைக்கு ஷாம்ஸுதீன் எக்ஸ்போர்ட்ஸ் பற்றி ஒரு தீர்மானத்துக்கு வந்தாக வேண்டுமே!

முதல் நாள் ஷாம்ஸுதீன் கம்பெனி ஃபைலை அக்குவேறு, ஆணிவேறாகப் பிரித்து, விவரங்களைச் சேகரித்திருக்கும் கௌரி, கூட்டத்துக்குப் போகாமல் இருந்தால் முடிவு எடுப்பது கஷ்டம்.

வீட்டில் இருந்தால் விஜய் சொல்லுவதுபோல வீண் சிந்தனைகள், குழப்பம், டென்ஷன்தான் மிஞ்சும்.

இதைத்தவிர இன்னொரு சங்கடமும் இருக்கிறதே!

நேற்றே, நான் நாளைக்கு பாங்க்குக்கு வரப் போவதில்லை என்பதை கௌரி தெரிவித்திருந்தால் வம்பு இல்லை.

ஸ்ட்ராங் ரூமைத் திறக்க சந்திரமௌலியுடன் பார்த்தசாரதி போக, சாவிகளை அவரிடம் கொடுத்து விட்டு வந்திருந்தால் கவலை இல்லை.

இப்போது, கடைசி நிமிஷத்தில் மானேஜர் பாலாஜிக்குத் தெரிவிக்க வேண்டும்; அவர் பார்த்தசாரதிக்கு விஷயத்தைச் சொல்லி ஒன்பதே முக்காலுக்கு பாங்க்குக்கு வரச் செய்ய வேண்டும். பார்த்தசாரதி இல்லாவிட்டால் பாலாஜியே வரவேண்டும். கஷ்டம்— ரொம்பக் கஷ்டம்...

எல்லோருக்கும் வரிசையாய்த் தொந்தரவு கொடுப்பதற்கு பதிலாக பாங்க்குக்குப் போய் அத்தியாவசியமான வேலைகளை கவனித்துவிட்டு, மாலையில் சுருக்க வீடு திரும்பி விட்டால்?

அதுதான் சரி.

எனக்கு மனசில் ஆயிரம் பிரச்சினைகள் இருக்கலாம், அதற்காக எனக்குச் சோறு போட்டு என்

குடும்பத்தை கௌரவமாக வாழ வழிசெய்யும் பாங்க் வேலையைத் தவிக்கவிடுவது என்ன நியாயம்?

ஒரு முடிவுக்கு வந்துவிட்ட கௌரி, தன் வேதனையை மூட்டைகட்டி வைத்தாள். சுறுசுறுப்பை வரவழைத்துக்கொண்டாள். கொண்டையைப் போட்டுக் கொண்டு, ஆபீஸ் கார் வருவதற்குள் தயாராகி விட்டாள்.

அன்றைக்கு வாஸ்தவத்திலேயே பாங்க்கில் வேலை நெட்டிதான் முறித்தது.

பாங்க்குக்குள் நுழைந்த பிறகே அன்றைக்கு மானேஜ்மெண்ட் ட்ரெயினி வேலைக்காக நான்கு பையன்களை, ஒரு பெண்ணை இண்டர்வ்யூவுக்கு வரச்சொல்லியிருந்தது ஞாபகத்துக்கு வந்தது.

பத்தேகாலிலிருந்து பதினொன்று வரை இவளும், பார்த்தசாரதியுமாக அவர்களைப் பேட்டி கண்டு முடித்து, தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவித்து விட்டால், கடைசியாக பாலாஜி நான்கு நாள் கழித்து அவர்களை இண்டர்வ்யூ செய்வார்.

கௌரி பேட்டியை முடித்து குறிப்புகளை அவரவர் ஃபைலில் எழுதினபோது மணி பதினொன்று பத்து. பாலாஜி 'என்ன கௌரி, ஆயிற்றா' என்று கேட்கிறதுபோல இரண்டு தடவைகள் எட்டிப் பார்த்துவிட்டுப் போய்விட்டார்.

ஐந்துபேர்களில் மூன்றுபேரை கௌரிக்கு ரொம்பப் பிடித்திருந்தது. பரத், ரங்கநாதன், அமுதா- மூவருமே புத்திசாலிகளாக, அடக்கமாக, இந்தக்



காலத்து அதிக நாகரிக மோகத்தைத் தழுவாதவர்களாக இருந்தது கௌரிக்குச் சந்தோஷத்தைத் தந்தது.

கண்டிப்பாய் இந்த மூன்று பேரும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற குறிப்பை ஃபைலில் எழுதி, பர்ஸனல் டிபார்ட்மெண்டுக்கு அனுப்பிவிட்டு, பாலாஜியின் அறைக்குப் போனாள்.

அவளுக்கு முன்னரே அங்கு பார்த்தசாரதி, க்ரெடிட் இன்வெஸ்டிகேட்டர் சுந்தரராஜன்-தயாராக இருந்தனர்.

காண்டீன் நாயர், காபியை வைத்துவிட்டுப்போனதும் பாலாஜி அறைக்கதவைச் சாத்தினார்.

வாடிக்கையாளர்களுக்குக் கடன் கொடுப்பது குறித்து இவர்கள் பேசும்போது அறைக்கதவு சாத்தி இருக்கவேண்டும் என்பது பாங்கின் விதிகளில் ஒன்று.

அந்த பாங்க்கில் க்ரெடிட் கமிட்டி என்பது அலாதியான சக்தி கொண்ட குழு. ஆபீஸர்களைத் தவிர ஸிஐடி போல இரண்டு துப்பறியும் நபர்கள் அந்த பாங்க்கின் பெரிய கிளை ஒவ்வொன்றிலும் இருக்கிறார்கள்.

கடன் கொடுக்க வேண்டுமா? அது பெரிய கம்பெனியோ சின்னஞ்சிறு தொழிலகமோ, இல்லை தனிப்பட்ட நபரோ, கவலை இல்லை; அது யாராக இருந்தாலும், க்ரெடிட் டிபார்ட்மெண்டின் புலிகளான துப்பறியும் நபர்கள் அந்தக் கம்பெனி, நபரின் அந்தஸ்து, சூழ்நிலை எல்லாவற்றையும் புரட்டி, அலசி, ஓ.கே. இவர்களுக்குக் கடன் கொடுக்கலாம் என்று

பச்சைக்கொடி காட்டினால், மறு நிமிஷமே டாணென்று தொகை அளிக்கப்பட்டுவிடும்.

இந்தக் கிளையில் சுந்தரராஜனும் செல்லப்பாவும் இன்வெஸ்டிகேட்டர்கள். சும்மா சொல்லக்கூடாது. இரண்டு பேருமே சரியான எமகாதகப் பேர்வழிகள்தாம். வெட்டிக்கொண்டு வா, என்றால் கட்டிக்கொண்டு வரும் ரகம்.

இன்னாருக்கு இவ்வளவு கடன் வேண்டுமாம்.... கம்பெனி பாலன்ஸ் ஷீட், மற்ற விவரங்கள் எல்லாம் சரியாய் இருக்கின்றன; நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்று சின்னதாய்க் கோடி காட்டினாலும் போதும், மறுநாள் அந்தக் குறிப்பிட்ட நபரின் ஜாதகத்தைக் கொணர்ந்துவிடும் திறமை இரண்டு பேருக்குமே உண்டு.

பெரியபெரிய கம்பெனிகளை இப்படித் தனிப்பட்ட முறையில் துப்பறிவது தேவையில்லாவிட்டாலும், கம்பெனி சம்பந்தப்பட்ட எம்.டி.யோ, ஜி.எம்.மோ மற்ற உயர் அதிகாரியோ எப்படிப்பட்டவர்-ஊதாரியா, செலவாளியா, கடனாளியா-என்பதைத் தெரிந்துகொள்ள இவர்களின் உதவி அவசியம் தேவைப்படும்.

அன்றைக்கு அவர்கள் பாங்க்கின் முக்கிய வாடிக்கையாளரான ஷாம்ஸுதீன் எக்ஸ்போர்ட்ஸுக்காக க்ரெடிட் கமிட்டி ஒரு அவசர முடிவைச் செய்யவேண்டியிருந்தது.

ஷாம்ஸுதீன் எக்ஸ்போர்ட்ஸ் என்ற நிறுவனம் தென்இந்தியாவின் மிகப்பெரிய ஏற்றுமதி நிறுவனங்களில் ஒன்று.



மீன், இறால், நத்தை முதலிய (Sea food) ஸீஃபுட் வகையறாக்களை அயல்நாடுகளுக்குப் பதப்படுத்தி அனுப்பும் கம்பெனி. கொச்சின், கோவா, சென்னை என்று பல இடங்களில் தொழிற்சாலைகளை வைத்துக்கொண்டு கோடிக்கணக்கில் பணத்தைப் புரட்டும் கம்பெனி.

ஷாம்ஸுதீன் எக்ஸ்போர்ட்ஸுக்குப் போன வாரம் பதினைந்து லட்ச ரூபாய்க்குத் தவளைக் கால்களையும், ஒருசில ரக மீன் வகைகளையும் அனுப்பச் சொல்லி அமெரிக்காவின் முன்னணி இறக்குமதி நிறுவனம் ஆர்டர் அனுப்பியிருப்பதன் சம்பந்தமாய் ஷாம்ஸுதீன் நான்கு நாட்கள் முன் பாலாஜியைச் சந்தித்துப் பேசினார்.

அதன் விளைவுதான் இன்றைய டிஸ்கஷன்.

"ஷாம்ஸுதீனை நம்ம பாங்க்குக்கு நன்னா தெரியும். ஆர்டர்பேர்ல சரக்குகளை வாங்க உடனடியா பணம் தரணும்னு அவர் அபிப்பிராயப்படறார். இப்போ க்ரெடிட் கமிட்டி ஓ.கே. பண்ணிட்டம்னா, அவா கணக்கிலே நாம்ப பணத்தை க்ரெடிட் செஞ்சுடலாம். இன்னிக்குச் சாயங்காலத்துக்குள்ளே பணத்தைக் கணக்குலே கட்டியாகணும். சரக்கு விக்கறவங்களை ஷாம்ஸுதீன் நாளைக்கு சந்திக்கப் போறாராம். என்ன கௌரி, உங்க அபிப்ராயம் என்ன?"

அமெரிக்காவிலிருந்து வந்திருக்கும் ஆர்டர் பேரில் பத்து லட்சத்தை முதல்கட்டக் கடனாகக் கொடுத்துவிட்டு, பத்து நாளில் ஷாம்ஸுதீன் எக்ஸ்போர்ட்ஸ் சரக்குகளை வாங்கின பில்களை

பாங்க்கில் சமர்ப்பிக்கும்போது சொச்சப் பணத்தை இரண்டாவது கட்டமாய்க் கொடுத்துவிடலாம் என்று வழக்கமாய்ப் பெரிய கம்பெனிகளுக்குக் கடன் தரும் பாணியைப் பின்பற்றி கௌரி பேசினதைப் பார்த்த ஸாரதி ஆமோதித்தார்.

"ஷாம்ஸுதீன் எக்ஸ்போர்ட்ஸ் தரமான கம்பெனி. கவலைப்பட ஒன்றும் இல்லை! என்ன ராஜன், நீங்க என்ன சொல்றீங்க?"

'எஸ்' என்று தலையாட்டினார் இன்வெஸ்டிகேடர் சுந்தரராஜன்.

"ஷாம்ஸுதீன் பத்தி இப்படி ஒண்ணும் அப்படி ஒண்ணும் பேச இடமே இல்லே.... ஆனா, இந்தச் சமயத்துலே எனக்குச் சந்தன்மல் அண்ட் ஹிராமல் ஞாபகம் வரது. நம்ப பாம்பே ப்ராஞ்ச் க்ளையண்ட்ஸ்... தெரியும் இல்லையா?"

சுந்தரராஜன் நமட்டுச் சிரிப்புடன் நிறுத்தினார்.

ஏன் தெரியாமல்? அங்கிருந்த மற்ற மூவருக்குமே நன்கு தெரிந்த விஷயம்தானே!

பம்பாய்க் கிளையில் சந்தன்மல் அண்ட் ஹிராமல் என்ற கம்பெனியின் கணக்கு, தடபுடலாய்ப் பெரிய மூலதனத்துடன் போன வருஷம் தொடங்கப்பட்டது. வெளிநாட்டுக்கு ரெடிமேட் துணிகள் ஏற்றுமதி செய்யும் வியாபாரம். பெரிய கம்பெனிக் கணக்கு வலிய வந்துவிட்டது என்று பம்பாய் மானேஜருக்கு வாயெல்லாம் பல்.



மூன்று மாசங்கள் எல்லாம் ஒழுங்காக இருந்தன. அப்புறம் திடீரென்று ஒரு நாள் பதினெட்டு லட்ச ரூபாய்க்கு மெக்ஸிகோவிலிருந்து ஒரு ஆர்டர் வந்தது. ஒரு மாசமாய் அந்த நாட்டின் ரொம்ப பிரபல்யமான இறக்குமதி நிர்வாகத்துக்கும், தங்களுக்கும் நடந்த கடிதப் போக்குவரத்தைக் காட்டினார், சந்தன்மல். பாங்க் நம்பியது. பதினெட்டு லட்ச ரூபாயை முள்ளங்கிப் பத்தை மாதிரித் தூக்கிக் கொடுத்தது.

அப்புறம்? அப்புறம் என்ன!

பதினெட்டு லட்ச ரூபாயோடு சந்தன்மல்லும் ஹிராமல்லும் அந்தர் தியானமாகிவிட்டார்கள்!

கடிதப் போக்குவரத்து அத்தனையும் போலி, மெக்ஸிகோ நாட்டுக் கம்பெனி பெயரைத் திருட்டுத்தனமாக உபயோகப்படுத்தியிருக்கிறார்கள் என்ற விவரமெல்லாம் சாவகாசமாய் இரண்டு மாசங்கள் கழித்துத் தெரியவர, பாங்க் விழித்துக்கொண்டது. என்ன விழித்து என்ன? பதினெட்டு லட்சம் கோவிந்தாதான்!

இப்போது சுந்தரராஜன் அந்தச் சம்பவத்தை நினைவுபடுத்தி நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று சொல்லாமல் சொல்லுவது புரிய, பாலாஜியும் பார்த்தசாரதியும் வாய்விட்டுச் சிரித்தார்கள். கௌரி புன்னகைத்தாள்.

"ஷாம்ஸுதீன் எக்ஸ்போர்ட்ஸ் மண் குதிரை இல்லே..... தைரியமா நம்பலாம்... ஸோ....... க்ரெடிட் கமிட்டி அப்ரூவ் பண்ணியாச்சுன்னு, பணத்தை அவா கணக்குலே கட்ட உத்தரவு போடலாமா?"

பாலாஜி கேட்டதற்கு மற்றவர்கள் தலையாட்டின நிமிஷத்தில் போன் அடித்தது.

பாலாஜி எடுத்துப் பேசினார்.

"உங்களுக்குத்தான் கௌரி.... சேர்மன் ஆன் தி லைன்..."

கோபால மாமாவா? எதற்குக் கூப்பிடுகிறார்?

யோசித்துக்கொண்டே எழுந்த கௌரி ரீஸிவரை எடுத்தாள்.

## 12

"கௌரி"

"குட்மார்னிங்-"

"பெரீ..ய குட்மார்னிங்..அதைக் கொண்டுபோய் உடைப்பிலே போடும்மா! ஏம்மா..நா ஒருத்தன் குத்துக்கல்லாட்டம் ஏழாவது மாடிலே உட்கார்ந்துண்டு இருக்கிறது உனக்கு ஞாபகமே இல்லியா?"

இப்படிப் பேசினால் என்ன பதில் சொல்வது மாமா என்கிற தினுசில் கௌரி சிரித்தாள்.

"எது கேட்டாலும் சிரிச்சுசிரிச்சே மழுப்பிடு... ஏம்மா, உன்னை நா பார்த்துக் கிட்டத்தட்ட ஒரு மாசம் ஆகப்போறதும்மா.... உனக்கு அதுவாவது ஞாபகமிருக்கா?"



"இல்லியே-பத்து நாள் முன்னாடிகூடப் பார்த்தேனே..." கூடுமான வரையில் பாங்க்கிலிருந்து பேசும் போது மாமா, சீமா உறவு எல்லாம் கௌரி கொண்டாடுவது கிடையாது. அவர் சேர்மன், இவள் நூற்றுக்கணக்கான சீஃப் அக்கௌண்டண்டுகளில் ஒருத்தி! அவ்வளவுதானே! அதற்காக யாரையோ கூப்பிடுவது மாதிரி மிஸ்டர் கோபாலன் என்று அழைக்கவும் கௌரிக்கு மனமில்லையாதலால் மொட்டையாக எந்த மாதிரியும் கூப்பிடாமல்தான் பேசுவாள். இப்போதும் அதையே கடைப்பிடித்தாள்.

"பத்து நாள் முன்னாடியா? கூட்டமா எல்லாரும் வந்திருந்தேளே, அதையா சொல்றே?"

"ம்...."

"ஓ நோ-அதை நா கணக்குலே சேர்த்துக்க மாட்டேன்! நாலு பேராய் வந்து 'என்ன சௌக்கியமா'னு கேட்டுட்டுப் போறது ஒரு விஸிட்டோட சேர்த்தியாம்மா?"

கௌரிக்கு மேலே பேசுவது சங்கடமாய் இருந்தது. எதிரில் பாலாஜி, இரண்டு பக்கமும் பார்த்தஸாரதியும், சுந்தரராஜனும். சேர்மனுடன் கௌரி பேசுகிறாள் என்பது மூவருக்குமே தெரியும். தன் இருக்கையிலிருந்து பேசினாலாவது கொஞ்சம் கலகலப்பாய்ப் பேசலாம். இப்போது?

"என்னம்மா பதிலைக் காணோம்...?"

"இல்லே வந்து..."

கௌரி பேச முடியாதபடி இக்கட்டான நிலையில் இருக்கிறாள் என்பது கோபாலனுக்குப் புரியவே செய்தது. வேண்டுமென்றே அவளைச் சீண்டினார்.

"உன் ஸீட்லேந்து பேசலியா?"

"இல்லே... மானேஜர் ரூம்லேந்து..."

"ஏதாவது டிஸ்கஷனா?"

"ம்... க்ரெடிட் கமிட்டி டிஸ்கஷன்..."

"அப்ப சரி... என்னை அடிக்கடி வந்து பார்க்காததுக்கு பனிஷ்மெண்டா, இன்னிக்கு க்ரெடிட் கமிட்டி முன்னால உன்னை அழவைக்க வேண்டியதுதான்.... என்னம்மா?"

கௌரி லேசாய்ச் சிரித்தாள். மாமா ப்ளீஸ் என்றது அந்தச் சிரிப்பு.

"ஆல்ரைட்.... நீ என்னைப் பார்க்க எப்ப வரே?"

"ம்.... கொஞ்ச நாழி கழிச்சி போன் பண்ணிச் சொல்றேனே..."

"நோ.... நோ....... இப்பவே சொல்லணும்.... மணி என்ன? பன்னெண்டு..... லஞ்சு என்னோட சேர்ந்து சாப்பிடலாம். வா..."

"கொஞ்ச கஷ்டம்... வந்து..."

"அப்ப சரி-நா கீழே வந்து உன்னோட சேர்ந்து சாப்பிடறேன்-ஓ.கே? என்ன கொண்டு வந்திருக்கே? நானும் மாது சமையல் சாப்பிட்டு நாளாச்சு..."

"ஐயயோ.... வேண்டாம்.... வேண்டாம்... நானே வரேன்...."



அப்படி வா வழிக்கு என்று சொல்லுகிற தினுசில் கோபாலன் சிரித்தார்.

பின், "அரை மணிலே வந்துடும்மா... ஓ.கே. தென்" என்று சொல்லி வைத்தார்.

தலையைத் திருப்பின கௌரிக்கு மற்ற மூவரும் நமட்டுச் சிரிப்போடு தன்னையே பார்ப்பது புரிய, வெட்கத்தோடு புன்னகைத்தாள்.

"சேர்மன் என்ன சொல்றார், கௌரி? நன்னா வகையா எதுக்கோ மாட்டினார் போல இருக்கே?"

பார்த்தஸாரதி ஸ்வாதீனத்துடன் கேலி செய்தார்.

கௌரியின் கதை பூராவும் அந்த பாங்க் சம்பந்தப்பட்ட முக்கால்வாசிப் பேர்களுக்குத் தெரியும். கோபாலன் கௌரியைத் தம் சொந்த மகளாகவே பாவித்து நடத்துவதும் தெரியும். கௌரி அதற்காக அந்த பாங்க்கில் எந்த ஒரு தனிச் சலுகையையோ, மரியாதையையோ எதிர்பார்ப்பது இல்லை என்பதும் தெரியுமாதலால் இன்று வரை எந்த ஒரு நபரும், "கௌரிக்கு என்னப்பா! சேர்மனுக்கு வேண்டியவ, பதவி, பிரமோஷனுக்குக் கேட்கணுமா?" என்று அசிங்கமாய், பொறாமையுடன் பேசியது கிடையாது.

"இல்லே-அவரைப் பார்த்துப் பேசி நாளாச்சு... அதான் விசாரிச்சார்... அப்புறமா மேலே வரேன்னு சொன்னேன்..."

கௌரி சொன்னபடி மேலே போகவில்லை என்றால் என்ன நடக்கும் என்பது மற்றவர்கள் அறிந்ததுதானே!

இப்படித்தான்; ஓரிரு சமயங்களில் வருகிறேன் என்று சொல்லிவிட்டு, வேலை மும்முரத்தில் அதை கௌரி அடியோடு மறந்தபோது, தடதடவென்று பாங்க் அதிர கோபாலனே வந்துவிட்டார்.

சேர்மன் கீழே வந்திருக்கிறார் என்று பாங்க்கில் ஒரே பரபரப்பு.

கௌரிக்குக் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை.

மனுஷர் அமர்க்களம் பண்ணிவிட்டார். அதிலிருந்து அவரைக் கீழே வரவிடாமல் இருக்க கௌரி ரொம்ப கவனத்துடன் இருக்கிறாள்.

க்ரெடிட் கமிட்டி மீட்டிங் முடிந்து தன் இருக்கைக்கு வந்த கௌரி, கையெழுத்துப் போட்டு அனுப்ப வேண்டிய சில முக்கிய டாக்குமெண்ட்ஸ், கடிதங்களை கவனித்தாள்.

மணி பன்னிரண்டு நாற்பதாகும்போது பார்த்தசாரதியிடம், "நா அரை மணி மேலே போயிட்டு வரேன்... பார்த்துக்கோங்கோ..." என்று சொல்லி, மேஜையைப் பூட்டி சாவிக்கொத்தைப் பையில் போட்டுக்கொண்டு கிளம்பினாள்.

வழக்கமாய் இரண்டு மணிக்கு முன் கௌரி சாப்பிடப் போகமாட்டாள்.

பணப் பட்டுவாடா முடிந்த பிறகுதான் அவள் உணவு உட்கொள்ள எழுந்திருப்பாள். ஒரு மணிக்கு பார்த்தசாரதியும், ஒண்ணரைக்கு பாலாஜியும் சாப்பிடப் போய்விடுவார்கள்.



இன்றைக்குப் பார்த்தசாரதி சாரின் சாப்பாடு அரை மணி தள்ளிப்போகும் என்று நினைத்துக்கொண்டே பிரதான வாசல் வழியாக வெளியில் வந்தாள் கௌரி.

எட்டு மாடி கொண்ட அந்தக் கட்டடம்தான் அவர்கள் பாங்க்கின் தலைமை ஆபீஸ். ப்ரும்மாண்டமான, அழகான, நவீனக் கட்டடம்.

இந்தக் கோடிக்கு அந்தக் கோடி இருக்கும் படிகளில் ஏறினால் சலவைக்கல் இழைத்த வராந்தா. கண்ணாடிக் கதவுகளைத் தள்ளிக்கொண்டு உள்ளே வந்தால் ஃபாயர் எனப்படும் முன் அறை. அதில் இந்தப் பக்கம் மூன்று, அந்தப் பக்கம் மூன்று என லிஃப்டுகள், மாடிக்குப் போகவர. ஃபாயரில் நான்கடி இடப் பக்கமாய்ச் சென்றால் கௌரி வேலை செய்யும் பிராஞ்சின் பிரதான வாயிலை அடையலாம்.

முதல் மாடியில் ஆடிட்டிங், இரண்டாவதில் ஆர் அண்ட் எல், அதாவது ரெக்கவரி அண்ட் லீகல் ஆக்ஷன், மூன்றாவதில் பர்ஸனல் என்று ஒவ்வொன்றிலும் ஒரு டிபார்ட்மெண்ட் இயங்கிவந்தது. ஆறாவதில் ஜெனரல் மானேஜர், செக்ரட்டரி இவர்களின் ஆபீஸ். ஏழில் சேர்மன் கோபாலனின் அறை, போர்ட் மீட்டிங் அறை உண்டு. எட்டாவது மாடியில் சின்னதாய் கெஸ்ட் ஹவுஸ். யாராவது முக்கிய புள்ளி, வெளியூர், வெளிநாட்டிலிருந்து வந்து தங்குவதற்காக அடக்கமான அலங்காரங்களோடு காத்திருந்தது.

நிர்வாகக் கூட்டத்திற்குப் போக ஆறு லிஃப்டுகளைத் தவிர அவசர உபயோகத்துக்கென மாடிப்படியும் ஒதுக்குப்புறமாய் இருந்தது.

கீழே பணம் புழங்கும் பாங்க்குக்குள் வந்து போக இரண்டே வழிகள்தான். ஒன்று, ஃபாயரிலிருந்து பிரியும் பிரதான வாயில்; இன்னொன்று, கட்டடத்தில் பக்கவாட்டில் இருக்கும் ஸைட் எண்ட்ரன்ஸ்; இந்த இரண்டு கதவுகளையும் பூட்டிவிட்டால் அப்புறம் பாங்க்குக்குள் ஈ நுழைவதுகூட கஷ்டம். அப்படி ஒரு பந்தோபஸ்து.

பிரதான வாசல் வழியாக வெளியே வந்த கௌரி, லிஃப்டிடம் சென்று பட்டனை அமுக்கினாள். சில கணங்களில் சமர்த்தாய் ஒன்று வந்து நின்றதும், உள்ளே சென்று ஏழாவது மாடி பட்டனைத் தட்டினாள்.

அரை நிமிஷத்தில் ஏழாவது மாடிக்குச் சென்று வாயைத் திறந்தது லிஃப்ட்.

ஏழாவது மாடியின் அலங்காரமே தனியாய்த்தான் இருக்கும். சேர்மன் ஆபீஸ் இல்லையா?

கால் செருப்பு முழுவதையும் விழுங்க ஆசைப்படும் புஸுபுஸு கார்பெட், சுவரில் சிரிக்கும் சித்திரங்கள், மூலைகளில் நின்று நாட்டியமாடும் சிற்பங்கள் என்று எல்லாம் தடபுடல்தான்.

கௌரியைக் கண்டதும் ப்யூன், "வாங்கம்மா" என்றான். "நல்லா இருக்கீங்களாம்மா?" என்றான். "ஐயா காத்திட்டு இருக்காரு" என்றான்.

கோபாலன் அறைக்கு அவளை அழைத்துச் சென்றான்.



பார்த்துக்கொண்டிருந்த ஃபைலை மூடி, கண்ணாடியைக் கழற்றிய கோபாலன், "வாம்மா" என்றார் வாஞ்சையுடன்.

கோபாலனுக்கு எழுபது வயசு என்று சொன்னால் நம்புவது கொஞ்சம் கஷ்டம்தான். அத்தனை சுறுசுறுப்பு, அத்தனை கலகலப்பு.

கௌரி உட்கார்ந்தாள்.

போன மாசம் கோபாலன் லண்டனில் நடந்த செமினார் ஒன்றில் கலந்துகொண்டுவிட்டு பத்து நாள் முன்னால் ஊர் திரும்பினார். அப்போது மரியாதை நிமித்தமாக பாங்க் அதிகாரிகள் கூட்டமாய் வந்து பார்த்துச் சென்றபோது கௌரியும் இரண்டு நிமிஷங்கள் வந்து சென்றதுதான்.

"ஸோ-எப்படிம்மா இருக்கே? உன்னை இப்படி இழுத்தடிச்சாதான் மேலே வருவேபோல இருக்கு?"

"அப்படி இல்லே, மாமா... வேலை சரியா இருக்கு... அதான்..."

"விஜய் எப்படியிருக்கான்? நா அவனைப் பார்த்து ரொம்ப நாளாச்சு... உங்காத்துக்கு வரணும்னுதான் நினைக்கறேன். டைம் கிடைக்கமாட்டேங்கறதும்மா..."

"நீங்க சிரமப்படாதீங்கோ, மாமா... நா அவனை உங்களை வந்து பார்க்கச் சொல்றேன்..." என்ற கௌரி, நான்கு நாளாய்த் தலையும், வேஷமுமாய் இருக்கும் விஜய்யைப் பார்த்தால் இவர் என்ன சொல்லுவார் என்று ஒரு விநாடி நினைத்தாள்.

தலையும் வேஷமும் கிடக்கட்டும்; என்னவோ செய்யக் கூடாததைச் 'செய்துவிட்டதாய் விஜய் சொல்கிறானே, அதைக் கேட்டால் மாமா என்ன சொல்லுவார்? மதுசூதனோடு சேர்ந்துகொண்டு மரிவானா சிகரெட் குடிப்பதும், ஸ்ட்ரிப்டீஸ் டான்ஸ் பார்ப்பதும் மாமாவுக்குத் தெரிந்தால் என்ன சொல்லுவார்?

'என்னம்மா இது?' என்பார், புருவம் முடிச்சு முடிச்சாய்ச் சுருங்க... 'இதெல்லாம் நன்னா இல்லை, கௌரி-பையனைக் கண்டிக்கணும்' என்பார். அப்புறம் என்ன சொல்லுவார்?

மாமாவிடம் விஜய் சொன்னதைச் சொல்லலாமா, வேண்டாமா? அரைகுறையாய் விஷயத்தைச் சொல்வதற்கு முன், ரம்யாவுடன் பேசின பிறகு, 'மாமா, இதுதான் சமாச்சாரம், இதற்கு ஒரு வழி சொல்லுங்கள்' என்று கேட்டால் என்ன?

நான்கையும் யோசித்து, இப்போதைக்கு ஒன்றையும் கோபாலனிடம் சொல்ல வேண்டாம், நான்கு நாட்கள் கழித்துப் பார்த்துக்கொள்ளலாம் என்ற முடிவுக்கு கௌரி வந்தாள்.

"என்னம்மா, என்ன யோசனை?"

"ஒண்ணுமில்லே, மாமா..."

"விஜய் ட்ரயினிங் போறானா? பிடிச்சிருக்காமா?"

"ம்?... ஓ யெஸ்... ஹி லைக்ஸ் இட்..."

கோபாலன் எழுந்தார். பக்கத்து அலமாரியிலிருந்து ஒரு அட்டைப் பெட்டியை எடுத்தார்.



"ஹாலண்ட்லேந்து விஜய்க்காக வாங்கிண்டு வந்தேன், கௌரி... நானும் பத்து நாளா ஆத்துக்கு வந்து இதைக் கொடுக்கணும்னு நினைக்கறேன். வேலை சரியா இருக்கு... நாளைக்கு டெல்லிக்குப் போறேன். நாலைஞ்சு நாளாகலாம் திரும்ப... அதனாலே இதை இன்னிக்கு உன்கிட்டேயே குடுத்திடலாம்னு ஆபீஸுக்கு எடுத்துண்டு வந்துட்டேன் - விஜய்க்கு இது பிடிக்குமானு பாரும்மா..."

கோபாலன் அட்டைப் பெட்டியைப் பிரித்தார்.

லேட்டஸ்ட் பிலிப்ஸ் ஸ்டீரியோ ரெகார்ட் ப்ளேயர். சக்தி வாய்ந்த ஆம்ப்ளிஃபயர், ஸ்பீக்கர்கள், கூடவே கேட்பதற்காக இன்றைய ஹிட் பாடல்கள் கொண்ட இசைத்தட்டுகள்... விஜய் தேன் குடித்த நரி மாதிரி குதிப்பது நிச்சயம்.

கௌரிக்குக் கண்களில் நீர் பூத்தது.

"என்ன மாமா, எதுக்காக மாமா...?" என்றவளுக்கு, மேலே எதுவும் பேச முடியாமல் குரல் செம்மிப் போயிற்று.

"என் பேரனுக்குப் போன ட்ரிப் ஜப்பான்லேந்து வாங்கிண்டு வந்தேன். இந்தத் தடவை விஜய்க்கு... எம்மா விஜய்யும் எனக்கு ஒரு பேரன்தானேம்மா! அவனுக்கும் என்னை விட்டா வேற யார் இருக்கா, இதெல்லாம் வாங்கித் தர, ம்?"

சாப்பாட்டை ப்யூன் டேபிள்மேல் எடுத்து வைத்துவிட்டதாகச் சொல்லவே, இருவரும் சாப்பிட உட்கார்ந்தார்கள்.

பத்து நிமிஷத்தில் சாப்பிட்டு முடிந்ததும், "நாழியாயிடுத்து, மாமா" என்று கௌரி கிளம்பினாள்.

"இதை ஆள் மூலமா உங்காத்துக்கு அனுப்பி டட்டுமா, இல்லை, நீயே எடுத்துண்டு போறயா?"

கௌரி யோசித்தாள்.

"நானே எடுத்துண்டு போறேன்... இன்னிக்கு சுாஷ் உள்ளே போனதும் நா வீட்டுக்குப் போகலாம்னு இருக்கேன். கார்த்தாலேந்து தலைவலி..."

"அப்படீன்னா, ப்யூன்கிட்ட குடுத்து ஆபீஸ் கார்ல வெக்கச் சொல்றேன்— நீ வேலை முடிஞ்சு இன்னிக்கு ஆபீஸ் கார்லேயே வீட்டுக்குப் போயிடு—என்னம்மா?"

கோபாலன் சொல்வதை மறுப்பதைக்காட்டிலும் ஏற்றுக்கொள்வது சுலபமானதாகையால் கௌரி தலையை ஆட்டிக் கண்கள் பனிக்க மீண்டும், "தாங்க்ஸ் மாமா" என்று சொல்லிவிட்டுக் கீழே வந்தாள்.

திட்டமிட்டபடி சரியாய் நாலேகாலுக்கு கௌரி கிளம்பிவிட்டாள்.

ஆபீஸ் காரில் அட்டைப் பெட்டியுடன் அவள் வந்தபோது விஜய் வீட்டில் இல்லை.

மாது காப்பி தந்தான்.

குடித்தாள்.

இதுநாழிகை இல்லாத படபடப்பு மெல்லத் தலை தூக்கத் தொடங்கியது.

இந்த மாதிரி நான் அவஸ்தைப்படுவது தவறு என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு, விஜய்யின்



அறையை சுத்தப்படுத்தினால் என்ன என்று போனாள். அறை பூட்டி இருந்தது.

விஜய் எங்கே போனான்? எதற்காக அறையைப் பூட்டிச் சாவியை எடுத்துக் கொண்டு போயிருக்கிறான்?

இது என்ன புதுப் பழக்கம்!

குளித்து வேறுடை மாற்றிக்கொண்டு சோபா வில் கௌரி சாய்ந்தபோது மணி ஐந்தரை.

விஜய்யை இன்னும் காணோமே! ரம்யா வரும் போது அவன் கூட இருந்தால் நன்றாய் இருக்குமே!

கையில் வைத்திருந்த புத்தகத்தில் புத்தி போக வில்லை.

மாதுவை அழைத்தாள்.

"விஜய் எங்கே போனான்? ஏதாவது சொல் லிட்டுப் போனானா?"

"இல்லேம்மா..."

ரம்யா வரும்போது மாது ஏன் இங்கே இருக்க வேண்டும்? அவள் ஏதாவது அசிங்கமாகப் பேசினால் அது மாதுவுக்குத் தெரியாமல் இருப்பது நல்லது இல்லையா?

கௌரி யோசித்தாள். பின் மாதுவை அழைத்து, "அஷ்டலக்ஷ்மி கோவிலுக்குப் போய் ஒரு அர்ச்சனை பண்ணிண்டு வா, மாது... ராத்திரி சாப்பாட்டுக்கு அவசரம் இல்லே, நீ வந்து மெதுவா சமைச்சா போதும்—ஒன்பது மணிக்கு முன்னால எங்கே சாப்பிடறோம்?" என்று சொல்லிப் பணம் கொடுத்தாள்.

அவ்வப்போது நாள் கிழமைகளில், தான் போக முடியாத நாட்களில் மாதுவை அவள் அனுப்பிப் பழக்கமிருந்ததாலும், மனசு சரியில்லை, அதனால் அர்ச்சனை செய்கிறார்கள் என்று மாது நினைத்ததாலும், பேசாமல் கிளம்பினான்.

அடையாற்றிலிருந்து பஸ் பிடித்து மாது போய் வர ஒண்ணரை மணிநேரம் ஆகும். அதற்குள் அந்த ரம்யா வந்து போய்விடமாட்டாளா?

சரியாய்க் கால் மணியில் ரம்யா வந்தாள். ஆள் நன்றாகத்தான் இருந்தாள். வெள்ளைத்தோல், கறுப்பு முடி, பெரிய மார்பகங்கள் என்று.

வந்தவள் எதுவுமே பேசவில்லை.

உட்கார்ந்து ஒரு நிமிஷம் ஆனதும் கைப்பையிலிருந்து ஒரு கவரை எடுத்து கௌரியிடம் நீட்டி, 'நான் எதுவுமே கூற வேண்டாம், எல்லாம் இவை சொல்லிவிடும்' என்கிற தினுசில் ஒரு பார்வை பார்த்தாள்.

கௌரி கவரைப் பிரித்தாள்.

மடியில் தொப்பென்று சில புகைப்படங்கள் விழுந்தன.

எடுத்துப் பார்த்தவளுக்குக் கண்கள் கூசின; உடம்பு நடுங்கியது; அடி வயிற்றில் தோன்றிய குமட்டல் வாயில் கொப்புளித்தது.

எல்லாம் விஜய் சம்பந்தப்பட்ட படங்கள்தாம்.

ஆயிரம்தான் ஆனாலும் ஒரு மகனை இந்தக் கோலங்களில் ஒரு தாய் காண்பது சாத்தியமா என்ன?

தூ-என்ன இதெல்லாம்?

## 13

முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு உட்கார்ந்திருந்தாள் கௌரி.

உடம்பின் நடுக்கம் இன்னும் குறையவில்லை. வயிற்றின் குமட்டல் இன்னும் அடங்கவில்லை.

இதயத்துடிப்பு காதுக்குள் கேட்டது. உள்ளங்கையில் வியர்வை ஊறி கன்னங்களைக் கசகசத்தது.

இத்தனைக்கும், மடியில் விழுந்த நான்கு புகைப் படங்களையும் மேலெழுந்தவாரியாய்த்தான் அவளால் காண முடிந்தது.

சே-அசிங்கம்!

தெரு நாய்களுக்கும், இந்தப் படத்தில் இருப்பவர்களுக்கும் என்ன வித்தியாசம்?

ஐயோ, கடவுளே, இனி எந்த முகத்தோடு விஜய்யை நான் நிமிர்ந்து பார்ப்பேன்! அம்மா என்று அழைத்து அவன் கிட்டத்தில் வந்தால் மனசும் உடம்பும் கூசிப்போகுமே!

இது என்ன அக்கிரமம்!

மடியில் கிடக்கும் படங்களைச் சுக்கு நூறாய்க் கிழித்து, எதிரில் வெட்கம் கெட்டு உட்கார்ந்திருக்கும் ரம்யாவின் தலையில் போட்டு 'கெட் அவுட்!-

வெளியே நடடீ, நாயே' என்று கத்தினால் தேவலை போல இருந்தது.

ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து ரம்யாவின் தலை முடியைப் பிடித்து உலுக்கி, 'நீயும் ஒரு பெண் தானா? இப்படி வெட்கம் கெட்ட ஜன்மமாய் இருக்கவா நீ பிறந்தாய்? உன்னைப் பெற்றவர்கள் வயிற்றில் பிரண்டையைத்தான் வைத்துக் கட்டிக்கொள்ள வேண்டும்' என்று அலறி, அவளைக் கழுத்தைப் பிடித்து வெளியில் தள்ளினால் திருப்தியாக இருக்கும் என்று தோன்றியது.

கைவிரல்களைப் பிரித்து, சின்ன இடுக்கு வழியாக ரம்யாவைப் பார்த்தாள் கௌரி.

வாயில் சூயிங்கத்தை மென்று, கால்மேல் கால் போட்டுச் சாய்ந்து உட்கார்ந்திருப்பவளைக் காணு கையில் ஆத்திரம் பற்றிக்கொண்டு எழுந்தது.

லங்கிணி-வெட்கம் மானம் இல்லாத லங்கிணி. வயசு வந்த ஒரு பிள்ளையுடன் விவஸ்தை கெட்ட தினுசில் நடந்து கொண்டுவிட்டு, அதை மூன்றாம் நபர் போட்டோ எடுக்க அனுமதித்ததும் அல்லாமல், இங்கு எனக்கெதிரில் இப்படி திம்மக்கட்டை மாதிரி வந்து உட்கார்ந்துகொள்ள வேண்டும் என்றால் எத்தனை திமிர்பிடித்தவளாய் இருப்பாள்! எத்தனை ரோஷங் கெட்டவளாய் இருப்பாள்!

பிட்ச்...ப்ளடி பிட்ச்—

கண்மண் தெரியாத வேதனை, கோபத்தில் என்னென்னவோ யோசித்த கௌரியின் எண்ணம் திடுமென்று வேறு திசையில் போயிற்று.



ஆத்திரம் தீரக் கத்தி, போ வெளியே என்றால் பதிலுக்கு இவள் என்னைப் பார்த்துக் கத்த எத்தனை நிமிஷம் ஆகும்!

'என்னையே கண்டிக்கிறீங்களே, உங்கள் பிள்ளை மேல் மட்டும் தப்பு இல்லையா? இரண்டு கை கொட்டினால்தான் சத்தம்; முதலில் இந்த மாதிரிப் பிள்ளையைப் பெற்றதுக்கு நீங்கள்தான் முழக் கயிறிலே தொங்க வேண்டும்' - என்கிற தினுசில் ரசாபாசமாய் எதையாவது பேசிவிட்டால்?

பேசினாலும் பேசுவாள். ஏன் மாட்டாள்? அப்படி போட்டோ எடுக்க அனுமதித்தவள் எல்லாவற்றிலும்தான் துணிந்த கட்டையாக இருப்பாள்.

இப்போது என்ன செய்ய வேண்டும்?

கோபப்பட்டு, அள்ளி வார்த்தைகளைக் கொட்டி வாருவதில் என்ன பிரயோஜனம்?

முதலில் இவள் எதற்காக வந்திருக்கிறாள் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டாமா?

முக்கியமாய் இப்படிப் படங்களை யார் எடுத்தார்கள், ஏன் எடுத்தார்கள், இப்போது எனக்கு இவற்றைக் காட்டும் நோக்கம் என்ன என்பதையெல்லாம் தெரிந்து கொள்வதுதானே முக்கியம்!

மேற்கொண்டு ஐந்து நிமிஷங்கள் போவதற்குள் கௌரி தன்னை நன்றாகச் சுதாரித்துக்கொண்டு விட்டாள்!

கண்களை அழுந்தத் துடைத்துக்கொண்டாள். முகத்தை மறைத்த கைகளை விலக்கிவிட்டு, பார்வையை நிமிர்த்தி ரம்யாவைப் பார்த்தாள்.

கௌரி நோக்குவது கண்டு, ரம்யா விரக்தி கலந்த சிரிப்பொன்றைச் சிரித்தாள்.

"உங்க அதிர்ச்சியை,என்னால புரிஞ்சிக்க முடியுது, மிஸஸ் சங்கர் – ஏன்னா, நாலு நாள் முன்னாலே மொத மொதல்லே இந்தப் படங்களை நா பார்த்தப்ப இதை விட இன்னும் அதிகமாக ஷாக் ஆயிட்டேன்..."

என்ன சொல்கிறாள் இவள்? படங்கள் தனக்கு அதிர்ச்சியைத் தந்தன என்கிறாளே, அப்படியானால் இவள் அறியாமல்தான் இவை எடுக்கப்பட்டன என்கிறாளா?

கௌரி பதில் ஏதும் கூறாமல் அவளை வெறித்தாள்.

"ஆமாம், மிஸஸ் சங்கர். ஐ வாஸ் ரியலி ஷாக்ட் தட் டே..... நாலு நாளா நா தவிச்ச தவிப்பும், அழுத அழுகையும் அந்த ஆண்டவனுக்குத்தான் தெரியும்.... இப்ப கண்லே ஜலம் வத்திப்போச்சி.... இனிமே அழணும்னு நினைச்சாக்கூட என்னால முடியாது..."

முதல் முறையாய் கௌரி மெதுவாய்ப் பேசினாள்.

"நீங்க சொல்றதை நா நம்புவேன்னு எதிர் பார்க்கறீங்களா? ஐ ம் ஸாரி.... இந்த நடிப்பெல்லாம் என்கிட்ட வேண்டாமே..."

சடாலென்று ரம்யாவிடம் ஒரு மாற்றம்.



"எது நடிப்பு? நா சொல்றதுலே உங்களுக்கு ஏன் நம்பிக்கை இல்லே? அன்னிக்குப் பார்ட்டிலே நா டான்ஸ் ஆடப்போனது மெய்தான்... அங்கே ஏதோ போதை மருந்து கொடுத்திட்டாங்க்னு நினைக்கறேன். ஏன்னா, பாதிக்கு மேலே நடந்தது ஒண்ணுமே எனக்கு நினைவு இல்லே... ப்ராமிஸா நினைவு இல்லே, மிஸஸ் சங்கர்..."

மேலே பேச முடியாதபடி கண்கள் கலங்கி, வார்த்தைகள் வராமல் ரம்யா தவிக்கத் தொடங்கினாள்.

விஜய் சொன்ன மாதிரியே இவளும் சொல்லு கிறாளே! ஒருவேளை நிஜம்தானோ? மரிவானா சிகரெட் பிடித்ததில் என்ன நடந்ததென்று புரியவில்லையோ?

இவள் மன ஓட்டம் புரிந்த மாதிரி ரம்யா கேட்டாள்.

"என்னை விடுங்க; உங்க மகன் இந்தச் சம்பவம் பத்தி என்ன சொன்னார்? தெரிஞ்சுதான் இத்தனையும் நடந்ததா சொன்னாரா, சொல்லுங்க! இது ஒரு திட்டமிட்ட சதி, மிஸஸ் சங்கர். கௌதம் என்னைச் சந்திச்சு பூரா விவரத்தையும் சொன்ன பிறகுதான் எனக்கே எல்லாம் விளங்கிச்சு.... அத்தனையும் திட்டமிட்ட சதி..."

என்ன இவள்! என்னவோ புதுசாய் ஆரம்பிக்கிறாளே! திட்டமிட்ட சதியா? கௌதம் சொன்னானா? என்ன இதெல்லாம்?

"நான் ஆரம்பத்திலேந்து சொல்றேன், பதட்டப் படாம கேளுங்க... நா ஒரு டான்ஸர்.. ஸ்ட்ரிப்டீஸ்

டான்ஸர் ரொம்பப் பிரபல்யமானவ இல்லே.... பம்பாயின் சாதாரண ஹோட்டல்களிலே நா சுமாரா பரிச்சயம் ஆனவ.... பம்பாய்லே வருமானம் குறைஞ்சிபோனதும் மெட்றாசுக்கு மூணு மாசம் முன்னால வந்தப்ப எனக்கு கௌதம் பழக்கம் ஆனார். அவர்தான் போன வாரம் தன் ஃப்ரெண்ட் மதுசூதன் கொடுக்கிற பார்ட்டிலே வந்து ஆட என்னை ஏற்பாடு செய்தார். 'அரை மணி ஆடிட்டுப் போயிடு... ஆயிரம் ரூபாய் கிடைக்கும்'ன்னார். நா ஒத்துக்கிட்டேன். மஹாபலிபுரம் பக்கத்திலே ஒரு வீட்டுலே பார்ட்டி. கூட்டம் இருக்கும்னு நினைச்சுப் போன எனக்கு ஏமாத்தமா இருந்திச்சி... சரி, எத்தனைபேர் இருந்தா என்ன, ஆடிட்டுப் பணத்தை வாங்கிக்கிட்டுப் போயிடலாம்னு நினைச்சேன். ஆட்டம் ஆரம்பிக்கறத்துக்கு முன்னாலே ட்ரிங்க் குடுத்துக் குடிக்கச் சொன்னாங்க; குடிச்சேன். பாதி ஆட்டம் வரைக்கும் நா சரியாதான் இருந்தேன். அப்புறம் மயக்கம் வர மாதிரி இருந்திச்சி. மறுபாடு கண் விழிச்சப்போ விடிஞ்சிருந்தது. 'நீ அதிகமாகக் குடிச்சி ப்ளாக்அவுட் ஆயிட்டே'னு சொன்ன கௌதம், பணம் கொடுத்து என்னை அனுப்பினார். என் தொழில்லே இதெல்லாம் சகஜம்– அதனாலே நா பெரிசு பண்ணலை. ஆனா, ரெண்டு நாளைக்கப்புறம் கௌதம் வந்து இந்தப் படங்களைக் காட்டினப்போ நா மிரண்டுதான் போனேன். கத்தினேன், குதிச்சேன். என்ன பண்ணி என்ன? மனுஷன் சிரிச்சுகிட்டே இருந்தான். "பயப்படாதே! உனக்கு ஒரு கெடுதலும் வராது. இது நா திட்டம் போட்டுச் செய்யற காரியம்... நா சொல்றப்போ நீ இந்தப் படங்களை எடுத்துட்டு விஜய் வீட்டுக்குப்



போய் அவங்க அம்மாகிட்ட காட்டு-பாக்கியை நா பார்த்துக்கறேன்"னான். நாலு நாளா விஜய்யை போன் மூலமா என்னை மிரட்டச் சொன்னதும் கௌதம்தான். மனசிலே என்னவோ பெரிய ப்ளாட் வெச்சிருக்கான்னு நினைக்கறேன்... நிஜம்மா சொல்றேன், மிஸஸ் சங்கர், எனக்கு பயமா இருக்கு..."

நீளமாய்ப் பேசி நிறுத்தின ரம்யா சின்னதாய் விசிக்கத் தொடங்கினாள்.

கௌரிக்கு எதை நம்புவது, எதை நம்பாமல் இருப்பது என்று ஒன்றும் புரியவில்லை.

டிராமா, சினிமாவில் வருகிற மாதிரி என்ன இதெல்லாம்!

கண்டபடி ஸ்ட்ரிப்டீஸ் டான்ஸ் ஆடி, கண்டவனுடன் பழகித் திரியும் இவளுக்கா பயம்? இவள் சொல்லுவதையா நான் நம்ப வேண்டும்?

மனசில் தோன்றின கேள்விகளை கௌரி வெளியிட்டதும் ரம்யாவின் அழுகை பெரிதாயிற்று

"நீங்க இப்படிக் கேட்பீங்கனு எனக்குத் தெரியும்– என்னா நா ஒரு ஸ்ட்ரிப்டீஸ் டான்ஸர்தானே! எனக்கு ஏது ஒழுக்கமும், நேர்மையும்? அப்படித்தானே நீங்க நினைக்கறீங்க? உங்களைக் குத்தம் சொல்லி என்ன பிரயோஜனம்! இந்தச் சமுதாயமே எங்களை மட்டமா நினைச்சி நடத்தறப்போ, நீங்க மட்டும் விதிவிலக்கா, என்ன?"

பெரிதாய்க் கண்களை விரித்துக்கொண்டு, முகத்தில் வேதனையை வரவழைத்துக்கொண்டு வாய்விட்டு அழும் ரம்யாமேல் கௌரிக்கு இரக்கம்

பிறக்கவில்லை. என்ன மாய்மாலம் பண்ணுகிறாள் இவள்; இந்த நடத்தைக்குச் சப்பைகட்டு வேறா - என்றே எண்ணினாள்.

"எனக்கும் குடும்பம் இருக்கு, மிஸஸ் சங்கர்; நானும் பாசம், அன்பு எல்லாம் இருக்கற ஒரு பெண்தான். ஜடம் இல்லே... நாலு வருஷங்க முன்னாலே க்ளார்க் உத்தியோகத்திலே இருந்த எங்கப்பாவுக்கு ஆக்ஸிடெண்டுலே ரெண்டு கண்ணும் போயிடிச்சி. கடைசித் தங்கை பிறந்தப்போ பிரசவம் கோளாறாகி எங்கம்மா பாரிசவாயு தாக்கி படுத்திட்டாங்க. வேற எந்த தினுசிலேயும் வருமானம் கிடையாது. தம்பிகள் ரெண்டுபேர், தங்கச்சி ஒருத்தி, நா, எல்லாரும் எப்படிச் சாப்பிடறது? உசிரோட இருக்கிறது? நாந்தான் மூத்தவ.. எப்பாடுபட்டாவது குடும்பத்தைக் காப்பாத்தணுங்கற நிலைமை! வேலை தேடாத இடம் இல்லை. ஸ்கூல் படிப்பு மட்டும் படிச்சிருந்த எனக்கு யார் வேலை குடுப்பாங்க? புண்ணியவான் ஒருத்தர், 'பாம்பேக்கு வரியா, நல்ல சம்பளம் தரேன்'னார். கிளம்பினேன். தாளத்துக்குத் தகுந்த மாதிரி ஆடக் கத்துக் குடுத்தார். என் உடம்பு நல்லா இருந்தது, ஸ்ட்ரிப்டீஸ் டான்ஸர் ஆனேன். அப்புறம் என்னென்னவோ நடந்துபோச்சினு நா ஒப்புக்கறேன். ஆனா, இந்தப் படங்களுக்கு போஸ் கொடுக்கிற அளவுக்கு நா தாழ்ந்துபோயிடலை, மிஸஸ் சங்கர் - நா டான்ஸர்தான், ஆனா விபச்சாரி இல்லே..."

சோபாவில் இரண்டாக மடிந்துகொண்டு ரம்யா அழுததும், கௌரிக்கு லேசாய் வருத்தம் எழுந்தது.

இப்போது என்ன செய்ய வேண்டும்?



என்ன பேசி இவளைச் சமாதானம் செய்ய வேண்டும்?

ஒன்றுமே புரியாமல் சில நிமிஷங்களுக்குக் குழம்பித் தவித்தவள் மெதுவாகப் பேசினாள்.

"ஆல்ரைட், அழாதே, ரம்யா... இப்படி அழுது ஆகப்போறது என்ன? கௌதம்ங்கறவன் ஏன் இப்படிச் செய்தான்; அவனுக்கு என்ன வேணும்னு முதல்லே நாம தெரிஞ்சிக்கணும்... உன்கிட்டே இந்த கௌதம் வேற என்ன சொன்னான், டெல் மீ..."

கண்களைத் துடைத்துக்கொண்டு ரம்யா நிமிர்ந்தாள்.

"நீ போய் மிஸஸ் சங்கர்கிட்ட இந்த போட்டோவைக் காட்டு, நா அப்புறமா வந்து பேசிக்கறேன்னான். மத்தபடி எனக்கு வேற ஒண்ணும் தெரியாது - முதல்லே அவன் உங்ககிட்ட படங்களைக் குடுனு சொன்னதும் 'என்னால முடியாது'ன்னேன். அதுக்கு அவன் என்ன சொன்னான் தெரியுமா? 'சரி, முடியாட்டா விட்டுடு-நாளைக்கே இந்தப் படங்களை என்லார்ஜ் பண்ணி, போஸ்டர் அடிச்சி, உங்க வீட்டு முன்னால ஒட்டுவேன், உன் குடும்பம் வாழற தெருப் பூராவும் ஊர்ப் பூராவும் ஒட்டுவேன்'னான். நா பயந்து போயிட்டேன். மானமா எங்கேயோ பெண் டைப்பிஸ்ட் வேலை பார்த்துப் பணம் அனுப்பறதா எங்க வீட்டுலே நினைச்சிட்டு ஒரு சின்ன டவுன்லே வாழ்ந்திட்டு இருக்காங்க... விஷயம் தெரிஞ்சா அத்தனைபேரையும் கிணத்திலே தள்ளிட்டு அப்பாவும் இறந்துடுவார் - நிச்சயம்! அப்புறம் தான் நா ஒத்துகிட்டேன்... 'நீ என்ன

சொன்னாலும் செய்யறேன், கௌதம்'னு அவன் கால்லே விழுந்தேன். வேற நா என்ன பண்ணறது சொல்லுங்க, மிஸஸ் சங்கர்?"

திரும்பவும் ரம்யா அழத் தொடங்கியதும் கௌரி முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு சோபாவில் சாய்ந்தாள்.

தொடக்கத்தில் ரம்யா அலட்சியமாய் உட்கார்ந்திருந்ததற்கும், 'கண்லே ஜலம் வத்திப்போச்சி'னு சொன்னதற்கும், இப்போது முளுக்கென்றால் அழுவதற்கும் சம்பந்தமே இல்லாத மாதிரி தோன்றியது.

இப்படிக்கூட ஒரு பெண் இருப்பாளா?

ஒரு நிமிஷம் சாதாரணமாகவும், ஒரு நிமிஷம் வேதனையுடனும் இவளால் எப்படி இருக்க முடிகிறது?

இவள் பேச்சில், அழுகையில் என்னவோ ஒரு செயற்கைத் தன்மை இருக்கிறதே... அது ஏன்?

நடிக்கிறாளோ?

ஏன் நடிக்க வேண்டும்? அதனால் இவளுக்கு ஆகப் போவது என்ன?

வாசல் மணி ஒலிக்கும் ஓசை கேட்டு கௌரி தன்னை உலுக்கிக்கொண்டு எழுந்தாள்.

யார், மாதுவா, அதற்குள் வந்துவிட்டானா?

வாயில் கதவை கௌரி திறந்தபோது உயரமும், பருமனும், மீசையும், விழியுமாய் நின்ற தடியன் ஒருவன் அசிங்கமாய்ச் சிரித்து "ஹலோ, ஐ'ம் கௌதம்..." என்றான்.



# 14

'உள்ளே வா' என்று கௌரி சொல்லாமலேயே கௌதம் உள்ளே வந்தான். சோபா ஒன்றை முழுமையாய் அடைத்துக்கொண்டு உட்கார்ந்தான். கால் மேல் கால் போட்டுக்கொண்டான். பாக்கெட்டிலிருந்து சிகரெட்டை எடுத்துப் பற்றவைத்தான். புகையை உள்ளுக்குள் இழுத்து, கன்னத்தை உப்பி, வாயைப் பன்றியின் வாய் மாதிரித் துருத்திக் கொண்டு வளையம் வளையமாய் அதை வெளியில் விடத் தொடங்கினான்.

பார்த்துக்கொண்டே நின்ற கௌரிக்கு ஆச்சரியமாக இருந்தது.

எத்தனை துணிச்சல் இவனுக்கு! என் வீட்டில், என்னைக் கேட்காமல் உள்ளே நுழைந்ததுமல்லாமல், என்னவோ வீட்டுக்குச் சொந்தக்காரன் மாதிரி சோபாவில் உட்கார்ந்துகொண்டு, அலட்சியமாய் இப்படிப் புகைப்பிடிக்க வேண்டுமென்றால் எத்தனை தைரியம் இருக்க வேண்டும் இவனுக்கு?

இத்தனை அகம்பாவம், திமிர் கொண்டவனிடம் மாட்டிக்கொண்டுவிட்டோமே! இவன் என்ன கேட்கப் போகிறான்? என்ன திட்டத்தோடு இங்கே வந்திருக்கிறான்?

ஆமாம், விஜய் எங்கே? அவன் எங்கே போய்த் தொலைந்தான்? என்னை இவர்களிடம் தனியாய்த் தவிக்க விட்டுவிட்டு எங்கே போய்விட்டான்?

"கதவுக்கிட்டயேதான் நிக்கப்போறீங்களா, மேடம்? உள்ளே வந்து உட்கார இஷ்டம் இல்லியா?"

பெரிதாய் ஜோக் அடித்துவிட்ட தினுசில் கௌதம் சிரிக்கவும், தானும் சிரிக்க முற்பட்ட ரம்யாவின் சிரிப்பு, சடாரென்று தலையை ஒடித்து, கௌதம் அவளைப் பார்த்த பார்வையில் அடங்கிப்போயிற்று.

சில கணங்களுக்கு ரம்யாவை அழுத்தமாக அவன் பார்த்தான். பின், "நீ வந்த வேலை ஆயிடிச்சி இல்லே அப்புறம் இன்னும் ஏன் உட்கார்ந்திட்டு இருக்கே? ம்.... ம்.... கெட் அவுட்... உன்னை நா நாளைக்குப் பார்க்கறேன்-கிளம்பு..." என்றான்.

ஒரு வார்த்தைகூட மறுப்புச் சொல்லாமல் ரம்யா எழுந்தாள். வாயிற்கதவை நோக்கி நடந்தாள்.

அவ்வளவு பயமா? இவன் பார்வைக்கும், பேச்சுக்கும் ரம்யாவுக்கு அவ்வளவு பயமா? இவனோடு என்னைத் தனியாக விட்டுவிட்டு இவளும் போகப் போகிறாளா? நோ... இந்தத் தடியனோடு நான் தனியாய் இருக்கமாட்டேன்.

கதவைத் தாண்டின ரம்யாவின் முன் கௌரி கையை நீட்டினாள்.

"இவ எதுக்காகப் போகணும்? இங்கேயே இருக்கட்டும்... இவளுக்குத்தான் எல்லாம் தெரியுமே!"

பிடித்துக்கொண்டிருந்த சிகரெட்டை கௌதம் டீபாய் மேல் தேய்த்து அணைத்தான்.

"பயப்படாதீங்க, மேடம், உங்களை நா ஒண்ணும் பண்ணமாட்டேன். உங்கமூலமா பெரிய காரியம்



ஒண்ணைச் சாதிக்கணும்னு திட்டம் போட்டிருக்கும் போது, உங்களுக்கு எந்தக் கெடுதலும் பண்ண மாட்டேன். ரம்யா போகட்டும், வழி விடுங்க."

தன் பெரிய கண்களால் விரித்துப் பார்த்தபடி கௌதம் பேசினது அதிகமான சங்கடத்தை உண்டு பண்ண, கௌரி கையை மடக்கிக்கொண்டாள்.

ரம்யா அவளைத் தாண்டிப் படிகளில் இறங்கி, இருட்டில் மறைந்துபோனாள்.

"இன்னும் எத்தனை நேரம் அப்படியே நிக்கப் போறீங்க? வெளியே போன மாது வர்ற வரைக்குமா? அவன் திரும்பி வர்றத்துக்கு முன்னால் நாம்ப பேசறதைப் பேசிட்டா நல்லது இல்லையா? இப்படி வந்து உட்காருங்க, மேடம்...."

'நான் சொல்வதை மரியாதையாகக் கேள்!' என்கிற எச்சரிக்கை அந்தக் குரலில் ஒலிப்பது புரிந்த கௌரி, மெதுவாக உள்ளே வந்தாள். சோபாவில் அமர்ந்தாள்.

மாது வெளியே போயிருப்பது இவனுக்கு எப்படித் தெரியும்? ஒருவேளை இவனுக்கு அவன் பழக்கமோ?

கால்களில் ஒரு நடுக்கம். நெற்றிப் பொட்டில் விண்ணென்று ஒரு துடிப்பு.

கௌதமைக் கஷ்டப்பட்டு நிமிர்ந்து பார்த்தாள்.

"விஜய் எங்கே?" என்றாள் சின்னக் குரலில்.

கோணலாகப் புன்னகை செய்தான் கௌதம்.

"விஜய் பத்திரமாதான் இருக்கான்-என்ன இப்படி நடுங்கிச் சாகறீங்க? ம்? ரிலாக்ஸ் மேடம்... இன்னும்

என்னென்னவோ நடக்கப்போகுது.. இப்பவே இப்படி பயந்தா எப்படி? விஜய் சாயங்காலம் என்னைப் பார்க்க வந்திருந்தான். 'அடே பையா, நா இப்ப உங்கம்மாவைப் பார்க்கப்போறேன், ஏற்கனவே ரம்யா அவங்ககிட்ட பாதி சமாசாரத்தைச் சொல்லியிருப்பா, மீதியை நா போய்ப் போசப்போறேன். அதனாலே ராத்திரி பத்து மணி வரை உன் வீட்டுப் பக்கம் தலை காட்டாதே.. நா போன பிறகு வா'னு சொல்லியிருக்கேன். எங்காவது சுத்திட்டுப் பத்து மணிக்கு வந்துடுவான். அதனால, கவலைப்படாதீங்க! உங்களோடு விவரமா நா பேச றப்போ அவன் இங்கே இருந்தா உங்களுக்கும் கஷ்டம், அவனுக்கும் வெட்கமா இருக்கும்.... இல்லியா? அதான் இந்த முன்னேற்பாடு... என்ன சரிதானே, மேடம்?"

பேசி முடிப்பதற்குள் கௌதமின் புன்னகை சிரிப்பாக மாறிப்போனது.

இவன் ஏன் இப்படி அடிக்கடி சிரிக்கிறான்? சிரிப்பா இது? கடவுளே! முதுகுத்தண்டில் ஜில்லென்ற பயத்தை உண்டாக்குவதற்குப் பெயர் சிரிப்பா?

கௌரியால் அரை நிமிஷத்துக்குக்கூட கௌதமை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. கண்டு கண்டாய்ச் சதைகள் வீங்கிக்கொண்டிருந்த முகமும், சிவந்த கோலிக்குண்டுக் கண்களும் அவளுள் அசாதாரண கிலியை உண்டாக்கவே, பூமியில் பார்வையைப் படர விட்டாள்.

"ஆல் ரைட்.. இனிமே பேசத் தொடங்குவோமா? நேரம் ஆவுது... மாது வரத்துக்கு முன்னாலே



முக்கியமான விஷயத்தைச் சொல்லி முடிச்சிடறேன். குறுக்கே பேசாம கேளுங்க... என்ன?"

கட்டளையிடுகிற ரீதியில் பேசின கௌதம், சிகரெட் ஒன்றைப் பற்றவைத்துக்கொண்டான். சோபாவில் சௌகரியமாய்ச் சாய்ந்துகொண்டான். நிதானமாய்ப் பேசத் தொடங்கினான்.

"உண்மையைச் சொல்லணும்னா நா உங்களை இன்னிக்குப் பார்க்க விரும்பலை. ரம்யா வந்து படங்களைக் காட்டிட்டுப் போயிடணும், ரெண்டு நாள் போல நீங்க அந்த பயத்துலேயே ஊறிக் கிடக்கணும், அப்புறமா நா வந்து உங்களோட பேசணும்னுதான் பிளான் பண்ணியிருந்தேன். ஆனா எதிர்பாராம, கொஞ்ச நேரம் முன்னால மதுசூதனைச் சந்திச்சப்போ என் எண்ணத்தை அவன் மாத்திட்டான். ஸோ-ஹியர் ஐம்.."

கௌரி நிமிரவில்லை. தலையைக்கூட ஆட்டவில்லை. ஆணி வைத்து அறைந்த மாதிரி உட்கார்ந்திருந்தாள்.

"போன வாரம் பார்ட்டி இருந்ததும், அங்கே நடந்ததும் ஓரளவுக்கு உங்களுக்குத் தெரியும், இல்லையா? படங்களைப் பார்த்திருப்பீங்க.. ரொம்ப அருமையான ஆங்கிள் இல்லே... மேடம்?"

சீண்டும் குரலில் கௌதம் பேசியதும் சடக்கென்று தலையைத் தூக்கினாள் கௌரி.

'படவா-ராஸ்கல்.. பொறுக்கி... எத்தனை தைரியம் இருந்தால் ஒரு தாயிடம் அவள் மகனைப்பற்றி இப்படிப்

பேசுவாய்' என்ற கோபம் பார்வையில் தாண்டவமாட விழித்தாள்.

கௌரியின் சீற்றமோ, விழிப்போ கௌதமிடம் எந்த ஒரு சலனத்தையும் ஏற்படுத்தவில்லை. மாறாக வாய்விட்டுச் சிரித்தான்.

"ஏன் மேடம்.. ஏன் இப்படி விழிக்கறீங்க? சரியா படங்களைப் பார்க்கலியா? உங்க பக்கத்து டீபாய் மேலத்தான் அந்தப் படங்கள் இருக்கு... வேணும்னா எடுத்துப் பாருங்க.... இல்லைனா என்கிட்ட பெரிய சைஸிலே இருக்கறதைத் தரட்டுமா, பாக்கறீங்களா?"

வாயில் சிகரெட் தொங்க, சோபா பிடிமேல் கையைத் தட்டிப் பேசின கௌதம், பாக்கெட்டுக்குள் கையைவிட்டு, ஒரு பெரிய கவரை வெளியே எடுத்ததும் கௌரி நடுங்கி விட்டாள்.

ரம்யா முன்னால் அந்தப் படங்களைப் பார்ப்பதற்கே நான் கூசி, கூனிப்போனேனே! இந்தத் தடியன் எதிரில் திரும்ப அவற்றைப் பார்க்க வேண்டுமா? நோ.. நோ வேண்டாம்..!

"ஓ! ப்ளீஸ் நோ.. வேண்டாம், எடுக்காதீங்க.. நா பார்த்திட்டேன்... வேண்டாம்..." பதற்றத்துடன் பேசினவளின் கண்களில் நீர் பளபளக்கத் தொடங்கியது.

யார் இந்த கௌதம்? ஏன் இப்படி என் உயிரை வாங்குகிறான்? என்னிடம் என்ன எதிர்பார்க்கிறான்? இப்படி அசிங்கமாய் மாட்டிவிட இவனுக்கு ஊரில் வேறு யாருமே கிடைக்காமலா போனார்கள்?

நேர்ப் பார்வையாய் கௌதமை கௌரி பார்த்தாள்.



"உங்களுக்கு என்ன வேணும், மிஸ்டர் கௌதம்? ஏன் இப்படியெல்லாம் செய்யறீங்க? எனக்கு ஒண்ணுமே புரியலை.... ப்ளீஸ், கொஞ்சம் மடமடனு வந்த விஷயத்தைச் சொல்லிட்டு நீங்க புறப்பட்டா தேவலை..."

கெஞ்சலான குரலில் கௌரி பேசவும் அவுட்டுச் சிரிப்பு ஒன்றை கௌதம் வெளியிட்டான்.

"பேசத்தானே வந்திருக்கேன், மேடம்... அதுக்குள்ள அவசரப்பட்டா எப்படி? பூரா விஷயத்தையும் ஆரம்பத்துலேந்து சொல்றேன்... கேளுங்க.. கொஞ்ச நாளாவே ஈஸியா பணம் சம்பாதிக்க எப்படி இருக்கும்ங்கற யோசனை எனக்குள்ளே உண்டாயிடிச்சி.. விடாம சிந்திச்சேன். பம்பாய் ஃபிரெண்ட் ஒருத்தன் குறுக்கு வழியிலே ஏகமாய்ப் பணம் பண்ணினதைத் தெரிஞ்சிகிட்டப்புறம், ஏன் நாமும் இந்த வழிலே போய்ப் பார்க்கக்கூடாதுனு தோணிச்சி- ஒரு அருமையான பிளாட் கிடைச்சிது. இதுக்கு யாருடா சரியான ஏமாந்த சோணகிரினு தேடினதிலே விஜய்யும், மதுசூதனும் கண்லே பட்டாங்க... திட்டம் போட்டேன். பார்ட்டிக்கு ஏற்பாடு பண்ணினேன். ரம்யாவையும், மத்தவங்களையும் வரவழைச்சேன். ட்ரிங்க்ஸ் இருந்தது. போதை மருந்து இருந்தது. சின்னக் குட்டியோட ஆட்டம் இருந்தது. வெறி உண்டாக்கினேன். ஆனா, நா எதிர்பார்த்த வெறி விஜய்க்குத்தான் உண்டாச்சி; மதுசூதன் கம்முனு இருந்திட்டான். சரி, கிடைச்சவரைக்கும் ஆதாயம்னு படங்களை எடுத்தேன். மறுநாள் டெவலப் பண்ணிப் பார்த்தப்போ ரெண்டு படங்களிலே மதுசூதனும்

பார்வையாளனா உட்கார்ந்திட்டு இருக்கறதைப் பார்த்தேன். எதிர்பாராத விதத்திலே அப்படியொரு அதிருஷ்டம்! பெண்ணோட சம்பந்தப்பட்டா என்னா, இல்லை அந்த அசிங்கத்தைப் பார்வையாளனா இருந்து ரசிச்சா என்ன? உலகத்தைப் பொறுத்தவரை ரெண்டும் ஒண்ணுதான். முதல்லே ரம்யாவை வழிக்குக் கொண்டு வந்தேன். அப்புறம் நாலு நாளா விஜய்யை மிரட்டுற மாதிரி உங்களுக்கும் பீதி உண்டாக்கினேன். பயத்தை அதிகமா உண்டாக்கிட்டா, என் வேலை சுலபமாய் முடிஞ்சிடும் இல்லியா?"

திரும்பவும் கோணல் சிரிப்போடு கௌதம் பேச்சை நிறுத்தினான்.

கௌரிக்குத் தொண்டை வறண்டுபோனது. மதுசூதன் கொடுத்த பார்ட்டி என்றானே விஜய்? இவன் மாற்றி அல்லவா சொல்கிறான்; யார் சொல்வது நிஜம்! நாளைக்கு அந்த மதுசூதன் வந்து வேறு விதமாய்ப் பேசினால்? விஜய் மேல் மதுசூதன் கோபமாய் இருப்பதாய் ஃபிரான்ஸிஸ் என்ற நண்பன் சொன்னானாமே! அவன் யார்?

"பார்ட்டி மதுசூதன் கொடுத்தான்னு விஜய் சொன்னான்; நீங்க இப்ப சொல்றது மாறியிருக்கே!"

"மதுசூதன் கொடுத்த பார்ட்டிதான் ஆனா, ஏற்பாடு என்னுது–"

"மதுசூதன் விஜய்மேலே கோபமாய் இருக்கான்னு ஃபிரான்ஸிஸ் சொன்னானாமே! யார் இந்த ஃபிரான்ஸிஸ்? மதுசூதன் உங்கமேல இல்லே கோபமா இருக்கணும்? ஏன் விஜய்மேல கோவப்படணும்? நீங்க



பேசறதுலே நிறைய தாறுமாறா இருக்கு, மிஸ்டர் கௌதம்-உங்க பேச்சை நா ஏன் நம்பணும்?"

தைரியத்தோடு நிதானமாய் கௌரி பேசினாள்.

சில கணங்கள் யோசிக்கிறவனாய் உட்கார்ந்திருந்த கௌதம், இரண்டு கைகளையும் தட்டினான், தன் மாமூல் சிரிப்பு ஒன்றைச் சிரித்தான்.

"நாட் பேட், மேடம்... நா எதிர்பார்த்ததைவிட நீங்க இன்னும் துணிச்சலாதான் பேசறீங்க... சாதாரண பொம்பளைங்க மாதிரி அழுது, புலம்பாம யோசிச்சு கேள்வி கேக்கறீங்க– குட்... குட்! உங்க கேள்விகளுக்கு நா பதில் சொல்றேன் நாடகத்துலே டென்ஷன் கூட்டற மாதிரி, உங்களுக்குப் படபடப்பையும், பயத்தையும் அதிகமாக்கணும்னு முதல் நாள் ஃபிரான்ஸிஸை விட்டு விஜய்யை மிரட்டச் சொன்னேன். ஃபிரான்ஸிஸ் என் கூட்டாளி. அன்னிக்குப் பார்ட்டிக்கு வந்திருந்தான். மதுசூதனை விஜய் சந்திக்காம இருக்கிறதுக்காகத் தான் சும்மாவானும் அப்படி மிரட்டச் சொன்னேன். என் கணக்கு தப்பலை. விஜய் மிரண்டுபோய், வீட்டை விட்டு அஞ்சு நாளா எங்கேயும் கிளம்பலை, யாரோடும் போன்லேகூட பேசலை. சரியான பயந்தாங்கொள்ளி! பார்ட்டி நடந்த மறுநாள் படங்கள் டெவலப் ஆகி கைக்கு வந்ததும், முதல்லே ரம்யாவைப் பார்த்தேன். பெரிய பத்தினியாட்டம் எகிறினா; 'உன் குடும்பம் இருக்கற தெருவுலே போஸ்டர் ஒட்டுவேன்'னு பயமுறுத்தினேன்-வழிக்கு வந்திட்டா! மறுநாள் மதுசூதன்கிட்ட போனேன். 'படங்களைக் காண்பிச்சேன்...' இதுக்கும், எனக்கும் என்ன சம்பந்தம், போய்

விஜய்கிட்ட காட்டு'ன்னான். 'காட்டத்தான் போறேன். அதுக்கு முன்னாலே நீ கவனமா படங்களைப் பாரு'ன்னேன். பார்த்தான்... ரெண்டு படங்களிலே தான் பார்வையாளனா உட்கார்ந்திருக்கறது க்ளியரா தெரியவே 'உனக்கு என்ன வேணும்?'னு நேரிடையாக் கேட்டுட்டான். சொன்னேன். 'சரி ரெண்டு நாள் கழிச்சி வா-என் முடிவைச் சொல்றேன்'னான். அவனைப் பார்த்துப் பேசின பிறகுதான் என் அடுத்த இரையான விஜய்கிட்ட வரணும்னு நா திட்டம் போட்டிருந்தேன். அதன்படி இன்னிக்கு மதுசூதனைப் பார்த்திட்டு, நாளைக்கு உங்களைச் சந்திக்க நினைச்சிருந்தேன். ஆனா, பாருங்க மேடம்... மத்தியானம் மதுசூதனை மீட் பண்ணப்போ நா கனவுலேயும் எதிர்பார்க்காத பிரமாதமான ஐடியா ஒண்ணை அவன் கொடுத்தான். நான் அசந்துபோயிட்டேன்-ஏன் எனக்கே இது தோணலைனு பிரமிச்சிப் போயிட்டேன்! அந்த ஐடியாவை உங்ககிட்ட சொல்ல நாளைவரைக்கும் காத்திருக்க முடியாதுன்னு தோணவேதான் இப்பவே ஓடியாந்திட்டேன்– என்ன இருந்தாலும் மதுசூதன் கெட்டிக்காரன்தான்..."

கௌரிக்கு அடிவயிற்றில் பட்டாம்பூச்சிகள் பறக்கத் தொடங்கின. என்னவோ பெரிதாய், ஆயுசுக்கும் நெஞ்சில் மரங்கொத்தியாய் உட்கார்ந்து கொத்திப் பிடுங்கும் தினுசில், பெரிதாய் இவன் ஏதோ சொல்லப் போகிறான் என்பது தெளிவாக "என்ன ஐடியா அது?" என்றாள் சின்னக் குரலில்.

# 15

கௌரியின் நடுக்கத்தை கௌதமால் ரசிக்க முடிந்தது. சிகரெட் ஒன்றைப் பற்றவைத்துக்கொண்டு சற்றே முன்னுக்கு வந்து, கௌரியின் முகபாவத்தையும் லேசாய் நடுங்கும் கை விரல்களையும் கவனித்தவனுக்கு சந்தோஷமாய் இருந்தது.

"ஐடியாவைச் சொல்றதுக்கு முன்னாலே முதல்லே நா என்ன திட்டம் போட்டிருந்தேன்னு நீங்க தெரிஞ்சிக்க வேணாமா, மேடம்? சொல்றேன், கேளுங்க..."

கொஞ்சம்கூட அவசரமே இல்லாத மாதிரி, ஒரு நிமிஷத்துக்கு மௌனமாய் இருந்து கௌரியின் தவிப்பை அதிகப்படுத்தின பிறகு, மீண்டும் கௌதம் பேசினான்.

"மதுசூதனை எனக்கு ரொம்ப நெருக்கமாத் தெரியாது. ஆனா, பெரிய பணக்கார வீட்டுப் பிள்ளை, அவங்கப்பா கோடிக்கணக்கான சொத்துக்கு அதிபதிங்கறதெல்லாம் நல்லாவே தெரியும். அவன் பணம் என் கண்களை உறுத்திட்டே இருந்தது. என்ன பண்ணி அதை அடையலாம்னு தவிச்சேன்-இப்படிப் படம் எடுத்து, அவனிடம் காட்டி 'பணம் தர்றியா, இல்லே, உங்கப்பாவுக்கு இதை அனுப்பிடட்டுமா?'னு மிரட்டறதுதான் சரியான வழினு தோணிச்சி.

காரியத்திலே இறங்கினேன். மூணு மாசமா மதுசூதனோட நெருங்கிப் பழகினேன். அவனுக்கு மரிவானா சிகரெட் மேலேயும், ஸ்ட்ரிப்டீஸ் டான்ஸ் மேலேயும் இருந்த மோகத்தை உணர்ந்து இந்தப் பார்ட்டிக்கு ஏற்பாடு பண்ணினேன். மதுசூதன் மூலமா எனக்கு விஜய் பழக்கம் ஆனான். வாய்க்கு வாய் 'எங்கம்மா அப்படி, எங்கம்மா இப்படி'னு அவன் பேசினதுலேந்து, இவன் ஒரு சரியான அம்மா பிள்ளைனும் புரிஞ்சிது. நீங்க அவனுக்காக என்ன வேணும்னாலும் செய்வீங்கன்னும் புரிஞ்சிது. மதுசூதன் அளவுக்கு உங்ககிட்ட பணம் எதிர்பார்க்க முடியாட்டாலும் நிச்சயமா ஒரு லட்சத்தையாவது தட்டலாம்ங்கற தைரியம் உண்டானப்புறம், பார்ட்டிலே மதுசூதன், விஜய் ரெண்டுபேருககும் பொறிவைச்சேன். என் அதிருஷ்டம் அன்னிக்கு விஜய் மட்டும் மாட்டிக்கிட்டான். சரி, மதுசூதன்கிட்டே அஞ்சு லட்சம், ஆறு லட்சம் பறிக்க முடியாட்டாலும், தலா அவன்கிட்ட ஒரு லட்சம், ஒங்ககிட்ட ஒரு லட்சம்னு வாங்கிக்கிட்டு வேற ஊருக்கு ஓடிடலாம்னு பிளான் பண்ணேன். மதுசூதன்கிட்ட இன்னிக்குப் பேசின பிறகுதான், சரியான பொன் முட்டை இடற வாத்தை நா பிடிச்சிருக்கேன்னு எனக்கே புரிஞ்சிது – என்ன மேடம்... நா சொல்றதைக் கவனமா கேக்கறீங்களா?"

ப்ளாக்மெய்லா? அடப்பாவி! ஆண்பிள்ளை இல்லாத வீட்டில் பெண்ணான நான், ஓடாய் உழைத்துக் குருவி போலச் சேர்த்திருக்கும் காசுமேலயாடா உனக்குக் கண்? பாவி..... பாவி..... கொலைகாரா! ஒரு லட்சம் என்கிறாயேடா.... அத்தனைக்கு நான் எங்கேடா



போவேன்? பிக்ஸெட் டெபாசிட்டில் அத்தனை பணம் இருப்பது நிஜம்தான். ஆனால், அதைத் தூக்கி உன்னிடம் கொடுத்துவிட்டால், அப்புறம் ஆபத்து சமயத்துக்கு நான் என்னடா பண்ணுவேன்? டேய் ஸ்கௌண்டிரல்... என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளாதேடா... நீ நாசமாய்த்தான் போவாய்... ஒரு லட்சம்! ஐயோ! எத்தனை பெரிய தொகை! எத்தனை வருஷங்களாய்ச் சேர்ந்த தொகை! கடவுளே, நான் என்ன பண்ணுவேன்!

கௌரி அதிர்ந்துபோனது தெளிவாக, கௌதம் தொடர்ந்தான்.

"ஒரு லட்சம்னதும் ஏன் மேடம் திகைச்சிப் போய்ட்டீங்க? அப்படி ஒண்ணும் உங்களுக்கு அது பிரமாதமான தொகை இல்லே... ஆனா பாருங்க, உங்க அதிருஷ்டம், இன்னிக்கு மதுசூதன் குடுத்த ஐடியாவைச் சொன்னா நீங்க துள்ளிக் குதிப்பீங்க... உங்க காசு காலணா இல்லாம நீங்க விஜய் சம்பந்தப்பட்ட படங்கள், நெகடிவ் அத்தனையும் வாங்கிகிட்டு ஹாய்யா இருக்க ஒரு வழி இருக்கு..."

என்ன இவன்! சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் பேசுகிறான்! முதலில் ஒரு லட்சம் என்றான், அப்புறம் காலணா கொடுக்க வேண்டாம் என்கிறான், பைத்தியமா?

விரிந்த கண்களோடு கௌரி அவனை ஏறிட்டு நோக்கினாள்.

"புரியலை, இல்லையா? இருங்க... அவசரப்படாம கேளுங்க... நா விளக்கமா சொல்றேன்.... மதுசூதன்

கிட்ட முதல்நாள் படங்களைக் காட்டினப்போ அவன் 'எனக்கும் இதுக்கும் சம்பந்தம் இல்லே, விஜய்கிட்ட காட்டி பேரம் பண்ணு'னு சொன்னதைச் சொன்னேன் இல்லே? அப்ப நா 'படத்தை நல்லாப் பாரு' மதுசூதன். ரெண்டு படங்களிலே நீ பார்வையாளனா இருக்கே. இந்தப் படங்களை உங்கப்பாவுக்கும், குறிப்பிட்ட மஞ்சள் பத்திரிகை சிலதுக்கும் அனுப்பி, 'தொழிலதிபர் மகனின் பொழுதுபோக்கு'னு வெளியிட்டா என்ன ஆகும் தெரியுமா?'ன்னேன்.

"பய கெட்டிக்காரன். டக்குனு இறங்கி வந்திட்டான். என்ன வேணும்னான்- 'ஒரு லட்சம், பேரம் கிடையாது. இன்னும் ஒரு வாரத்திலே பத்து ரூபாக் கட்டா வேணும்'ன்னேன். 'சரி-ரெண்டு நாள் டைம் குடு. யோசிச்சிட்டு சொல்றேன்'ன்னான். நா வந்திட்டேன். சொன்னபடி இன்னிக்கு அவனைப் பார்க்கப்போனேன். 'விஜய் வீட்டுலே எத்தனை கேட்கிறதா இருக்கே?'னு கேட்டான். 'எனக்கு பாரபட்சம் கிடையாது; இதே ஒரு லட்சம்தான்னு சொன்னேன்.

"அட, மடையா-கோடிக் கணக்கிலே லட்சுமி உன் மடிலே கொட்டறதுக்கு ரெடியா இருக்கறப்போ, பிச்சைக்காசு ரெண்டு லட்சத்துக்குப் பறக்கறியே! உனக்கு மூளை இவ்வளவுதானான்னான். என்மேல மின்னல் இறங்கின மாதிரி இருந்தது. தொடர்ந்து மதுசூதன் விவரமா தன் ஐடியாவைச் சொன்னான்..... அடேயப்பா... எத்தனை அருமையான திட்டம்! யாருக்கும் பைசா செலவில்லே... ஆனா வருமானம் மட்டும் கோடிகோடியாக..."



முதுகுத்தண்டில் ஊற ஆரம்பித்த பயம் மெள்ள மெள்ள வயிற்றில் பரவி, நெஞ்சையும், தொண்டைக் குழியையும் அடைத்துக்கொண்ட உணர்வு கௌரிக்கு உண்டாயிற்று.

எ..என்ன சொல்கிறான் இவன்?

தன் கோணல் சிரிப்பொன்று உதடுகளில் நெளிய கௌதம் பேசினான். குரல் அழுத்தமாக இருந்தது. தீர்மானம் செய்துவிட்ட விஷயத்தைத் தயக்கமில்லாமல் சொல்வதாக இருந்தது. பார்வை கௌரியை வெறித்தது.

"நீங்க புத்திசாலி, மேடம்.... இல்லேன்னா பிரபலமான பாங்க்லே சீஃப் அகௌண்டண்டா இருப்பீங்களா? உங்களுக்கு இதுக்குள்ளார நா என்ன சொல்ல வரேன்னு புரிஞ்சிருக்கும்.... எஸ் மேடம்... உங்க பாங்க்கை நாங்க கொள்ளையடிக்க நீங்க உதவணும்... அவ்வளவுதான்... அவ்வளவேதான்..."

நோ... ஓ...நோ ...!

மயங்கிக் கீழே சாய்ந்துவிடாமல் இருக்க கௌரி சோபாவை கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள்.

கடவுளே.... கடவுளே...

இரண்டு கைகளாலும் முகத்தை மூடிக் கொண்டாள். வாய்விட்டு அழுதால் தேவலைபோல் இருந்தது. உடம்பு பூராவும் படபடவென்று நடுங்குவதை உணர முடிந்தது.

'முருகா..'

"நீங்க இப்படி ஷாக் அடைய இதுலே ஒண்ணுமே இல்லே, மேடம். உங்க பணமா? உங்க மகன் பணமா? உங்க சொந்தக்காரங்க பணமா?-ம்ஹூம், ஒண்ணும் இல்லே... பாங்க்கிலே பணம் திருடு போச்சின்னா, இருக்கவே இருக்கு இன்ஷூரன்ஸ் கம்பெனி... அது நஷ்டத்தை ஏத்துக்கப் போவுது. தட் ஈஸ் ஆல். இதுலே உங்களுக்கு என்ன கஷ்டம், இல்லே நஷ்டம்?"

சொல்லக்கூடாததைச் சொல்லிவிட்டு, தைரியமாய்க் கண்முன் உட்கார்ந்துகொண்டு, தன் பேச்சை நியாயப்படுத்தி கௌதம் பேசியதும், இது நாழிகை இல்லாத ஆத்திரம் கௌரியினுள் வெடித்தது. தடக்கென்று எழுந்து நின்றுகொண்டாள். கோபத்தில் வார்த்தைகள் வராமல் உதடுகள் கோணின. "படவா ராஸ்கல்... யூ ஸ்கௌண்டிரல்... என்னை என்னனு நினைச்சேடா..? நா சும்மா இருக்கஇருக்க மேம்மேல பேசிண்டேபோனா என்னடா அர்த்தம்? உன் மனசுலே என்னடா நினைச்சுண்டு இருக்கே? தனி பொம்பளையா ஒருத்தி அகப்பட்டுட்டானு நாக்கிலே நரம்பில்லாம பேசினா நா பொறுத்துப்பேன்னு நினைச்சியா? கெட் அவுட் யூ ரோக்! உன்னால ஆனதைப் பார்த்துக்கோ... அவ்வளவுதானே? கெட் அவுட்..."

கழுத்தின் நாளங்கள் புடைக்க கௌரி கத்தியும் கௌதம் தன் இருக்கையை விட்டு எழுந்திருக்கவில்லை.

'போடி-உன்னை மாதிரி நிறைய பேர்களைப் பார்த்திருக்கிறேன், சமாளித்திருக்கிறேன்'-என்று தினுசில் ஒரு பார்வை பார்த்தான். பாதி குடித்திருந்த சிகரெட்டில் இன்னொன்றைப் பற்றவைத்துக்



கொண்டு, பழசை அணைத்தான். நிதானமாய், "ரிலாக்ஸ் மேடம்-ரிலாக்ஸ், ஏன் இப்படிப் பதட்டப் படறீங்க?" என்றான்.

ஒரு நிமிஷம் கௌரிக்கு எதுவும் புரியவில்லை. வெளியே போடா நாயே என்று கத்தின பிறகும் இப்படி சூடு சொரணை இல்லாத ஜன்மமாய் உட்கார்ந்திருப்பவனை, இனி எப்படிக் கையாள்வது என்ற மலைப்பு தோன்ற, அப்படியே ஒரு நிமிஷம் நின்றாள்.

பெண் என்றால் கையைப் பிடித்து இழுத்து, தரதரவென்று வெளியே தள்ளிக் கதவைச் சாத்தலாம். ஆனால் இந்தத் தடியனை?

இப்படிக் குத்துக்கல் மாதிரி உட்கார்ந்துகொண்டு 'ரிலாக்ஸ்' என்று புத்தி சொல்கிறவனை, முரடனை, இனி எப்படிச் சமாளிப்பது? என்ன சொல்லி வெளியேற்றுவது?

கூட துணைக்காவது யாராவது இருக்கிறார்களா? ம்ஹூம், இல்லை. விஜய் எங்கு இருக்கிறான் என்றே தெரியவில்லை. இருந்த ஆள் மாது ஒருத்தனையும் கனகாரியமாய் வெளியில் அனுப்பிவிட்டோம்... இனி நான் என்ன செய்வேன்?

போலீஸுக்கு போன் பண்ணலாமா? இந்தத் தடியன் அதை அனுமதிப்பானா? இவனை மீறிக்கொண்டு என்னால் என்ன செய்ய இயலும்?

சில நிமிஷங்கள் முன் ஆக்ரோஷத்துடன் எழுந்த கோபம், பலஹீனமான பெண்மையின் தவிப்பில் கொஞ்சங் கொஞ்சமாய் அடங்கியதும், தொப்பென்று

சோபாவில் சாய்ந்தாள் கௌரி. கண்களில் நீர் பொங்கிக்கொண்டு வந்தது. இரண்டு கைகளாலும் முகத்தை மறைத்துக்கொண்டு, வாய்விட்டுத் தன் இயலாமையைத் தாங்க முடியாதவளாய் அழத் தொடங்கினாள்.

ஒரு சுவாரஸ்யமான நாடகத்தைப் பார்க்கும் ரசிப்புடன் இருந்த கௌதம் திரும்ப, "ரிலாக்ஸ் மேடம்-இப்ப என்ன சொல்லிட்டேன்னு இப்படிக் கலங்கிப் போறீங்க?" என்றதும் கௌரியின் அழுகை பெரியதாயிற்று.

கண்களை மூடியிருந்த கைகளை விலக்காமலேயே, "போடா வெளியேனு சொல்றேன்- உனக்கு வெட்கம் இல்லே? மானம் இல்லே? இன்னும் ஏன் உட்கார்ந்துண்டு இருக்கே? போயிடு... என் கண்முன்னாலேந்து போயிடு- நீ போகலைன்னா நா போலீஸுக்கு போன் பண்ணுவேன்... எங்க பாங்க் சேர்மனுக்கு போன் பண்ணுவேன்... உடனே போயிடு... ஓ...ப்ளீஸ்...கெட் அவுட்-" என்று அழுது கொண்டே கத்தினாள்.

கௌதம் எழுந்து நின்றுகொண்டான்.

"ஆல்ரைட், மேடம்-நா போறேன்... ஆனா நா போறத்துக்கு முன்னால ஒரு விஷயம் சொல்லிட்டுப் போயிடறேன்... நீங்க எங்க திட்டத்துக்கு உடன்பட மறுத்தீங்கன்னா, அதன் விளைவுகள் பயங்கரமா இருக்கும். முதல்லே இந்தப் படங்களைப் பத்து காப்பி எடுத்து உங்க சேர்மன், மத்த போர்ட் ஆஃப் டைரக்டர்ஸ், மானேஜர், உங்க ஆபீஸ்ல எல்லாருக்கும் அனுப்புவேன், 'உங்க சீஃப் அக்கௌண்டண்டோட



மகனின் லீலைகளைப் பாருங்க'னு லெட்டர் எழுதி விவரிப்பேன். வம்புக்கு அலையற ஒரு பத்திரிகை விடாம இந்தப் படங்களையும் நியூஸையும் அனுப்பி பிரசுரிக்க வைப்பேன்... உங்களை வேலைலேர்ந்து டிஸ்மிஸ் செய்ய வைப்பேன்-உங்க எதிர்காலத்தை இருட்டாக்குவேன். இதெல்லாம்விட முக்கியமா, உங்க விஜய் தலைதூக்க விடாம, அவனை ஒருத்தரும் மனுஷன்னு ஒத்துக்கவிடாம பண்ணுவேன் - உலகத்துலே நீங்க எந்த மூலைக்குப் போனாலும் தொடர்ந்து வந்து இம்சை கொடுப்பேன், போதுமா, இல்லே இன்னும் சொல்லட்டுமா?"

"..............."

"இப்போதைக்கு இது போதும்னு நினைக்கறேன். சரியா நாளைக்குச் சாயங்காலம் உங்களை நா மறுபடி சந்திக்கறேன். நல்லா யோசனை பண்ணி ஒரு முடிவுக்கு வாங்க... ஒண்ணு சொல்றேன் - இந்த பாங்க் கொள்ளையிலே நீங்க நேரடியா கலந்துகொள்ள வேண்டிய அவசியம் இல்லே. எங்களுக்குத் தேவையான விவரங்களைத் தந்து உதவினாப் போதும்... இது ஒண்ணும் கஷ்டம் இல்லே... நாளைக்குள்ளே நீங்க போலீஸ், அது, இதுனு போனீங்கன்னா, அப்பறம் ரொம்ப வருத்தப்பட வேண்டியிருக்கும்- மிஸஸ் சங்கர் - வெரி ஸாரி... நா வரேன்-"

வெலவெலத்துப் போன கௌரி, கௌதம் போய்ப் பத்து நிமிஷங்கள் ஆகியும் எழுந்து வாயிற்கதவைக்கூடச் சாத்தத் தோணாமல், அப்படியே, அந்த இடத்திலேயே இரண்டாக மடிந்து உட்கார்ந்து வாய்விட்டு அழத் தொடங்கினாள்.

## 16

ஐயோ... நான் என்ன செய்வேன்? யாருக்கு என்ன கெடுதல் செய்தேன், இப்படியொரு பயங்கரச் சதியில் மாட்டிக்கொள்ள? பாங்க்கை இவர்கள் திருட நான் உதவ வேண்டுமா? இது எத்தனை தவறான எண்ணம்? இது எப்படி அந்த மதுசூதனுக்குத் தோன்றியது? பாங்க்கை கிள்ளுக்கீரை என்று நினைத்துக்கொண்டார்களா, இப்படி அசட்டுத்தனமாக ஆசைப்பட! இவர்கள் எண்ணம் கனவில்கூட நடக்க முடியாது என்று இவர்களுக்கு ஏன் புரியவில்லை? ஒருவேளை விளையாட்டுக்கு இப்படி என்னைப் பயமுறுத்திப் பார்க்கிறானோ! இதில் என்ன விளையாட்டு! அந்த கௌதமின் மூஞ்சியும், விழியும் எந்தக் கொலை பாவத்துக்கும் அஞ்சாதவன் என்பதை டமாரம் போட்டு அடிக்கிறதே, இவனா விளையாடுகிறான்? ம்ஹூம்- இல்லை... கண்டிப்பாக இல்லை... விஷயத்தோடு தான் பேசுகிறான். ஆமாம், கொள்ளை என்றால் எப்படித் திருட உத்தேசித்திருக்கிறார்கள்? கௌண்டரில் நிறைய பணம் இருக்கும்போது முகமூடியுடன் உள்ளே நுழைந்து, துப்பாக்கியை நீட்டிப் பணத்தை காஷியர், டெல்லரிடமிருந்து வாங்கிக்கொண்டு ஓடிவிடுவதுதான் திட்டமா? இதில் என் உதவி எங்கே தேவைப்படுகிறது? இப்படித் துப்பாக்கி முனையில் திருடுவதில் சில லட்சங்கள் வேணுமானால் கிடைக்கலாம். ஆனால், கௌதம் கோடி கோடியாகப் பணம் வர வழி இருக்கிறது என்றானே, அது எப்படி?



திடுமென கௌரிக்குத் தங்கள் திருவள்ளூர் பிராஞ்சில் நடந்த சம்பவம் ஒன்று ஞாபகத்துக்கு வந்தது

போன இரண்டாம் வருஷம் நடந்து; ஊரில் அமர்க்களப்பட்டுப்போன சமாசாரம்.

ஒரு சனிக்கிழமை பன்னிரண்டு மணி அடிக்கவில்லை. நான்குபேர் தலையைக் கவிழ்த்துக்கொண்டு உள்ளே நுழைந்தார்கள். ஒருத்தன், வாயிற்காவலாளியிடம் சென்றான்; ஒருத்தன், ஏஜண்ட் அறைக்குள் சென்றான்; இருவர் காஷியரிடம் சென்றார்கள். அவரவர் வேலை மும்முரத்தில் இருந்ததால் சட்டென்று யாரும் எதையும் கவனிக்கவில்லை. தலையை நிமிர்ந்தால் நான்கு பேர் முகத்திலும் மெல்லிய நைலான் முகமூடி. கையில் துப்பாக்கி. காவலாளி தன் இடுப்பு பெல்டிலிருந்து துப்பாக்கியை எடுப்பதற்குள், அவனை ஒரு ஆள் மடக்கி, அமுக்கிவிட்டான். வாயிற்கதவுகள் க்ஷணத்தில் பூட்டப்பட்டன. பாங்க்கில் இருந்த ஏழெட்டு நபர்களையும், அதிகாரிகளையும் லெட்ரினுக்குள் துப்பாக்கியைக் காட்டி மிரட்டி போகச் செய்து பூட்டினார்கள். லட்டு போல கௌண்டரில் இருந்த பணத்தை-சுமார் மூன்றரை லட்சம்-எடுத்துக்கொண்டு நான்குபேரும் நிமிஷத்தில் வாயிலில் நின்ற காரில் ஏறிக்கொண்டு மாயமாக மறைந்து போனார்கள். இத்தனையும் நடக்க ஆன நிமிஷங்கள் மொத்தம் பன்னிரண்டுதான்! பாங்க்கின் அதிருஷ்டம், காரின் நம்பரைத் தெருவில் விளையாடிக்கொண்டிருந்த இரண்டு பையன்கள் பார்த்துவிட்டார்கள்; அதன்மூலம், எண்ணி நான்கே நாட்களில் திருடர்களைக் கைது செய்ய முடிந்தது. இதில் பெரிய சமாசாரம் என்னவென்றால்

திருடர்கள் நால்வரும் பாங்க்கிலிருந்து சமீபத்தில் ரிடையர் ஆன ஒரு கிளார்க்கின் நண்பர்கள் என்பது தான்! இத்தனைக்கும் பின்னணியில், பாங்க்கில் ஜன நடமாட்டம் எப்போது குறைந்திருக்கும், என்று நிறைய பணம் வரும், காவலாளியை எப்படி மடக்கலாம், லெட்ரின் எங்கே இருக்கிறது போன்ற விவரங்களைச் சொல்லிக் கொடுத்துத் திட்டம் தீட்டி அந்த ரிடையர்ட் கிளார்க் பெரும் பொறுப்பு வகித்தார் என்பதுதான்!

"நரசிம்மனா? அந்தச் சாதுவான நரசிம்மனா?' என்று ஒட்டுமொத்தமாய் பாங்க் ஊழியர்கள் வியந்து தான் போனார்கள்.

அப்படி நரசிம்மன் உதவிய மாதிரி, திரைக்குப் பின்னால் உட்கார்ந்துகொண்டு விவரங்களைச் சொல்லிக்கொடுத்த மாதிரி, நானும் செயல்படுவேன் என்று கௌதம் நினைக்கிறானா!

நோ-நெவர்.. இந்த உடம்பில் உயிர் இருக்கும் வரை அது நடக்கப்போவதில்லை!

நான் யார்?

வேதாசலத்தின் பெண்-சங்கரின் மனைவி-என்னையா அந்த கௌதம் இத்தனைத் துச்சமாய் எண்ணிப் பேசிவிட்டான்?

ராஸ்கல்... அயோக்கிய ராஸ்கல்! ஆமாம், முடியாது என்று சொன்னால் விளைவு பயங்கரமாய் இருக்கும் என்றவன் நீளமாய் பட்டியல் போட்டு விவரித்தானே, நிஜத்திலேயே அப்படிச் செய்து விடுவானோ? இல்லை, சும்மாவானும் என்னை மிரட்டிப் பார்க்கிறானோ!



படங்களைச் சேர்மனிலிருந்து ஒருவர் விடாமல் அனுப்புவேன் என்கிறானே, செய்துவிடுவானோ? பத்திரிகைகளில் பிரசுரிப்பேன் என்றானே, அது? அப்புறம் உங்கள் எதிர்காலத்தை இருட்டாக்குவேன் என்றானே, அது?

தனக்கு வேலை போய், விஜய்யும் தானும் ஊரார் முகத்தில் விழிக்க வெட்கப்பட்டுக்கொண்டு எங்கோ கண் காணாமல் போய், ஒரு சின்ன டவுனில் குடித்தனம் செய்வது போலவும், அங்கேயும் கௌதமின் ஆட்கள் வந்து நிம்மதியாக வாழ விடாமல் தொந்தரவு கொடுப்பது போலவும் கற்பனை பண்ணிப் பார்த்தாள் கௌரி.

மனசு அதிர்ந்துதான் போயிற்று.

சற்று முன் தோன்றிய விவேகம் மறைந்து பயமும், பதட்டமும் நெஞ்சில் தாண்டவமாடின.

வாய்விட்டு அரற்றி அழுதுகொண்டிருந்தவள் கேட் திறக்கப்படும் ஓசை கேட்டு எழுந்து, ஜன்னல் வழியாகப் பார்த்தாள்.

மாது.

மனசு இருந்த நிலையில் மாதுவைப் பார்க்க விரும்பாதவளாய்க் கால்களை அகலஅகலமாய் வைத்துத் தன் அறைக்குள் புகுந்து, கதவைச் சாத்திக் கொண்டாள்.

உள்ளே வந்த மாது 'அம்மா' என்று குரல் கொடுத்ததும், "பிரசாதத்தை டேபிள்மேலே வை, மாது. நா, வெளியே வந்து எடுத்துக்கறேன்" என்றாள். மாது வைத்து விட்டுச் சமையலை கவனிக்கப் போனான்.

படுக்கையில் உட்கார்ந்த கௌரிக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை, புரியவில்லை.

மணியைப் பார்த்தாள். எட்டே முக்கால்.

இந்த விஜய் எங்கே? ரம்யா என்னைப் பார்க்க வருகிறாள் என்பது தெரிந்ததும் எங்கேபோய்த் தொலைந்தான்? ஏதடா, அம்மா தனியாக இருப்பாளே, கண்ட மனுஷர்களிடம் கண்டபடி மாட்டிக்கொண்டு அவஸ்தைப்படப்போகிறாளே என்ற தவிப்பு கொஞ்சம் கூட இல்லாமல் என்ன பிள்ளை இவன்!

திடீரென்று, கௌதம் விஜய்யை வீட்டுக்கு வரவேண்டாம் என்று சொன்னது ஞாபகத்துக்கு வந்தது.

ஓ! அதை எப்படி மறந்துபோனேன்! இந்தத் தடியன் மிரட்டினதால்தான் விஜய் வீட்டுக்கு வரவில்லையோ!

விஜய்... விஜய்... என்னப்பா இது! எத்தனை பெரிய புதைகுழியில் காலை விட்டுக்கொண்டுவிட்டாய்! நீயும் விழுந்து, என்னையும் விழச்செய்து, என் பாங்க்கையும் இழுத்து– ஐயோ... விஜய்... என்னப்பா இதெல்லாம்!

ஒரு நிமிஷத்தில் பரிதவிப்பு அடங்கினதும் சுள்ளென்ற கோபம் கௌரிக்கு எழுந்தது.

கண்ட பார்ட்டிக்கு இவனை யார் போகச் சொன்னார்கள்? மரிவானா சிகரெட்டை யார் பிடிக்கச் சொன்னார்கள்? அது என்ன அப்படி கண்மண் தெரியாத போதை? அப்படிக் கூடவா ஒரு வயசு வந்த ஆண் பிள்ளைக்கு போதை வரும்? கட்டுப்படுத்திக் கொள்ள முடியாதபடி அது என்ன உடம்பு ஆசை? வெறி?



அந்தப் படங்கள்..... கடவுளே! எத்தனை அசிங்கமாக இருந்தன! நான்குதான் என்றாலும் கண்களைத் தோண்டி எடுத்துவிட அவை போதுமே!

ஆமாம், அவை எங்கே! வெளியே டீப்பாய் மேலேயா இருக்கின்றன! ஐயோ! மாது பார்த்துவிட்டால்?

தடக்கென்று எழுந்த கௌரி, கதவைத் திறந்து கொண்டு ஹாலுக்கு வந்தாள். நல்லவேளையாய் டீபாய்மேல் அவிழ்த்துப் போட்ட தினுசிலேயேதான் அவை கிடந்தன.

கையில் படங்களை எடுத்தபோது பின்னால் மாதுவின் குரல் கேட்டது.

"என்னம்மா சமைக்கட்டும்?"

முகத்தைத் திருப்பி அவனைப் பார்க்க கௌரி விரும்பவில்லை.

"எனக்கு ரொம்பத் தலைவலியா இருக்கு- சாப்பாடு வேண்டாம். உன் இஷ்டம்போல எதையாவது பண்ணு..." பேசிக்கொண்டே மாது வைத்திருந்த பிரசாதத்தை எடுத்த கௌரி, மறுபடியும் அறைக்குள் வந்து கதவைத் தாளிட்டாள்.

டேபிள் விளக்கைப் போட்டுவிட்டு, நாற்காலியில் அமர்ந்து, மிகுந்த சிரமத்துடன் அந்தப் படங்களைப் பார்த்தாள்.

விஜய்யும் ரம்யாவும் வெட்கம் மானம் இல்லாமல் முகம் நிறையச் சிரிப்போடு இருந்தார்கள்.

சிரிப்பு என்ன வேண்டிக்கிடக்கிறது– தூ-!

இரண்டு படங்களில் தெளிவாகக் கூட ஒரு ஆண் முகத்தைக் காட்டிக்கொண்டு உட்கார்ந்திருப்பதை கௌரி கவனித்தாள்.

இவன்தான் மதுசூதனா? அந்தக் கோடீஸ்வரனின் பிள்ளையா?

கௌதமுக்கு ஜோடியாய் ஆள் குண்டாக இருந்தான். ரௌடி போல மீசையும், கிருதாவுமாய் இருந்தவனைப் பார்க்கையில் இவனையா படித்தவன், கெட்டிக்காரன், பணக்காரன், நாசூக்கானவன் என்று நினைத்தோம் என்று கௌரி சில கணங்களுக்கு ஆச்சரியப்பட்டுப் போனாள்.

மேற்கொண்டு அவற்றைப் பார்க்க மனசு அருவருப்புப் பட்டதால் மேஜையின் டிராயருள் வைத்துப் பூட்டினாள்.

இப்போது என்ன செய்வது?

நாளைக்கு கௌதம் வருவதற்குள் என்ன தீர்மானம் செய்ய வேண்டும்?

கோபால் மாமாவிடம் பேசினால் என்ன?

பெற்ற தகப்பனுக்குச் சமமாய் என்னை பாவித்து நடத்தும் கோபால மாமாவிடம் ஒன்றையும் மறைக்காமல் கூறி, 'மாமா, ஹெல்ப் பண்ணுங்கோ... உங்களை விட்டா எனக்கு வேற நாதி இல்லே' என்று அவர் காலில் விழுந்தால் என்ன?

தீவிரமாய் யோசிக்கையில் அதுதான் சரி என்று கௌரிக்குத் தோன்றியது.



மாமாவிடம் சொல்லி, மேற்கொண்டு அவர் என்ன செய்யவேண்டும் என்று கூறுகிறாரோ, அப்படி நடப்பதுதான் சரி.

மாமாவை டெலிபோனில் அழைத்து 'உங்களை உடனே பார்க்கணும். நான் அங்கு வரட்டுமா?' என்று கேட்கலாம். 'வாம்மா' என்றால் டாக்ஸி ஒன்றைப் பிடித்து மாதுவோடு அவர் வீட்டுக்குப் போய்விடலாம்.

தீர்மானத்துடன் எழுந்த கௌரி, முகத்தை அலம்பிக்கொண்டாள். புடவையை மாற்றின பின், ஹாலுக்கு வந்தாள். கோபாலனின் வீட்டு நம்பர்களை டெலிபோனில் சுழற்றினாள்.

கோபாலனின் பிள்ளை ஸ்ரீதர் போனை எடுத்தான்.

"ஹலோ-நா கௌரி பேசறேன்..."

"ஓ! ஹலோ கௌரி! ஹௌ ஆர் யூ? ஏன் வீட்டுப் பக்கம் வரதே இல்லே..."

"ஐ'ம் ஃபைன், தேங்க்யூ... வரணும்னு நினைச்சுண்டேதான் இருக்கேன், என்னமோ வேலை சரியா இருக்கு.... வந்து.... மாமா இருக்காரா.... கொஞ்சம் பேசணுமே."

"அப்பாவா? அவர் ஏதோ அஃபிஷியல் டின்னருக்குப் போயிருக்காரே, கௌரி... ஏதாவது முக்கியமா சொல்லணுமா?"

"ம்.... வந்து ஒரு விஷயம் அவர்கிட்டே சொல்லணும்.... பரவாயில்லை.... நா நாளைக்குப் பேசிக்கறேன்..."

"நாளைக்கு அவர் மத்தியான ஃப்ளைட்லே டெல்லி போறார்.. தெரியும் இல்லையா? வோல்ட் பாங்க் ப்ரஸிடெண்ட் டெல்லிக்கு வரார். அவர்கூட ஒரு மீட்டிங் ஏற்பாடாயிருக்கு.. அப்புறம் மினிஸ்ட்ரிலே ஏதோ வேலை இருக்குன்னார். திரும்ப நாலைஞ்சு நாளாகலாம்... ரொம்ப அவசரம்னா நாளைக்கு கார்த்தால பேசேன்.. நானும் சொல்றேன்."

நன்றி சொல்லி, மரியாதைக்கு ஸ்ரீதரின் குடும்பத்தைப்பற்றி விசாரித்த கௌரி போனை வைத்தாள்.

நாளைக்கு மத்தியானம் டெல்லி போவதற்குள் மாமாவைப் பிடிக்க முடியுமா, இல்லையா என்பதற்கு இடமே இல்லை. முடிந்தே ஆகவேண்டும். காலையில் எட்டு மணிக்கு போன் பண்ணிவிட்டு அவர் வீட்டுக்குப் போய்விடவேண்டும். அப்போதுதான் விஷயத்தைச் சொல்லி, அவர் யோசித்து செயலில் இறங்க நேரம் இருக்கும்.

அறைக்குள் வந்து படுக்கையில் சாய்ந்தவளுக்குத் தலைவலி மண்டையைப் பிளந்தது.

திரும்ப எழுந்து கோடோபைரின் மாத்திரை ஒன்று எடுத்தாள். சமையலறைக்குச் சென்று, மாதுவிடம் கேட்டு, சூடாய் ஒரு டம்ளர் பால் வாங்கிக் கொண்டாள்.

"நா படுத்துக்கப் போறேன், மாது... விஜய் வந்தா கதவைத் திறந்துவிடு."

மாத்திரையைப் பாலுடன் விழுங்கின பின் காலி டம்ளரை மாதுவிடம் நீட்டினாள். தன் அறைக்கு வந்து கதவைச் சாத்திக்கொண்டு படுக்கையில் படுத்தாள்.



மணி ஒன்பதரை.... இன்னும் ஏன் விஜய் வரவில்லை? ஒருவேளை கைதியைப் பிடித்து வைக்கிற மாதிரி இவனையும் எங்காவது அடைந்து வைத்திருக்கிறார்களோ? செய்தாலும் செய்வார்கள்.

தெரியாத்தனமாய் எதையோ செய்துவிட்டு இப்போது முயல்குட்டி மாதிரி பயந்து நடுங்கும் பிள்ளையை நினைக்கையில், இதுநாழிகை அடக்கி வைத்திருந்த கண்ணீர் மீண்டும் ஊறத் தொடங்கியது.

"அம்மா, எனக்கு ஒண்ணுமே ஞாபகம் இல்லேம்மா.."

"மம்மி, நா அப்படி என்ன செஞ்சுட்டேன், இப்படி இத்தனை பேரும் என்னை மிரட்ட..."

"எனக்கு பயமா இருக்கும்மா.."

சில நாட்களாகப் பிள்ளை தவிக்கும், படும் அவஸ்தையும் நெஞ்சைப் பிறாண்ட எழுந்து உட்கார்ந்தாள் கௌரி.

விஜய் வரும்வரையில் நான் காத்திருக்க வேண்டுமோ? விளையாட்டுத்தனமாக எதையோ செய்யப் போய், அது எதிலோ கொண்டுவந்து விட்டதால் மிரண்டுபோய் இருக்கும் பிள்ளைக்கு நான் இதமாக இருக்கவேண்டுமோ?

கௌரி யோசித்தாள்.

ம்ஹூம்-தெரியாத்தனமோ, விளையாட்டுத்தனமோ, விஜய்யின் இந்த நடத்தைக்கு மன்னிப்பே கிடையாது என்று அவன் உணரவேண்டும். அவன் வரும்போது வரட்டும். நான் காலையில் பேசிக்

கொள்கிறேன். கோபால மாமாவைப் பார்த்துப் பேசிய பிறகு இவனையும் அழைத்துப்போய் அவர் காலில் விழச் செய்ய வேண்டும். அப்போதுதான் இனியாவது ஆயுசுக்கும் ஒழுங்காக இருப்பான்.

விழித்துக்கொண்டிருந்தால் தவிப்புதான் அதிகமாக இருக்கும் என்று புரிந்துகொண்ட கௌரி, காம்போஸ் மாத்திரையைப் போட்டுக்கொண்டு உறக்கத்தில் ஆழ்ந்தபோது மணி பதினொன்று.

காலையில் கௌரி ஆறேகாலுக்குக் கண் விழித்தாள்.

குளித்துக் காபி சாப்பிடும்போது மாதுவிடம், "விஜய் எப்ப வந்தான்?" என்றாள். அவன், பன்னிரண்டு இருக்கும் என்றான்.

ஏழு மணி சுமாருக்கு போன் அழைத்தது. கௌரி எடுத்தாள். யாரோ டாக்டர் ஜகதீஷாம், "விஜய் எழுந்துவிட்டானா?" என்றார்.

கௌரி, இல்லை என்றதும் போனை வைத்து விட்டார்.

திரும்ப ஏழரைக்கு அவரே போன் செய்தார்.

"விஜய் இன்னுமா எழுந்திருக்கலை?" என்றவர், படபடப்பாகப் பேசிய மாதிரி தோன்ற, என்ன விஷயம் என்றாள் கௌரி.

"ஒன்றுமில்லை" என்று, தொடர்பை அவர் துண்டித்துவிட்டார்.

எட்டுக்கு மீண்டும் போன் செய்த டாக்டரின் தவிப்பு வெளிப்படையாகத் தெரிந்தது.



"ஏதாவது பிரச்சினையா?"

டாக்டர் மெல்ல விழுங்கினார்.

அப்புறம் கௌரி தலையில் கல்லைத் தூக்கிப் போட்டார்.

முதல்நாள் இரவு விஜய் அவரைப் பார்க்க வந்திருந்தானாம். கொஞ்ச நாழிகை பேசிக்கொண்டிருந்துவிட்டுப் போய்விட்டானாம். மேஜைமேல் வைத்திருந்த தூக்க மாத்திரை ஸ்ட்ரிப்களைக் காணோமாம். விஜய்யின் முகமும் பேச்சும் நன்றாக இல்லாதது ஞாபகத்துக்கு வர, டாக்டர் பயந்துவிட்டாராம்.

"இருபது மாத்திரைகள், மிஸஸ் சங்கர். எங்கே போச்சு? ஏன் விஜய் இன்னும் எழுந்திருக்கலை? எனக்குச் சந்தேகமாய் இருக்கு. நா உடனே வரேன். நீங்க யார்கிட்டயும் எதுவும் சொல்ல வேண்டாம்."

விஜய்யா? தற்கொலையா?

கடவுளே! இது என்ன?

## 17

"விஜய்...விஜய்...வி...ஜ...ய்"

கதவில் ஓங்கிஓங்கித் தட்டிப் பிள்ளையை அழைத்தாள் கௌரி.

ம்ஹூம்... பதில் இல்லை.

"மாது... இங்கே ஓடி வா... உடனே வா...விஜய்யை எழுப்பணும்... உரக்கக் கூப்பிடு... கதவை பலமா தட்டு..."

பீதி நிறைந்த குரலில் கௌரி படபடக்கவும், என்னவோ, ஏதோ என்று போட்டது போட்டபடி மாது ஓடி வந்தான்.

"என்னம்மா.... என்ன விஷயம்?"

"அப்புறமா சொல்றேன், நீ முதல்லே விஜய்யை எழுப்பறத்துக்கு வழியைப் பாரு..." அவனுக்கு பதில் சொல்லிக்கொண்டே திரும்பக் கதவுகளைத் தட்டிக் கூவினாள் கௌரி.

கொல்லையில் பத்துத் தேய்த்துக்கொண்டிருந்த தாயி சாம்பல் கையோடு ஓடிவந்தாள்.

"ஏம்மா... இன்னா விஷயம்? சின்னய்யருக்கு என்னம்மா?"

அந்தப் பதட்டத்திலும் ஒரு கணம் நிதானித்தாள் கௌரி. தாயி அந்தத் தெருவில் இன்னும் ஒரு வீட்டில் வேலை பார்க்கிறாள். இங்கு இவள் தும்மினால், பத்தாவது நிமிஷம் அதை அந்த வீட்டில் கேட்க வைப்பது தாயியின் குணம்.

---

விஜய் உள்ளுக்குள் நிஜமான தூக்கத்தில் இருக்கிறானா, இல்லை அந்த டாக்டர் சொன்ன மாதிரி ஏதாவது ஏடாகூடமாய் நடந்திருக்கிறதா என்று புரியாத நிலையில் இவளை இங்கு நிற்க வைப்பது ஆபத்து அல்லவா?

கஷ்டப்பட்டு நிதானத்துக்கு வந்தாள் கௌரி.



"ஒண்ணுமில்லே, தாயி, பிள்ளை ஒன்பது மணிக்கு எங்கேயோ போகணும்னான். இன்னும் தூங்கறானே நாழியாச்சேன்னு, எழுப்பறேன்.... நீ ஒரு வேலை பண்ணேன்... விருந்தாளி வரேன்னு சொல்லி இருக்கா... மாதுவுக்கு வேலை இருக்கு. நீ மார்க்கெட்டுக்குப் போய், அரைகிலோ உருளை, அரை கிலோ வெங்காயம், கால் கிலோ தக்காளி வாங்கிண்டு வாயேன்... மாது... ஸைட் டேபிள்லே பணம் இருக்கு, நாலு ரூபாய் எடுத்துக் கொடுத்து இவளை உடனே அனுப்பு..."

மாதுவுக்குப் புரிந்தது.

சட்டென்று செயல்பட்டான்.

இரண்டாம் நிமிஷம் ஈரக்கையைத் துடைத்துக் கொண்டே பையோடு தாயி தெருவில் இறங்கி நடந்தாள்.

அவள் அந்தப் பக்கம் போனதும் கௌரி திரும்பக் கதவைத் தட்டி மகனை உரக்க அழைத்தாள்.

ம்ஹூம்-பலன் இல்லை!

"மாது, தோட்டத்துக்கு ஓடி, ஜன்னல் திறந்திருந்தா எட்டிப் பாரு..."

மாது ஓடினான்.

போனவன் மறுநிமிஷம் திரும்பி வந்தான்.

"விஜய் நன்னா தூங்கறார்ம்மா..."

இத்தனை ஆர்ப்பாட்டத்துக்கும் ஒருவனால் சாதாரணமாய்த் தூங்குவது எப்படி சாத்தியம்? இல்லை... இது வேறு ஏதோதான்...

முருகா... நான் என்ன பண்ணுவேன்?

கால்கள் துணியாய்த் துவண்டன. கண்கள் இருண்டன.

"விஜய்...விஜய்...கதவைத் திறப்பா.... இது என்ன அசட்டுத்தனம், விஜய்..... உன்னை விட்டா எனக்கு வாழ்க்கைலே வேற இண்ட்ரஸ்ட், பிடிப்பு ஏதுப்பா.... விஜய்..."

என்ன பேசுகிறோம் என்பதை உணராமல், கண்களில் நீர் பெருக கௌரி புலம்பிக்கொண்டே கதவை விடாமல் தட்டினாள்.

என்னவோ இசகுபிசகாய் நடந்துவிட்டது. இந்தச் சமயத்தில் எதையும் கேட்டு எஜமானி மனசை நோக அடிக்கக்கூடாது என்று நினைத்த மாது, சில கணங்களுக்கு யோசித்தான். பின், "எம்மா..... ஸ்பேர் கீ உங்ககிட்டே உள்ளே காட்ரேஜ்லே வெச்சிருப்பேளே, எடுத்துண்டு வந்து திறங்கோம்மா.... இன்னும் எத்தனை நாழிகை கதவைத் தட்டிண்டு நிக்கறது... சாவியைக் கொண்டாங்கோம்மா" என்றதும் சரேலென்று கௌரி திரும்பினாள்.

ஆமாம்... டூப்ளிகேட் சாவி என்னிடம் இருக்கிறதே, எப்படி மறந்துபோனேன்?

ஒரே ஓட்டமாய் ஓடி அலமாரியைத் திறந்து, சாவியை எடுத்து வந்தாள்.

ஐந்து வருடங்களுக்கு முன், புது மோஸ்தரில் வீடு இருக்க வேண்டும் என்று விஜய் ஆசைப்பட்டதால், மொஸைக் தரை போட்டு, அட்டாச்ட் பாத்ரூம் கட்டி, ப்ளாஸ்டிக் இம்மல்ஷன் அடித்து, வீட்டை நாகரிகப்படுத்தியபோது ஃப்ளஷ் டோர்ஸ் மாட்டி, காட்ரேஜ் ஆட்டோமாடிக் லாக் பொருத்தி, வெளியிலிருந்து சாவி போட்டு எல்லாக் கதவுகளையும் திறக்கும்படி அமைத்தது நல்லதாகப் போயிற்று.



சாவியை கௌரியிடமிருந்து வாங்கி மாது கதவைத் திறந்தான்.

பாய்ந்து உள்ளே சென்ற கௌரி, 'விஜய்' என்று அழைத்து மகனை உலுக்கினாள்.

விஜய் கண் திறக்கவில்லை.

நல்ல தூக்கமா? இல்லை வேறு ஏதாவதா?

மூக்குக்கு நேராய்க் கையை நீட்டிப் பார்த்தாள். ஸ்வாசம் இருந்தது.

கை, கால்களைத் தொட்டுப் பார்த்தாள். சூடாகத்தான் இருந்தன.

இப்போது என்ன செய்ய வேண்டும்?

டாக்டர் ஜெகதீஷ் உடனே வந்து தொலைக்க மாட்டாரா? வேறு யாரையாவது கூப்பிடலாமா? யாரைக் கூப்பிடுவது?

"மாது-பாத்ரூம்லேந்து ஜில்லுனு ஜலம் கொண்டு வந்து முகத்தைத் துடை... ம்... ஓடு..."

மகனை ஒட்டிப் படுக்கையில் உட்கார்ந்து கொண்டாள் கௌரி.

"விஜய்... வி... ஜ... ய்... என்னைப் பாருப்பா... அம்மாவைப் பாருப்பா..."

மாது மக்கில் ஜலத்துடன் வந்தான்.

பளிச்பளிச்சென்று முகத்தில் நீரை அடித்து முகத்தைத் துடைத்தாள் கௌரி.

ம்ஹூம்-ஒன்றுக்கும் பலன் இல்லை.

தெய்வமே.. என்னைச் சோதிக்காதே.. நான் என்ன பண்ணுவேன்?

கௌரியின் பார்வை தரையில் படர்ந்தது. சின்னச் சின்னதாய் அலுமினிய பேப்பர் துண்டுகள்.

குனிந்து ஒன்றைக் கையில் எடுத்துப் பிரித்துப் பார்த்தாள்.

மாண்ட்ராக்ஸ்.... இன்னொன்று, இன்னொன்று... மாண்ட்ராக்ஸ்.... மாண்ட்ராக்ஸ்....

தூக்க மாத்திரை பேப்பர்தானா இத்தனையும்! அப்படியானால் டாக்டர் சந்தேகப்பட்டது நிஜம் தானா?

பத்து மாசம் சுமந்து பெற்ற வயிறு துடித்தது.

"விஜய்..." என்று பற்களைக் கடித்துக்கொண்டு கதறியவள், அவன் தலையைத் தன் இரண்டு கைகளாலும் தூக்கி பலமாக உலுக்கினாள்.

"நோ... உன்னை சாகவிடமாட்டேன்... என்னை விட்டு நீ போக விடமாட்டேன்! விஜய்... என்னை ஏமாத்திட்டுப் போயிடாதேப்பா... நீ இல்லாம ஒரு க்ஷணம்கூட என்னால இருக்க முடியாதுப்பா..." என்று புலம்பியவள், "மாது, ஓடு, எந்த ஹாஸ்பிடலுக்காவது போன் பண்ணி ஆம்புலன்ஸ் கொண்டுவரச் சொல்லு..



இல்லே... வேண்டாம், ஓடிப் போய் டாக்ஸி கொண்டு வா... உடனே நாம்ப விஜய்யை ஹாஸ்பிடலுக்கு அழைச்சிண்டு போகணும்.. ஓடு மாது-" என்று ஆணையிட்டாள்.

மாது திரும்பி நாலே எட்டில் அறைவாசலை அடையும் முன், வாசலில் ஸ்கூட்டர் சப்தம் கேட்டது.

அடுத்த நிமிஷம் பரக்கப்பரக்க டாக்டர் ஜெகதீஷ் உள்ளே நுழைந்தார்.

சின்னப் பையன்தான். நெடுநெடுவென்று உயரமாக இருந்தார். மீசையும், குறுந்தாடியுமாக ஒரு பாடகனைப் போல் இருந்தார்.

ஒரு வார்த்தை பேசவில்லை. கையோடு கொண்டு வந்திருந்த பையைத் திறந்தார். ஸ்டெத்தை எடுத்து மார்பில் வைத்துப் பார்த்தார். நாடி பிடித்தார், கண்களைப் பிரித்துப் பார்த்தார்.

"என்ன, டாக்டர்? என் விஜய்க்கு என்ன? ஹௌ ஈஸ் ஹி? ப்ளீஸ், சொல்லுங்கோ...."

கௌரி பரிதவித்தாள்.

"வில் யூ ப்ளீஸ் பி கொய்ட்?... என்னை கவனிக்க விடுவீங்களா?"...என்று அதட்டின டாக்டர், "வெந்நீரும் உப்பும் கொண்டுவரச் சொல்லுங்க... க்விக்..." என்றார்.

மாது கொணர்ந்து கொடுத்த வெந்நீரில் உப்பைத் தாராளமாகப் போட்டுக் கரைத்தார்.

விஜய்யைத் தூக்கி உட்கார வைத்து, மாதுவைப் பிடித்துக்கொள்ளச் செய்தார். இரண்டு கன்னங்களிலும் ஓங்கித் தட்டி, "வேக் அப்...கமான், வேக் அப்"

என்று அறைந்ததில் லேசாய்க் கண்களை விழித்த விஜய், திரும்ப மூடிக்கொண்டான்.

விஜய் வாயில் உப்புத் தண்ணீரை ஊற்றின டாக்டர், கன்னங்களைத் தட்டி வலுக்கட்டாயமாய்க் குடிக்க வைத்தார்.

நான்கு வாய் உள்ளே போயும், குமட்டல் உண்டானதே தவிர வாந்தி வரவில்லை.

இன்னும் இரண்டு தடவைகள் இதே மாதிரி உப்புக் கரைசல் போடுவதும் குமட்டல் எடுப்பதுமாக ஆனதும் விஜய்யை மாதுவோடு தாங்கிப் பிடித்துக் கொண்டு பாத்ரூமுக்குள் அழைத்துப்போனார். அங்கு மீண்டும் உப்புக் கரைசலை ஒரு டம்ளரில் விட்டுக் குடிக்கச் செய்ததும், 'ஹோவ்..' என்ற சப்தத்துடன் விஜய் பெரிதாய்ச் சொட சொடவென்று வாந்தி எடுத்தான்.

பேஸினுக்கு நேராய் விஜய்யின் முகத்தைப் பிடித்துக்கொண்டிருந்த டாக்டர், "தேங்க் காட்.... மாத்திரைகள் பொடிப்பொடியா கரைஞ்சி வருது..." என்று சொன்னது, கௌரியின் கண்ணீரைக் கொஞ்சம் கட்டுப்படுத்துவதாக இருந்தது.

ஐந்து நிமிஷத்தில் விஜய்யைப் பிடித்து நடத்தி வந்து படுக்க வைத்தார்கள்.

மயக்கம் இன்னும் தெளியவில்லை. தலை தொங்கித்தான் இருந்தது. கண்கள் செருகித்தான் இருந்தன.



"ஐஸ் தண்ணி இருந்தா கொண்டுவந்து, டவலை நனைச்சிப் பிழிஞ்சி, முகத்தைத் துடையுங்க..." என்றார்.

மாது சொன்னபடி செய்தான்.

"ஸ்..வாட் எ டே..." என்ற சலிப்புடன் டாக்டர் உட்கார்ந்தார்.

"ஹாஸ்பிடலுக்கு வேணா கூட்டிண்டு போகலாமா, டாக்டர்?.. ஹௌ ஈஸ் ஹி நௌ? என் விஜய்க்கு ஒண்ணுமில்லையே, டாக்டர்? நிஜத்தைச் சொல்லுங்க, ப்ளீஸ்..." கிட்டத்தட்ட அரைமணியாய் டாக்டரின் அதட்டலுக்கு பயந்து பேசாமல் இருந்த கௌரி, தாளமுடியாதவளாய்ப் பேசினாள்.

"இனி எதுக்கு ஹாஸ்பிடல்? ஹி ஈஸ் ஓ.கே. நல்ல வேளையா அத்தனை மாத்திரைகளும் வெளியே வந்திடுச்சி.. ஆமாம்.. ராத்திரி எத்தனை மணிக்கு விஜய் படுக்கப் போனான் தெரியுமா?"

கௌரி மாதுவைப் பார்த்தாள்.

"பன்னண்டரை இருக்கும், டாக்டர்..."

"லேட்டா படுத்ததுதான் உங்க மகனைக் காப்பாத்தியிருக்கு! ஒரு மணிக்கு மேல டாப்லெட்ஸ் போட்டிட்டு இருக்கான். ஏழு மணி நேரத்துல நாம கண்டுபிடிச்சி பாய்ஸனை வெளியே கொணாந்திட்டோம்.. இனிமே கவலை இல்லே.. அவனோட நாடித்துடிப்பு சரியாத்தான் இருக்கு.."

"அப்போ ஏன் இன்னும் தூங்கறான், டாக்டர்.. எழுந்து ஏன் உட்காரலை?"

"இதென்ன அபத்தமான கேள்வி! தூக்க மாத்திரைகளோட இபெஃக்ட் இருக்காதா? இன்னும் ரெண்டு மூணு மணி நேரம் தூங்குவான். அப்புறம் எழுந்துடுவான். நல்ல வேளையா நா உங்களுக்கு போன் பண்ணினேன். என்னவோ நேத்து ராத்திரிலேந்து ஒரு வேதனை... சந்தேகம்... ஆமாம், விஜய்க்கு என்ன பிரச்சினை?"

கௌரி அவர் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை. மாதுவை, டாக்டருக்கு நல்ல காபியாக போட்டுக் கொண்டுவரச் சொன்னாள். பிள்ளையின் அருகில் உட்கார்ந்து அவன் முகத்திலே தடவிக்கொண்டிருந்தாள்.

டாக்டர் மட்டும் நீளமாகப் பேசினார். அவர் தம்பியும், விஜய்யும் காலேஜ் தோழர்களாம். அடிக்கடி தம்பியைப் பார்க்க விஜய் வீட்டுக்கு வருவது உண்டாம். அப்படி வந்தவன் தான் நேற்று தூக்க மாத்திரைகளோடு கம்பிநீட்டிவிட்டானாம்.

"நா கண்டுபிடிச்சது நல்லதாகப் போச்சு-நீங்க பார்த்து ஏதாவது ஹாஸ்பிடலுக்குத் தூக்கிட்டுப் போயிருந்தீங்கன்னா ஸ்டமக் வாஷ் கொடுக்கறேன், ஸெலைன் க்ளுகோஸ் ட்ரிப் கொடுக்கறேன்னு அமர்க்களப்படுத்தியிருப்பாங்க... முக்கியமா போலீஸ்லே, தற்கொலை முயற்சின்னு புகார் கொடுத்திருப்பாங்க... நல்லவேளையா அப்படி ஒண்ணும் நடக்கலை."

மேற்கொண்டு பேசமுடியாதபடி டாக்டருக்குச் சங்கிலித் தொடராக இருமல் எழுந்தது. இருமி



முடிந்ததும் 'க்கொய்ங்க் க்கொய்ங்க்' என்று இழுக்கத் தொடங்கியது.

டாக்டர் ஒரு ஆஸ்துமா வியாதிக்காரர் என்பதைப் பார்த்த கொஞ்ச நாழிகையிலேயே கௌரி புரிந்து கொண்டு விட்டாள்.

வாயால் திணறித்திணறி மூச்சு விட்டதைப் பார்த்து, கிட்டத்தில் போனால் சன்னமாய் இழுக்கும் சப்தத்தைக் கேட்டு, அப்போதே இது ஆஸ்துமா கேஸ் என்று உணர்ந்துவிட்டாள்.

சக அக்கௌண்டண்ட் பார்த்தசாரதிதான் நிரந்தரமாக ஆஸ்துமாவைத் தம் நெஞ்சில் குடி வைத்திருந்தாரே! இந்த இழுப்பும், திணறலும், ஸ்ப்ரேயும் அவளுக்குப் பழக்கமானவைதானே!

இருமலால் இழுப்பு அதிகமானதும், கையிலிருந்து டாக்டர் ஒரு ஸ்ப்ரேயரை எடுத்தார், பார்த்தசாரதி போலவே வாய்க்கு நேராக வைத்து ஸ்ப்ரே செய்து கொண்டார்.

சட்டென்று இழுப்பு குறைந்தது.

மாது காபியுடன் வந்தான்.

டாக்டர் குடித்துவிட்டுக் கிளம்பினார்.

"இனிமே பயப்பட வேணாம். நா சாயங்காலமா வந்து பார்க்கிறேன்... கண் விழிச்சா சூடா ஹார்லிக்ஸ் கொடுங்க."

'சரி' என்று தலை ஆட்டின கௌரி, "தாங்யூ ஸோ மச், டாக்டர்... சமய சஞ்சீவியா நீங்க உபகாரம்

பண்ணினேன்... உங்களுக்கு நா எத்தனை ஃபீஸ் குடுத்தாலும் தகும்..." என்றாள் சின்னக் குரலில்.

டாக்டர் இழுப்போடு சிரித்தார்.

"அதெல்லாம் சாயங்காலம் பேசிக்கலாம்-நா வரேன்."

டாக்டர் போன பிறகு விஜய்யின் கையைப் பிடித்துக்கொண்டு, அவன் முகத்தைப் பார்த்தவண்ணம் கௌரி படுக்கையிலேயே உட்கார்ந்துவிட்டாள்.

மாது அவளுக்குச் சூடாய்க் காபி கொணர்ந்து கிட்டத்தில் நின்று ஆற்றிக் கொடுத்தான்.

"வேண்டாம், மாது..."

"அதான் இனிமே பயம் இல்லேனுட்டாரேம்மா_ அப்புறம் என்ன?"

தட்ட முடியாமல் காபியைக் குடித்தாள் கௌரி.

'என்னம்மா சமாச்சாரம்? ஏன் இப்படி பண்ணிட்டார்?' என்று அவனும் ஒரு கேள்வி கேட்கவில்லை, கௌரியும் ஏதும் சொல்லவில்லை.

நல்லவேளையாய் டாக்டரிடமிருந்து போன் வந்த உடனேயே பாலாஜிக்கு போன் பண்ணி, "எனக்கு ஜுரம் நா பாங்க்குக்கு வரலை" என்று சொல்லிவிட்டாள். ஆபீஸ் காரில் மௌலி இவன் சாவியை வாங்க வந்தபோது, வாசலிலேயே நின்று, சாவிகளைக் கொடுத்து அனுப்பிவிட்டான் மாது.

அந்தப் பிரச்சினையை ஒரு தினுசாய்ச் சமாளித்தாயிற்று.



மணி பத்தை நெருங்குகையில் விஜய் புரண்டு புரண்டு படுத்தான். 'அம்மா அம்மா!' என்று முனகினான்_ மெதுவாய்க் கண்களைத் திறந்து ஆயாசத்துடன் பார்த்தான்.

கிட்டத்தில் நெருங்கி மகன் முகத்தைத் தடவிக் கொடுத்தாள் கௌரி.

"என்னப்பா... இப்படி... என்...னப்பா, விஜய்.. இப்படி?" துக்கம் வெடித்துக்கொண்டு எழத் தோள் பட்டையில் சாய்ந்தவள், "என்னை விட்டுட்டுப் போக உனக்கு மனசு எப்படி வந்தது, விஜய்? உன்னை விடவா எனக்கு என் பணமும், என் மானமும், என் பாங்க்கும் பெரிசு?" என்று கேட்டுவிட்டு, வேதனை தாங்காமல் விசும்பத் தொடங்கினாள்.

## 18

ஒன்றுமே பதில் பேசவில்லை விஜய். மூடியிருந்த கண்களிலிருந்து கோடு போட்ட மாதிரி கன்னத்தில், கழுத்தில், தலையணையில் கண்ணீர் இறங்கியது. அவ்வளவுதான். அப்படியே தூங்கிப்போனவன் மீண்டும் கண் விழித்தபோது மணி பன்னிரண்டு.

இந்தண்டை அந்தண்டை அசையாமல் உட்கார்ந்திருந்த கௌரி, பிள்ளை கண்களைத் திறந்ததும், இதமாய் அவன் தலையைக் கோதிக் கொடுத்தாள்.

"ஹார்லிக்ஸ் சாப்பிடறயாப்பா?" என்று கேட்டுவிட்டு, மாதுவுக்குக் குரல் கொடுத்தாள்.

மாது கொண்டுவந்த பானத்தை ஆற்றி, கொஞ்சம் கொஞ்சமாய் அவன் வாயில் விட்டாள்.

அம்மாவை நிமிர்ந்து பார்க்கவே கஷ்டப்பட்ட விஜய், பாதி குடித்ததும் 'போதும்மா' என்றான். அப்புறம் அவள் கையைப் பிடித்து இதயத்துக்கு மேலே வைத்துக்கொண்டு, "ஐ,ம் ஸாரிம்மா.. என்னால உனக்கு எத்தனை வேதனை.. என்னை மன்னிச்சிடும்மா.." என்று கிசுகிசுப்பாய்ப் பேசினான்.

பிள்ளை கண்மூடிக் கிடந்த நாழிகையில், தீர்க்கமாய் யோசித்து, ஒரு முடிவுக்கு வந்திருந்தாள் கௌரி.

விஜய் கொஞ்சமும் எதிர்பார்க்காத தினுசில் கோணாமாணாவென்று எதிலோ மாட்டிக்கொண்டு விட்டது தவறுதான்; தான் அகப்பட்டுக் கொண்டதும் அல்லாமல் என்னையும் சம்பந்தப்படுத்தியது ரொம்ப ரொம்பத் தவறுதான். ஆனாலும் என்ன செய்ய? நடந்தது நடந்தாகிவிட்டது. இனி அதை நினைத்துப் புலம்பிக்கொண்டிருப்பதைவிட ஆகவேண்டியதை எண்ணுவதுதானே புத்திசாலித்தனம்? ஏற்கனவே மனசு ஒடிந்துபோயிருக்கிறான் விஜய்; இல்லாவிட்டால் இப்படியொரு அற்பத்தனமான முடிவுக்கு வருவானா? ம்ஹூம், மாட்டான். புண்ணைக் கிளறிவிடுகிற மாதிரி இவனை இனித் தொணதொணக்கக் கூடாது. இவன் நிம்மதி, சந்தோஷத்தை விட எனக்கு வேறு எதுவும் பெரியது இல்லை என்பதைப் புரியவைக்க வேண்டும். எப்படியாவது இந்த கௌதம் பிடியிலிருந்து தப்ப வழி இருக்கிறதா என்று யோசிக்க வேண்டும். இது விஜய்க்கு ஒரு பெரிய பாடம். இனி ஆயுசுக்கும் ஒழுங்காகத்தான் இருப்பான்.



"அம்மா... ஸாரிம்மா..." என்று புலம்பி அழும் மகனின் கண்களையும் முகத்தையும் பக்கத்திலிருந்த ஈரத்துணியால் அழுந்தத் துடைத்தாள்.

"டயர்டா இருந்தா திரும்பத் தூங்கு, விஜய்... அப்புறமா எல்லாத்தையும் பேசிக்கலாம்.." என்றாள் அன்போடு.

மதியத்துக்கு அவளுக்கு ஒன்றும் சாப்பிடப் பிடிக்கவில்லை. விஜய் இப்படித் துவண்டு கிடக்கும் போது எனக்கு மட்டும் என்ன சாப்பாடு என்று மறுத்துவிட்டாள்.

இரண்டரை மணி இருக்கையில் விஜய் எழுந்து, மெள்ள பாத்ரூமுக்குப் போய் வந்தான்.

"மாதுவைக் கூட்டிட்டுப் பிடிச்சுக்கச் சொல்லட்டுமாப்பா?"

விஜய் வேண்டாம் என்று தலையை ஆட்டிவிட்டுத் தனியாகப் போனான்.

"தாப்பா போட்டுக்காதே... வெறுமனே சாத்திக்கோ.."

சோப்புப் போட்டு முகத்தை அலம்பி, தலையை வாரிக் கொண்டதில், திரும்பிய விஜய்யின் முகம் பளிச்சென்று இருந்தது.

படுக்கையில் சாய்ந்து உட்கார்ந்தான்.

"சாப்பிடறயா, விஜய்? பசிக்கலை?"

"ம்.."

"ப்ரெட் தரட்டுமா?"

"வேண்டாம்... சாதம்."

மாதுவை அழைத்து, ரஸம் சாதமும் மோர் சாதமும் கரைத்துக்கொண்டு வரச்சொன்னாள் கௌரி.

வாய் திறக்காமல், அம்மா நீட்டிய சாதக் கரைசலைக் குடித்தான்.

பாத்திரங்களோடு மாது போன பிறகு, "இப்போ எப்படிப்பா இருக்கு?" என்றாள் கௌரி.

"........"

"யாருப்பா இந்த டாக்டர் ஜெகதீஷ்? சமயத்திலே வந்து வேண்டிய உதவியைக் கேட்காம செஞ்சிட்டுப் போறான். எனக்கு இருந்த பதட்டத்திலே அவன் எங்கே இருக்கானுகூடக் கேட்கலை. சின்ன வயசானாலும் நைஸ் பாய்..." கொஞ்சம் நிறுத்தின கௌரி தொடர்ந்தாள். "உன்கிட்டே என்ன ஏதுனு நா எதுவும் கேட்கப் போறதில்லே, விஜய்.. எனக்கு விவரம் பூராவும் தெரியும்.. ஆனா, ஒண்ணை ஞாபகம் வெச்சிக்கோப்பா... நீ இல்லாம நா உசிரோட இருப்பேன்னு மட்டும் நினைக்காதே! உனக்காகத்தானே நா வாழறேன்? இது உனக்கு இன்னுமா புரியலை? ம்...?" கூடாது என்று அடக்கியிருந்த கண்ணீர் கண்களில் எட்டிப் பார்த்தது. குரல் செம்மிப் போயிற்று.

விஜய், அம்மாவின் கைகளைப் பிடித்துக் கொண்டான்.

"ஐ'ம் ஸாரி, மம்மி... ரியலி ஸாரி.. நடந்ததைப் பத்தி உன்கிட்டே நா பேச விரும்பறேன்... ப்ளீஸ் தடுக்காதே. நா ஏன் இப்படிப் பண்ணத் துணிஞ்சேன்னா அதுக்கு



ரெண்டு காரணம். அந்த அசிங்கமான படங்களை நீ பார்த்தப்புறம் உன் மூஞ்சிலே எப்படி முழிக்கறதுங்கறது முதல் காரணம். அப்புறம், எவ்வளவு கட்டாயப் படுத்தினாலும் உன் பாங்க்கை நீ காட்டிக்கொடுக்க மாட்டேன்னு எனக்குத் தெரியும். ஸோ, கௌதம் அந்தப் படங்களை உன் பாங்க்குக்கு அனுப்பி, பத்திரிகையிலே போடுவான். என் மானம், உன் மானம், எல்லாம் சந்தியில் இருக்கும். இதையெல்லாம் உசிரோட இருந்து பார்த்து அனுபவிச்சாதானே வேதனை, பேசாம போய்ச்சேர்ந்துட்டா என்னங்கறது ரெண்டாவது காரணம்.."

"......"

"என்னம்மா, ஒண்ணுமே சொல்லமாட்டேங்கறே.."

"நா என்னப்பா சொல்றது? உன்னைப்பத்தி நினைச்சு நீ காரியத்திலே இறங்கினியே தவிர, என்னைக் கொஞ்சமாவது நினைச்சுப் பார்த்தியா?"

"......"

"சரி, பேச வேண்டாம்னு நினைச்சேன்; நீயே பேச்சைத் துவங்கிட்டே... எல்லாத்தைப் பத்தியும் பேசிடுவோம்... ஏம்பா, உனக்குப் பூரா விவரமும் தெரியுமா?"

"ம்.. நேத்துச் சாயங்காலம் கௌதம் என்னை வரச் சொல்லி போன் பண்ணான், போனேன். படங்களைக் காட்டினான். திட்டம் இப்படின்னு சொன்னான். ரொம்ப அதிர்ச்சியா இருந்தது. 'வேண்டாம்டா...

இதுலே அம்மாவோட பாங்க்கை இழுக்க வேண்டாம்டா'ன்னேன். அவன் கேக்கலை. ஒன்பது மணிவரை ஒரு ரெஸ்ட்ராண்ட்லே காத்திண்டு இருக்கச் சொன்னான். இருந்தேன். உன்னைப் பார்த்திட்டுத் திரும்பி வந்து எல்லா விவரத்தையும் சொன்னான். 'உங்கம்மா நாளைக்கு ஒத்துக்காட்டா, நாளைன்னிக்கு உன் போட்டோஸ் ஊர் பூரா சிரிக்கும்'னான்... அவன் முரடன், சொன்னதைச் செஞ்சிடுவான்... எனக்கு ரொம்ப பயமாயிடுத்து! ஜெகதீஷ்கிட்டே, தூக்கம் வரலைனு சொல்லி மாத்திரைக்கு ப்ரிஸ்க்ரிப்ஷன் வாங்கலாம்னு போனேன். என் அதிருஷ்டம், அவன் டேபிள் மேலேயே மாண்ட்ராக்ஸ் இருந்தது. எடுத்துண்டு வந்துட்டேன்... உனக்கு ஒரு நோட் எழுதி வெச்சிட்டு, இருபதையும் விழுங்கிட்டேன்... மம்மி, என்னை மன்னிச்சுடு... நா உன் பிள்ளைனு சொல்லிக்கக்கூட லாயக்கு இல்லாதவன்ம்மா..."

ரொம்ப வேதனையுடன் நிறுத்தி, சின்னக் குரலில் விஜய் பேசினான்.

"நோட்டா? ஏது? எங்கே?"

"நீ பார்க்கலியாம்மா?... என் டேபிள்மேலே வெச்சிருந்தேனே..."

கௌரி எழுந்து பார்த்தாள்; பேப்பர் வெயிட்டுக்குக் கீழ் ஒரு வெள்ளைக் காகிதம்.

'அம்மா-நா போறேன்-ஐ'ம் ஸாரி... என்னை மன்னிச்சிடு. ஃபர்கிவ் மீ... ஃபர்கிவ் மீ..."

உன் விஜய்-"



தற்கொலைக்கு வாக்குமூலமா?

கடிதத்தைச் சுக்கலாகக் கிழித்துப் போட்டாள் கௌரி. பிள்ளையிடம் சென்று உட்கார்ந்து கொண்ட போது, படபடப்பாக இருந்தது.

"உனக்கு இந்த கோஷ்டியை முன்னாலேயே தெரியுமா, விஜய்? எப்படி இந்த மாதிரி அசிங்கமான மனுஷாகூட நீ பழகறே?"

"மதுசூதனைத்தான் ஒரு வருஷமா தெரியும், மம்மி... கௌதம் இப்பதான் சில மாசங்களாத்தான்..."

"ரம்யா?"

"ஐயோ, அவளை நா முன்னே பின்னே பார்த்தது கூடக் கிடையாதும்மா... அன்னிக்குப் பார்ட்டிலேதான் முதன் முதலா சந்திச்சேன்..."

"இப்ப என்ன பண்ணலாம்னு நினைக்கறே, விஜய்? பேசாம கோபால் மாமாகிட்டே அத்தனையும் சொல்லி அவர் அட்வைஸ் கேட்..."

கௌரியை முடிக்கவிடாமல் குறுக்கிட்டான் விஜய்.

"நோம்மா... ப்ளீஸ்... நோ... அவருக்கோ, இல்லை வேற யாருக்கோ இது தெரிஞ்சிதுன்னா, நிஜம்மா நா என்ன பண்ணுவேன்னு எனக்கே தெரியாது... அம்மா... புரிஞ்சுக்கோம்மா... ப்ளீஸ்ம்மா..."

"அப்ப வேற என்னதான் பண்றது, விஜய்? ம்..." கௌரி யோசனையில் ஆழ்ந்தாள். விஜய் ஏதும் பேசவில்லை.

"அவன் இன்னிக்குச் சாயங்காலம் வரேன்னு சொல்லிஇருக்கான். வந்தா நா இப்படிச் சொல்லட்டுமா? 'என்கிட்ட லட்ச ரூபாய் நீ எதிர்பார்த்தே, அதுக்கு மேலேயே தரேன். என் வீட்டுமேல கடன் வாங்கிக் கூட ஐம்பதாயிரம் தரேன். வாங்கிண்டு எங்களை விட்டுடு'னு சொல்லட்டுமா."

"அவ்வளவு பணம் கொடுக்கறது உனக்குக் கஷ்டமா இருக்காதாம்மா?"

"கஷ்டம்தான்; ஆனாலும் வேற வழி? இவனுக்குப் பணத்தைக் கொடுத்துட்டு, ஆயுசுக்கும் வயித்தைக் கட்டி வாயைக் கட்டி உழைச்சு கடனை அடைக்க வேண்டியதுதான்.. வேற என்ன செய்யறது?"

"கௌதம் ஒரு வெறியன், மம்மி.. அவன் இதுக்கு ஒத்துப்பான்னு எனக்குத் தோணலை.."

"அப்போ... வேற என்ன பண்றது? போலீஸ், கோபால் மாமாவுக்கும் சொல்லக்கூடாது.. என் பணம் பூராவும் தந்தாலும் போதாதுன்னா நா எங்கே போவேன்? ஓட ஓட விரட்டினாலும் என்னால வேற என்ன செய்ய முடியும்?"

விஜய், அம்மாவைப் பார்க்காமல் தரையைப் பார்த்தான். படுக்கையில் விரலால் டிஸைன் போட்டான்.

"அதுதான் அவனே வேற வழி சொல்லிக் கொடுத்திருக்கானே.."

"வி..ஜ..ய்.." கௌரியின் குரல் அதட்டலாய் வெளி வந்தது.



கண்கள் பளபளக்க விஜய் அம்மாவை நிமிர்ந்து பார்த்தான்.

"கௌதம் ஒரு ரோக், மம்மி.. அவன் மனசுலே ஒரு ஆசை வந்துடுத்துன்னா அதை நிறைவேத்தாம விடமாட்டான்... நேத்து ராத்திரி அவன் ரொம்பத் தீர்மானமா பேசினான். நா அவன் கால்லே விழுந்து கெஞ்சினேன். 'ஸாரி விஜய்-எனக்கு அந்த பாங்க் பணம் வேணும்'னு மூர்க்கமா பேசினான்.. அவன் அப்படிப் பேசினப்புறம்தான் நா பயந்து போனேன். நீ ஒத்துக்க மாட்டேன்னு தெரியும்; அவனும் மாற மாட்டான் தெரியும்... உங்க பிடிவாதத்தால நாறப்போறது நாந்தான். என் பேர்தான். அதனாலதான் வேற வழியில்லாம செத்துப்போயிடலாம்னு நினைச்சேன்! மம்மி, உனக்கு என் வேதனை ஏன் புரியலை? என் அவஸ்தை ஏன் புரியலை? புரிஞ்சிருந்தா இப்படிப் பேசுவியா?.. ம்ஹூம், மாட்டேம்மா, மாட்டே.. உனக்கு உன் பாங்க்தான் பெரிசு! சரி, அப்படியே இருக்கட்டும்.. என்னை ஏன் பிழைக்க வெச்சே? என்னை நிம்மதியா செத்திருக்க விட்டிருக்கக் கூடாதா? சொல்லும்மா... ஏம்மா பிழைக்க வெச்சே?"

இரண்டு கைகளாலும் முகத்தில் ஓங்கி அறைந்து கொண்ட விஜய், முழங்கால்களில் முகத்தைப் பதித்துக் கொண்டான். வாய்விட்டு அழுததில் உடம்பு குலுங்கியது.

கௌரி பதறிப் போனாள்.

"விஜய், என்ன இது.. விஜய், என்னைப் பாரு."

முகத்தை நிமிர்த்தாமலேயே விஜய் பேசினான்:

"உன் பிடிவாதத்தை நீ விடாதே; கௌதம் அவன் முடிவை மாத்திக்க வேண்டாம். ஓகே.. நானும் என் தீர்மானத்தை விடப்போறதில்லை. மாண்ட்ராக்ஸ் இல்லாட்டா என்ன, தண்டவாளம் இல்லையா? கயிறு இல்லையா? கடல் இல்லையா? எத்தனை இல்லை?"

"வி.ஜய்..என்னப்பா பேசறே நீ?" அலறிய கௌரி, பலவந்தமாய் அவன் தலையை நிமிர்த்தினாள். தன் நெஞ்சோடு அவன் முகத்தை அணைத்துக் கொண்டாள்.

"நோ.. இன்னும் ஒரு தடவை அப்படிப் பேசாதே.. நோ.. இன்னும் ஒரு தடவை மனசால்கூட அப்படி நினைக்காதே.." பதட்டமான குரலில் கெஞ்சினவள் அழத் தொடங்கினாள். அம்புறம் இரண்டு பேரும் மேற்கொண்டு ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை.

அசதியுடன் விஜய் படுத்துக் கண்களை மூடிக் கொண்டான். கௌரி அவனைப் பார்த்தவண்ணம் அருகில் அமர்ந்து கொண்டாள்.

நிசப்தத்தை டெலிபோன் மணி கலைத்தது. எடுத்து பேசின மாது அறைக்கதவைத் தட்டினான்,

"டாக்டர் ஜெகதீஷ் பேசறார்-"

கௌரி எழுந்து போனாள்.

"ஹலோ.."

"ஹலோ... நா டாக்டர் பேசறேன், விஜய் எப்படியிருக்கான்?"



"சாதாரணமா இருக்கான், டாக்டர். ரெண்டு மணிக்குச் சாதம் சாப்பிட்டான். வீக்கா இருக்கான். இப்ப தூங்கறான்."

"சாயங்காலம் சரியாயிடுவான். ஓர்ரி பண்ணிக் காதிங்க.. ஆமாம், அவனுக்கு என்ன வேதனை இப்படிப் பண்ண? காலையிலேயே கேட்டேன், நீங்க ஒண்ணும் சொல்லலை.."

"வந்து.. டாக்டர்.. வந்து.. எனக்கு.."

"ஆல்ரைட்.... சொல்ல விருப்பமில்லாட்டி வேணாம்.. ஒரு டாக்டர்ன்ற முறையில் ஒண்ணு மட்டும் சொல்றேன்-அவன் மனசுலே இருக்கற குறையைக் கண்டுபிடிச்சு தீர்க்கறத்துக்கு முயற்சி பண்ணுங்க. இப்படியே விட்டா திரும்ப தற்கொலை முயற்சி பண்ணலாம். தற்கொலை பண்ணிக்க நினைக்கறவங்க வீக்னெஸ் அது.. ஓகே... தென், வெச்சிடட்டுமா?"

"உங்க பில், டாக்டர்?"

"அது எங்கே ஓடிப்போகுது. வாங்கிக்கறேன். பை.. பை.."

ரிஸீவரை வைத்துவிட்டு அப்படியே நின்றாள் கௌரி.

தற்கொலை பண்ண ஒரு தரம் முயன்றவர்கள், திரும்பத் திரும்ப முயற்சிப்பார்களா? கடவுளே!

'மாண்ட்ராக்ஸ் இல்லாட்டா என்ன, தண்டவாளம், கயிறு, கடல்-எத்தனை இல்லை, மம்மி?'

இல்லை... விஜய்யைவிட இந்த வாழ்க்கையில் எனக்கு உயர்வானது வேறு ஒன்றும் இல்லை-எனக்கு

விஜய்தான் வேண்டும். அவன் நிம்மதி, சந்தோஷம்தான் முக்கியம்!

மாலையில் கௌதம் வந்தால் என்ன சொல்ல வேண்டும் என்பது கௌரிக்குப் புரிந்துபோனது.

## 19

சரியாக கடிகாரத்தில் ஆறு அடிக்கும்போது கௌதம் உள்ளே நுழைந்தான். யாரையும் உடன் அழைத்து வராமல் தனியாகத்தான் வந்தான்.

ரொம்ப உரிமையோடு சோபாவில் உட்கார்ந்துகொண்டான். அந்தப் பக்கமாகப் போன மாதுவை அழைத்து, "உன் டீ ரொம்ப ஸ்பெஷலாய் இருக்கும்னு விஜய் சொல்லியிருக்கான். ஒரு கப் கொண்டு வா" என்று உத்தரவிட்டான். ஓரமாய் நின்ற கௌரியைப் பார்த்து, "விஜய் எங்கே காணோம்-கூப்பிடுங்க" என்றான்.

கௌரியின் முகம் வெளுத்திருந்தது. ஒரே நாளில் பத்துப் பவுண்டு எடையை இழந்துவிட்ட தினுசில் உடம்பு துவண்டிருந்தது.

"விஜய் எதுக்கு? அவனுக்கு லேசாய் ஜுரமாய் இருக்கு."

"ஈஸ் இட்? நேத்து நல்லா இருந்தானே, இன்னிக்கு திடீர்னு என்ன ஆயிடிச்சி? எங்க அவன்?"

"உள்ளே படுத்துண்டு இருக்கான்."



"வாங்க, போய்ப் பார்க்கலாம்... நாம பேசறப்போ அவனும் கூட இருந்தா நல்லது. அவன் ரூமுக்கே போய்ப் பேசலாம், வாங்க."

உன் ஆட்சேபணை எனக்குத் தேவையில்லை என்பது போல கௌதம் எழுந்து நின்றான்.

உரலுக்குள் தலையைக் கொடுக்கச் சம்மதித்தாகிவிட்டது. இனி இடிக்கு பயந்தால் ஆகுமா?

கௌரி அவனோடு விஜய் ரூமுக்குப் போனாள். படுத்துக்கொண்டிருந்த விஜய் தடக்கென்று எழுந்து உட்கார்ந்தான்.

பயப்படுகிறானா? கௌதமைக் கண்டால் இவனுக்கு இத்தனை பயமா? அவ்வளவு தூரத்துக்கு கௌதம் மிரட்டி வைத்திருக்கிறானா?

"என்னப்பா விஜய்... என்ன ஜுரம் கிரம்கறாங்க! நேத்து நல்லா இருந்தியே..." பேசின கௌதம் கிட்டத்தில் போய் அவன் நெற்றியில் கை வைத்துப் பார்த்தான்.

"ஜில்லுனு இருக்கு... ஜுரமும் இல்லே, ஒண்ணும் இல்லே... சும்மா அப்படித் தள்ளி உட்காரு" என்றவன், படுக்கையில் ஒரு ஓரத்துக்கு விஜய்யை நகரச் சொல்லி, தானும் அங்கேயே அமர்ந்தான்.

"நீங்களும் உட்காருங்க, மேடம்." அவன் நாற்காலியைக் காட்டினான்.

டீ வந்தது.

மூன்று பேர்களும் குடித்தார்கள்.

மாது ட்ரேயுடன் திரும்பியதும், "விஜய், கதவை சாத்தி தாழ்ப்பாள் போடு" என்றான் கௌதம்.

"அவனுக்கு உடம்பு சரியில்லேன்னு சொல்றேன்.. அப்புறம் அவனை வேலை வாங்கினா என்ன அர்த்தம்?" சுர்ரென்று கோபம் எழப் பேசிய கௌரி, தான் எழுந்து கதவைத் தாளிட்டு வந்தாள்.

கௌதம் கோணல் சிரிப்பொன்றைச் சிரித்தான்.

"அடேயப்பா! உன்னை ஒரு வார்த்தை சொன்னா உங்கம்மாவுக்குச் சீறிக்கிட்டுக் கோபம் வருது, விஜய்! நா ஜாக்கிரதையா இருக்கணும்!" என்றபடியே சிகரெட் பாக்கெட்டை எடுத்து, விஜய்யிடம் நீட்டினான். அவன் வேண்டாம் என்று மறுத்ததும், "ஓ! அம்மா இருக்காங்களா, ஸாரி, மறந்திட்டேன்" என்று நையாண்டி செய்துவிட்டுத் தன் சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான்.

"என்ன மேடம், நா சொன்னபடி யோசிச்சீங்களா? என்ன தீர்மானம் பண்ணியிருக்கீங்க?"

கௌரி பதில் கூறவில்லை. விஜய்யைப் பார்த்தாள், அப்புறம் ஜன்னல் வழியாகத் தெரிந்த ஆகாயத்தை வெறித்தாள்.

"மௌனமா இருக்கறதுலேந்து என் திட்டத்துக்கு நீங்க ஒப்புக்கறீங்கனு நா நினைக்கறேன்-சரிதானே?"

"........"

"ஆல்ரைட், விருப்பமில்லாட்டி நீங்க பேச வேண்டாம். நா சொல்றதைச் சொல்றேன். கவனமா கேட்டுக்கங்க. எங்க பிளான் இதுதான்... கத்தி இல்லாம ரத்தம் இல்லாம புதுமைக் கொள்ளை செய்ய நாங்க



திட்டம் போட்டிருக்கோம். ஒரு ஆர்ப்பாட்டமும் இல்லாம ஸ்ட்ராங் ரூமுக்குள்ளே போயி வேண்டியதைத் திருடிக்கிட்டுத் திரும்பறதுக்கு ஒரு அருமையான ஐடியா இருக்கு... விவரமா அதை நா உங்களுக்குச் சொன்னா, 'அடேயப்பா! என்ன மூளை, என்ன மூளை'னு நீங்களே ஆச்சரியப்படுவீங்க, மேடம்!"

நிமிர்ந்து கௌதமைப் பார்த்த கௌரிக்கு எரிச்சல் மண்டிக்கொண்டு எழுந்தது.

ஆமாம், ஸ்ட்ராங் ரூமுக்குள் ஒரு ஆர்ப்பாட்டமும் இல்லாமல் நுழையப்போவதாய்ச் சொல்கிறானே, இது எப்படி சாத்தியம்? சில நிமிஷங்களைத் தவிர பாக்கிப் பொழுதெல்லாம் மூடியே கிடக்கும் அந்த அறைக்குள் ஈ நுழைவது கூடக் கஷ்டமாயிற்றே! இவன் எப்படி அதிசாதாரணமாகப் பேசுகிறான்! அசட்டுத்தனமாய் ஏதாவது கற்பனை பண்ணிஇருப்பானோ?

இருக்கும்... இருக்கும்.. ஸ்ட்ராங் ரூமையாவது, ஒரு திருடன் திறப்பதாவது! முடியவே முடியாது.

திடுமென்று கௌரிக்குப் போன வருஷம் ஃபிரான்ஸில் நடந்த சம்பவம் ஒன்று நினைவில் மின்னலிட்டது.

போன வருஷமா, இல்லை, அதற்கு முந்தைய வருஷமா? ஏதோ ஒன்று-என்ன நடந்தது?

நான்கு நாட்கள் பாங்க் விடுமுறை வந்த சமயத்தில் பாதாளச் சாக்கடை வழியாக ஒரு கொள்ளைக்காரக் கும்பல் வெகு சாமர்த்தியமாய் இரும்பு அறையில் நுழைந்து, மூன்று நாட்கள் அறைக்குள்ளேயே தங்கி,

சாப்பிட்டு, தூங்கி, வேண்டிய பணம், சாமான்களைக் கொள்ளையடித்தார்களே! என்ன அசகாய அசுரத்தனம் அது!

பல மாசங்கள், அபாரமான மூளைகள், ஒன்று சேர்ந்து திட்டின திட்டம் அல்லவா அது!

பாங்க்கின் பக்கத்துத் தெரு பாதாளச் சாக்கடை நுழைவாயிலில் நுழைந்து, சாக்கடையில் நடந்து, பாங்க்கின் அடிவாரத்துக்கு வந்து, இதுதான் ரூமின் தரை என்று வரைபடங்களின் உதவியோடு தீர்மானித்துக்கொண்டு அந்த இடத்தில் உள்ளே நுழைய வழி பண்ணிக்கொண்டு, கும்பலாய் உள்ளே நுழைந்து, அறைக்குள் மூன்று நாட்கள் தங்கி, பயமில்லாமல், அவசரமில்லாமல், கொள்ளை நடத்தியதைப்பற்றி ஃபிரான்ஸ் மட்டுமென்ன, உலகமே அல்லவா பேசியது!

நான்கு நாட்கள் விடுமுறை கழிந்து, பாங்க் அதிகாரிகள் இரும்புப்பெட்டியைத் திறந்தால் ஷாக் அடித்த மாதிரி இருந்ததாமே! ஏன் இருக்காது- லாக்கர் கதவுகளைச் சுத்தமாக அறுத்து, லாக்கர் பொருள்களையும் கோடிக்கணக்கில் பணத்தையும் அபகரித்திருக்கிறார்கள் என்றால் ஷாக் என்ன, ஹார்ட் அட்டாக்கேதான் வரும்!

மூன்று நாட்கள் போல உள்ளே திருடர்கள் தங்கியிருந்ததற்குச் சாட்சியாய் உணவுப் பொட்டலங்கள், பியர் மற்ற பான வகை காலி டின்கள் இருந்தது கூடப் பெரிதில்லை. தங்கள் இயற்கையின் அழைப்புகளை நிறைவேற்றப் பெரிய பெரிய வெள்ளிப் பாத்திரங்களை 'பாட்'டாக அந்த எமகாதகத் திருடர்கள் உபயோகித்திருந்தார்களாமே, அதுதான் வேடிக்கையிலும் வேடிக்கை!



இப்படி ஏதாவது பிளான் வைத்திருக்கிறானா, இந்த கௌதம்?

இவன் மூஞ்சியையும், முகரக்கட்டையையும் பார்த்தால் அப்படி புத்திசாலித்தனம் இருப்பதாகத் தெரியவில்லையே! ஒருவேளை அந்த மீசைக்கார மதுசூதன் திட்டம் தீட்டி இருக்கிறானோ? இல்லை, அது சாத்தியமில்லை. நேற்று எண்ணம் வந்து இன்று என்னோடு அதுபற்றிப் பேச உட்கார்ந்திருக்கும் இந்த கௌதமுக்கும் நிச்சயம் அப்படியொரு புத்திசாலித்தனமான யோசனை தோன்றியிருக்காதுதான். அப்புறம் எப்படி ஸ்ட்ராங் ரூமில் நுழைய உத்தேசம்? ஏதாவது இசகுபிசகாய்ச் செய்து இவன் மாட்டிக் கொள்வதோடு அல்லாமல் என்னையும் விஜய்யையும் சேர்த்து வம்பில் இழுத்துவிட்டுவிட்டால்? போலீஸ், விசாரணை, ஜெயில் வாசம்... என்ன இதெல்லாம்! எப்படி இந்தப் பேச்சுவார்த்தை எழவே நான் சம்மதித்தேன்?

நல்ல வார்த்தையாக கௌதமிடம் பேசிப் பார்த்தால் என்ன? நீ கேட்டதைவிட அதிகமாய், என்னால் முடிந்த அளவுக்குப் பணம் தருகிறேன்; வீணாக அவஸ்தைப்பட்டு மாட்டிக்கொள்ளாதே, என்றால் என்ன?

கௌரி தலையைத் திருப்பி கௌதமைப் பார்த்தாள். தொண்டையைக் கனைத்துக்கொண்டு மெல்லிய குரலில் பேசினாள்:

"எங்க பாங்க் பத்தி முழுமையா தெரியாததனால உங்களால இப்படி ஈஸியா பேச முடியறது. நிஜம்மா

சொல்றேன், நீங்க பேசினதை ஒரு குழந்தை கேட்டாக் கூடச் சிரிக்கும்! தூசி, தும்பு நுழைய முடியாதபடி எங்க பாங்க்கிலே பந்தோபஸ்து இருக்கு. அதுவும் ஸ்ட்ராங் ரூம் கிட்டக்கூட ஒருத்தரும் போக முடியாது. நீங்க எங்க செக்யூரிடி பத்தி ஐடியாவே இல்லாம பேசிட்டேள்னே நினைக்கறேன். உங்க எண்ணம் கண்டிப்பா நிறைவேறாது. மீறி முயன்றா மாட்டிக்கறது நிச்சயம். சும்பி எண்ண ஆசையா இருந்தா இந்தக் காரியத்திலே இறங்குங்கோ! உங்க அக்கறைலே நா பேசறேன். இளவயசு, துடிப்பான ரத்தம், ஆழம் தெரியாம காலை விடாதிங்கோ... இத்தனை கஷ்டப் பட்டுக் கடைசியிலே ஒண்ணுத்துக்குமே பிரயோஜனம் இல்லாம ஜெயிலுக்குப் போறதைவிட, நா சொல்றதைக் கேட்டா உங்களுக்குத்தான் ஆதாயம். நீங்க லட்ச ரூபாய் என்கிட்ட முதல்லே எதிர்பார்த்ததா சொன்னேள். நா அதுக்கு மேலேயே தரேன். வீட்டு பேர்ல ஐம்பதாயிரம் கடன் வாங்கித் தரேன். என் நகைகள் எல்லாம் ஈஸியா ஒரு ஐம்பதாயிரம் தேறும். அதையும் தரேன். ரெண்டு லட்சத்துக்கு மேலேயே ஆறது. பேசாம அதை வாங்கிண்டு, போட்டோஸ், நெகடிவ்ஸை என்கிட்ட கொடுத்துட்டு நீங்க எங்க இஷ்டமோ அங்கே போயிடுங்கோ. நானோ விஜய்யோ இதுபத்தி யார் கிட்டயும் மூச்சுகூட விடமாட்டோம். வீ ப்ராமிஸ்..."

நீளமாய்ப் பேசி நிறுத்தியதில் கௌரிக்கு மூச்சு வாங்கியது.

கௌரியின் பேச்சு கௌதமிடம் எந்த ஒரு கவனத்தையும் ஏற்படுத்தவில்லை. கட்டிலில் சாய்ந்து,



விட்டத்தைப் பார்த்துப் புகை வளையங்கள் விட்டுக் கொண்டிருந்தவன், தலையைத் திருப்பாமலேயே பேசினான்.

"பந்தோபஸ்து பத்தி இத்தனை பெருமையா பேசறீங்களே மேடம், அப்படின்னா உங்க பாங்க்லே ஸ்பெஷல் செக்யூரிட்டி இருக்குனு சொல்றீங்களா? நானும் தெரிஞ்சிக்கறேன்."

"நா சொல்ல மாட்டேன். அது எங்க விதிகளை நா மீறற மாதிரி ஆகும். பலமான பந்தோபஸ்துன்னு மட்டும் தான் சொல்ல முடியும்."

சட்டென்று கௌதம் திரும்பினான்.

"பிடிவாதம் பண்ணாதீங்க, மேடம். அது உங்களுக்கோ, விஜய்க்கோ நல்லதில்லே."

"உங்களுக்கு எதுக்கு என் பாங்க் பாதுகாப்பு பத்தின விவரங்கள்? அது அனாவசியம். பேசாம நா கொடுக்கற பணத்தை வாங்கிக்கறதுதான் புத்திசாலித்தனம்."

கௌதம் சிரித்தான். அது சிரிப்பாக இல்லை. 'லிஸன் யு உமன்' என்று மிரட்டுவதாக இருந்தது.

"பேசாம நீங்க கொடுக்கற பணத்தை வாங்கிக்கறதாகவும் இல்லே, எங்க ஐடியாவைக் கைவிடறதாகவும் இல்லே-புரியுதா?"

இது நாழிகை பேசாமல் அமர்ந்திருந்த விஜய், அம்மாவைப் பார்த்தான்.

"ப்ளீஸ்ம்மா... அம்மா ப்ளீஸ்ம்மா" என்று முனகினான்.

பிள்ளையின் பார்வையும், முனகலும் மனசை நெகிழ வைக்க, கௌரி யோசித்தாள்.

செக்யூரிடியை விவரிப்பதால் என்ன ஆபத்து வந்துவிடும்? ஓஹோ, இதில் இத்தனை இருக்கிறதா என்ற பயமாவது தோன்றுமோ?

"பகலானாலும் சரி, இரவானாலும் சரி, எங்க பாங்க்லே பந்தோபஸ்து ரொம்ப அதிகம். ஒவ்வொரு ஆபீஸர், டெல்லர், காஷியர், மேஜை அடியிலும் அலாரம் பட்டன் உண்டு. சந்தேகத்துக்கு இடமான நபர் வந்திருக்கறதா மனசுக்குத் தோணித்துன்னா அந்தப் பட்டனை அமுக்கினா போதும்.. உடனே ஆட்டோமாடிக்காக வாசற்கதவும், ஸைட் என்ட்ரன்சும் மூடிண்டுடும். ரெண்டு வாசல்லேயும் துப்பாக்கி சகிதம் நிக்கற காவலாளி உஷாராயிடுவா. பாங்க் முழுக்க அலாரம் அடிக்கும். எல்லாம் கண்மூடிக் கண் திறக்கறத்துக்குள்ள நடந்துடும். உள்ளே யார் வந்தாலும் அவனால் கண்டிப்பாகத் தப்பிக்க முடியாது. மானேஜர் ரூம்லே இன்னொரு பட்டன் இருக்கு. அதை அமுக்கினா, கொஞ்சம் தள்ளி இருக்கற மௌண்ட் ரோடு போலீஸ் ஸ்டேஷனிலே மணி அடிக்கும்படி ஒரு வசதி இருக்கு. நிலைமை கட்டுக்கு அடங்காமப் போயிடுத்துன்னா, திருடர்கள் அறியாமல் போலீஸை வரவழைக்க இந்த ஏற்பாடு. ஸ்டேஷன்லே மணி அடிச்ச அஞ்சாவது நிமிஷம் இங்கே போலீஸ் வந்துடும். போதுமா பாதுகாப்பு ஏற்பாடு?"

கௌதம் உன்னிப்பாகக் கேட்டுக்கொண்டான்.



"பகல்லே திருட நினைச்சா இத்தனையும் எப்படிச் சமாளிக்கறதுன்னு பார்க்கணும், இரவுலே திருட நினைச்சா?"

"அது இன்னும் கஷ்டம். சாயங்காலம் அத்தனை பேரும் வீட்டுக்குப் போனதும், பாங்க்குக்குள்ளேயே தங்கற காவலாளிகள் ஸ்பெஷல் அலாரம் ஸ்விட்சுகளை 'ஆன்' பண்ணிடுவா. ரெண்டு வகை அலாரம் உண்டு. ஜன்னல்கள் வாசக்கதவு அத்தனையோடவும் மின்சாரம் மூலமா ஒரு அலாரத்துக்கு கனெக்ஷன் உண்டு. எந்தக் கதவைத் திறந்தாலும் அலாரம் அடிக்க ஆரம்பிச்சுடும். இந்த அலாரத்தோட ஸ்விட்சை கார்த்தால செக்யூரிடி ஆள் ஆப் செய்துட்டுதான் அவாளே பாங்க் கதவைத் திறப்பா. அதுவரையில் நடுவிலே எதுக்காவது திறக்கணும்னு சொன்னா, மானேஜர் போன் மூலமாக உள்ளே இருக்கற காவலாளிக்கு 'கோட்' வார்த்தையைச் சொல்லி, உத்தரவு கொடுத்து, ஸ்விட்சை அணைச்சப்புறம்தான் திறக்கமுடியும். எமர்ஜென்ஸினு வந்தால் ஒழிய மூடின பாங்க்கைத் திறக்க யாருக்கும் அதிகாரம் கிடையாது?"

"சரி-ரெண்டாவது அலாரம்னீங்களே-அது எதுக்கு?"

"அந்த அலாரம் ஸ்ட்ராங் ரூமுக்கும், லாக்கர் ரூமுக்கும் எக்ஸ்ட்ரா பாதுகாப்பு தர்றத்துக்காக. எப்படியாவது திருடர்கள் உள்ளே நுழைஞ்சுட்டாலும், அவாளைத் தடுத்து நிறுத்தறது இந்த அலாரம் தான் ஸ்ட்ராங் ரூம், லாக்கர் ரூம்களை எந்த எமன் வந்தாலும் திறக்க முடியாது. கதவுகள் அத்தனை கனம். எதையாவது சினிமாவைப் பார்த்துட்டு குண்டு

வெச்சு வெடிக்கிறேன், அப்படி இப்படின்னு அசட்டுத் தனமான காரியத்தில் இறங்கித் திறக்க முயன்று திறந்துட்டா, உடனே இந்த அலாரம் நா முன்னே சொன்ன மாதிரி போலீஸ் ஸ்டேஷன்லே அடிக்கும். இங்கே திருடர்களுக்கு ஒண்ணும் கேட்காது. ஆனா அங்கே கேட்டு நிமிஷத்தில் போலீஸ் வந்துடும். இந்த அலாரத்துக்கு ட்ரெபிள் அலாரம்னு (Trebble Alarm) பேர். அறைக்குள் இருக்கற காத்து அழுத்தம் கொஞ்சம் மாறுபட்டாலும் இந்த அலாரம் அடிச்சுடும். அதாவது கதவை லேசாகத் திறந்து, உள்ளே சன்னமான காத்து புகுந்து, உள் அறைக்காற்று அழுத்தத்தை ஒரு கடுகத் தனை மாத்தினால்கூட உடனே அலாரம் அடிச்சுடும். இந்த ட்ரெபிள் ஸிஸ்டம் எல்லா பாங்க்கிலேயும் கிடையாது. ஆனா, எங்க பாங்க்கிலே உண்டு. அதனாலே எங்க பாங்க்கைத் திருட நினைக்கறது சரியான கனவுனு உங்களுக்கு இப்பவாவது புரிஞ்சுதா?"

ஒருவித வேகத்தோடு கௌரி பேசினதைக் கேட்டு, கௌதம் புன்னகைத்தான். பின், "இந்த அலாரங்களிலே மாட்டிக்காம காரியத்தை முடிக்க நாங்க ஒரு பிளான் வெச்சிருக்கோம். கேட்கறீங்களா, மேடம்?" என்றான் சீண்டும் குரலில்.

## 20

புதிதாய் சிகரெட் ஒன்றைப் பற்றவைத்துக் கொண்ட கௌதம், கௌரியின் கண்களை நேருக்கு நேர் பார்த்துக் கொண்டே பேசினான்:



"உங்க ஸ்ட்ராங் ரூம், லாக்கர் ரூம்களைப் பத்தி எனக்குத் தெரிஞ்சதை விவரிக்கிறேன், சரியானு பாருங்க - ஓகே? நீங்களும், சீஃப் காஷியரும் ரகசிய எண்களைத் திருகி முதல் பூட்டைத் திறந்த பிறகு, இரட்டைச் சாவி போட்டுத் திறந்தாத்தான் ஸேஃபைத் திறக்க முடியும்; இல்லையா? உள்ளே தனித்தனி அறைகளில் பணக்கட்டுகளை வெச்சிருப்பீங்க; ரைட்?

"உங்க சாவிக்கொத்து உங்ககிட்டயும், மௌலி கொத்து அவர்கிட்டயும் இருக்கும். ரகசிய எண்களை நீங்க அவருக்கும், அவர் உங்களுக்கும்கூடச் சொல்ல மாட்டீங்க. அவ்வளவு ரகசியம், இல்லே? நம்பர்கள் மறந்து போச்சுன்னா, என்ன பண்ணறதுன்னு நம்பர்களைத் தனித்தனி காகிதத்துலே எழுதி ரெண்டு கவர்லே போட்டு சீல் பண்ணி, லாக்கர் ரூம்லே, ஒரு தனி லாக்கர்லே வெச்சிருப்பீங்க. உங்க ரெண்டு பேர்ல யாருக்காவது பாங்க்குக்கு வர முடியாம போயிடுச்சின்னா, மானேஜர் அந்த லாக்கரைத் திறந்து, குறிப்பிட்ட கவரை எடுத்து, ரகசிய எண்களைப் பார்த்து, ஸேஃபைத் திறப்பார். சரிதானே?"

கௌரி மனசுக்குள் திகைத்துத்தான் போனாள். காம்பினேஷன் நம்பர்களைத் திருகுவதும், இரட்டைச் சாவிகளைப் போடுவதும், மற்ற விவரங்களும் இவனுக்கு எப்படித் தெரியும்? யார் சொன்னார்கள்? ஒரு வேளை இவனுக்குத் தெரிந்தவர் பாங்க்கில் வேலையாக இருக்கிறாரோ?

"இதெல்லாம் உங்களுக்கு எப்படி தெரியும்?"

கௌதம் சிரித்தான்.

"அதையெல்லாம் நீங்க கேட்கக்கூடாது, மேடம்.. உங்க லிமிட்டோட நீங்க நிற்கணும்... ஆமாம், அலாரம் ஸ்விட்ச்னு சொன்னீங்களே, அது எங்க இருக்குனு சொல்லலியே?"

"தட், ஐ டோண்ட் நோ-"

"இதான் மேடம் வேண்டாங்கறது!"

"நிஜம்மா எனக்குத் தெரியாது. மானேஜர் ரூம்லே இருக்குனு தெரியும். ஆனா, குறிப்பா எங்க இருக்குனு தெரியாது."

"அப்படியா? அப்ப அதைக் கண்டுபிடிக்கணும். சரி.. இப்ப எங்க பிளானைச் சொல்றேன், கவனமா கேளுங்க.. நாங்க குறிப்பிட்டு வெச்சிருக்கற நாள்லே ராத்திரி ஒரு மணி போல உங்க பாங்க்குக்குள்ளே நுழைவோம். செக்யூரிடி ஆளை அவன் எதிர்பார்க்காத சமயத்திலே தாக்கிக் கட்டிப்போட்டுடுவோம். ரகசிய நம்பர்களைச் சுழட்டி, இரட்டைச் சாவியைப் போட்டு ஸ்ட்ராங் ரூமைத் திறப்போம். வேண்டிய பணத்தை எடுத்துக்கிட்டு விடியறதுக்குள்ளே கம்பி நீட்டிடுவோம்-எப்படி?"

இப்போது கௌரிக்கு வாய்விட்டுச் சிரிக்கத் தோன்றியது.

என்ன மடத்தனமான திட்டம்?

குழந்தைகூட இதைவிட நன்றாகத் திட்டம் தீட்டுமே!

இந்த கௌதமுக்கு உடம்புதான் இருக்கிறது; மூளைக்கு பதில் மண்டையில் களிமண்தானோ?



"எனக்குச் சிரிப்புதான் வரது! பாங்க்கிலே நுழையறது எப்படி? ஜன்னல் வழியாவா, இல்லை வாசல் கதவு வழியாவா? இல்லை, பேய் பிசாசுகள் சுவர்க்குள்ளே புகுந்து வர்ற மாதிரியா?..ம்?.. அலாரம் இருக்குனு நா சொன்னது அதுக்குள்ளயா மறந்து போச்சு?"

சிகரெட்டை அணைத்த கௌதம், அசிங்கமாக கௌரியைப் பார்த்துச் சிரித்தான்.

"நீங்க ரொம்ப அவசரப்படாதீங்க, மேடம்... கோலத்துக்கு நா புள்ளிதான் வெச்சிருக்கேன். இன்னும் அதைச் சேர்க்க ஆரம்பிக்கலை. அதுக்குள்ள அவசரப்பட்டுப் பேசறது நல்லதுக்கு இல்லே. எங்களை முட்டாள்னு நினைச்சு நீங்க சிரிக்கறீங்க, பேசறீங்க.. யார் முட்டாள், யார் புத்திசாலினு நீங்க போகப் போகத் தெரிஞ்சிப்பீங்க... இப்ப கேளுங்க. அலாரங்களை அணைச்சிட்டு, பக்கவாசலை எங்களுக்குத் திறந்துவிட உள்ளே ஒரு ஆள் இருக்கும், புரியுதா? அதனால்தான் நா சுலபமா பாங்க் உள்ளே நுழைவோம்னு சொன்னேன். புரியுதா?"

அலாரங்களை அணைத்துவிட்டுக் கதவைத் திறந்து விடுவதா? இது சாத்தியமா? எப்படி?

"அப்படி யார் உள்ளே இருந்து உங்களுக்கு இத்தனை ராஜோபசாரம் செய்யப்போறதுன்னு நா தெரிஞ்சிக்கலாமா?"

குரலில் எட்டிப் பார்த்த கேலியை அடக்க கௌரி சிரமப்பட்டுப் போனாள்.

கௌதம் விஜய்யைப் பார்த்தான். ஒரு நிமிஷம் யோசித்தான். பின் சின்னக் குரலில் பேசினான்:

"உங்க செக்யூரிடி ஆட்களிலே ஒருத்தன் எங்க பக்கம்..."

"என்னது!"

கௌரியால் நம்பமுடியவில்லை. அவள் பாங்கின் செக்யூரிடி ஆட்களில் ஒருவன் பாங்க்குக்கு துரோகம் பண்ணத் துணிந்துவிட்டானா? இருக்கவே இருக்காது! அது யார்?

அவள் பாங்க்கில் இரவு ட்யூடி பார்க்கும் காவலாளிகள் மொத்தம் ஆறு பேர். இரண்டு, இரண்டு நபராகப் பிரிந்து, தினம் மாறிமாறி வேலைக்கு வருவார்கள். அத்தனை பேரும் ராணுவத்தில் பணி புரிந்தவர்கள். தீரம் மிகுந்தவர்கள். அஞ்சா நெஞ்சம் கொண்டவர்கள். முக்கியமாக, தின்னும் உப்புக்காக உயிரைவிடத் தயாராக இருப்பவர்கள். அவர்களில் ஒருவனா?

நோ-நோ-இருக்காது.

"நீங்க சொல்றதை என்னால் நம்பமுடியலை. நிச்சயமா முடியலை. ஆறு செக்யூரிடி ஆட்களும் எக்ஸ் ஆர்மிமென். ரொம்ப நேர்மையானவங்க. அதுல ஒருத்தர் இப்படினு நீங்க சொன்னா, அதை எப்படி நம்பறது!"

"நீங்களும் நேர்மையானவர்தானே, மேடம்?"

சவுக்கடி பட்ட மாதிரி கௌரி நிமிர்ந்தாள்.

யெஸ்-இவன் சொல்வது வாஸ்தவம்தானே? நானே இவர்களோடு ஒத்துழைக்க முன்வந்திருக்கும்



போது, ஏன் செக்யூரிடி ஆள் ஒருவனும் தயாராய் இருக்கக்கூடாது! என்னை என் பிள்ளையைக் காட்டி கட்டுப்பட வைத்த தினுசில் அவனை என்ன சொல்லிப் பணிய வைத்தார்களோ? பிள்ளை, பெண் மூலமா? இல்லை, பெண்டாட்டி மூலமா? இல்லை, இரண்டுமே இல்லாமல் பணத்தைக் காட்டியா?

சட்டென்று கௌரிக்கு எதுவுமே பிடிக்காமல் போயிற்று. சே! என்ன இதெல்லாம் என்ற வெறுப்புத் தோன்றியது. தன்னை நினைத்தும், அந்த செக்யூரிடி ஆளை நினைத்தும் ஒரு பாட்டம் அழுதால் தேவலை போலக்கூட இருந்தது.

"அந்த ஆள் யாரு?"

"அது உங்களுக்கு ஏன் தெரியணும்?"

"அந்த செக்யூரிடி ஆள் யார்? ஷர்மாவா, பரமேஸ்வரா, ஆன்டனியா, ரத்தினமா, குப்தாவா, இல்லை தன்சிங்கா?"

"செக்யூரிடி ஆள் ஒருத்தர் உள்ளே நுழைய உதவி பண்ணுவார்னு கேட்டதுமே நீங்க அசந்து போய் உட்கார்ந்திட்டா எப்படி? அடுத்த கேள்வியைக் கேளுங்க, மேடம். ரகசிய நம்பர்களை எப்படித் தெரிஞ்சிக்கப்போறோம், சாவிகளை எப்படி அடையப்போறோம்னு உங்களுக்குத் தெரிய வேண்டாமா?"

ஆ! அதைப்பற்றி எப்படி மறந்துபோனேன்! உள்ளே வந்துவிடுவார்கள். சரி, ரகசிய எண்கள், சாவிகள் எப்படிக் கிடைக்கும்?

"அங்கதான் மேடம் நீங்க வர்றீங்க... அங்கதான் உங்க உதவி எங்களுக்குத் தேவைப்படுது... புரிஞ்சிகிட்டீங்களா?"

அங்கே தொட்டு, இங்கே தொட்டு, கடைசியில் மண்டையிலேயே அடிக்கிறானே, அயோக்கிய ராஸ்கல்!

இதுநாழிகை கொஞ்சமாக இருந்த படபடப்பு இப்போது அதிகமானது.

"நா... நா... என் ஹெல்ப் இங்கே எப்படி?"

நாக்கு உலர்ந்துபோனது.

"ஏன் பதட்டப்படறீங்க, மேடம், ரிலாக்ஸ்! இப்ப என்ன நடந்திடிச்சின்னு இப்படி நடுங்கறீங்க... ம்?. உங்க உதவி எந்த விதத்திலே தேவைப்படுதுனு சொல்லத்தானே நா இத்தனை நாழியா பேசிட்டு இருக்கேன். கேளுங்க... உங்க சாவிகளை முதல்லே நீங்க எங்ககிட்ட கொடுக்கணும், அப்புறம் மௌலியோட சாவிகளை எப்படியாவது கொண்டு வந்து கொடுக்கணும். அப்புறம், ரகசிய நம்பர்களை (-) உங்களுது. அவருது ரெண்டுபேர் நம்பர்களையும்-எங்களுக்குச் சொல்லணும். அவ்வளவுதான். ஸோ-ஸிம்பிள்"

கௌதம் பேசப்பேசக் கழுத்தில் விரலை வைத்து யாரோ மூச்சுவிட முடியாமல் நெரிக்கிற அவஸ்தை கௌரிக்கு உண்டானது.

கண்களை அகலமாக விரித்துக்கொண்டு கௌரி விழித்தாள்.

"என்னால முடியாது... முடியவே முடியாது! என்ன பேசறோம்னு புரிஞ்சுகண்டுதான் பேசறேளா?



சாவி, ரகசிய நம்பர்களை எப்படிக் கொடுக்க முடியும்? அதுவும் மௌலி சாரோடதை நா எப்படிக் கொடுக்க முடியும்? அவர் சாவிக்கொத்தைக் கையால் தொடக்கூட எனக்கு உரிமையில்லை... சாவிகளை உங்ககிட்ட கொடுத்திட்டா நாங்க எப்படி பாங்க்கைத் திறக்கறதாம்? மூளைகீளை இருந்துதான் இந்தப் பேச்சைப் பேசறேளா?"

"அடடா... ரிலாக்ஸ், மேடம்... ஏன் ஆத்திரப்படறீங்க? அத்தனை கஷ்டமானதா இருந்தா உங்களை இதுலே இழுத்திருப்போமா... நிதானத்துக்கு வாங்க... உங்க சாவிகளைச் சும்மா அரைமணி நேரத்துக்குக் கொடுங்க போதும்-அப்புறம் அதைத் திரும்ப நா உங்ககிட்ட கொடுத்திடுவேன்."

என்ன உளறுகிறாய் என்கிற தினுசில் கௌரி பார்த்தாள்.

"மெழுகிலே உங்க சாவிகளைப் பதிய வெச்சிகிட்டு நா அதைத் திருப்பிக் கொடுத்திடுவேன். அந்த மெழுகு அச்சு மூலமா புது சாவிகளைச் செய்யக்கூடிய ஆள் என்கிட்ட இருக்கு. இதேமாதிரி மௌலி சாவிகளை எப்படியாவது அரைமணி ஸ்பேர் பண்ணிங்கன்னா போதும்-ரொம்ப ஸிம்பிள்... என்ன மேடம்?"

கௌரிக்குத் தலை கிறுகிறுவென்று சுத்தியது.

"ரகசிய நம்பர்களைப் பொறுத்தவரை உங்களுடையதை உடனே சொல்லிடலாம். மௌலியோடதைத் தெரிஞ்சிட்டுச் சொல்ல டைம் தேவைப்படும். அதான் முழுசா ஆறுநாள் இருக்கே... அதுக்குள்ளாறவா முடியாது?"

சரேலென்று கௌரி நிமிர்ந்தாள்.

"வாட்? என்ன சொல்றே நீ? இன்னும் ஆறு நாள்னா சொன்னோ? எ..என்ன சொல்றே?"

"மேடம், உங்களுக்குக் கோபம் வந்தா மரியாதையை மறந்துடறீங்க. பரவாயில்லை. நா உங்களை விட ரொம்பச் சின்னவன், 'நீ'ன்னு சொல்லி தாராளமா கூப்பிடுங்க."

கௌதம் சிரித்தது கௌரிக்கு வேண்டியிருக்கவில்லை.

"நா கேட்டதுக்கு பதில் சொல்லு."

"என்ன கேட்டீங்க?"

"இன்னும் ஆறுநாள் இருக்குன்னியே என்ன அர்த்தம்?"

"இதுலே விளக்கறதுக்கு என்ன இருக்கு, மேடம்? இன்னிக்கு சனிக்கிழமை. நாளைக்கு ஞாயிறு. அதுலேந்து வெள்ளி வரை ஆறு முழுநாள் இருக்கு. அந்தக் கணக்கிலே பேசினேன்."

"அப்படின்னா?"

"அப்படின்னா வர்ற வெள்ளிக்கிழமை ராத்திரி நாங்க உங்க பாங்கைத் திருடத் திட்டம் போட்டிருக்கோம்னு அர்த்தம். அதிருஷ்டவசமா வர்ற சனி பாங்க் விடுமுறை. சனி, ஞாயிறு ரெண்டு நாட்கள் நமக்கு இருக்கிறதால, திருட்டைப் பத்தின விவரம் திங்கள் அன்னிக்கு வெளியாறத்துக்கு முன்னே அவங்கவங்க



எந்த ஊருக்குப் போயிடணுமோ, அங்கேகூட சமர்த்தா போயிடலாம்."

கௌதம் ஒரு ரசிப்புடன் சிரித்தான்.

கௌரி நாற்காலியில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டாள்.

நேற்றுதான் மதுசூதன் திட்டம் போட்டதாகச் சொன்னான். அதற்குள் பாங்க் செக்யூரிடி ஆளைச் சந்தித்து, அவனை வழிக்குக் கொண்டுவந்து, இத்தனை விவரங்கள் சேகரித்து... ஒருநாளில் இத்தனையும் சாத்தியமா என்ன? இல்லை, எங்கேயோ எதுவோ உதைக்கிறது.

பாங்க் பற்றின விவரங்களை அறிந்துகொண்டு, மெழுகில் சாவிகளைப் பொருத்தி, புது சாவி தயாரிப்பதிலிருந்து ஸ்ட்ராங் ரூம் திறப்பது வரை திட்டம் தீட்டுவது ஒரு நாளில் எப்படி முடியும்? இல்லை, எங்கோ ஏதோ தவறு இருக்கிறது.

அதுவும் வருகிற சனிக்கிழமை விடுமுறை என்பதைத் தெரிந்துகொண்டு, இன்னும் ஆறு நாட்களில் இந்தத் திருட்டை நடத்தி முடிக்க ஆசைப்படுகிறான் என்றால், இது நிச்சயமாய், சத்தியமாய் ஒரு நாளில் உண்டான திட்டம் இல்லை. நாட்கணக்கில் மண்டையை உடைத்துக்கொண்டால்தான் இப்படித் தீர்மானமாகப் பேச முடியும்..

ஒருநாள் ஐடியா இல்லை என்று வைத்துக் கொண்டால் அந்த போட்டோக்கள் எப்போது

எடுக்கப்பட்டன? அவை போன வார பார்ட்டியில் தானே எடுக்கப்பட்டன. அப்படியென்றால் இந்த பாங்க் கொள்ளைத் திட்டம் நிஜமாகவே ஒரு நாளில் உருவானதுதானா? கௌரிக்கு மூளை குழம்பி விடும்போல இருந்தது.

எது எப்படி இருந்தாலும் நான் இவர்களோடு இந்தச் சதியில் ஈடுபடப்போவதில்லை. ஆறு நாட்களில் இவன் விரட்டும் விரட்டல்களுக்குப் பணிய என்னால் ஆகாது.

என் குடும்பத்துக்கு இதுநாள் ஆதரவு தந்து காப்பாற்றிய பாங்க் திருடு போக நானே உடந்தையாகிவிட்டால் அப்புறம் நான் என்ன மனுஷி?

கோபால மாமா சேர்மனாய் இருக்கும் பாங்க்கை இவர்கள் திருட நான் உதவிவிட்டால் அப்புறம் எனக்கு விமோசனம் ஏது?

"நோ, நான் உடன்படமாட்டேன்."

நிறுத்தி நிறுத்தி கௌரி தன் தீர்மானத்தை வெளியிட்டபோது குரல் ரொம்பத் தழுதழுப்பாக இருந்தது.

## 21

"ஏன் மேடம் முடியாதுங்கறீங்க?"

"எனக்குப் பிடிக்கலை."



"என்ன பிடிக்கலை?"

"எல்லாமேதான் பிடிக்கலை. உங்க பேச்சு, சகவாசம், பிளான் எல்லாமே பிடிக்கலை. இத்தனை வருஷங்களா என் குடும்பத்தைக் காப்பாத்தற பாங்குக்கு நா துரோகம் செஞ்சா, அதைவிடப் பாவம் வேற ஒண்ணும் இல்லே."

"இந்த ஞானோதயம் இப்பத்தான் தோணுதா? இத்தனை நாழி என் திட்டங்களைக் கேட்டப்போ, பாங்க் செக்யூரிடியை விவரிச்சப்போ தோணலியா? 'சரி'னு சொல்லி இவ்வளவு நாழி பேசிட்டு, இப்போ என்ன மேடம் திடீர்னு?"

"திடீர்னு இல்லே... அடி மனசுலே பிறாண்டிண்டேதான் இருக்கு. நேத்தே நா முடியாதுன்னு தானே சொன்னேன்? அப்புறம் என்னவோ பலவீனம், சரினுட்டேன். தப்புதான். இத்தனை நாழி உங்களோட உட்கார்ந்து பேசினதே தப்புதான். இதை ஒரு கனவா நினைச்சு நா மறந்துடறேன்... நீங்க போய் உங்களால் ஆனதைப் பார்த்துக்கோங்கோ..."

கௌதம் ஒரு நிமிஷம் பேசாமல் இருந்தான்.

"அப்ப தீர்மானம் பண்ணிட்டீங்க?"

"யெஸ்."

"நா மேற்கொண்டு என் விருப்பம்போல எது வேணா பண்ணலாம்?"

"........"

"மதுசூதன் காத்திட்டு இருப்பான், போய் நெகடிவ்களை அவன்கிட்ட கொடுத்தா அவனுக்குத்

தெரிஞ்ச ஆஃப்ஸெட் ப்ரஸ்லே போஸ்டர் அடிக்க ஏற்பாடு பண்ணறேன்னான்... இந்தப் படங்களை இன்னும் பத்து காப்பியாவது எடுக்கணும். உங்க சேர்மனுக்கு மட்டும் நேரடியா கொண்டு கொடுக்கணும். சேர்மன் இல்லையா, அதானே மரியாதை? மத்தவங்களுக்கு போஸ்ட்டுலே அனுப்பினா போதும்... சரி... நா வரேன். வேலை கிடக்கு..."

கௌதம் எழுந்தான். சற்று தள்ளி உட்கார்ந்திருந்த விஜய்யிடம் சென்று அவன் தோளைத் தட்டினான்.

"ஸாரி மை பாய்... உங்கம்மா பிடிவாதத்தால உன் வாழ்க்கை அழியப்போகுது... நா என்ன பண்ணட்டும்! சொந்த மகன் நிம்மதியைவிட உங்கம்மாவுக்கு அவங்க பாங்க்தான் பெரிசா இருக்கு... நீ அம்மா பிள்ளைனும், அவங்க உன்பேர்ல உசிரையே வெச்சிருக்காங்கனும் நா நினைச்சது பாதி சரி, பாதி தப்பு... நீ அம்மா பிள்ளைதான், ஆனா அவங்க வித்தியாசமா இருக்காங்க... ஆல் ரைட், வரட்டுமா, விஜய்? நாளைக்கு நீ ஊரறிய பிரபலம் ஆயிடுவே... உனக்கென்னப்பா, பெரிய மனுஷன்!"

கதவை நோக்கி நடந்த கௌதமின் கையை விஜய் பிடித்துக்கொண்டான்.

"ப்ளீஸ், வெயிட்" என்றான்.

ஒரு நிமிஷம் அம்மாவையே கண் கொட்டாமல் பார்த்த விஜய், பார்வையைத் திருப்பி, "கௌதம், ப்ளீஸ் அவசரப்படாதே... கொஞ்சம் டைம் கொடு... ப்ளீஸ்" என்று மெதுவாய்க் கெஞ்சினான்.



விஜய்யின் பரிதாபம் புரிந்த மாதிரி கௌதம் தலையை ஆட்டினான்.

"உன்னைப் பார்த்தா பாவமாதான் இருக்கு, ஆனாலும் பிஸினஸ் ஈஸ் பிஸினஸ். இதுலே ஈவு இரக்கத்துக்கு ஏது இடம்? சரி, உன் முகத்துக்காக நாளைக் காலைவரை காத்துப் பார்க்கறேன். சரியா எட்டு மணிக்கு வரேன். வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டா விஷயம் இருக்கணும். சும்மா வழவழானு இழுத்துக்கிட்டுப் போனா எனக்குப் பிடிக்காது."

கௌதம் கதவைத் திறந்துகொண்டு வெளியே கூடத்துக்கு வந்து, வாசலுக்குப் போனான்.

ஐந்து நிமிஷங்கள் போல கௌரியோ, விஜய்யோ ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை.

அப்புறம் விஜய் மெல்ல அம்மாவிடம் வந்தான். அவள் கழுத்தைக் கட்டிக்கொண்டான்.

"அம்மா, ப்ளீஸ் எனக்காக... இந்த ஒரு தடவை மட்டும்... ப்ளீஸ்ம்மா" என்றவனின் குரல் கிசுகிசுப்பாய் வந்தது. விஜய் அழுகிறான் என்பதைக் கழுத்தில் விழுந்த கண்ணீரைக் கொண்டு கௌரி புரிந்து கொண்டாள்.

"சாப்பிட வரேளா? மத்தியான்னமே சரியா சாப்பிடலையே?"

மாது அறை வாசலில் நிற்பது புரிந்து கௌரி திரும்பினாள்.

இவனுக்கு எவ்வளவு தெரியும்? எங்கள் பேச்சு எவ்வளவு இவன் காதில் விழுந்திருக்கும்?

கழுத்தைக் கட்டியிருந்த பிள்ளையின் கைகளை கௌரி விலக்கினாள்.

"சாப்பிட வாப்பா" என்றாள்.

அவனுக்காகக் காத்திராமல் சாப்பாட்டு அறைக்குச் சென்று, டேபிள் முன் உட்கார்ந்தாள். விஜய் தொடர்ந்தான்.

மாது சப்ஜியும், தாலும், சூடான ஃபூல்கா ரொட்டியும் பரிமாறினான்.

இரண்டுக்குமேல் கௌரியால் சாப்பிட முடிய வில்லை. மோரைக் குடித்துவிட்டு எழுந்தாள்.

"நா போய்ப் படுத்துக்கறேன், விஜய்... ரொம்ப டயர்டா இருக்கு..."

இரண்டடி நடந்தவள், திரும்பி பிள்ளையிடம் வந்தாள். அவன் தலையில் கையை வைத்து ஆதுரத் துடன் தடவினாள். இதமாய்ப் பார்த்தாள்.

மாது சமையற்கட்டுக்குப் போய்விட்டான் என்பது புரிய, மெல்லிய குரலில், "நா யோசிக்கறேன், விஜய்... ராத்திரி யோசிச்சு காத்தால ஒரு நல்ல முடிவுக்கு வரப் பார்க்கறேன். ஆனாப்பா, அதுக்குள்ள அவசரப்பட்டு நீ எதையாவது பண்ணிடாதே. புரியறதா? திரும்பத் திரும்பச் சொல்றேன்... உன் சந்தோஷம், நிம்மதியைவிட எனக்கு எதுவும் பெரிசில்லை. ஆனா... இவா கேட்கற இந்த உதவி... இதை நினைக்கவே என் மனசும், உடம்பும் ஆடிப்போறதுப்பா... உனக்குப் புரியறது இல்லையா? என்னால முடிஞ்ச அளவுக்கு நானும் முயற்சிதான் பண்றேன். விஜய்... ப்ளீஸ் அண்டர்ஸ்டாண்ட்... என்னப்பா?"



விஜய் அம்மாவின் கையைக் கன்னத்தில் பதித்துக் கொண்டான். வாய் வார்த்தையாக எதுவுமே பேச வில்லை.

அறைக்குள் சென்று, கதவைத் தாளிட்டுப் படுத்த கௌரிக்கு அழுகை வெடித்துக்கொண்டு எழுந்தது.

இது என்ன சோதனை? ஒருபக்கம் அருமைப் பிள்ளையின் வாழ்க்கை, இன்னொரு பக்கம் சோறு போடும் பாங்க்...

ஐயோ... நான் என்ன செய்வேன்?

தியாகி வேதாசலத்தின் பெண், சுதந்திர வீரர் சங்கரின் மனைவி... நானா? என்னாலா என் பாங்க்கைக் காட்டிக் கொடுக்க இயலும்?

'போடா போ' என்று கௌரவமை எட்டி உதைக்கலாம் என்றால் வகையாய் அவன் பிடியில் விஜய் மாட்டிக்கொண்டிருக்கிறானே!

விஜய்... என் விஜய்... என் உயிர், உலகம், இன்பம் எல்லாமே அவன்தானே! அவன் அவமானப்படுவதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருந்தால் அப்புறம் நான் என்ன தாய்?

நான் பார்ப்பது இருக்கட்டும். அந்த அவ மானத்தைப் பார்க்க விஜய் உயிரோடு இருப்பானா? மாட்டான், மாட்டான். நேற்று இருபது மாத்திரைகளை விழுங்கிவிட்டவன், நாளைக்கு என்னதான் செய்யத் துணியமாட்டான்?

'மாண்ட்ராக்ஸ் இல்லாட்டா என்ன, மம்மி; தண்டவாளம் இல்லையா, கடல் இல்லையா, கயிறு இல்லையா?'

ஐயோ-விஜய்! துர்மரணத்தில் சாகவாப்பா உன்னை இத்தனை வருஷங்களாகக் கண்ணுக்குள் வைத்து வளர்த்தேன்?

இல்லை.. நான் இதை அனுமதிக்கவே மாட்டேன்.

பாங்க்கைவிட எனக்கு விஜய்தான் முக்கியம்.. என் விஜய்தான் எனக்கு வேண்டும்..

'அம்மா, ப்ளீஸ் எனக்காகம்மா...' என்று கெஞ்சும் அந்த முகத்தை நான் எப்படித் தவிர்ப்பேன்? அந்தப் பார்வை! நெஞ்சில் படர்ந்து உடம்பில் வியாபிக்கும் அந்தப் பார்வை! அதை எப்படித் தட்டுவேன்?

கௌதம் சொன்ன மாதிரி பாங்க்கில் திருடு போனால், பாங்க்குக்கு என்ன நஷ்டம் பெரிதாய் வந்துவிடும்? ம்ஹூம்- ஒன்றும் இல்லை-இன்ஷூரன்ஸ் கம்பெனி பண நஷ்டத்தை பைசா விடாமல் ஈடு செய்துவிடும்! இன்ன பாங்க்கில் திருடு போயிற்று என்று வெளியில் ஊர் உலகத்தார் மட்டமாய்ப் பேசுவார்கள்- அவ்வளவுதானே?

அப்படியானால் பாங்க் விவரங்களை நான் சொல்லி விடுவதில் பாவம் ஒன்றும் இல்லையோ?

ஆமாம், நாளைக்குத் திருட்டைக் கண்டுபிடிக்கும் வேலையில் போலீஸ் இறங்கினால் நானும், விஜய்யும் எந்த அளவுக்கு இதில் மாட்டிக்கொள்ளச் சந்தர்ப்பம் இருக்கிறது?



இதுபற்றி கௌதமிடம் கேட்டால்? உங்கள் திருட்டுக்கு நாங்கள் உடந்தை என்பது தெரியாமல் இருக்கும் என்று நீ உத்தரவாதம் கொடுத்தால் நான் ஒத்துழைக்கிறேன் என்றால்?

அதுதான் சரி!

அப்புறம் திருட்டுக்கு முன்னாலேயே அந்தப் படங்கள் நெகட்டிவ்களை வாங்கிக்கொண்டுவிட வேண்டும்..

வரிசையாகச் செய்யவேண்டியது என்ன என்பது புரிந்ததும் கௌரி மனசில் உண்டான குற்றவுணர்வை, 'என் பிள்ளைக்காக, அவன் சந்தோஷத்துக்காக' என்ற சமாதானத்தால் ஒதுக்கித் தள்ளிவிட்டுத் தூங்க முயன்றாள்.

காலையில் இவளுக்கு முன் விஜய் எழுந்துவிட்டிருந்தான். காபியைத் தானே எடுத்துக்கொண்டு அம்மாவிடம் அறைக்கதவைத் தட்டி அவனே எழுப்பினான்.

கௌரி முகம் அலம்பிக்கொண்டு வந்ததும் காபியை அவளிடம் நீட்டினான்.

"உனக்கு எதுக்குப்பா சிரமம்? ம்? நன்னா தூங்கினியா நீ?"

'ஃபைன்' என்று சொல்லுகிற தினுசில் விஜய் புன்னகைத்து, அம்மாவை நெருங்கி, அவள் கையைப் பிடித்துக்கொண்டான்.

விஜய்யின் தவிப்பு கௌரிக்குப் புரிந்தது.

"ரிலாக்ஸ், விஜய்-உனக்காக நா எதுவேணா செய்வேன்-ஸோ ரிலாக்ஸ்" என்று அவள் முணு முணுத்ததும், கண்கள் பனிக்க கௌரியின் கையை லேசாய் அமுக்கி "தேங்க்ஸ், மம்மி" என்றான் விஜய்.

கௌரி குளித்துத் தயாராகி வருவதற்குள் கௌதம் வந்துவிட்டான். அவள் விஜய்யின் அறைக்குள் நுழைந்தபோது, இருவரும் மெல்லிய குரலில் ஏதோ பேசிக்கொண்டிருந்தனர்.

அவளைக் கண்டதும் பேச்சை நிறுத்திவிட்டு, விஜய் தள்ளிப்போய் அமர்ந்துகொண்டான்.

"எனக்குச் சில சந்தேகங்கள் இருக்கு. அதைத் தெளிவுபடுத்திக்கணும்..."

"தாராளமா! கேளுங்க..."

"முதல்லே விஜய்யும், நானும் இதுலே எந்த விதத்திலே சம்பந்தப்பட்டிருக்கோம்னு தெரியணும்-நாளைக்கு நீங்க கோணாமாணான்னு எதையாவது செய்யப்போய் நாங்க மாட்டிண்டு முழிக்கக்கூடாது... என்ன?"

"நீங்களாவது சில விவரங்கள் கொடுக்கறதால இந்தத் திருட்டுக்குப் பின்னணிலே இருக்கீங்க, ஆனா விஜய்க்கும் இந்த ப்ளாட்டுக்கும் என்ன சம்பந்தம்?"

"நிச்சயமா இருக்கக்கூடாது. இது முக்கியம்! சொல்லப்போனா, அடுத்த வாரம் விஜய் இங்கே இருக்காம வெளியூர் போயிடறதுகூட நல்லதுனு நா நினைக்கிறேன்."



மெல்லியதாய் விஸில் அடித்தான் கௌதம்.

"ஆ...ஹா...நா எதிர்பார்த்ததைவிட நீங்க புத்தி சாலியாதான் இருக்கீங்க... குட்... குட்... சரி, விஜய்யை வெளியூருக்கு அனுப்பிடுவோம்...மேலே?"

"அப்புறம்-வியாழக்கிழமை சாயங்காலத்துக் குள்ளே அந்தப் படங்கள், நெகட்டிவ் எல்லாம் என் கைக்கு வந்தாயிடணும். எத்தனை படங்கள் எடுத் தேனோ, அத்தனையும் கொடுப்பேங்கற நம்பிக்கை யோட பேசறேன்."

"நிச்சயமா! அப்புறம்?"

"மதுசூதன், ரம்யா, உங்களைத் தவிர இதுலே இன்னும் யார்யார் சம்பந்தப்பட்டிருக்கா? இந்த மதுசூதன் ஏன் உங்ககூட வரதில்லை? ஐடியா அவருதுன்னா அவரும் வரணும்தானே?"

"நாங்க எத்தனை பேர், அவங்க யார்யார்ங்கற விவரம் உங்களுக்கு எதுக்கு, மேடம்? அனாவசியமான கேள்வி இது... மதுசூதன் உங்களை வந்து ஏன் பார்க்கணும்? அவன் கோடீஸ்வரன், என்னமோ ஒரு 'கிக்'குக்காக இந்தத் திட்டத்தைத் தீட்டியிருக்கான். அதுக்காக நீங்க ஏன் அவனைப் பார்க்கணும்? நோ... உங்க பிள்ளையும், நீங்களும் பத்திரமா இருப்பீங்க, அப்புறம் அந்த போட்டோஸ் ஒட்டுமொத்தமா உங்க கைக்கு வியாழக்கிழமை வந்திடும். ஓ.கே. இனிமே உங்க முடிவு மாறாதுனு நா நம்பலாமா? ஸ்திரமா ஒரு தீர்மானத்துக்கு வந்துட்டீங்க இல்லே? உங் களை நம்பிக் காரியத்துலே இறங்கினப்புறம் பின்

வாங்கினீங்கன்னா ரொம்பக் கஷ்டமாயிடும்... உங்க விஜய்மேல ப்ராமிஸா இனி பின்வாங்கமாட்டீங்க இல்லே?''

"இதுக்கு எதுக்கு பிராமிஸ்? அதுவும் விஜய் மேல?''

"அப்பத்தான் நீங்க உறுதியா இருப்பீங்க, மேடம். நேத்திலேந்து எத்தனை தடவை மனசு மாறிட்டீங்க. அதைத் தடுக்கத்தான் இந்தப் பிராமிஸ்...''

"..........''

"என்ன, பதிலைக் காணோம்...''

"சத்தியமா சொல்றேன்...''

இதுநாழிகை இருந்த கடுமை மாறி, கௌதம் மெதுவாய்ச் சிரித்தான்.

அப்பாடி என்ற நிம்மதி முகத்தில் பரவியது தெளிவானது.

இரண்டு நிமிஷங்கள் போலச் சென்றதும் கௌதம் எழுந்தான்.

"இனி நமக்கு வீணடிக்க ஒரு செகண்ட்கூடக் கிடையாது. எக்கச்சக்கமாய் வேலை இருக்கு... முதல்லே உங்க சாவிக்கொத்தைக் கொடுங்க, மேடம்... நா அச்சு எடுத்துகிட்டுச் சாயங்காலம் திருப்பிக் கொண்டு வரேன்... நாளைக்கு, இல்லே தவறினா கண்டிப்பாய்ச் செவ்வாய்க்கிழமை நீங்க மௌலி சாவிகளைக் கொண்டு வந்துடணும், அப்புறம் டைம் இல்லே மானேஜர் ரூம்லே அலாரம் ஸ்விட்ச் எங்கே இருக்குனு கண்டுபிடியுங்க...



மௌலிகிட்டயிருந்து ரகசிய நம்பர்களை எப்படித் தெரிஞ்சிக்கறதுனு யோசனை பண்ணுங்க...''

முதல் நாள் மாலை, "ஹௌ ஆர் யு நௌ?'' என்று கேட்டுவிட்டு, பாலாஜி கொடுத்துச் சென்றிருந்த பாங்க் சாவிக்கொத்தைக் கொண்டுவந்து கௌதமிடம் நீட்டிபோது, கௌரியின் கண்களில் கண்ணீர் குளமாய்த் ததும்பியது.

## 22

கௌரியின் முகம் கொஞ்சம்கூட நன்றாக இல்லை என்பதை மௌலி அவள் காரில் ஏறும் போதே பார்த்து விட்டார்.

"குட்மார்னிங், மௌலி சார்,'' என்றவனை முழுசாய்ப் பார்த்தபோது அவருக்கு எப்படியோ இருந்தது.

ரத்தம் சுண்டிப்போய் வெளுத்த முகமும், துவண்ட உடலுமாய்... கௌரியா இது? இரண்டு நாளில் ஏன் இப்படி ஆகிவிட்டாள்?

"உடம்பு இன்னும் நன்னா தேவலை ஆகலியா, கௌரி-''

"இல்லையே சார்... ஐ'ம் ஓ.கே'' கௌரி சிரிக்க முயன்றாள்.

"நோ... நோ... உங்களைப் பார்த்தா அப்படி இல்லையே! பத்து நாள் ஜுரத்திலே கிடந்த மாதிரின்னா

மூஞ்சியும், கண்ணும் இருக்கு.. டாக்டரைப் பார்த்தேளோ? இன்னிக்கும் ரெஸ்ட் எடுத்துக்கறதுதானே? உடம்புக்கு முடியாமயாவது வேலைக்கு வரணுமா என்ன?"

"நிஜம்மா நா சாதாரணமாதான் இருக்கேன், சார். டாக்டரைப் பார்த்தேன். ஃப்ளுனு சொன்னார். இன்னிக்கு நார்மல்தான். வீட்டுலே இருந்தா போர் அடிக்கறது.."

மேற்கொண்டு மௌலி அவளை ஏதும் கேட்கவில்லை.

---

நேர்ப்பார்வையாய்ச் சாலையைப் பார்த்துக் கொண்டு வந்தார்.

பின்ஸீட்டிலிருந்து அவரைக் கண்கொட்டாமல் கவனித்த கௌரிக்கு, 'இவரிடமிருந்து சாவிக் கொத்தை எப்படிக் கிளப்புவது?' என்ற யோசனை எழுந்தது.

காஷ் பொறுப்புள்ள ஆபீஸர்கள் தங்கள் சாவிக் கொத்துகளை விட்டு எக்காரணத்தைக் கொண்டும் பிரியக் கூடாது என்பது பாங்கின் கண்டிப்பான விதிகளில் ஒன்று.

அப்புறம் எப்படி மௌலியின் கொத்தை எடுப்பது சாத்தியமாகும்?

பாங்க் வந்துவிட்டது. இருவரும் இறங்கி உள்ளே போனார்கள்.

காவலாளி சலாம் வைத்தான். பின், "உடம்பு தேவலையா, மேடம்?" என்றான்.



கௌரி உள்ளே நுழைந்து தன் இருக்கைக்கு வருவதற்குள் அவள் உடம்பு எப்படி இருக்கிறது என்று பலர் விசாரித்துவிட்டனர்.

பார்த்தசாரதி, "என்ன கௌரி, இத்தனை வீக்கா இருக்கேள்! ஒரு நாள் ஜுரத்திலேயே?" என்றார்.

கால் மணி கழித்து, கீழே போய்ப் பணத்தை எடுத்து, லாக்கர் அறைகளைத் திறந்தபின், மாடிக்கு வந்தவளைப் பார்த்த பாலாஜியும் அதையே கேட்டார்.

"லீவு போடறதுதானே, கௌரி! ஏன் சிரமப் படுத்திக்கறீங்க?" என்ற கேள்விக்கு 'ஓ ஐம் ஆல்ரைட்' என்று சொல்லிப் புன்னகைத்துவிட்டு, கைப்பையுடன் பாலாஜியின் அறைக்குப் பக்கத்திலிருந்த டாய்லெட்டுக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டாள்.

கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்த்துக் கொண்டவளுக்கு லேசாய்த் தூக்கிவாரிப்போட்டது நிஜம்.

கலைந்த தலையும், கண்களின் கீழ் கறுப்பு வளையங்களும்.. என்ன இது!

இந்த ஐந்து நாட்களிலும்தான் நான் அதிக கவனத்துடன் நடந்து கொள்ள வேண்டும். யாருடைய தனிப்பட்ட பார்வையும் என் மேல் விழாமல் நடந்து கொள்ள வேண்டும். எந்தவிதச் சின்ன சந்தேகமும் எழாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அதை விட்டுவிட்டு இப்படித் தலையும் வேஷமுமாய் நின்றால், 'ஏறோ! இவளுக்குள் ஏதோ வேதனை. அதுதான்

இப்படி இருக்கிறாள். ஏதோ தர்மசங்கடத்தில் மாட்டிக்கொண்டுவிட்டாள், அதுதான் இப்படி விழிக்கிறாள். என்னவோ தப்புக் காரியம் பண்ணப்போகிறாள், அதுதான் ஆடு திருடின கள்ளன் மாதிரி ஒரு விழி, ஒரு பதட்டம் என்று நானே எல்லோருக்கும் தம்பட்டம் அடித்துச் சொல்லி விடுவதைப் போல என்ன கோலம் இது?

நோ, இது தப்பு! இனிமேல் இப்படியொரு அசட்டுத்தனம் பண்ணக்கூடாது. சாதாரணமாய், நித்தமும் இவர்கள் பார்த்துப் பழகிப்போன கௌரியாய் இருப்பதும் ரொம்ப அவசியம்.

பேஸின் மேல் இருந்த ஸோப்பை உபயோகித்து கௌரி, முகத்தை அலம்பிக்கொண்டாள். அருகில் இருந்த அலமாரியைத் திறந்து, அங்கு அடுக்கி வைத்திருந்த டவல்களில் ஒன்றை எடுத்து, அழுந்தத் துடைத்துக்கொண்டாள்.

அந்த பாங்க்கில் பர்ஸனல் டிபார்ட்மெண்டில் நான்கு டாய்லெட்டுகள் இருந்தன. அவற்றைத்தான் பாங்க்கில் அனைவரும் உபயோகிப்பது வழக்கம். மானேஜர் அறைக்கு அருகிலுள்ள இந்த டாய்லெட்டை பாலாஜி மட்டும்தான் உபயோகிப்பார். மற்றபடி பாங்க்குக்கு வரும் ஒருசில புள்ளிகள், வாடிக்கையாளர்கள் உபயோகிக்கவென வெளியே ஃபோயரில் இரண்டு தனியாய் இருந்ததைத் தவிர கீழே பேஸ்மெண்டில் ஒன்று உண்டு, லாக்கர் உபயோகிக்கும் வாடிக்கையாளர்களின் உபயோகத்துக்கென.



பர்ஸனல் டிபார்ட்மெண்ட் வரை போகச் சோம்பல் படும் நாட்களில் கௌரி மேன் டாய்லெட்டுக்குப் போவது வழக்கம்தான்.

டவலை மாட்டிவிட்டுப் பையிலிருந்து சீப்பை எடுத்துக் கொண்டையை அவிழ்த்து வாரிச் சுத்தமாய்ப் போட்டுக்கொண்டாள். பவுடரை லேசாகப் பூசி, புடவையைச் சரிசெய்துகொண்டு சாதாரண கௌரியாய் இருக்கிறோம் என்ற உணர்வு உண்டான பிறகு அவள் வெளியில் வந்தாள்.

திங்கட்கிழமைகள் எப்போதுமே பிஸியானவை தான்.

கௌண்டரில் கூட்டம் நெரிந்தது.

பத்து நிமிஷங்களை அநாவசியமாகச் செலவிட்டுவிட்டோம் என்ற குறுகுறுப்பு எழ, மேஜை டிராயரைத் திறந்து கைப்பையை வைத்தாள். அன்றைய வேலைகளை கவனிக்கத் தயாரானாள்.

ஹூண்டி பில்களை கவனிக்கும் நாள் அது.

ஹூண்டி எனப்படுவது ஒருவகை ஸ்டாம்ப் பத்திரம். பெரிய பெரிய மார்வாடிகள், அடகு பிடிப்பவர்கள், பைனான்சியர்கள் தங்கள் ஸ்திர சொத்துக்களை பாங்க்கில் கொலாட்ரல் காரண்டியாக வைத்து, அதன்மேல் லட்சக்கணக்கில் பணம் கடனாகப் பெறுவார்கள். பதினான்கு வட்டிக்கு வங்கியிடம் பெறும் பணத்தை வெளியே பதினெட்டு, இருபத்துநான்கு, சில சமயங்கள் முப்பத்தாறு என்ற வட்டி விகிதாசாரத்தில் கூட வெளி பார்ட்டிகளுக்குக் கடன் கொடுப்பார்கள். இப்படி பாங்க்கில் ஹூண்டி

பத்திரங்களை எழுதிக் கொடுத்துப் பணம் வாங்கி அதை வெளியில் திரும்ப உயர் வட்டிக்குக் கடனாகக் கொடுப்பதைத் தொழிலாகக் கொண்டவர்கள் ஏராளம்.

சொத்துகள்மேல் பணம் கொடுக்கப்படுவதால் பாங்க்குக்குப் பணத்தைப் பற்றின கவலை இல்லை. கொழுத்த பணக்காரர்கள் பலர் தங்கள் சொந்தப் பணத்தை வட்டிக்கு விட விரும்பாமல், பாங்க்கில் கடன் வாங்கி, அதை வியாபாரத்தில் புரட்டுவது பெரிய பட்டணங்களில் ரொம்ப சகஜம். மாதம் ஒரு தடவை அல்லது நாற்பத்தைந்து நாட்களுக்கு ஒருமுறை இந்தப் பத்திர ஹூண்டிதாரர்கள் வந்து, வாங்கின கடனை வட்டியுடன் கட்டிவிட்டு உடனுக்குடனேயே திரும்பப் புதுத்தொகை பெற்று, இன்னொரு பத்திரத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டுப் போவார்கள்.

இன்று ஹூண்டிதாரர்கள் பணம் திரும்பும் நாள். வழக்கமான வாடிக்கைக்காரர்களுடன், சிவப்பான மார்வாடிகளின் கூட்டம் எக்கச்சக்கம்.

'எனக்கு இந்தமுறை உபரிப் பணம் வேண்டும்.' "என்னால் இன்று பணத்தை முழுவதும் கட்ட இயலாது. எதிர்பார்த்த பார்ட்டி பணத்தைக் கொண்டு வந்து தரவில்லை" என்று தினுசுதினுசான வேண்டுகோள்களுடன் தன்னைச் சந்திக்க விரும்பியவர்களைச் சமாளித்தவாறே தன் அன்றைய அலுவல்களையும் கௌரி செய்து முடித்தாள்.

மணி ஒன்றிருக்கும். பார்த்தசாரதி சாப்பிடப் போய்விட்டார்.



பாங்க்கில் கூட்டம் கொஞ்சம் குறைந்திருந்தது.

அறைக்கு வெளியே வந்து நின்ற பாலாஜி, "கௌரி... ஒரு பிரச்சினை-பத்து நிமிஷம் வரமுடியுமா?" என்றதும் கௌரி தலைநிமிர்ந்தாள்.

பாலாஜி லேசாகப் பதற்றமாய் இருக்கிற மாதிரி தோன்றியது.

என்ன சமாச்சாரம்? சட்டென்று அரைமணி முன்தான் பாலாஜி அறைக்குள் போனதும், அங்கு சோபாவில் சுஷில்குமாரும், சந்தோஷும் அமர்ந்திருந்ததும், கூட இன்னும் இரண்டு வடநாட்டவர் இருந்ததும், அவர்கள் முகங்கள் கோபமாக இருந்ததும் கௌரிக்கு ஞாபகம் வந்தது.

சுஷில்குமாரும், சந்தோஷும் பெரும் பணக்காரர்கள். சௌகார்ப்பேட்டையில் இந்தக் கோடிக்கு அந்தக் கோடி கட்டடங்களுக்கு உரிமையாளர்கள். மாசாமாசம் லட்சக்கணக்கில் ஹூண்டியில் பணம் வாங்கி பைசா தப்பாமல் அலட்சியமாய்த் திரும்பக் கட்டும் பெரும் தனக்காரர்கள்.

எதற்காக முகத்தை அவர்கள் என்னவோபோல வைத்துக்கொண்டிருந்தார்கள்?

கூட வந்திருந்தவர்கள் யார்?

கௌண்டரில் யாராவது மரியாதைக்குறைவாய் நடந்துகொண்டுவிட்டார்களா?

இந்தப் பணக்காரர்களிடம் இது ஒரு பெரிய [illegible]

ஷோடஸ உபசாரங்களில் கொஞ்சம் குறைந்து விட்டாலும் துசுக்கென்று கோபம் வந்துவிடும்.

இவர்கள் போய் நின்றவுடன் டெல்லர் கவனிக்க வேண்டும். இரண்டு நிமிஷம் தாமதித்துவிட்டாலோ, 'கொஞ்சம் காத்திருக்கக் கூடாதா?' என்று ஒரு வார்த்தை கேட்டுவிட்டாலோ பிரமாதமாய் அடி பட்டுப்போய் விடுவார்கள்.

"உன் பாங்கில் நான் போட்டு வைத்திருக்கும் டெபாசிட்டை எடுத்துவிடுகிறேன்-வெத்தலை பாக்கு வைத்து எத்தனையோ பேர்கள் அழைக்கிறார்கள்-அங்கு பணத்தைப் போடுகிறேன்" என்று ஆரம்பித்து விடுவார்கள்.

இன்று என்ன?

மேஜையைப் பூட்டி எழுந்த கௌரி, டெலிபோன் ஆபரேட்டரை அழைத்து, "நா மானேஜர் ரூமுக்குப் போறேன், ஏதாவது கால் வந்தா அங்கு குடு" என்று சொல்லிவிட்டு பாலாஜியின் அறைக்குள் நுழைந்தாள்.

பாலாஜியின் முகம் நன்றாகவே இல்லை.

அறைக் கதவைச் சாத்தியவர் குறுக்கும் நெடுக்கும் நடந்தவாறு மெதுவாய்ப் பேசினார்.

சற்று நேரத்திற்குமுன் கஷில்குமாருடன் வந்திருந்த புதியவர்கள் வடநாட்டில் ஒரு கால், தென் நாட்டில் ஒரு கால் என்று ஊன்றிக்கொண்டு திரைப் படத் தயாரிப்புக்களுக்குப் பண உதவி செய்பவர்களாம். ஏராளமான சொத்து. வழக்கம்போலத் தங்கள் சொந்தப் பணத்தை ஸ்திர சொத்துக்களாகவும், பாங்க்கில் டெபாசிட்டுகளாகவும் வைத்துவிட்டு, அவற்றின் மேல் கடன் வாங்கி முப்பத்தாறு, நாற்பத்தெட்டு வட்டிக்கு விடுபவர்களாம்.



கஷில்குமார் மூலம் இந்த பாங்க்கின் கறுப்பைப் பற்றிக் கேள்விப்பட்டு இதில் ஹூண்டி தொடர்பு கொள்ள விருப்பம் கொண்டு விண்ணப்பம் போட்டிருக்கிறார்களாம். பாங்க்கின் பழக்கத்தின்படி கிரெடிட் இன்வெஸ்டிகேட்டர் செல்லப்பா இவர்களின் சொத்து விவகாரங்களைப்பற்றி அறிந்து கொள்ளப் போயிருந்தாராம். எல்லாம் திருப்திகரமாக இருக்கவே, "பாங்க்கில் உங்களுக்குக் கடன் கொடுக்க நான் சிபாரிசு செய்கிறேன். ஆனால், நீங்கள் கேட்பது பத்து லட்சம். இது கொஞ்சம் பெரிய தொகை. பரவாயில்லை என்று ஸ்பெஷலாய் சிபாரிசு செய்கிறேன்" என்றவர், தொடர்ந்து, "என் கமிஷன் ஒரு பர்ஸெண்டை முன் பணமாய்க் கொடுத்துவிட வேண்டும். அப்புறம் மூன்றாம் மனிதரிடம் இதுகுறித்து நீங்கள் பேசக்கூடாது" என்றும் சொன்னாராம்.

செல்லப்பா அந்தப் பக்கம் போனதும் கஷில்குமாரைச் சந்தித்து விவரம் சொல்லி, "நீகூட இவ்வளவு கமிஷன் கொடுத்தாயா?" என்று அவர் கேட்டிருக்கிறார். "நான் அரை பர்ஸெண்ட்தான் கொடுத்தேன்" என்று கஷில்குமார் சொல்லவும் இவருக்குக் கோபம் வந்துவிட்டது. 'இது என்ன தில்லுமுல்லுத்தனம்! வாங்குவதோ லஞ்சம்; இதில் ஆளாளுக்கு ஒரு ரேட் வேறு!' இதை பாங்க்கில் புகார் பண்ண வேண்டும் என்ற ஆத்திரம் எழ, அவர்கள் வந்திருக்கிறார்களாம்.

பாலாஜி பேசிமுடிப்பதற்குள் கௌரியின் முகம் சிறுத்துப் போயிற்று.

இந்த பாங்க்கிலா? லஞ்சமா? அதுவும் செல்லப்பாவா?

தெய்வபக்தி நிறைந்த செல்லப்பா... குழந்தை குட்டி இல்லாத செல்லப்பா... சிரிக்கச் சிரிக்க சாந்தமாகப் பேசும் செல்லப்பா... அவரா இப்படிச் செய்தார்?

"செல்லப்பா இந்த மாதிரி லஞ்சம் ரொம்ப பேர்கிட்ட வாங்கியிருக்கார்னு இப்பதான் தெரிய வரது. கௌரி, இதற்கு உடனடியாய் ஒரு முடிவு கட்டணும்... நீங்க என்ன நினைக்கறேள்?"

"ரொம்ப வருத்தமா இருக்கு... செல்லப்பா இப்படி பண்ணுவார்னு என்னால நிஜமா நம்பமுடியலை..."

"மத்தியானமா செல்லப்பாவைக் கூப்பிட்டுப் பேசணும்... நாம்ப டிஸ்மிஸ் பண்ணறதைவிட அவராகவே ராஜினாமா பண்ணறதுதான் அவருக்கு நல்லது..."

இந்த பாங்க்கின் வழக்கமே அதுதான். யாராவது தப்புப் பண்ணிவிட்டால், அது மன்னிக்க முடியாததாக இருந்தால், தனியாக அந்த நபரைக் கூப்பிடுவார்கள்.

"விஷயம் எங்களுக்குத் தெரிந்துவிட்டது. நாங்கள் டிஸ்மிஸ் செய்யவா, இல்லை, நீங்களாகவே கௌரவமாக விலகிக்கொள்கிறீர்களா?" என்று கேட்பார்கள்.

மத்தியானம் செல்லப்பாவையும் பாலாஜி இப்படித்தான் கேட்பார். தொங்கிப்போன முகத்தோடு



ராஜினாமா கடிதத்தை எழுதிக் கொடுத்துவிட்டுச் செல்லப்பா போவார். அப்புறம் நாளையிலிருந்து வேலைக்கு வரமாட்டார்.

திடுமென்று கௌரிக்கு தான் செய்யப்போகும் தப்பின் நினைப்பு வந்தது. செல்லப்பா லஞ்சம் கேட்டது பணத்தாசையால்... நான் பாங்க்கை காட்டிக் கொடுக்கப் போவது பிள்ளைப் பாசத்தால்...

என் தவறு வெளியில் தெரிந்தால் எனக்கு என்ன தண்டனை கிடைக்கும்?

நான் செய்யப்போகும் குற்றம் ரொம்பப் பெரிசு... அதனால் தண்டனையும் கடுமையாகத்தான் இருக்கும்...

கௌரியின் நெஞ்சில் வேதனை, முள்ளாகக் குத்தியது...

பார்வையை நிமிர்த்தின பாலாஜி, அவள் செல்லப்பாவை நினைத்து வேதனைப்படுகிறாள் என்று எண்ணி ஒரு பெருமூச்சு விட்டார். பின், "நாம வருத்தப்பட்டு என்ன புண்ணியம்? அந்த மனுஷனுக்குப் புத்தி இல்லாம போயிட்டுதே!" என்றார்.

கௌரி பதில் சொல்லவில்லை. கண்களைத் துடைத்துக் கொண்டு தன் நினைப்பை மாற்ற முயன்றாள்.

பாலாஜி மணியைப் பார்த்தார்.

இரண்டு -

கைகளைத் தலைக்குமேல் தூக்கிச் சோம்பல் முறித்தார்.

"சாப்பிடப் போகணும். நாழியாச்சு.. வந்து லீகல் டிபார்ட்மெண்டுக்குப் போய்ச் செல்லப்பா கேஸ்லே நம்ப பொஸிஷனை தெரிஞ்சுக்கணும். அவரோட பேசறதுக்கு முன்னாலே சட்டரீதியா நம்ப நிலைமை என்னன்னு புரிஞ்சிருக்கிறது முக்கியம் இல்லையா?"

மேஜை டிராயர்களைப் பூட்டி, சாவிக்கொத்தைப் பையில் போட்டுக்கொண்ட பாலாஜி எழுந்தார்.

கௌரி தன் இருக்கைக்கு வந்து உட்கார்ந்தாள்.

களைப்பாக இருந்தது. உடம்பு ரொம்ப பல ஹீனமாகிவிட்ட மாதிரி தோன்றியது.

மனசுக்குள் செல்லப்பா புகுந்துகொண்டு வலிக்க வலிக்கக் குடைந்தார்.

வழக்கமாகப் பண வியாபாரம் முடிந்து சாப்பிடப் போகும் கௌரிக்கு அன்று சாப்பிடக்கூடப் பிடிக்க வில்லை.

நாயரைக் கூப்பிட்டுச் சூடாக ஒரு டீ கொண்டுவரச் சொன்னாள். அத்தப் பிரயத்தனத்துடன் ஃபைல்களைப் பிரித்து அவற்றில் கவனத்தைச் செலுத்த முயன்றாள்.

மூன்றடிக்கப் பத்து நிமிஷங்கள் இருக்கையில் போன் சப்தித்தது.

பாலாஜிதான் பேசினார். லிஃப்டிலிருந்து நேரே மாடியில் இருந்த லீகல் டிபார்ட்மெண்டுக்குப் போய் விட்டாராம்.

"லீகல் அட்வைசர் சுப்ரமணியனை ஃபோயர்லே பார்த்தேன். அவரோட பேசிண்டே மாடிக்கு



வந்துட்டேன். இப்பத்தான் செல்லப்பாவோட ஃபைலை எடுத்துண்டு வரலைன்னு ஞாபகம் வந்தது. ப்யூன்கிட்ட சாவிக்கொத்தை அனுப்பறேன், என் ரூம்லே மூணாவது கப்போர்ட்லே வாங்கி வெச்சிருக்கேன், அதை மேலே கொடுத்தனுப்ப முடியுமா?"

ஆறாவது நிமிஷம் ப்யூன் சாவிக்கொத்துடன் வந்து நின்றான்.

இதுவரைக்கும் கௌரி மேனேஜர் அறையில் உள்ள சின்னச் சின்னச் சுவர் அலமாரிகளைத் திறந்தது கிடையாது. ஏனோ அப்படி ஒரு சந்தர்ப்பம் வந்ததே இல்லை.

மூன்று என்ற நம்பர் போட்ட அலமாரியைத் திறந்து, ஃபைலை எடுத்த கௌரிக்கு திடுமென்று மற்ற அலமாரிகளுள் என்ன இருக்கிறது என்று பார்க்கத் தோன்றியது.

பார்த்தால் என்ன?

சே- இது தப்பு!

என்ன தப்பு? பாலாஜியின் அந்தரங்க சமாசாரங்களையா குடையப்போகிறேன்? பாங்க் அலமாரிகள்தானே?

தலையைத் திருப்பி வெளியே கௌரி பார்த்தாள். ஆள் நடமாட்டம் இல்லை.

நம்பர் பார்த்துச் சாவிகளைப் பொருத்தி முதல் இரண்டு அலமாரிகளைத் திறந்தாள். இரண்டிலும் ஏதேதோ ஃபைல்கள்

நான்கு என்ற நம்பர் போட்ட அலமாரிக் கதவு பூட்டப்படாமல் வெறுமனே சாத்தப்பட்டிருந்தது. குமிழைப் பிடித்து அதைத் திறந்தாள். உள்ளே சாக்லெட் பெட்டி சைஸில் ஒரு சிவப்பு டப்பா.

என்ன இது?

மெதுவாய் மூடியைத் தூக்கினாள்.

உள்ளே இரண்டு ஸ்விட்சுகள். அலாரம் நம்பர் ஒன், அலாரம் நம்பர் டூ என்ற எழுத்துக்களோடு மொட்டு மொட்டென்று விழித்தன.

மானேஜர் போன பிறகு, உள்ளே தங்கும் காவலாளி அறைக் கதவைத் திறந்து 'ஆன்' பண்ணுவது இந்த ஸ்விட்சுகளைத்தானா?

கஷ்டப்படாமல் அலாரம் ஸ்விட்ச் இருக்கும் இடம் தெரிந்துவிட்டதைப் புரிந்துகொண்ட கௌரிக்குத் திடீரென்று ரொம்பப் படபடப்பாக இருந்தது.

## 23

அன்று மாலை கௌரியைச் சந்திக்க வந்த கௌதம், அலாரம் ஸ்விட்சுகள் எங்கே இருக்கின்றன என்பதைக் கண்டுபிடித்துவிட்டதாக அவள் சொன்னதும் எத்தனைக்கெத்தனை சந்தோஷித்தானோ, அத்தனைக்கத்தனை மௌலியிடமிருந்து சாவிக்கொத்தை அபகரிக்க கௌரி திட்டம் திட்டவில்லை என்பது புரிந்தபோது கோபித்தான்.



"இன்னிக்கு எப்படியும் மௌலியோட சாவிக் கொத்தைக் கொண்டுவருவீங்கனு நினைச்சிருந்தோம். ஏமாத்திட்டீங்களே... முயற்சி பண்ண முடியாதா என்ன?"

"அதென்ன அவ்வளவு சுலபமான காரியமா? ஒருத்தரோட சாவிக்கொத்தை அவர் அறியாம எப்படி எடுக்க முடியும்? பேசறத்துக்கு முன்னால் யோசிச்சா தேவலை.. எனக்கென்னமோ இந்த வெள்ளிக்கிழமைக் குள் நீங்க நினைக்கறது நடக்கும்னு தோணலை. தள்ளிப்போட வேண்டியிருக்கும்.."

"ஆ.. அந்தப் பேச்சு மட்டும் வேண்டாம், மேடம்.. நாளைக்கு நீங்க எப்படியாவது சாவிக்கொத்தைக் கொண்டுவந்துதான் ஆகணும். எங்க கீ எக்ஸ்பர்ட் குறைஞ்சது மூணு நாளாவது டைம் கேக்கறான். நாளைக்காவது கொடுத்தாத்தான் எல்லாம் திட்டப் படி நடக்கும். அதனால நீங்க கொண்டுவந்துதான் ஆகணும்!"

"உத்திரவு போட்டா மட்டும் ஆச்சா? காரியம் பண்ணற எனக்குன்னா கஷ்டம் தெரியும்?"

"என்ன பெரிய கஷ்டம், மேடம்... மௌலிக்குச் சாவிக்கொத்தை விரல்லே சுழட்டிகிட்டே நடக்கற பழக்கம் உண்டு இல்லியா? தினமும் ரெண்டு தரம், மூணு தரம் அப்படிச் சுழட்டறப்போ கீழே விழறதை எத்தனையோ தடவைகள் நீங்களே எடுத்துக் கொடுத் திருக்கீங்க... நாளைக்கு அப்படி விழறப்போ உங்க கொத்தைத் தயாரா வெச்சிகிட்டு உடனே மாத்திட வேண்டியதுதானே! ரெண்டு கொத்தும் ஏறத்தாழ ஒரே

மாதிரியாகப் பார்க்க இருக்கும் இல்லியா? உங்க கொத்துச் செயின் வேற தினுசில் இருக்கறதைக் கழட்டிட்டா ரெண்டுக்கும் சட்டுனு வித்தியாசம் தெரியாது. அட, அப்படி மாத்த முடியாட்டாலும் வேற சந்தர்ப்பமா உங்களுக்குக் கிடைக்காது? காலைலே, சாயங்காலத்துலே ரெண்டு சந்தர்ப்பத்திலேயும் கீழே ஸ்ட்ராங்க் ரூமுக்குள் போயிட்டு வந்ததும் மௌலி உடனடியா உங்களை மாதிரி டிராயர்லே சாவிக்கொத்தை வெச்சி பூட்டமாட்டார். ரைட்! நீங்ககூட 'என்ன சார், இப்படி டேபிள் மேலேயே வெச்சிருக்கீங்க, இது பாங்க் ரூல்ஸ்க்கு மீறின செய்கையாச்சே'னு கேலியா கேட்டது உண்டுதானே? அந்தமாதிரி சந்தர்ப்பத்தை ஜோரா பயன்படுத்திக்கலாமே, மேடம்? பேசறதுபோல கிட்டநின்னு உங்க சாவிக்கொத்தை அங்கே வெச்சிட்டு நைஸா மாத்தி எடுத்திடலாமே!- இவ்வளவு சுலபமான விஷயத்தைச் செய்ய நீங்க ஏன் தயங்கறீங்கனு புரியலையே? ம்?"

கௌதம் நீளமாய்ப் பேசுவதைக் கேட்டு கௌரி அயர்ந்துபோய்விட்டாள்.

இவனுக்கு எப்படித் தெரியும்? மௌலி சாவியைக் கையில் சுழற்றுவதும், அது கீழே விழுவதும், நான் எடுத்துக் கொடுப்பதும், எங்கள் கொத்துக்கள் ஒரே மாதிரி இருப்பதும், மேஜை மேல் வைப்பதும் இவனுக்கு எப்படித் தெரியும்?

இந்த விவரங்களை அந்த செக்யூரிடி ஆள் சொன்னானா? அதுவும் ஒரு நாளுக்குள்ளா? சாத்தியமேயில்லை! பின்னே, இவனுக்கு எப்படித் தெரியும்?



என்றைக்காவது ராத்திரி வேலை பார்க்கும் செக்யூரிடி ஆள் பகல் ட்யூடிக்கும் வருவது உண்டு தான், அப்போது கவனித்திருப்பானோ? காவலாளிகள் கூட நிற்கையில்தானே மௌலியும் நானும் ஸ்ட்ராங் ரூமைத் திறப்போம்; அப்போது கவனித்திருப்பானோ?

கௌரியின் வியப்பு புரிந்த தினுசில் கௌதம் சிரித்தான்.

"என்ன மேடம், இவனுக்கு இதெல்லாம் எப்படித் தெரியும்னு திகைச்சிப்போயிட்டீங்களா? கௌதம் சாதாரண ஆள் இல்லேனு இப்பவாவது புரிஞ்சிக்கிட்டீங்களா? எப்படித் தெரியும், யார் சொன்னதுனு வீணா மூளையைக் குழப்பிக்காதீங்க.. மேலே ஆகறதைப் பாருங்க.. என்ன?"

மீண்டும் சிரித்த கௌதம் எழுந்து, விடைபெற்றுக் கொண்டான்.

ராத்திரி ரொம்ப நேரத்துக்கு கௌரியால் தூங்க முடியவில்லை. புரண்டுபுரண்டு படுத்தவள், விடியற்காலை மூன்று மணி அளவில்தான் கண்ணயர்ந்தாள்.

காலையில் எழுந்தால் கண்கள் எரிந்தன. மண்டை கனத்தது.

செவ்வாய்க்கிழமை.. இன்னும் எண்ணி மூன்று நாட்கள்.

இன்று எப்படியாவது மௌலியின் சாவியை எடுத்துவிட வேண்டுமே, முடியுமா?

டிபன் சாப்பிடும்போது கூட வந்து அமைதியாக உட்கார்ந்த விஜய்யிடம் எதுவும் பேச அவளுக்குப் பிடிக்கவில்லை.

எல்லாம் இவனால்தானே என்ற வேதனை; பாவம் இவன் என்ன பண்ணுவான், தெரியாமல் அகப்பட்டுக் கொண்டுவிட்டான் என்ற தவிப்பு, சமாதானம்.

கை அலம்பும்போது வாசல் மணி அழைத்தது.

கௌதம்தான்.

உள்ளே வந்தான். நேராய்த் திறந்த வீட்டில் ஏதோ நுழைகிறமாதிரி சாப்பாட்டு அறைக்கு வந்தவன், "எழுந்து வரீங்களா, மேடம்.. அவசரமா ஒரு விஷயம் பத்திப் பேசணும்" என்றான்.

கையில் ஒரு காகிதப் பொட்டலம்.

விஜய்யின் அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டார்கள்.

"இன்னிக்கு நீங்க எப்படியும் சாவிகளைக் கொண்டுவரணும்னு மதுசூதன் சொல்லிட்டான்! முடிஞ்சா கொத்தைக் கொண்டுவாங்க.. இல்லேன்னா வேற ஒரு நல்ல திட்டம் இருக்கு.."

பேசிக்கொண்டே பொட்டலத்தைப் பிரித்தான். உள்ளே நெக்லஸ் டப்பா அளவில் ஒரு பெட்டி.

திறந்தான். மெழுகு ஒரு பக்கம் முழுவதும் வழ வழாவென்று நிரப்பப்பட்டிருந்தது.



"ஸ்ட்ராங் ரூமைத் திறந்திட்டு, மூடின பிறகு மாடிக்கு வரத்துக்குள்ளே சாவிக்கொத்தைத் தட்ட முடியுமானு பாருங்க.. அதிருஷ்டவசமா கொத்து கைக்கு வந்திடுத்துன்னா, நா உங்களுக்குப் பத்தரைக்கு போன் பண்றேன், அப்ப சொல்லுங்க. நா வந்து வாங்கிட்டுப் போய், திரும்ப சரியா அரை மணிலே கொடுத்திடறேன்.."

கௌதமை கௌரி முடிக்கவிடவில்லை.

"நோ.. நோ.. அது சரியில்லை. சில சமயம் ஏதாவது காரணத்துக்காக நினைச்ச நினைப்பில்லாம ஸேஃபைத் திறக்கும்படி நிர்ப்பந்தம் உண்டாகும். திடீர்னு பணம் கூடத் தேவைப்பட்டுதுன்னா கீழே போய்த் திறக்கவேண்டிவரும், அப்போ என்ன பண்றது?"

"ரொம்ப நேரம் எடுத்துக்கமாட்டேன், மேடம்- ஜஸ்ட் அரை மணி, அதுக்குள்ளயா, எமர்ஜென்ஸி வந்துடும்..?"

கௌரிக்கு இந்த ஏற்பாடு பிடிக்கவில்லை.

"மேலே கேளுங்க.. அப்படி உங்களால மாடிக்கு வர்ற வழிலே இதைச் செய்ய முடியாட்டா, அப்புறம் ஏதாவது பேசற சாக்கிலே மௌலி டேபிளுக்குப் போங்க.. டைம் சொன்னீங்கன்னா.. அந்த நிமிஷம் நா போன் பண்ணி மௌலியோட பேசறேன். நீங்க அந்தச் சந்தர்ப்பத்துலே, அவர் கவனம் மாறி இருக்கிற வினாடிலே, சாவிக்கொத்தை மாத்திடணும், என்ன?"

முடியுமா? இவன் சொல்றதைச் செய்ய என்னால் முடியுமா?

"சாவிக்கொத்தை என்கிட்ட கொடுக்க முடியாதுனு தோணிச்சின்னா, மௌலி சாவிகளோடு பாத்ரூமுக்குப் போங்க. இந்தப் பெட்டியிலே இருக்கற மெழுகிலே ஒண்ணொண்ணா நல்லா அழுக்கி எடுங்க. சாவிக்கொத்தை அலம்பி, துடைச்சி, பழையபடி மௌலி டேபிள்லே வெச்சிடுங்க. ரொம்ப சுலபம்! பத்து நிமிஷம் அவகாசம் கிடைச்சா போதும்.. ஜாம் ஜாம்னு செய்து முடிச்சிடலாம்.."

பேசி முடித்த கௌதம் சட்டையிலிருந்து இன்னொரு சின்ன மெழுகு டப்பாவை எடுத்தான். அதில் தன் சாவி ஒன்றைப் பதித்துக் காட்டி, கௌரியை இரண்டு முறைகள் பதித்துப் பார்க்கச் சொன்னான்.

"ஆ- ஒரு தடவையிலே கத்துக்கிட்டீங்களே! அப்படித்தான்!.. எத்தனை சாவிகளின் அச்சு எடுக்க முடியுமோ-எடுத்திடுங்க.. இந்தப் பெட்டிலே, இடம் விடாம பொறுமையா அழுக்குனீங்கன்னா, ஈஸியா இருபது சாவிகளுக்கு இடம் இருக்கு- அதுக்கு மேலயா அவர் கொத்துலே சாவிங்க இருக்கப்போறது?"

கௌதம் கொடுத்த நெக்லஸ் டப்பாவைத் தன் கைப்பையில் பத்திரப்படுத்தினாள் கௌரி.

பயமாக இருந்தது. படபடப்பாக இருந்தது.

கதவைத் திறந்துகொண்டு ஹாலில் சென்று உட்கார்ந்தாள். ஆபீஸ் கார் வரும் நேரம்.

அறைக்குள் கௌதம் இன்னும் என்ன செய்கிறான்? விஜய்யுடன் இவனுக்கு என்ன பேச்சு? நாளைக்கு முதல் காரியமாக விஜய்யை ஏதாவது ஊருக்கு அனுப்பிவிட வேண்டும்.



கார் வந்துவிட்டது.

ஏறி உட்கார்ந்து மௌலியைப் பார்த்து குட்மார்னிங் சொல்லிச் சிரிக்க முயன்றபோது தொண்டையில் கட்டை வைத்து அடைத்த மாதிரி இருந்தது. சிரிக்கவே முடியாமல் உதடுகள் இரண்டும் மரத்துப் போய்விட்ட மாதிரி தோன்றின.

பாங்க்கை அடைந்து சாவிக்கொத்துடன் கீழே போகப் புறப்பட்டவளுக்கு நாடித்துடிப்பும், இதயத் துடிப்பும் ரொம்ப வேகவேகமாக அடிக்கிறதைப்போல இருந்தது.

கீழே போனார்கள்.

மௌலி தன் வழக்கப்படி ஆள்காட்டி விரலில் சாவிக்கொத்தை சுழற்றிக்கொண்டு வந்தார். கொத்து கீழே விழுந்தபோது, கௌரி எடுத்துக் கொடுத்தாள்.

"தேங்க்யூ, கௌரி." அவர் புன்சிரிப்பாய்ச் சிரித்தார்.

இப்போது விழுந்து என்ன பிரயோஜனம்? ஸ்ட்ராங் ரூமைத் திறக்க எப்படியும் அவரவர் கொத்து தேவைப்படுமே! மாடிக்குப் போகும்போது விழுந்து, மாற்றுவது அல்லவா முக்கியம்?

ஸ்ட்ராங் ரூமை அடைந்ததும், அதன் ரகசிய எண்களைத் திருகிய பின், மௌலிக்கு நேர் பின்னால் கௌரி நின்றுகொண்டாள்.

சாதாரணமாய் அவர் குமிழ்களைச் சுற்றும்போது அவள் அதைப் பார்க்கமாட்டாள். ரகசிய எண்களை

ஒருவரிடம் ஒருவர் சொல்லக்கூடாது என்பது பாங்க்கின் கட்டளை.

இரண்டு பக்கமும் பார்வையை லேசாய் அலையவிட்டுக் காவலாளிகள் கவனிக்கிறார்களா என்று பார்த்தாள்.

ம்ஹூம், இல்லை.

சட்டென்று மௌலியின் கைகளில் கண்களைப் பதித்தாள்.

ஆறு, நான்கு..

மூன்றாவது நம்பரைப் பார்ப்பதற்குள் "மேடம், உங்க கர்சிப் கீழே விழுந்திடிச்சி" என்று காவலாளி ஒருவன் குரல் கொடுக்க, கௌரியின் கவனம் கலைந்து போயிற்று.

ரகசிய எண்கள் மொத்தம் ஐந்து. இரண்டு தெரிந்துவிட்டது பாக்கி மூன்றையும் அறிந்துகொள்வது சாத்தியமா?

மௌலி எத்தனையோ தடவைகள், "உங்க நம்பர்கள் என்ன, கௌரி? என்னுடையதைச் சொல்லட்டுமா? ரெண்டு பேருதும் எதேச்சையாய் ஒண்ணா இருக்கான்னு பார்க்கலாமா?" என்று கேட்டுச் சிரித்ததுண்டு. "போங்க சார், இதுலே என்ன விளையாட்டு?" என்று கௌரி பதில் சொன்னதுண்டு.

இன்றோ, நாளையோ ஒரே ஒரு தடவை மௌலி அப்படிக் கேட்டால் எத்தனை நன்றாக இருக்கும்?



டக்கென்று என் எண்களைச் சொல்லி, 'உங்களது?' என்று கேட்டுவிடலாம். கேள்வி அவரிடமிருந்து வந்ததால் அவர் சொல்லித்தான் ஆகவேண்டும்.

முருகா, அப்படி ஒரு சந்தர்ப்பம் வரக்கூடாதா?

பணத்தை வெளியில் எடுத்தார்கள், அறையைப் பூட்டினார்கள். மணி அடித்துக்கொண்டு காவலாளிகள் முன்னே போக இவர்கள் புறப்பட்டார்கள்.

முதல் நாள் பார்த்த பாலசந்தரின் படம் பற்றி மௌலி விமர்சனம் செய்துகொண்டே நடந்தார்.

"ஆயிரம் சொல்லுங்கோ, பாலசந்தர் பாலசந்தர் தான்.."

கையில் சாவிக்கொத்து விர் என்று சுழன்றது.

"ஒரு சில இடத்துலே டைரக்ஷன் எப்படி இருக்கு தெரியுமா, கௌரி? ஆ..பிரமாதம்.."

மாடிப்படிகளில் ஏறத் தொடங்கிவிட்டார்கள்.

கையில் தன் சாவிக்கொத்தைத் தயாராய் வைத்துக் கொண்டாள் கௌரி.

அவர் கொத்து கீழே விழுந்தால் சடக்கென்று குனிந்து புடவைக் கொசுவத்தால் அந்தக் கொத்தை மறைத்துக் கொண்டு, ரொம்பச் சாமர்த்தியமாக என் கொத்தை அவரிடம் தரவேண்டும்..

முடியுமா, என்னால்?

இல்லை; மௌலி ஏமாற்றிவிட்டார்.

அவரவர் இடத்தை அடைந்து அமர்ந்தார்கள்.

எண்ணி இரண்டு நிமிஷத்தில் போன் அடித்தது.

"எஸ்?.."

"மேடம்? நாதான். என்ன முடிஞ்சிதா?"

"இல்லே."

"ரைட்-சரியா இன்னும் பத்து நிமிஷத்திலே நா அவரை போன்லே கூப்பிடறேன், நீங்க போய்த் தயாராய் இருங்க... என் கடிகாரப்படி மணி இப்ப பத்து அடிச்சி பன்னிரண்டு நிமிஷம் ஓகே?"

போனை வைத்துவிட்டுத் தன்னைச் சுற்றிப் பார்த்தாள் கௌரி.

யாராவது தன் பேச்சைக் கேட்டிருப்பார்களோ?

ஆப்பரேட்டர் கேட்டிருப்பாளோ?

மெதுவாக எழுந்தாள்.

டெலிக்ராபிக் ட்ரான்ஸ்பர் ஃபைலை எடுத்துக் கொண்டாள். உள்ளே போனாள்.

மேஜையில் வலது பக்கத்தில் மௌலியின் சாவிக்கொத்து பளிச்சென்று சிரித்தது. அந்தப் பக்கம் போய் நின்றுகொண்டு கையிலிருந்த பைலைச் சாவிக் கொத்துமேல் வைத்து அதை மறைத்தாள்.

"எஸ், கௌரி?"

மனசில் அந்தக் கணத்தில் தோன்றிய ஒரு முக்கிய, இரண்டு அனாவசிய சந்தேகங்களை டபக்கென்று கேட்டாள்.



கௌரி வழக்கத்துக்கு விரோதமாய் ஒருவித அவசரத்துடன் காணப்படுவதாய் மௌலிக்குத் தோன்றியது. நெற்றியில் வியர்வை-வெளுத்த முகம்.

கௌரிக்கு என்ன பிரச்சினை?

உடம்பு சரியில்லையா? ஏன் வீட்டில் தங்கி வைத்தியம் பார்த்துக்கொள்ளமாட்டேன் என்கிறாள்?

கௌரி கேட்ட சந்தேகங்களை அவர் நிவர்த்தி செய்ய முனைந்த நிமிஷத்தில் போன் அடித்தது.

மௌலி லேசாய் இடப்பக்கம் திரும்பி ரிஸீவரை எட்டி எடுத்தார்.

"எஸ்-மௌலி."

அவர் பேசும் நாழிகைகளில் பைலுக்கு அடியில் தன் கையில் வைத்திருந்த சாவிக்கொத்தை ஓசைப் படாமல் கௌரி மேஜை மேல் வைத்தாள். விரல்களைத் துழாவி மௌலியின் கொத்தை எடுத்துக்கொண்டாள்.

விரல்கள் வியர்வையில் கசகசப்பது புரிந்தது. மயக்கம் வரும்போல இருந்தது. ரிஸீவரை வைத்த மௌலி ஒன்றும் புரியாமல் தலையை ஆட்டினார்.

"ஸம் ஃபன்னி ஃபெல்லோ! வீடு வாங்கணும்னு சொன்னீங்களாமே, அருமையான வீடு கிண்டிலே இருக்கு, வந்து பாருங்கங்கிறான். 'நா இல்லேப்பா, நீ ஆர் மிஸ்டேக்கன்'னா விடாம தொணதொணங்கறான்..."

மேற்கொண்டு ஒரு நிமிஷம் நின்ற கௌரி ஃபைல், சாவிக்கொத்துடன் தன் இடத்துக்குப் போனாள்.

ஃபைலை மேஜைமேல் வைத்துவிட்டுக் கைப்பை யுடன் முன் பாத்ரூமுக்குள் சென்று கதவைத் சாத்திக் கொண்டாள்.

அழுகை வெடித்துக்கொண்டு எழுந்தது.

ரொம்ப பயமாக இருந்தது.

கஷ்டப்பட்டுத் தன்னைச் சுதாரித்துக்கொண் டாள்.

பெட்டியை எடுத்து ஒவ்வொரு சாவியாய் மெழுகில் அழுக்கி எடுத்தாள். பெட்டியை மூடி பேஸின்மேல் வைத்துவிட்டுச் சாவிக்கொத்தை அலம்பிக்கொண்டு நிமிர்ந்தபோது அப்பாடி என்றிருந்தது.

பத்து நிமிஷங்கள்கூட ஆகவில்லை. உடனே போய்ச் சாவிக்கொத்தை மறுபடி மாற்றிவிட வேண்டும்.

வெளியே வந்து மௌலி டேபிளுக்குப் போய், "உங்க கொத்து என்கிட்ட எப்படி வந்தது?" என்று ஒன்றும் புரியாத மாதிரி கேட்டுக்கொண்டே அதை மாற்றிவிட்டுத் தன் இருக்கைக்குத் திரும்பியவளுக்கு ரொம்ப நிம்மதியாய் இருந்தது. நாற்காலியில் உட் கார்ந்தவள், பையை பத்திரமாய் உள்ளே வைக்கக் கையை நீட்டியபோது ஷாக் அடித்தது.

வாஷ் பேஸின்மேல் வைத்த பெட்டியை எடுத்துப் பையினுள் வைக்கவில்லை என்ற எண்ணம் மின்னலாய் அறைந்தது.



கடவுளே-

சாவிக்கொத்தைத் திருப்பும் பதற்றத்தில் மறந்து விட்டேனா?

பரபரவென்று எழுந்த கௌரி அப்படியே உறைந்து போனாள்.

பாலாஜி அறையை விட்டு டாய்லெட்டை நோக்கிப் போவது புரிய, இவள் இங்கிருந்து போவ தற்குள் அவர் நான்கே எட்டில் டாய்லெட்டில் நுழைந்துவிடுவார் என்பது தெளிவாக, கௌரி செய லிழந்து போனாள்.

## 24

என்ன செய்ய வேண்டும்?

பாலாஜி என்ன வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளட்டும் என்று அவரை இடித்துக்கொண்டு டாய்லெட்டுக்குள் ஓடிக் கதவைச் சாத்திக் கொள்ளலாமா?

ஐயோ, என்ன அசிங்கம்?

பாலாஜி உள்ளே நுழைவார், பெட்டி பளிச் சென்று கண்ணில் படும். நகைப்பெட்டியா? யாருடையது? என்று புருவங்கள் முடிச்சு முடிச்சாய்ச் சுருங்க எடுத்துத் திறப்பார்.

பெட்டி பூராவும் சாவியின் அச்சுக்கள் இருப்பதைப் பார்ப்பார். கெட்டிக்காரர் இல்லையா, இதில் ஏதோ தில்லுமுல்லு இருக்கிறது என்று புரிந்துகொள்வார்.

'யார் இதற்கு முன் பாத்ரூம் போனது?', என்பார், நான் என்பது தெரியவரும். அசடுபோல இரண்டு நிமிஷங்களுக்கு முன்தான் மௌலியிடம் 'உங்க சாவி என்னிடம் வந்துவிட்டது' என்று சொல்லித் திருப்பிக் கொடுத்திருக்கிறேன். இரண்டும், இரண்டும் நான்கு என்று கணக்குப்போட பாலாஜிக்கா தெரியாது!

கடவுளே! நான் என்ன பண்ணுவேன்!

கௌரி எழுந்து, பிரமித்து, சிந்தனைவயப்பட்டு நின்ற அந்தப் பத்துக் கணங்களில் விண்டாவின் மேஜைமேல் இருந்த போன் அழைத்தது.

எடுத்துப் பேசிய விண்டா, "சார், யுவர் ஓவர்ஸீஸ் கால்" என்றாள்.

டாய்லெட் கதவின் குமிழியில் கையை வைத்த பாலாஜி சட்டென்று திரும்பினார்.

அமெரிக்காவில் இருந்த அண்ணனுக்கு உடம்பு சுகமில்லை என்று நேற்றே 'கால்' போட்டிருந்தார். நேற்று கிடைக்காதது, இப்போது கிடைத்துவிட்டதா?

"ஐ'ல் டேக் இட் இன் மை ரூம், விண்டா" என்றவர் திரும்பி வந்து, தம் அறைக்குள் புகுந்து, கதவைச் சாத்திக்கொண்டார்.



நடப்பவற்றை நம்பமுடியாத கண்களுடன் பார்த்த வண்ணம் கைப்பையுடன் நின்றிருந்த கௌரி, மெள்ள நடந்து டாய்லெட்டுக்குள் போனாள். கதவைச் சாத்தித்தாளிட்டாள். ஸ்டாண்ட்மேல் பொட்டுப்போல உட்கார்ந்திருக்கும் பெட்டியைப் பார்க்கையில் அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது.

அப்படியே கதவில் சாய்ந்து நின்று விம்மினாள். சில நிமிஷங்களில் ரொம்பச் சிரமத்துடன் தன்னைச் சுதாரித்துக்கொண்டு முதல் காரியமாய்ப் பெட்டியை எடுத்து பையில் வைத்தாள். முகத்தை அலம்பி சீர் செய்த பின், வெளியே வந்தபோது அவள் கொஞ்சம் நிதானமடைந்திருந்தாள்.

பதினோரு மணிவாக்கில் விஜய் அவளை போனில் அழைத்தான்.

"மம்மி, நா விஜய்!"

"எஸ்?"

"எக்ஸலா மம்மி?"

"ம்?... எஸ்..." கௌரி குரலைத் தழைத்துக் கொண்டாள். "உனக்கு இதுலே என்ன இண்ட்ரஸ்ட், விஜய்? நீ எதுக்காக போன் பண்ணி இதைக் கேட்கணும்? யாராவது கேட்டா என்ன நினைச்சுப்பா? உனக்கு ஏன் ஒண்ணுமே புரியமாட்டேங்கறது?"

சில விநாடிகள் விஜய் மௌனமாய் இருந்தான்.

"ஸாரி, மம்மி... அவன்தான் கேட்கச் சொன்னான்... நானா கேட்க விரும்பலை, மம்மி..."

பக்கத்திலேயே கத்தியோடு உட்கார்ந்துகொண்டு விஜய்யை போன் பண்ணச் சொல்லி கௌதம் மிரட்டுகிறானா?

ஏன் அவனே கேட்டால் என்னவாம்?

ஒருவேளை ஆப்பரேட்டருக்குத் தன் குரல் பழகிவிடக் கூடாது என்று ஜாக்கிரதையாக இருக்கிறானா?

ரிஸீவரை வைத்துவிட்டு கௌரி நாற்காலியில் சாய்ந்து கொண்டாள்.

"என்ன கௌரி-நாட் வெல்? ஏன் டல்லா இருக்கேள்?"

பாலாஜியின் அறையிலிருந்து தன் இடம் நோக்கிச் சென்ற பார்த்தசாரதி நின்று கேட்டார்.

கௌரி சிரிக்க முயன்றாள்.

"அன்னிக்கு ஃப்ளூ வந்ததுலேந்து, என்னமோ தெரியலை ரொம்ப வீக்கா இருக்கு... ஒருநாள் ஜுரத்துலே இப்படி பலஹீனமாயிடுமானு எனக்கே ஆச்சரியமா இருக்கு..."

பொய் சரளமாய் வந்தது.

"எந்த டாக்டரைப் பார்க்கறேள்? நம்ப பாங்க் டாக்டரைத்தானே?"

அவர்கள் பாங்க்குக்கென ஒரு தனி டாக்டர் உண்டு. யாருக்கு என்ன உடம்பு என்றாலும் அவரிடம் காட்டிவிட்டு பில்லை பாங்க்குக்கு அனுப்பிவிடலாம். அப்படி ஒரு வசதி.



"ம்ஹூம்-இல்லே. எங்காத்துக்குப் பக்கத்திலேயே தெரிஞ்ச டாக்டர் இருக்கார், அவர்தான் பார்த்து கொடுத்தார். இன்னும் ரெண்டு நாள் பார்க்கறேன், இல்லாட்டா நம்ப பாங்க் டாக்டரையே பார்த்துடறேன்..."

பார்த்தசாரதி போய்விட்டார்.

ஆர் அண்ட் எல்-டிபார்ட்மெண்டிலிருந்து அச்சுதன் வந்தார்.

வரும்போதே யாருக்கோ ஸஹஸ்ரநாம அர்ச்சனை செய்துகொண்டே வந்தார்.

பாலாஜியின் அறையில் வாடிக்கையாளர் இருப்பதை லிண்டா சொல்ல, காத்திருக்கும் நேரத்தை கௌரியுடன் பேசிச் செலவழிக்கலாம் என்ற எண்ணத்தில் அவளுக்கு எதிரில் வந்து அமர்ந்தார்.

"ஸோ? எப்படியிருக்கீங்க கௌரி?"

ஃபைன் என்கிற தினுசில் கௌரி சிரித்தாள்.

"நீங்க எப்படியிருக்கீங்க, அச்சுதன்?"

"ஒண்ணும் சுகமில்லே கௌரி-பின்னே என்ன? கண்ட கண்ட மனுஷனுக்கெல்லாம் கடனைக் கொடுத்துடறீங்க, அப்புறம் அதை வசூல் பண்றத்துக்குள்ளே நாங்கள் பிராணன் இல்லே போவுது? எமர்ஜென்ஸி சமயத்திலே அந்தத் தலைவர் பிறந்த நாள், இந்தத் தலைவர் நினைவுநாள்னு ஒரு நாளைக்கு எழுபது எண்பது லோன்களைக் கொடுத்திருக்கீங்க. எந்த பிராஞ்சு நிறைய கடன் கொடுத்து ஏழை மக்களின் அந்தஸ்தை உயர்த்தியிருக்குனு ஒரு போட்டி வேற! கஷ்ட காலம்!

கொடுக்கும்போது அரசாங்கத்தைக் குஷிப்படுத்தும் போது, தெரியாத சிரமம் இப்போ இல்லே உதைக்குது? கடன்தான் கொடுத்தீங்களே, யார் யார்னு பேருக்காவது விசாரணை பண்ணிக் கொடுக்கப்படாது? ஆடு, மாடு, உரம், வண்டிமாடு வாங்கனு இந்தா இந்தான்னு அள்ளிவிட்டீங்க. சரி-யாருக்கு! முன்பின் தெரியாத ஆளுகளுக்கு-அதுதான்போகட்டும். ஷ்யூரிட்டியாவது சரியா வாங்கிக்கிட்டீங்களான்னா, அதுவும் இல்லை! கோவிந்தசாமிக்குப் பழனிச்சாமி ஷ்யூரிட்டி பழனிச் சாமிக்கு கோவிந்தசாமி ஷ்யூரிட்டி... நேத்து ஒரு கேஸை எடுத்துப் பார்க்கறேன்... எல்லாம் ஒரே 'சாமி' மயம். விசாரிச்சா அந்த ஊரிலே அப்படிப்பட்ட சாமிகளே இல்லைனு தெரியுது! இப்போ என்ன செய்றது? சரியான ஏமாத்துக் கடன்கள்! இதைக் கொடுக்க ஒரு பாங்க், திரும்பி வாங்க ஒரு லீகல் டிபார்ட்மெண்ட்-அடிச் சிக்க ரெண்டு கை போதாது, கௌரி-எனக்குப் போதும்போதும்னு ஆவுது!"

அச்சுதனின் கோபம் எத்தனை நியாயமானது என்பதை கௌரியால் புரிந்துகொள்ள முடிந்தது.

எமர்ஜென்ஸி சமயத்தில் ஏழைகளுக்கு அதீதமாய், வழியை விட்டுப் போயாவது, உபகாரம் செய்ய வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவு போட்டதில், செக்யூரிடியே கொடுக்க முடியாத குப்பனுக்கும் சுப்பனுக்கும் பணத்தை இந்தியாவின் அத்தனை பாங்குகளும் வாரிவிட்டுவிட்டு இப்போது முழிமுழி என்று விழிப்பது நிஜம்தான்.

இவர்கள் பாங்கின் சில கிளைகளில் எமர்ஜென்ஸி போது ஆதிவாசிகளுக்கு ஏராளமான



பண உதவியை அப்போதிருந்த மானேஜர்கள் அரசாங்க உத்தரவின்படி கொடுத்துவிட்டதால், இப்போது, அச்சுதன் மாட்டிக் கொண்டு தவிக்கிறார்.

மலைமேல் சென்று, அதிகாரிகளைச் சந்தித்துப் பணம் பெறுவது கஷ்டமாக இருக்கிறதாம். அதனால் கலெக்டரும், அந்த ஊர் ஏஜெண்டும் 'ஆதிவாசிகளுக்குக் கொடுத்த கடன்களை தள்ளுபடி பண்ணி விடுங்கள்' என்று தொணதொணக்கிறார்களாம்.

"அது என்ன, என் மாமா வீட்டுச் சொத்தா-நினைச்சதைச் செய்யறதுக்கு? எனக்குத் தெரியாது, நான் போர்ட் ஆஃப் டைராக்டர்களுக்கு சொல்லிடறேன் அப்புறம் அவர்கள் இஷ்டம்னு எழுதிட்டேன். நா வேற என்ன பண்ணறது?"

அச்சுதன் மொணமொணவென்று அரசாங்கத்தையும் கடன் வாங்கி ஏமாற்றும் ஜனங்களையும் திட்டித் தீர்த்த நிமிஷத்தில் சாப்பிடப் போயிருந்த பார்த்தசாரதி வந்து சேர்ந்தார்.

"கடன்களுக்கு இவர்தானே இன்சார்ஜ்? இவரைப் பிடிச்சுண்டு என்னை விட்டுடுங்கோ" என்று கௌரி சொன்னதும், அச்சுதனுக்கே சிரிப்பு வந்து விட்டது.

அச்சுதனோடு பார்த்தஸாரதியும் பாலாஜியின் அறைக்குள் புகுந்து கொண்டார்.

மணி இரண்டேகால்.

கௌரி மேஜையைப் பூட்டிவிட்டுப் பையுடன் கான்டீனை நோக்கி நடந்தாள். ஸைட் என்ட்ரன்ஸைத

தாண்டி, மாடிப்படிகளைத் தாண்டி, கடைசியில் சின்னதாய் ஒரு காண்டீன் உண்டு. அது நாயரின் சாம்ராஜ்யம். இரவில் அவர் போனதும் டீ போட்டுச் சாப்பிட, விழித்திருக்கும் நாழிகையில் உட்கார்ந்து பேசக் காவலாளிகள் அந்த அறையை உபயோகிப்பது வழக்கம்.

கௌரி சென்றபோது காண்டீன் காலியாய் இருந்தது.

சாதாரணமாய் இரண்டு மணிக்குமேல் டெல்லர்கள், காஷியர்கள், இவர்கள்தான் சாப்பிடுவார்கள்.

இன்றைக்கு வசுமதியை ஒரு பக்கமாய்ப் பார்த்தபோது கௌரிக்கு ஆச்சரியமாய் இருந்தது.

வசுமதியை கௌரிக்கு ரொம்பப் பிடிக்கும். சாது. வேலையில் கெட்டிக்காரி. பாங்க்கில் சேர்ந்து இன்னும் ஒரு வருஷம்கூட பூர்த்தியாகவில்லை.

வசுமதியின் அருகில் சென்று கௌரி உட்கார்ந்துகொண்டாள்.

நாயர் சாப்பாட்டுக் கூடையை எடுத்து வந்ததும், பிரித்துக்கொண்டே, "ஏம்மா, இன்னிக்கு இவ்வளவு லேட்?" என்றாள்.

"சில ஸ்டேட்மெண்ட்ஸ் அடிக்க வேண்டியிருந்தது. மேடம், நாழியாயிடுத்து."

கௌரியிடம் பேச பயப்படுகிறவள்போல வசுமதி அவசரமாய்ச் சாப்பிட்டு முடித்தாள்.

"நா வரேன், மேடம்... டைப் வேலை பாக்கி இருக்கு."



மாது வைத்திருந்த புளியஞ்சாதத்தில் ஒரு வாய் சாப்பிட்டாள் கௌரி.

புத்தி வசுமதியிடம் இருந்தது. போன வருஷம் நினைத்திருப்பாளா இந்த வசுமதி, தான் இன்று பாங்க்கில் விரல் ஒடிய டைப் அடிப்போம் என்று?

ம்ஹூம், சுண்டிப்பாய் மாட்டாள்.

லண்டனில் கணவன், ஒரு வயசுக் குழந்தையோடு உல்லாச வாழ்க்கை நடத்தின நாழிகையில், இன்னும் ஒரு வருஷத்துக்கெல்லாம் இந்தப் பசுமை பட்டுப் போகப் போகிறது என்று நினைத்திருப்பாளா?

ம்ஹூம், மாட்டாள்.

வசுமதியை இண்டர்வ்யூ செய்த அன்றே அவள் பூரா கதையையும் கௌரி தெரிந்துகொண்டாள்.

வசுமதியின் கணவன் ஒரு இன்ஜினீயர். லண்டனுக்குப் பக்கத்தில் ஒரு தொழிற்சாலையில் வேலை.

மப்பும் மழையுமாய் இருந்த ஒரு நாளில், மின்சார ரயிலில் வழக்கம்போல வேலைக்குப் போனவனுக்கு அன்று கேடு காலம்.

பாலத்தின்மீது போகாமல், நாழியாகிவிட்டது என்று குறுக்கே ஓடியிருக்கிறான். அசுர வேகத்தில் வந்த ரயிலைப் பாழும் பனித்திரை மறைத்துவிட்டது.

அப்புறம் என்ன? அவ்வளவுதான்!

தன்னைப்போலவே வசுமதியும் தன் கணவனை ரயில் விபத்தில் இழந்தவள் என்று அவளிடம் இவளுக்குத் தனி பச்சாதாபம் உண்டு.

அந்நிய நாட்டில் மகனுடன் தனியாய்த் தவிக்க விரும்பாமல் இங்கு வந்த பிறகு, தானும் பிள்ளையும் யாருக்கும் பாரமில்லாமல் இருக்க விரும்பி பாங்க்கில் வேலைக்குச் சேர்ந்துவிட்டாள்.

வசுமதியின் உலகமே அந்தப் பிள்ளைதான்.

ஒரே பிள்ளை, தகப்பனில்லாத பிள்ளை என்று வசுமதி தன் பிள்ளைக்கு ஏகமாய்ச் செல்லம் கொடுப்பாளோ?

நான் விஜய்க்கு அதிகச் செல்லம் கொடுத்துக் கெடுத்து விட்ட மாதிரி வசுமதியும் செய்வாளோ?

அவள் பிள்ளையும் பெரியவனாகி, விஜய் மாட்டிக்கொண்ட தினுசில் அகப்பட்டுக்கொண்டால், இந்த வசுமதி மகனுக்காக பாங்க்கைக் காட்டிக்கொடுக்க முன்வருவாளோ?

சே-என்ன அபத்தமான கற்பனை இது!

கௌரிக்குச் சாப்பிடப் பிடிக்கவில்லை. அப்படியே மூடி வைத்தாள். நாயரிடம் கேட்டு காபி வாங்கிக் குடித்துவிட்டு சீட்டுக்கு வந்தாள்.

பையில் மெழுகுப் பெட்டி கனத்தது.

கோபால் மாமா இந்தச் சமயம் பார்த்து டெல்லிக்குப் போய்விட்டாரே!

ஆமாம்-அவர் இருந்தால் மட்டும் என்ன செய்யப் போகிறேன்?

பிள்ளையைக் காட்டிக்கொடுப்பேனா? ம்ஹூம், மாட்டேன், கண்டிப்பாய் மாட்டேன்.



விஜய்யின் நிம்மதியும், சந்தோஷமும் முக்கியம் என்று தீர்மானித்தாகிவிட்டது; அப்புறம் கோபால் மாமா இருந்து என்ன, போய் என்ன?

கௌரிக்கு வேலை செய்ய மனமில்லை.

எப்படியோ ஐந்து மணி வரை தார்காட்டிவிட்டு, வீட்டுக்குக் கிளம்பிவிட்டாள்.

மாதுவிடம் கூடையைக் கொடுத்தவள் படுக்கையில் போய்ச் சாய்ந்துகொண்டாள்.

ஜுரம் வரும்போல இருந்தது.

சின்னச் சப்தங்கள்கூட உடம்பைத் தூக்கிவாரிப் போட வைத்தன.

எல்லாவற்றையும் அப்படியே விட்டுவிட்டுக் கண்காணாமல் ஓடிப்போய்விட்டால் என்ன?

கண்களை மூடிக்கொண்டவள் அசதியில் தூங்கிப் போனாள்.

மறுபடி கண்களை விழித்தபோது விஜய் அவள் பக்கத்தில் உட்கார்ந்திருந்தான்.

"டீயோட ஸாரிடான் கொண்டுவந்து தரட்டு மாம்மா? உடம்பு சரியில்லையா?"

அவன் இதமாய்க் கேட்டது அவளுக்குப் பிடித்திருந்தது.

"கௌதம் வந்தான். உன்னை எழுப்பக் கூடாதுன்னு நானே உன் பையிலேந்து அந்த மெழுகுப் பெட்டியை அவன்கிட்ட கொடுத்திட்டேன். என்னால

உனக்கு எத்தனை கஷ்டம், மம்மி... எல்லா வேதனையும் என்னால்தானே? ஸாரிம்மா... எப்படியாவது பல்லைக் கடிச்சிண்டு இன்னும் மூணு நாளை ஓட்டிடு... அப்புறம் நாம சுதந்திரமா ஆயிடலாம்... ப்ளீஸ்ம்மா, எனக்காகம்மா..."

கண்கள் மினுமினுக்க விஜய் பேசியபோது, கௌரிக்கும் அழுகை வந்தது.

## 25

காலையில் ரொம்பச் சீக்கிரம் கௌரி எழுந்துவிட்டாள். மனசில் நிம்மதியே இல்லை. சதா படபடவென்று மார்புக் கூட்டுக்குள் பறவைகள் பறக்கிற உணர்வு. நான்கு நாளாய்ச் சரியான தூக்கம், சாப்பாடு இல்லாததில் உடம்பு சோர்வாக இருப்பது நன்றாகப் புரிந்தது. கைகளில் ஒரு நடுக்கம்.

காபி டம்ளரோடு ஹால் சோபாவில் உட்கார்ந்து, அன்றைய தினசரியைப் பார்த்துக்கொண்டிருந்தபோது 'பாங்க்கில் கொள்ளை' என்ற தலைப்பு கண்ணில்பட்டு, உள்ளங்கையில் வியர்வை ஊறச் செய்தது.

திருவான்மியூரில் ஒருவகைத் திருட்டு என்று அந்தச் சேதி வெளியாகியிருந்தது.

ஊருக்கு ஒதுக்குப்புறமாக இருந்த அந்த பாங்க்கில் ராஜாமணி என்ற வயசான அம்மாள் கணக்கு வைத்திருந்தார். ராஜாமணி முடக்குவாத நோயாளி.



அவருக்கு ஒரே பிள்ளை. ஆர்மியில் சிம்லாவில் இருக்கிறான். மாசாமாசம் அம்மாவின் பாங்க்குக்கு அவன் அங்கிருந்து பணம் அனுப்பிக் கணக்கில் கட்டிவிடுவான். ராஜாமணி தேவையானபோது வீட்டுக்காரப் பிள்ளையை அனுப்பிப் பணம் எடுப்பாள்.

வீட்டுக்காரப் பிள்ளை சரியான தத்தாரி. ராஜாமணி நூறு கொண்டுவா என்றால், இருநூறு என்று எழுதிப் பணம் எடுத்து, நூறைத் தான் அமுக்கி யிருக்கிறான். எழுதப் படிக்கத் தெரியாத ராஜா மணியால் நடப்பதைப் புரிந்துகொள்ள இயலவில்லை

பாங்க்கில் ஐயாயிரம் சேர்ந்தவுடன் அதை எடுத்துக்கொண்டு பம்பாய்க்கு ஓடிவிடலாம் என்று வீட்டுக்காரப் பிள்ளை போட்ட கணக்கு நடக்க வழியில்லாமல் திடுமென்று லீவில் ராஜாமணியின் மகன் வந்துவிட்டான்.

அப்புறம் என்ன?

பாங்க்கில் பணம் குறைவாக இருப்பதைப் பார்த்து, வீட்டுக்காரப் பையனைக் கையும்களவுமாய்ப் பிடித்துவிட்டான்.

'நம்பிக்கை துரோகம் செய்த பதினாறு வயசுப் பிள்ளை' என்று இந்தச் செய்திக்குக் குட்டித் தலைப்பு வேறு.

சே-என்ன செய்தி என்று இவற்றைப் போடு கிறான்?

சதா கொள்ளை, கொலை, சண்டை-இவை தானா? வேறு நல்ல விஷயமே கிடையாதா?

கௌரிக்கு அலுப்பாய் இருந்தது.

பேப்பர்களை மூடிப் பக்கத்தில் வைத்தாள்.

எழுந்துபோய்க் குளிக்கலாமா என்று யோசித்த நிமிஷத்தில், வாசல் முன் ஸ்கூட்டர் ஒன்று வந்து நிற்பதும், கேட்டைத் திறந்துகொண்டு கௌதம் உள்ளே வருவதும் தெரிந்தது.

சட்டென்று கௌரியினுள் எரிச்சல் மண்டியது.

என்னத்துக்காக இத்தனை காலை வேளையில் வந்து கழுத்தை அறுக்கிறான்? இவனுக்கு வேண்டிய சாவி அச்சுகளைக் கொடுத்துவிட்டேன்; அலாரம் ஸ்விட்ச் இருக்கும் இடத்தைச் சொல்லிவிட்டேன். இன்னும் ரகசிய நம்பர்தான் பாக்கி. அப்புறம் எதற்காகத் தொணதொணக்கிறான்?

ஸ்வாதீனத்துடன் சோபாவில் கௌதம் அமர்ந்தது, அவள் ஆத்திரத்தை அதிகப்படுத்தியது.

'என்ன வேண்டும்' என்று கேட்கும் பார்வை ஒன்றைப் பார்த்தாள்.

"உள்ளே போலாமா?"

பேசாமல் எழுந்து விஜய்யின் அறைக்குள் கௌரி போனாள்.

ஸ்கூட்டர் சப்தம் கேட்டு வெளியே வந்த விஜய், கௌதமோடு அவளைத் தொடர்ந்தான்.

கௌரி ஜன்னலிடம் சென்று நின்றுகொண்டாள்.



திரும்பி கௌதம் இருக்கும் திசையைப் பார்க்கக் கூடப் பிடிக்காததுபோலக் கம்பிகள் வழியாய்த் தெரிந்த தென்னை மரத்தைப் பார்த்தாள்.

அணில் ஒன்று, மட்டைகளின் நடுவில் உட்கார்ந்து கொண்டு, மொசுமொசுவென்று எதையோ முன் பற்களால் பிறாண்டிக்கொண்டிருந்தது.

என்ன பண்ணுகிறது இந்த அணில்?

ஒரு நிமிஷத்துக்குள் வாய் நிறைய பன்னாடை நார்களைச் சேகரித்துவிட்டதால் மரத்தைவிட்டு இறங்கி எதிர்த்திசையில் ஓட்டமாய் ஓடி மறைந்தது.

கௌரி பார்த்துக்கொண்டே நிற்கையில் திரும்ப அதே அணில் ஓடிவந்தது, மரத்தில் ஏறியது, மீண்டும் பன்னாடை நார்களைக் கிழித்து எடுத்துக்கொண்டு இறங்கி ஓடியது.

எதற்காகப் பன்னாடை நார்களை இத்தனை ஓட்டம் ஓடி இந்த அணில் சேர்க்கிறது.

ஓ! கூடு கட்டப் போகிறதா?

தான் போடப்போகும் குட்டிகளுக்கு இதமாய், மெத்தென்று வீடு தயாரிக்கவா இத்தனை உழைப்பு?

பாசம் என்பது மிருகங்களையே இப்படி ஆட்டிப் படைக்கிறதே. அப்புறம் மனுஷியான என்னைப் புரட்டி எடுப்பதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது!

"மம்மி... ஏன் இப்படியே நின்னுண்டு இருக்கே? என்னாச்சு?" தோளில் கை வைத்து விஜய் உலுக்கவும் கௌரி திரும்பினாள்.

"என்ன மேடம்?"

"ஒண்ணுமில்லே."

"நா பேசப் பேச பதிலே சொல்லாம நிக்கி நீங்களே!"

"ஸாரி-ஏதோ கவனமா இருந்திட்டேன். என்ன விஷயம், சொல்லுங்கோ."

"நீங்க சாவிகளோட அச்சு அத்தனையும் கொடுத்திட்டதுலே மதுசூதனுக்கு ரொம்பச் சந்தோஷம்... இதுலே எதிர்பார்க்காத அதிருஷ்டம் என்னன்னா... லாக்கர் ரூம் கீ கூட அதுலே இருக்கு இல்லே... அதுதான்..."

"எனக்குப் புரியலை."

"ஒரிஜினலா லாக்கர் ரூம் பக்கம் போக வேணாம், ஸ்ட்ராங் ரூம் பணம், நகைகளோட திரும்பிடலாம்னு தான் நாங்க பிளான் போட்டோம். ஆனா இப்ப வலிய வர ஸ்ரீதேவியை எப்படி வேணாங்கறதுன்னு கஷ்டமாயிருக்கு..."

"என்ன சொல்றீங்க?"

"எதிர்பாராத வகையிலே லாக்கர் ரூம் சாவியும் கிடைச்சிட்டதாலே அதையும் ஒரு கை பார்க்கலாம்னு மதுசூதன் அபிப்பிராயப்படறான்.. அதனாலே..."

"அதனாலே?"

"நீங்க மனசு வெச்சா காரியம் சுலபமா முடிஞ்சிடும், மேடம்... லாக்கர் ரூம்லே முக்கியமான புள்ளிகள் பேர்ல இருக்கிற லாக்கர் நம்பர்களை மட்டும் சொல்லிட்டீங்கன்னா போதும்..."



"அது ரொம்பக் கஷ்டம்-என்னால முடியாது.."

"இப்படிப் பட்டுனு பேசிட்டா ஆயிடிச்சா, மேடம்? உங்களுக்கு இது ரொம்ப ஈஸினு எனக்குத் தெரியும். லாக்கர் ரூம் லெட்ஜரைப் புரட்டினீங்கன்னா, யார்பேர்ல எத்தனாவது லாக்கர் நம்பர் இருக்குனு தெரிஞ்சிடாதா.. ஜஸ்ட் அரை மணி வேலை, ரொம்ப சுலபம்! உங்க அதிகாரத்துக் கீழேதானே லாக்கர் அறை இருக்கு... அந்த லெட்ஜர்லே எதையோ செக் பண்ற மாதிரி நீங்க நம்பர்களை நோட் பண்ண முடியாதா?... என்ன மேடம்-எனக்கு ஒண்ணும் தெரியாதுனு நினைச்சிட்டாய்க்கறீங்களே.."

கௌரி கண்களைக் களைப்புடன் மூடிக் கொண்டாள்.

லெட்ஜர் புத்தகத்திலிருந்து சொந்தக்காரர்களின் பெயரையும் அவர்கள் லாக்கர் நம்பர்களையும் குறித்துச் சொல்வது சுலபம்தான்.. அது அவளுக்குத் தெரியும்... ஆனாலும் இப்படி ஒவ்வொன்றாய்ச் சேர்த்துக்கொண்டே போனால் என்ன அர்த்தம்?

முதலில் செக்யூரிடி விவரங்கள், அப்புறம் அலாரம் ஸ்விட்ச்சுகளின் இருப்பிடம், அப்புறம் சாவிகள், இன்னும் ரகசிய நம்பர்கள் பாக்கி இருக்கிறது. அதற்குள் லாக்கர் விவரங்களா?

வருமான வரி ஆபீஸிலிருந்து கேட்டால் ஒழிய யாருக்கும் லாக்கர் நம்பர்களை அறிவிக்க பாங்க்குக்கு உரிமை கிடையாது. தங்களைப் பற்றின விவரங்களை பாங்க் யாருக்கும் வலியப் போய்த் தெரிவிக்காது என்று வாடிக்கையாளர்கள் வைத்திருக்கும் நம்பிக்கையில்

மண்ணை வாரிப்போட வேண்டும் என்ற நினைப்பே கௌரிக்குக் கசந்தது.

அம்மாவின் முகபாவத்திலிருந்து விஜய் என்ன புரிந்து கொண்டானோ?

குரலைக் கனைத்துக் கொண்டான்.

"நீ கேட்கறது ரொம்ப அதிகம், கௌதம். இப்படி ஏத்திண்டே போனா என்ன அர்த்தம்? அம்மாவை எதுக்காக இப்படிக் கஷ்டப்படுத்தறே! எனக்குப் பிடிக்கலே!"

கௌதம் கோணலாய்ச் சிரித்தான்.

"அடேடே... வாயைத் திறந்து பேசற அளவுக்கு உனக்கு தைரியம் வந்திடுச்சா, பையா? சமர்த்தா இருந்தா இன்னும் ரெண்டு நாள்லே படங்கள் உன் கைக்கு வரும்... இல்லே, இப்படி அதிகப்பிரசங்கித் தனமாதான் பேசுவேன்னு பிடிவாதம் பண்ணினா... அப்புறம் போஸ்டர்தான். புரியுதா? இப்போ வாயை மூடிக்கறியா?

கௌதமுக்குக் கோபம் வந்துவிட்டதைப் புரிந்து கொள்ள முடிந்தது.

"முடியுமா, முடியாதாங்கறதுக்கு இங்கே இடமே இல்லை... மதுசூதன் வேணும்ங்கறான்... குடுத்துதான் ஆகணும்!"

சற்று முன் பார்த்த அணிலும், அது தன் குட்டிகளுக்காக வீடு கட்டப் பாடுபடுவதும் மனசில் மின்ன கௌரி மெள்ளப் பேசினாள்:

"ஆல் ரைட், டீடெய்ல்ஸ் கொண்டுவரேன்-பட் இதுதான் கடைசி..."



"ஆ - ரகசிய நம்பர்?"

"அதுக்குதான் முன்னாலேயே சரினு சொல்லி விட்டேனே..."

"ஓ.கே. மேடம்-அப்புறம் உங்களை நிச்சயமா எந்த விவரத்துக்கும் சிரமப்படுத்த மாட்டோம்- ஐ ப்ராமிஸ்..."

"விஜய் இங்கே இருக்கக்கூடாது. வெளியூருக்குப் போய்டணும்னு சொன்னே, அதைப்பத்தி என்ன முடிவு பண்ணி இருக்கேள்?"

"நாளைக்கு ப்ருந்தாவன்லே பெங்களூருக்கு அனுப்பிடலாம்னு மதுசூதன் சொல்லிட்டு இருந்தான். அதுலே உங்களுக்கு ஆட்சேபணை எதுவும் இல்லையே?"

பெங்களூரில் சங்கரின் ஒன்றுவிட்ட பெரியப்பா இருக்கிறார்.

யாராவது 'விஜய் எங்கே?' என்றால், 'பெரியப்பா வீட்டுக்குப் போயிருக்கிறான்' என்று சொல்லிவிடலாம். ரொம்பச் சௌகரியம்!

"கண்டிப்பா நாளைக்கு அவன் போயிடணும். நா ரகசிய நம்பர்களை அவன் புறப்பட்டப்புறம்தான் சொல்லுவேன்..."

கௌதம் சிரித்துக்கொண்டே கிளம்பிச் சென்றான்.

அன்று காலை ஸ்ட்ராங் ரூமைத் திறக்கையில் ரகசிய நம்பர்களை கௌரி கவனிக்க முடியாதபடி மௌலி நன்றாய் மறைத்துக்கொண்டு நின்றுவிட்டதால் கௌரிக்கு லேசாய் பயம் உண்டாகிவிட்டது

நாளை, நாளை மறுநாள், தட்ஸ் ஆல், அதற்குள் பாக்கி மூன்று நம்பர்களையும் கண்டுபிடிக்க முடியுமா?

ஒண்ணரைக்கு பாலாஜி சாப்பிடப் போனதும் கௌரி எழுந்து, கீழ்த்தளத்துக்குச் சென்றாள்.

லாக்கர் ஆபீஸர் புருஷோத்தமன் ஒண்ணரை மணிக்குச் சாப்பிடப்போவார் என்பது அவளுக்குத் தெரியும்.

அவள் லாக்கர் அறை வாசலை அடைந்தபோது புருஷோத்தமன் சாப்பிடப் போகத் தயாராகிக் கொண்டிருப்பது புரிந்தது.

அவளைக் கண்டதும் அவர் கொஞ்சம் ஆச்சரியப்பட்டது தெளிவானது.

'குட் ஆப்டர்னூன், மேடம் ஏதாவது வேணுமா?"

என்ன சொல்ல வேண்டும் என்று கௌரி முன் கூட்டியே யோசனை செய்துவிட்டபடி பேசினாள்.

"எஸ்.. பெரிய லாக்கர்ஸ் வேணும்னு ஒரு பார்ட்டி கேட்கறா. எத்தனை ஸ்பேரா இருக்குனு தெரியுமா?"

சட்டென்று புருஷோத்தமனால் பதில் சொல்ல முடியாது என்பது கௌரிக்குத் தெரிந்த விஷயம்தான்.

"நா செக்அப் பண்ணிச் சொல்லட்டுமா, மேடம்?... திடீர்னு கேட்டா நிச்சயமா எத்தனை காலினு தெரியலை.."

"அப்படியா?" ... அரை நிமிஷம் கௌரி யோசிப்பது போல நின்றாள்.

"நீங்க சாப்பிடப் புறப்பட்டேள்போல இருக்கே...



எனக்காகச் சாப்பாட்டை டிலே பண்ண வேண்டாம்.. நீங்க என்கிட்ட சாவியைக் கொடுத்திட்டுப் போய்ச் சாப்பிட்டுட்டு வாங்கோ... எனக்கு லெட்ஜர் போஸ்டிங்கை கொஞ்சம் செக் அப் பண்ண வேண்டியிருக்கு.. நான் பார்த்துக்கறேன்.."

புருஷோத்தமன் மென்று விழுங்கினார்.

ஸர்ப்ரைஸ் செக்கிங்கா?

ஆடிட்டிங் சமயத்தில்தானே இப்படிச் செய்வார்கள்?

நிறைய இடங்களில் எழுத வேண்டிய குறிப்புகள் பாக்கி உள்ளனவே! பணம் கட்டாத லாக்கர் சொந்தக்காரர்களுக்கு நினைவூட்டல் அனுப்புவதும் இன்னும் பூர்த்தி ஆகவில்லை; அவற்றையெல்லாம் சீஃப் அக்கௌண்டண்ட் குறைகளாக ரிப்போர்ட்டில் எழுதிவிட்டால் கஷ்டமாயிற்றே!

"இல்லே மேடம்... வந்து... நா சாப்பிட அவசரம் இல்லே.. வந்து லெட்ஜர் மெயின்டனன்ஸ், மேடம்.."

புருஷோத்தமனின் அவஸ்தை, திடீர் கண்காணிப்பு என்று மனுஷன் உதறுவது கௌரிக்குப் புரிந்தது.

என் காரியம் ஆகவேண்டும் என்று நான் பதைத்துக்கொண்டிருப்பது இவனுக்கு எப்படிப் புரியும்? பாவம், தன் விசாரம் இவனுக்கு...

புருஷோத்தமனைப் பார்த்து, எனக்குப் புரிகிறது என்று சொல்லுகிற தினுசில் கௌரி புன்னகைத்தாள்.

"எண்டர் பண்ணாத விவரங்கள் பத்தி ஒண்ணும் சொல்லமாட்டேன்-பயப்படாதிங்கோ... மிஸ்டர் அஹூஜா தன் லாக்கர்களைப் பத்தி ஒரு சில விவரங்களைக் கேட்டிருந்தார். அதைத்தான் பார்க்கப் போறேன். ஸோ ரிலாக்ஸ்..."

முற்றிலும் தணியாத சந்தேகத்தோடு சாவிகளைக் கொடுத்துவிட்டுப் புருஷோத்தமன் போனார்.

ஏற்கனவே இந்த பாங்க்கில் லாக்கர் எடுத்திருக்கும் முக்கிய வாடிக்கைக்காரர்களின் பெயர்களை நினைவுக்கு வந்த மட்டும் கௌரி ஒரு தாளில் எழுதிக் கொண்டு வந்திருந்ததைப் பையிலிருந்து எடுத்தாள்.

வரிசைக்கிரமமாக லெட்ஜரைப் புரட்டி, யார் பெயரில் எந்த லாக்கர் நம்பர் இருக்கிறது என்று குறித்துக்கொள்ளத் தொடங்கினாள்.

அஹூஜா-32,33,47

பண்டாரி-8,9

துர்காதேவி-78,79,80,81,103,104

பதினைந்து பெயர்களை எழுதுவதற்குள் கிட்டத்தட்ட நாற்பது லாக்கர்களைப் பற்றின விவரம் வந்துவிட்டது. ஒவ்வொரு பணக்காரருக்கும் நான்கு, ஐந்து லாக்கர்கள்.

போதுமா?

கௌரி யோசிக்கும்போது மெல்லியதாய்க் காலடி ஓசை கேட்டது.

பேப்பரைக் கைப்பையில் திணித்துவிட்டு கௌரி நிமிர்வதற்கும், மௌலி வருவதற்கும் சரியாய் இருந்தது.



"ஆ-யு ஆர் ஹியர்? எங்கல்லாம் தேடறது? என்ன பண்றேள்?"

"ஒண்ணுமில்லே சார்-சும்மா கொஞ்சம் ஸர்ப்ரைஸ் செக்கப் பண்ணறேன் – தட்ஸ் ஆல்... என்ன வேணும்?"

மௌலி கௌரியை அழுத்தமாகப் பார்த்தார்.

'திடீர் செக்கப்பா? எதற்காக இப்போது? அவசியம் என்ன? அதுவும் நீங்களும் நானும் சேர்ந்து செயல்படும் வழக்கம் இருக்கையில் இப்போது என்ன திடீர் அவசரம்?'

மௌலியின் பார்வையின் தீட்சண்யத்தைத் தாங்க முடியாமல் கௌரி தலையைக் குனிந்துகொண்டாள்.

## 26

விடிகாலை ஆறு மணிக்கெல்லாம் மாதுவை டாக்ஸி கொண்டுவரச் சொல்லி விஜய் கிளம்பி விட்டான்.

ப்ருந்தாவன் எக்ஸ்ப்ரஸில் அவன் பெங்களூருக்குப் புறப்படுகிறான் என்ற நினைப்பே கௌரிக்கு இதமாய் இருந்தது.

பின்னே என்ன?

ஆயிரம் சொன்னாலும் விஜய் இன்னும் மனசு முதிராத சின்னப் பையன்தான். அவனுக்கு எதிரில்

சதா அந்த முரடனோடு சேர்ந்துகொண்டு திருட்டைப் பற்றி விவரித்துப் பேசுவது எத்தனை தவறானது! இவன் மூலமாகத்தான் இந்தச் சகதியில் நான் அழுந்திப் போனேன் என்பது நிஜம்தான் என்றாலும் என் வேதனைகளையும், நான் கௌதம் கேட்கும் விவரங்களைச் சேகரிப்பதற்குள் தவித்துப் பறப்பதையும் விஜய் ஏன் கூடவே இருந்து பார்த்துச் சங்கடப்பட வேண்டும்?

கடைசி நிமிஷத்தில் 'இல்லே, விஜய் எங்கேயும் போகக் கூடாது. இன்னும் நீங்க ரகசிய நம்பர்களைத் தரலை' என்று எதையாவது சொல்லி கௌதம் தடுத்துவிடுவானோ என்ற பயம் கௌரியின் அடிமனசில் நெருடவே செய்தது.

யார் செய்த புண்ணியமோ, அப்படி எதுவும் நடக்காமல் விஜய் கிளம்பிவிட்டான்.

முதல் நாள் இரவு கௌதம் வந்தான். உட்கார்ந்து இரண்டு வார்த்தைகள்கூடப் பேசவில்லை. கௌரி லாக்கர் நம்பர்கள் அடங்கின காகிதத்தை நீட்டியதும், வாங்கிக்கொண்டு, "ஸோ, பெஸ்ட் ஆஃப் லக், விஜய்- இனி நாம எப்ப சந்திக்கப்போறோமோ, தெரியலை!" என்றவன், கௌரி பக்கம் திரும்பி, "நாளைக் காலைலே நா வரமாட்டேன், பிள்ளையை ஊருக்கு அனுப்பற மும்முரத்திலே இருப்பீங்க. சாயங்காலம் வரேன், ரகசிய நம்பர்களைத் தயாரா வெச்சிருங்க.. குட் நைட்" என்று சொல்லிப் போய்விட்டான்.

அவன் போனதும், ரொம்ப நாட்களுக்குப் பிறகு மாதுவை நன்றாகச் சமைக்கச் சொல்லிப் பிள்ளையுடன் உட்கார்ந்து கொஞ்சம் நிம்மதியாகச் சாப்பிட்டாள் கௌரி.



நாளைக்கு, இந்நேரத்திற்கு நான் இந்த கௌதமின் பிடியிலிருந்து விடுபட்டுவிடுவேன், ரகசிய நம்பர்களை எப்படியாவது கண்டுபிடித்து அவன் முகரக்கட்டையில் எறிந்துவிட்டு, படங்களை வாங்கிக் கொண்டுவிட்டால் அப்புறம் கவலை இல்லை.

"நீ நேரே பெரியப்பாவாத்துக்குப் போ, விஜய். அவரும் ரொம்ப நாளா நம்பளைக் கூப்பிட்டுப் பார்த்து அலுத்துட்டார். நீ வியாழன் போறியா? நா சனிக்கிழமை வந்துடுவேன். பெரியப்பாகிட்ட சொல்லு.. அம்மா சனிக்கிழமை வந்துடுவா- பாங்குக்கு ஒரு வாரம் லீவு போட்டிருக்கா, மைசூர், சாமுண்டி, ப்ருந்தாவன் கார்டன்ஸ் எல்லாம் சுத்திப்பார்க்கப்போறோம்னு சொல்லு.. என்ன?"

விஜய் தலையை ஆட்டினான்.

பெட்டியில் துணிகளை அவன் அடுக்கும் நாழிகையில் கூட உட்கார்ந்து தான் எண்ணியிருப்பதை எல்லாம் பேசின கௌரி, நான்கு தரம் சேர்ந்த மாதிரி விஜய் கொட்டாவி விட்டதும் எழுந்தாள்.

"உனக்குத் தூக்கம் வரதாப்பா?-ஓ.கே. படுத்துக்கோ.. இனி எதை நினைச்சும் கவலைப்படாதே, விஜய்.. ஏதோ நம்ப போறாத காலம்- நடக்கக்கூடாததெல்லாம் நடந்திடுத்து..ம்..எல்லாத்தையும் மறந்துடு. இனி புது விஜய்யா, நா பெருமைப்படற குணங்களோட இருக்கற விஜய்யா, நீ இருக்கணும், எனக்கு அதுதான் வேணும்."

திரும்பக் காலையில் விஜய் ஊருக்குப் புறப்படுமுன் இதையே சொன்னாள் கௌரி.

"ஐ'ம் ஸாரிம்மா" என்ற விஜய், கண்கள் பளபளக்க அவளிடம் விடைபெற்றுக்கொண்டான்.

விஜய் போனதும் திரும்பப் படுக்கையில் போய்ப் படுத்துக்கொண்டாள் கௌரி.

"குளிக்கலியா?" எட்டிப் பார்த்த மாதுவின் பக்கம் திரும்பி அவள் புன்னகைத்தாள்.

ஒரு வாரமாக கௌதம் வருவதையும், அறைக் கதவைச் சாத்திக்கொண்டு நாங்கள் கிசுகிசுப்பதையும் பற்றி இவன் என்ன நினைக்கிறான்? ஒன்றுமே சொல்லாமல் இவன் கற்பனையை வளர்ப்பதைவிட எதையாவது சொல்லி வைப்பது தேவலையோ?

"மாது, இப்படி வா..."

வந்தான்.

"நாலு நாளா நானும் உன்கிட்ட விவரத்தைச் சொல்லணும்னு பார்க்கறேன், விஜய் கூடவே இருந்ததுலே ஒண்ணுமே முடியலை... வந்து மாது... உனக்கே புரிஞ்சிருக்கும், விஜய் ஒரு பெண்ணைக் காதலிக்கறானாம். அவளைத்தான் கல்யாணம் பண்ணிப்பேன்னு பிடிவாதம் பண்றான். முதல்லே ஸ்ட்ரிக்டா 'நோ'ன்னிட்டேன். மறுநாள் என்ன நடந்ததுனு உனக்கே தெரியும். ரெண்டுங்கெட்டான் வயசு; விட்டுத்தான் பிடிக்கணும். அந்தப் பெண்ணுக்கு கௌதம் சிபாரிசு வேற... 'கொஞ்சம் பொறுத்துக் கோப்பா... யோசிச்சு காரியத்துலே இறங்கலாம்'னு நா அழுது, கெஞ்சினதுக்கு விஜய் ஒரு தினுசா ஒத்துண்டு இருக்கான். அதான் முதல்லே இந்த ஊர்லேந்து



அவனைக் கிளப்பிடணும்னு பெங்களூருக்கு அனுப்பிட்டேன். வர்ற சனிக்கிழமை பாங்க் கிடையாது. நானும் அன்னிக்கே பெங்களூருக்குப் போகலாம்னு உத்தேசம். ஒரு வாரம் லீவு போட்டுட்டு உறவுக்கார மனுஷாளோட சுத்தினா, அவன் மனசு மாறாதான்னு நப்பாசை..."

ஓ! இதுதானா விஷயம்! என்கிற தினுசில் கண்களை விரித்துக்கொண்டு மாது பார்த்தான். வீட்டில் நடக்கும் குழப்பங்களுக்கு கௌரி கொடுத்த விளக்கம் நன்றாகப் பொருந்தவே, அப்படியே அதை நம்பினான் அவன்.

"இந்தக் காலத்துப் பிள்ளைகளே இப்படித்தாம்மா... குலம் கோத்திரம்னு ஒண்ணும் புரியாம காதல் கீதல்னு குதிக்கறதுகள். கவலைப்படாதீங்கோ... பகவான்மேல பாரத்தைப் போட்டுடுங்கோ... சரி... நாழியாச்சு... நீங்க குளிச்சுட்டு டிபன் சாப்பிட வாங்கோ..."

கௌரி எழுந்தாள்.

ஆபீஸ் கார் வந்து, மௌலிக்கு 'குட்மார்னிங்' சொன்னபடி காரில் ஏறுகையில், தான் தெளிவாய் இருப்பதை கௌரியால் உணர முடிந்தது.

காரில் போகும்போது மௌலியிடம், "விஜய்யோட பெரியப்பா ரொம்ப நாளா பெங்களூருக்குக் கூப்பிட்டுண்டு இருக்கார். போய் ஒரு வாரம் இருந்துட்டு வந்தா என்னன்னு தோணறது. உடம்பு சரியில்லாம இருக்கறதுக்கு ரெஸ்ட் எடுத்துண்ட மாதிரியும் இருக்கும்னு விஜய் ரொம்பக் கட்டாயப்

படுத்தினான்.. சரினு ஒத்துண்டுட்டேன். இன்னிக்கு ப்ருந்தாவன்லே விஜய் புறப்பட்டுப் போயிட்டான். நா சனிக்கிழமை போகலாம்னு இருக்கேன்.. ஒரு வாரம் லீவு போடலாம்னு எண்ணம்-என்ன சார்?"

"மழை கொட்டப் போறது- நீங்ககூட பாங்க்குக்கு லீவு போட்டுட்டு வெளியூர் போறேங்கறேளே! ஜமாய்ங்கோ, கௌரி-யு மஸ்ட் கோ.."

பாங்க்கை அடைந்து, ஸ்ட்ராங்க் ரூமைத் திறக்கையில் அதிருஷ்டம் கௌரியைப் பார்த்துச் சிரித்தது.

ஒதுங்கி நின்று நிதானமாக மௌலி குமிழ்களைச் சுழற்றியபோது, 6,4,7,1 என்று தொடர்ச்சியாக நான்கு நம்பர்களை கௌரியால் பார்க்க முடிந்தது.

இன்னும் ஒன்றுதான்.. நாளைக்குள் முடியுமா?

அன்று பாங்க்கில் செமத்தியாய் வேலை. புது வாடிக்கையாளர்களுடன் பேச்சுவார்த்தை, பாலாஜியோடு போகவேண்டிய அபிஷியல் லஞ்ச் என்று பல காரியங்களைச் செய்ய இருந்ததால் அவற்றில் ஒன்றிப் போய்விட்டாள் கௌரி.

மணி நான்கு இருக்கும். பணத்தை உள்ளே வைக்க எழுந்த நிமிஷத்தில் போன் அடித்தது.

விஜய்!

பெங்களூரிலிருந்து எஸ்டிடி பேசுகிறானாம்.

"பெரியப்பாவுக்கு உன்னைப் பார்த்ததுலே சந்தோஷமா? அங்கே எல்லாரும் சௌக்கியமா?



அவாத்துலே போன் கிடையாதே, எங்கேயிருந்து பேசறே? நா அவாளை ரொம்பக் கேட்டேன்னு சொல்லு.. சனிக்கிழமை வந்துடுவேன்னு சொல்லு.. என்ன?"

பேசி முடித்துவிட்டு பேஸ்மெண்டுக்கு மௌலியுடன் பணத்தை வைக்கச் சென்றவளுக்குச் சந்தோஷமாக இருந்தது.

பணத்தை உள்ளே வைத்து, காஷ் ரிஜிஸ்டரில் எண்டர் செய்து, அறையைப் பூட்டி, டெல் கிளாக்கை கௌரி ஓட வைத்தாள்.

லாக்கர் ரூமுக்குச் சென்று, அந்த ரிஜிஸ்டரில் கையெழுத்துப் போட்டு, அறையைப் பூட்டின பின், நிதானமாக இருவரும் மாடிப்படிகளை நோக்கி நடந்தார்கள்.

மௌலி ஏதோ ஜோக் சொன்னார். சிரிப்பை அடக்கமாட்டாது கௌரி வாய்விட்டுச் சிரித்தாள்.

மாடிப்படியில் காலை வைத்து மௌலி நின்றார்.

"யு நோ, கௌரி.. நாலு நாளுக்கப்புறம் இன்னிக்குத்தான் நீங்க சிரிக்கறேள்!"

"........"

"இத்தனை வருஷங்களிலே நீங்க இவ்வளவு டல்லா இருந்து நா பார்த்ததே இல்லே.. மனசுக்கு என்னடா இப்படினு ரொம்பக் கஷ்டமாக்கூட இருந்தது. இப்ப நீங்க சிரிச்சுப் பார்த்தப்புறம்-அப்பாடினு இருக்கு."

மௌலி நிஜமான அன்புடன் பேசியது கௌரியின் நெஞ்சைத் தொட்டது.

சட்டென்று இப்போது காம்பினேஷன் நம்பர்கள் பற்றி இவரிடம் பேசினால் என்ன என்று தோன்றியது.

"தாங்க் யு ஃபார் யுவர் கன்ஸர்ன், சார், உடம்பில் என்னமோ ஒரு பலவீனம், தட்ஸ் ஆல்..." இரண்டு படிகள் ஏறின கௌரி நின்றாள். திரும்பி முழுமையாக மௌலியைப் பார்த்தாள். முகத்தில் ஆச்சர்ய பாவத்தை வரவழைத்துக்கொண்டாள். வெகுளித்தனமாகப் பேசுவதுபோல முயற்சி செய்து பேசினாள்.

"நேத்து ஒரு ஃபன்னி கனவு, சார். சொன்னா சிரிப்பேள் நீங்க எப்பவாவது, 'உன் ரகசிய நம்பர் என்ன சொல்லு; ரெண்டுபேருதும் ஒண்ணா இருக்கானு பார்க்கலாம்'னு விளையாட்டுக்குக் கேட்பேள் பாருங்கோ. அந்த மாதிரி ஒரு கனவு. 'என்ன கௌரி, ஒரு ஜோஸியம் சொல்லட்டுமா? உன் லாஸ்ட் நம்பர்ஸ் 1,5 தானே'னு கேட்கறேள்- 'ஆமாம் சார், என் நம்பர்ஸ் உங்களுக்கு எப்படித் தெரியும்'னு நா ஆச்சரியப்படறேன். கனவு கலைஞ்சு போயிடுத்து..நிஜமாவே என் கடைசி ரெண்டு நம்பர்ஸ் 1,5 தான்... நீங்க கனவுலே டக்குனு அதைக் கேட்டதும் அசந்துபோயிட்டேன்! சம்பந்தா சம்பந்தம் இல்லாம என்ன கனவு வரது பார்த்தேளா?"

குழந்தைத்தனமாக கௌரி தன் கனவை விவரித்ததை மௌலி ரசித்தார். அப்புறம் சிரித்தார்.



"கனவுலேகூட பாங்க் பத்தின நினைப்புதானா? உங்களை மாத்தவே முடியாது, கௌரி. ஆனா ஒண்ணு, உங்க நம்பர்ஸ் வேணா சரியா இருக்கலாம்- என்னுது தப்பு! என்னோட கடைசி ரெண்டு நம்பர்ஸ் 1,3..."

திருப்பதி லட்டு போல கௌரியின் மடியில் கடைசி நம்பரை மௌலி தூக்கிப் போட்டார்.

மாடிக்கு வந்து முதல் காரியமாய், ஒரு வெள்ளைத்தாளில் மௌலியின் ரகசிய நம்பர்களை கௌரி எழுதி வைத்துக்கொண்டாள்.

6,4,7,1,3.

நம்பர்களின் மேல் தன் நம்பர்களையும் எழுதினாள். முதல் நம்பர்கள் முன்னால் கௌரி என்று குறிக்க 'ஜி' எழுத்தையும், இரண்டாவதன் முன்னால் மௌலியைக் குறிக்க 'எம்' என்றும் எழுதினாள்.

கௌதம் வந்ததும் 'இந்தாடா! தூக்கிக்கொண்டு போய்ச் சேர்' என்று அவன் முகத்தில் விட்டெறிய வேண்டும். 'இனி இந்த வீட்டுப்படி ஏறாதே' என்று கண்டிப்பாய்ப் பேச வேண்டும். 'எக்காரணத்தைக் கொண்டும் எங்கள் முகத்தில் விழிக்காதே, தொடர்பு கொள்ள முயலாதே....' என்று அடித்துச் சொல்லிவிட வேண்டும்.

ஆமாம்-அந்த போட்டோக்கள்....?

ரகசிய நம்பர்களைக் கொடுத்துவிட்டால் அவர்களைப் பிடித்து வைத்துக்கொள்ள அப்புறம் ஒன்றுமே இருக்காதே! கொடுக்காமல் ஏமாற்றிவிட்டால்? அப்படியும் செய்வானா என்ன? ஏன் செய்யமாட்டான்?

நான் என்ன பண்ணவேண்டும்? ரகசிய நம்பர்கள் வேண்டுமானால் படங்களும் நெகடிவ்களும் என் கைக்கு வந்தாக வேண்டும் என்று கேட்க வேண்டுமோ? எஸ்- அதுதான் சரி... ஏமாறாமல் கெட்டிக்காரத்தனமாக நடந்துகொள்ள வேண்டும்.

மாலையில் வீட்டுக்குத் திரும்பி, கௌதமை எதிர்பார்த்து அமர்ந்திருந்தபோது கௌரிக்கு இதே சிந்தனைகள்தாம்.

எட்டு மணிவரை காத்திருந்து பார்த்துவிட்டுச் சாப்பிட உட்கார்ந்தாள்.

பாதி சாப்பிடும்போது போன் அடித்தது.

கௌதம்தான்.

"ஸாரி, மேடம்- இங்கே அவசர வேலை கவனிக்க வேண்டி இருந்திச்சி... இன்னும் அரை மணிலே வந்திடறேன்... என்ன ஸக்ஸஸ்தானே?"

"ஆமாம்... ஆனா, அது உங்களுக்கு வேணும்னா நீங்க படங்கள், நெகடிவ்களோட வாங்கோ..."

"............"

"நா முடிவா சொல்றேன். இது உங்களுக்கு வேணும்னா எனக்கு அது கண்டிப்பா வேணும், புரியறதா?"

"ஓ-நல்லாப் புரியுது, மேடம்... சரி. நா அப்புறமா காண்ட்டாக்ட் பண்றேன்..."

பத்து நிமிஷங்களில் போன் மீண்டும் அழைத்தது.

விஜய்...!



"என்னப்பா?"

"ஒண்ணுமில்லே, மம்மி... வந்து- கௌதம்கிட்ட ரொம்பக் கறாராய்ப் பேசினாயாமே... ஏம்மா? அவன் முரடன்... அவன் சொல்றபடி நடக்கறதுதான் சரினு எனக்குத் தோணறது..."

கௌரிக்குத் தூக்கிவாரிப்போட்டது.

இவனுக்கு எப்படி அதற்குள் நியூஸ் போயிற்று? பெரியப்பா வீட்டில் போன் கிடையாதே! எப்படித் தொடர்புகொண்டு பேச முடிந்தது?

"உனக்கு யார், என்ன சொன்னா, விஜய்?"

"கௌதம் பேசினான், மம்மி. நீ கண்டிஷன் போட்டதைச் சொல்லி 'உங்கம்மாவை ஒழுங்கா நடந்துக்கச் சொல்லு'ன்னு மிரட்டறான்..."

"உன்னோடு எப்படிப் பேசினான்? எங்கே காண்ட்டாக்ட் பண்ணினான்?"

"அது வந்து... மம்மி... கௌதம் இப்போ அங்கே வருவான்... வந்து எல்லா டிடெய்ல்சும் சொல்லுவான்... ப்ளீஸ்மம்மா... அம்மா... அவனைப் பகைச்சுக்காதே... அப்புறம் என் பாடுதான் திண்டாட்டம்... நா வெச்சுடறேன்... பைம்மா..."

என்ன, ஏது என்று நிதானிப்பதற்குள் விஜய் தொடர்பைத் துண்டித்துவிட்டான்.

என்ன நடக்கிறது?

விஜய் குரலில் ஏன் ஒரு பதற்றம், பயம்?

இருப்புக்கொள்ளாமல் கௌரி உலாத்தினாள். ஒன்பது அடிக்கப் பத்து நிமிஷங்கள் இருக்கும் போது கௌதம் உள்ளே நுழைந்தான்.

மாது வேலை முடிந்து கொல்லைத் தாழ்வாரத்தில் படுக்கப் போய்விட்டதால் அங்கேயே உட்கார்ந்து பேசினார்கள்.

"விஜய் பேசினானா, மேடம்?"

"............"

"வளவளனு நீளமா சொல்லாம ரெண்டு வரிலே நறுக்குத் தெறிச்ச மாதிரி சொல்றேன்-கேட்டுக்குங்க... விஜய் பெங்களூர்லே அவன் பெரியப்பா வீட்டுலே இல்லே... மதுசூதனுக்கு அங்கே ஒரு வீடும் இருக்கு. அங்கேதான், எங்க கண்காணிப்பிலே இருக்கான். இங்கே எல்லாம் ஒழுங்கா நடந்து முடிச்ச மறு நிமிஷம் அவன் ஃப்ரீ ஆயிடுவான்-புரியுதா? இப்போ அந்த ரகசிய நம்பர்களைக் கொடுத்திடுங்க. தகராறு எதுவும் வேணாம்-நாளைக்கு மத்தியானம் உங்க போட்டோஸ் ப்ராமிஸ் பண்ணபடி உங்க கைக்கு வந்திடும். பயப்படவே தேவையில்லே..."

கௌதம் பேசப்பேச பாய்ந்து அவன் உப்பின முகத்தில் நான்கு குத்துவிட்டால் தேவலைபோல கௌரிக்குக் கைகள் பரபரத்தன.

"எதுக்காக இப்படி விஜய்யைக் கண்காணிக்கறேன்? இதெல்லாம் உங்களுக்கே நன்னா இருக்கா? எதுக்காக இப்படிக் கடைசி நிமிஷம் வரை படங்களைக் கொடுக்காம இருக்கேள்?"



"எல்லாம் ஒரு ஜாக்கிரதைக்குத்தான், மேடம்... நீங்க யார்கிட்டயும் எதுவும் பேசக்கூடாது என்கிற ஜாக்கிரதைதான்-ஓ.கே. கொடுங்க... நா கிளம்பணும்..."

மேற்கொண்டு எதுவும் பேசாமல் கௌரி, நம்பர்கள் எழுதிய சீட்டை எடுத்து நீட்டினாள்.

நிம்மதியாகத் தூங்கலாம், நம் பொறுப்பு முடிந்தது என்று நினைத்தது நடக்க முடியாதபடி, கௌதம் பேசிவிட்டுப் போன பிறகு கௌரி மீண்டும் பழையபடி குழப்பத்தில் ஆழ்ந்துபோனாள்.

ஏன் என்னை இவன் நம்பமாட்டேன் என்கிறான்? நான் யாரிடம் இதுபற்றிப் பேசுவேன்? கோபால மாமாகூட ஊரில் இல்லேயே!

நினைக்க நினைக்க ரொம்ப பயமாக இருந்தது.

விஜய்! என் விஜய்! அவனை நான் ஏன் பெங்களூருக்கு அனுப்பினேன்? என் கண் எதிரில் வைத்துக் கொள்ளாமல் மடச்சிபோல எப்படி அவனைப் பிரிந்திருக்கச் சம்மதித்தேன்?

விஜய் எங்கே இருக்கிறான்? அறையில் கைதி மாதிரியா வைத்துப் பூட்டியிருப்பார்கள்?

ஐயோ-விஜய்-காலைச் சுத்தின பாம்பு கடிக்காமல் விடாது என்பார்களே, இந்த கௌதம் ஒரு பாம்புதானோ? கடிக்காமல் விடமாட்டானோ? முழங்கால்களில் முகத்தைப் பதித்துக்கொண்டு கௌரி விசிக்கத் தொடங்கினாள்.

## 27

வெள்ளிக்கிழமை யாருக்காவும், எதற்காகவும் பயப்படாமல் மெல்ல விடிந்தது.

ராத்திரி முழுவதும் கொட்டுக் கொட்டென்று விழித்துக்கொண்டு, தூக்கம் வராமல் என்னென்னவோ பயங்கள் மனசைக் கவ்வப் புரண்டுகொண்டிருந்த கௌரி அதிகாலையிலேயே எழுந்துவிட்டாள்.

இன்று இரவுதான் அவர்கள் பாங்க்கைக் கொள்ளையடிக்கத் திட்டம் திட்டியிருக்கிறார்கள் என்ற நினைப்பு நிமிஷத்துக்கு ஒருமுறை அடிவயிற்றில் சொரேர் என்றது.

இவ்வளவு பேசி உதவி செய்திருக்கிற தனக்கு எந்த விதத்தில் அவர்கள் கொள்ளையை முடிக்கத் திட்டம் தீட்டி இருக்கிறார்கள் என்பதுகூடத் தெரியவில்லையே என்ற எண்ணம் ஓரிரு முறை கௌரிக்குத் தோன்றவே செய்தது.

எதற்காகத் தெரிய வேண்டும்? என்னை, என் குடும்பத்தை மானமாக வாழ வழி செய்யும் பாங்க், கொள்ளையடிக்கப்படப் போகும் விவரம் எனக்கு எதற்காகத் தெரிய வேண்டும்? நியாயமாகப் பார்த்தால் முழு மூச்சுடன் இவர்களுக்கு எதிராக வேலை செய்து, கூட்டமாக இவர்களை நான் காட்டி அல்லவா கொடுத்திருக்க வேண்டும்? அதுதானே நியாயம், நேர்மை,



தர்மமும்கூட? அப்படி எதுவுமே செய்யாமல் விஜய்க்காக, செய்யக்கூடாத ஒன்றை நான் செய்ய முன்வந்திருப்பது நிஜம்தான் என்பதற்காக எனக்கெதற்கு வேண்டாத விவரங்கள்? எனக்கு என்ன தலையெழுத்தா? அவர்கள் எப்படி வேண்டுமானாலும் கொள்ளை அடிக்கட்டும், எத்தனை வேண்டுமானாலும் அள்ளிக் கொண்டு போகட்டும், எனக்கு என்ன? கண்களை மூடிக்கொண்டு, நியாய தர்மங்களை அடக்கிக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு அவர்கள் கேட்ட விவரங்களைச் சொல்லிவிட்டேன், உதவிகளைச் செய்துவிட்டேன். இனி அவர்களுக்கும் எனக்கும் எதற்காகக் கடுகத்தனை சம்பந்தம் இருக்கவேண்டும்? நோ-வேண்டாம்..வேண்டவே வேண்டாம்..படங்களும் நெகடிவ்களும் கைக்கு வந்துவிட்டால் போதும்... அதுதான் எனக்கு இப்போதைக்கு முக்கியம்..

ஆமாம், இன்று இரவு நடக்கும் திருட்டுப் பற்றி, எல்லாம் ஒழுங்காக நடந்தால் திங்கள் அன்றுதான் சேதி வெளியில் வரும் என்றானே கௌதம்-அது எப்படி..? சனிக்கிழமை காலையில் காவலாளிகள் ட்யூடி மாறுவார்களே, அப்போது தெரியாதா? என்ன மடத்தனம் இது! எனக்கு இருந்த படபடப்பில் நான் எப்படி இதுகுறித்து யோசனையே பண்ணாமல் இருந்தேன்?

விடுமுறை நாள் என்பதால் பத்து மணிக்குத்தான் ட்யூடி மாறுவார்கள். ஆனாலும்?

இதுபற்றி கௌதமிடம் பேசினால் என்ன? அடேய், மடையா, தப்புக் கணக்குப் போட்டுவிட்டாய்.. பாங்க் விடுமுறை என்றாலும் காவலாளிகள் மாறுவார்கள் என்பது எப்படி உன் மரமண்டையில்

உதிக்கவில்லை என்று கேட்டால் என்ன? எதற்காகக் கேட்க வேண்டும்? இவர்கள் எக்கேடு கெட்டுப் போனால் எனக்கு என்ன என்று நான் இருக்க வேண்டியதுதானே!

அது எப்படி?

நாளைக்கு இவர்கள் மாட்டிக்கொண்டால் போலீஸ் துருவும் துருவலில் யார்யார் பின்னால் இருந்தார்கள் என்ற விவரம் வராமலா போய்விடும்?

இதென்ன அசட்டுத்தனம்! இவர்கள் அஜாக்கிரதையாய் விட்ட விஷயத்தை நானும் எப்படிக் கவனிக்காமல் இருந்தேன்? கௌதமை இப்போது எப்படித் தொடர்பு கொள்வது? அவன் இருப்பிடம், போன் நம்பர் என்று எதுவுமே எனக்குத் தெரியாதே!

மதுசூதனோடு பேச முடியுமோ?

அவன் ஃபாக்டரிக்கு போன் பண்ணிக் கேட்டால் வீட்டு போன் நம்பர் சொல்ல மாட்டார்களா?

பரபரப்புடன் கௌரி டைரக்டரியை எடுத்து, விஜய் ட்ரெயினிங் கம்பெனியின் போன் நம்பரைத் தேடினாள்.

கிடைத்தது. ரிஸீவரை எடுத்து நம்பர்களைச் சுழற்றினாள்.

"ஹலோ, ட்யூடி வாட்ச்மேன் பேசறேன், யார் வேணும்?"

"உங்க முதலாளி மிஸ்டர் மதுசூதன் வீட்டு போன் நம்பர் தெரியுமா? கொஞ்சம் சொல்ல முடியுமா?"



"எம்டி வீட்டு போன் நம்பர் எனக்கு தெரியாதுங்க... எட்டு மணிக்கு ஆபரேட்டர் அம்மா வந்திடுவாங்க... அப்ப போன் பண்ணுங்க..."

போனை வைத்த கௌரிக்கு, என்ன செய்வது என்றே புரியவில்லை.

குளித்துத் தயாரானாள். ஸ்வாமி அறைக்குச் சென்று, குத்துவிளக்கைத் தேய்த்து, எண்ணெய் விட்டு, ஏற்றி நமஸ்கரித்தாள்.

பெரிதாய் மாட்டியிருந்த அப்பா, கணவர் படங்களை நிமிர்ந்து பார்த்தாள்.

என்னை ரெண்டுபேரும் மன்னிச்சுடுங்கோ! விஜய்யை இந்தச் சகதிலேந்து காப்பாத்த எனக்கு வேற வழி தெரியலை. என்னை மன்னிக்கறது மட்டுமில்லாம தெய்வமா ரெண்டு பேரும் கூட இருந்து கடைசி வரைக்கும் எல்லாம் சரியா நடக்க உதவி பண்ணுங்கோ... எனக்கு ஒண்ணுமே புரியலை.

கண்களில் நீர் தளும்ப, மானசீகமாய் வேண்டிக் கொண்ட கௌரி மீண்டும் நமஸ்கரித்து எழுந்தாள்.

வாசலில் ஸ்கூட்டர் சப்தம் கேட்டது.

கௌதமா?

கௌரி கால்களை அகலஅகலமாக வைத்து வராந்தாவுக்கு வந்தாள்.

அவனேதான்.

"உங்களை எப்படி காண்ட்டாக்ட் பண்ணறதுனு தவிச்சுண்டு இருந்தேன். மதுசூதன் ஃபாக்டரிக்குக்

கூட போன் பண்ணிப் பார்த்தேன்...யாரும் பொறுப்பா பதில் சொல்லலை... நல்லவேளையா நீங்களே வந்துட்டேள்..."

"மதுசூதன் ஃபாக்டரிக்கா? அங்கே எதுக்காக போன் பண்ணீங்க?"

கௌதம் அதட்டலாய்ப் பேசினான்.

"ஒரு முக்கிய சமாச்சாரம் சொல்லத்தான்... உள்ளே வாங்கோ..."

விஜய்யின் அறைக்குள் சென்று உட்கார்ந்ததும் கௌரி மெல்லிய குரலில் பேசினாள்.

"திங்கள் கார்த்தால வரை திருட்டு பத்தின சமாச்சாரம் யாருக்கும் தெரியாதுன்னேளே, அது தப்பு.. எனக்கு இப்பத்தான் ஞாபகத்துக்கு வந்தது. சனிக்கிழமை கார்த்தால பத்து மணிக்கு கார்ட்ஸ் டியூட்டி மாறுவா, அப்போ தெரிஞ்சுடும்..."

கௌரி எதிர்பார்த்த தினுசில் கௌதம் அதிர்ந்து போகவில்லை.

"ஆமாம் சனிக்கிழமை மாறுவாங்க... தெரியுமே!" என்றான் நிதானமாய்.

"அப்போ? அப்போ?"

"ரிலாக்ஸ், மேடம்.. உங்களுக்கு இதுபத்தி எந்தப் பதட்டமும் ஏற்படக்கூடாதுங்கறத்துக்காகத்தான் ரெண்டு நாள் அவகாசம் இருக்குன்னேன். நல்ல வேளையா நீங்களும் அதைப்பத்தி யோசிக்கவே இல்லை..."



"அப்போ, இத்தனை அவசரமா என்னைத் துரத்தித் துரத்தி வேலை வாங்கினது எதுக்காக? ரெண்டு நாள் பாங்க் ஹாலிடே ஒரு காரணமில்லையா?"

"இல்லே... இன்னிக்கு உங்களுக்கு ரிஸர்வ் பாங்க்லேந்து பெரிய தொகை வருது. திங்கள் அன்னிக்கு 'மே டே' இல்லையா? இன்னிக்கு ராத்திரியை விட்டாச்சின்னா மறுபடி அடுத்த மாச சம்பள நாளுக்காகக் காத்திருக்கணும், புரியுதா?"

அதிர்ச்சியின் காரணமாய் கௌரியால் ஒழுங்காய்ப் பேச முடியவில்லை.

"இ...இ... இந்த விவரமெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"அதான் சீக்ரெட், மேடம்..."

"நிஜமா சொல்லுங்கோ, போன வாரம் ஒரு நாள்லே மதுசூதன் சொல்லிக்கொடுத்த ஐடியாவா இது? அதுக்குள்ளே எப்படி இத்தனை விவரங்களை உங்களால தெரிஞ்சுக்க முடிஞ்சுது?"

கௌதம் சிரித்தான்.

"வீணாய் ஏன் குழம்பறீங்க, மேடம்? இன்னிக்கு ஒருநாள்.. அப்புறம் நீங்க யாரோ நா யாரோ! அனாவசிய சந்தேகங்களை ஏன் வளர்த்துக்கறீங்க? சரி.. நா இப்ப ஏன் வந்தேன்னு சொல்லலியே.. இன்னிக்கு எப்படி எல்லாத்தையும் நடத்தத் திட்டம் தீட்டியிருக்கோம்னு விவரிக்கத்தான் வந்திருக்கேன். மணி ஆயிடிச்சி பாங்க்குக்குப் போயிட்டா அப்புறம் நேரம் கிடைக்காது..."

"வேண்டாம்... எனக்கு எந்த விவரமும் தெரிய வேணாம்!"

"அப்படிச் சொல்லிட்டா எப்படி, மேடம்? நீங்க கேட்டுத்தான் ஆகணும்... கேளுங்க... நாங்க மொத்தம் ஆறுபேர். யார்யார் என்கிற விவரம் உங்களுக்குத் தேவையில்லே... சரியா பன்னண்டரை மணிக்கு பாங்க் ஸைட் என்ட்ரன்ஸ் வழியா உள்ளே புகுந்துடுவோம். செக்யூரிட்டி ஆளை அடிச்சுக் கட்டிப் போட்டுடு வோம், அவன் அலாரம் ஸ்விட்ச், அல்லது போன்கிட்ட ஓடிடாம விழிப்பா இருந்து தாக்குவோம். ரெண்டு பேர் ஸ்ட்ராங் ரூமுக்கும் நாலு பேர் லாக்கர் ரூமுக்கும் போவோம். சாவிகளைப் போட்டு, திறக்கற முறைலே திறந்து, பணங்களை நகைகளைச் சாக்குலே கட்டிடு வோம். லாக்கர் ரூம்லே குறிப்பிட்ட இருபது லாக்கர் கதவுகளை எலக்ட்ரிக் ரம்பத்தால அறுத்து உள்ளே இருக்கறதை எடுக்க ஆசைதான். ஆனா, இது நடக்கிற காரியம் இல்லே... எங்க எக்ஸ்பர்ட் சொல்றான், அவனாலே கால்மணிலே ஒரு லாக்கர் கதவை அறுத்து எடுக்க முடியும்னு. மொத்தம் ரெண்டுபேர். அந்தக் கணக்குப்படி பார்த்தா ஒரு மணிக்கு எட்டு. மூணுமணி நேரத்துக்கு இருபத்திநாலு. விடிகாலை நாலு மணிக்குள்ளே மூட்டைகளோடு கிளம்பிடணும்னு திட்டம். ஸைட் என்ட்ரன்ஸிலே உங்க பாங்க் வேன் மாதிரியே ஒரு வேன் நிற்கும். அதுலே ஏறிக்கிட்டுச் சிட்டாய் பறந்துடுவோம். லாக்கர் மொத்தம் இருபதுதான்னு இருக்கறதால, நடிகை துர்காதேவி, டைமண்ட் மர்ச்செண்ட்னு குறிப்பிட்டவங்க லாக்கர்களை



மட்டுமே அறுக்க உத்தேசம்... என்ன மேடம்... எப்படி பிளான்?"

"_____"

"இப்படிப் பேசாம இருந்தா எப்படி? நல்லா இருக்குனு ஒரு வார்த்தை பாராட்டினா என்ன, மேடம்?"

ஆங்கிலப் படம் ஒன்றைப் பார்க்கிற உணர்வு ஏற்பட, கௌரி அப்படியே உட்கார்ந்துவிட்டாள்.

முளைக்கீரையைக் கிள்ளி எடுக்கிற மாதிரி, அத்தனை சுலபம் என்கிற மாதிரி, இவன் பேசுகிறானே, இது சாத்தியமா? நிஜமாகவே இத்தனை சுலபம்தானா?

"மணி ஆச்சு... முக்கியமான விஷயத்துக்கு வரேன், லிஸன் மேடம்... திடீர்னு நாங்க எதிர்பார்க்காத தினுசிலே ஒரு சின்னச் சங்கடம். நாங்க இன்னிக்கு யார் செக்யூரிடிலே வருவான்னு எதிர்பார்த்தோமோ அவன் லாஸ்ட் மினிட்லே வரப்போறதில்லைனு தீர்மானம் ஆயிடுச்சு. அவனுக்கு ஜுரம். அவனுக்கு பதிலா வேறு ஒருத்தன் வரான். அதனாலே நாங்க உள்ளே நுழையறத்துக்கு ஏற்பாடு பண்ண வேற ஒருத்தரைத்தான் தேடணும்... அடுத்த மாசம் வரை காத்திருக்க மதுசூதனுக்கு விருப்பமில்லே... பாங்க் உள்பக்கம் நல்லா தெரிஞ்ச ஒருத்தர் இருந்தா ரொம்ப சௌக்கியம்... அதனாலே..."

என்ன சொல்ல வருகிறான் இவன்?

"அதனாலே நீங்க எப்படியாவது பாங்க் உள்ளே தங்கிட்டு ராத்திரி எங்களுக்குக் கதவைத் திறந்து விடணும்னு நாங்க அபிப்பிராயப்படறோம், மேடம்..."

கௌரி செயலிழந்துபோனாள்.

"நா-நானா?" என்றவளுக்கு மயக்கம் வரும்போல இருந்தது.

"பயப்படாதிங்க, மேடம். இது ரொம்ப ஸேஃபான திட்டம். நீங்க பாங்க்கிலே ஒளிஞ்சிட்டு இருந்து சரியா பன்னிரண்டரைக்கு, கதவைத் திறந்துவிட்டுட்டு உங்க வீட்டுக்குப் போயிடலாம். அப்புறம் உங்களுக்கும், இதுக்கும் சம்பந்தமே இருக்காது.. ஐ ப்ராமிஸ்.."

கோபமும், அழுகையும் சீறிக்கொண்டு எழ கௌரி, "அயோக்கிய ராஸ்கல்" என்றாள். மாதுவுக்குக் கேட்டுவிடக்கூடாது என்பதற்காகப் பல்லைக் கடித்துக்கொண்டு, "ஸ்கௌண்ட்ரல்" என்று உறுமினாள்.

"என்னை என்னன்னு நினைச்சு இப்படிப் பேசறே? யூ பாஸ்டர்ட்.. கெட் அவுட்.."

"பதட்டப்பட்டுத் திட்டறதால ஒண்ணும் ஆகப் போறதில்லை... விஜய் எங்க கண்காணிப்பிலேதான் இருக்கான். படங்கள் இன்னும் எங்ககிட்டதான் இருக்கு... அப்புறம் உங்க கைப்பட நீங்களே எழுதின லாக்கர் நம்பர், அதுங்களோட சொந்தக்காரர்கள் பெயர்கள், ரகசிய நம்பர்கள் எங்ககிட்ட இருக்கு... முக்கியமா, ஆரம்பத்திலே விஜய் மேல் ப்ராமிஸ் பண்ணியிருக்கீங்க.. பேசாம புத்தியோட நா சொல்றத்துக்கு ஒப்புக்குங்க.. இல்லாட்டா வீண் அவஸ்தைதான், மேடம்.."

பொங்கும் பாலில் தண்ணீர் தெளித்த மாதிரி சப்பென்று கௌரி அடங்கினாள்.



விஜய்.. படங்கள்-இவை போதாது என்று நான் என் கைப்பட எழுதின காகிதங்கள் வேறு மாட்டிக் கொண்டுவிட்டனவா? மூளையே இல்லாமல், யோசிக்காமல் நானா இப்படிச் செய்திருக்கிறேன்?

கோபம் புஸ்வாணமானதும் கண்ணீர் பிரவாகமெடுத்துக் கிளம்பியது.

"ஷ்-ஷ்.. மேடம்.. கண்ணைத் துடையுங்க! நேரம் அதிகம் இல்லே.. மணி எட்டரை - ஆபீஸ் கார் வந்திடும்.. ஷ்.. சொன்னா கேளுங்க.."

கௌரி சப்தமில்லாமல் விசும்பிக்கொண்டிருந்த நாழிகையில் கௌதம் திட்டத்தை விளக்கினான்.

"நீங்க பல நாட்களுக்கு லேட்டா வேலை செய்யறது வழக்கம்தான். இன்னிக்கும் அப்படி வேலைனு தங்கிடுங்க... எல்லோரும் போன பிறகு ஏதாவது மறைவான இடத்திலே பதுங்கிக்குங்க.. செக்யூரிடி ஆட்கள் கண்லே படாம பன்னிரண்டு இருபத்தைஞ்சு வரை ஒளிஞ்சிக்குங்க... அவுங்க பன்னண்டரை மணிக்கு டெல் டேல் க்ளாக்கை பஞ்ச் பண்ண கீழே போறப்போ நைஸா வெளிய வாங்க.. மானேஜர் ரூமுக்குப் போய் அலாரம் ஸ்விட்சை ஆஃப் பண்ணிடுங்க.. வேகமா, ஆனா சப்தம் இல்லாம சைட் எண்ட்ரன்ஸ் கிட்டே வந்து கதவைத் திறந்துடுங்க.. கீழே போன ஆள் திரும்பி மேலே வர எட்டு நிமிஷங்கள் போல ஆகும். அதுக்குள்ள நீங்க தாராளமா காரியத்தை முடிச்சிடலாம்...புரியுதா?"

ஐயோ கடவுளே! இது என்ன சோதனை! ஒரு பாறாங்கல்லைத் தூக்கி இவன் என் மண்டையில்

போடும்படி நான் என்ன பாவம் செய்தேன்...? குருவி தலையில் பனங்காயை வைத்த தினுசில் இது என்ன பயங்கரம்?

நோ-நோ...

என்னால் முடியாது... கண்டிப்பாய் முடியாது.

கௌதம் எழுந்து நின்றான்.

"பாங்க் கார் வந்திடும்... நீங்க தயாராகுங்க, மேடம்... இன்னிக்கு உங்க பாங்க்கைத் திருட நாங்க தீர்மானிச்சாச்சு... அதுக்கு நீங்க உதவித்தான் ஆகணும். உங்க விஜய்யையும், உங்களையும் காப்பாத்திக்கணும்னா இதுக்கு ஒத்துப்போறதைத் தவிர வேற வழி இல்லே... முகத்தைக் கழுவிக்கிட்டுக் கிளம்புங்க... பதுங்க ஏத்த இடத்தை யோசிச்சுப் பாருங்க... நா சரியா பதினோரு மணிக்கு போன் பண்றேன்... அப்புறம் நீங்க ஃப்ரீயா இருக்கறப்போ ஃபிரான்ஸிஸ்கிட்ட போட்டோஸ், அண்ட் நெகடிவ்ஸ் கொடுத்தனுப்பறேன். ராத்திரி கதவைத் திறந்திட்டு நீங்க போறப்போ உங்க கையிலே நீங்க கைப்பட எழுதின காகிதங்களைத் தந்திடறேன்... அதுக்கப்பறம் உங்களுக்கு எந்த பயமும் இருக்காது... வரேன்..."

கதவைத் திறந்துகொண்டு கௌதம் வெளியேறி விட்டான்.

# 28

மணி ஒன்பது. நாழி இல்லை. கௌரி ரொம்பச் சிரமப்பட்டுச் சமாளித்துக்கொண்டு எழுந்தாள். விஜய்யின் பாத்ரூமுக்குச் சென்று, முகம் அலம்பின பின் திரும்பப் படுக்கையில் வந்து உட்கார்ந்தாள்.

கிளம்பவேண்டியதுதானா? இவன் சொல்கிற படியெல்லாம் ஆட வேண்டியதுதானா?

விஜய்யின் அலமாரி லேசாய்த் திறந்திருப்பதைக் கண்டு எழுந்து, அதைச் சாத்த முனைந்தபோது, அடித்தட்டில் இருந்த அந்தக் கனமான புத்தகம் கண்களில் விழுந்தது.

என்ன புத்தகம்? சாதாரணமாக விஜய்க்குக் கதைப் புத்தகம் படிக்கும் பழக்கம் கிடையாதே!

அட்டை இல்லை... கிழிந்திருந்தது.

குனிந்து எடுத்தாள்.

'வோர்ல்ட் ஃபேமஸ் பாங்க் ராபரிஸ்...' உலகத்தின் புகழ் பெற்ற பாங்க் கொள்ளைகள்...

இது ஏது இவனுக்கு?

அம்மா இப்படியொரு இக்கட்டில் மாட்டிக் கொண்டுவிட்டாளே என்ற துடிப்பில் இந்தச் சமாச்சாரத்தில் உண்டான அளவுக்கு மீறின படிப்பு ஆர்வமா?

(மாநில (ம) மை

புத்தகத்தை வைத்துவிட்டு அலமாரித் தட்டில் கும்பலாகக் கிடந்த ஷர்ட்டுகளை ஹாங்கரில் மாட்ட கெளரி தூக்கியதும் அடியில் சின்னதாக ஒரு காகிதக் கவர் தெரிந்தது.

அதனுள்ளிருந்து ஒரு போட்டோவின் நுனி லேசாய் வெளியில் எட்டிப் பார்த்தது.

என்ன படம்?

ரம்யாவோடு விஜய்! அந்தப் பார்ட்டியில் எடுத்த படங்களில் ஒன்றா? அசிங்கப் படங்களை எடுக்கும் முன் எடுத்த சாதாரணப் படமா?

கவரின் உள்ளே ஏதோ மாத்திரைகள். என்ன மாத்திரை என்று அவற்றைக் கையில் கொட்ட எண்ணிய நிமிஷத்தில் கார் ஹாரன் வாசலில் கேட்டது. கவரைக் கையில் எடுத்துக்கொண்டு ஹாலுக்கு வந்த கெளரி, தன் கைப்பையில் அதைப் போட்டுக்கொண்டாள். மாது நீட்டிய காபியை வேகமாகக் குடித்தவள் 'நா வரேன்' என்று சொல்லியவண்ணம் வாசலை நோக்கி நடந்தாள்.

காரில் கெளரி ஏறும்போதே மெளலி அவள் சோர்வாக இருப்பதை கவனித்துவிட்டார்.

"என்ன கெளரி, எப்படியோ இருக்கேள்? பிள்ளையைப் பிரிஞ்ச ஏக்கமா, இல்லை திரும்ப உடம்பு சரியில்லையா?"

தமாஷாக அவர் பேச முயன்றதும் கெளரி சின்னதாய்ப் புன்னகைத்தாள் - 'நீங்கள் எப்படி வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள்' என்கிற தினுசில்.



கெளரிக்கு யாரோடும் எதுவும் பேசப் பிடிக்க வில்லை. மனசு மரத்துப் போனமாதிரி இருந்தது.

பாங்க்குக்குள் நான் மறைந்துகொண்டு சரியாகப் பன்னிரண்டரை மணிக்கு அலாரம் ஸ்விட்ச்சுகளை அணைத்துவிட்டு ஸைட் கதவைத் திறக்க வேண்டும் என்று உத்தரவு போட்டுவிட்டுப் போனானே, இது எத்தனை சிரமமான சமாச்சாரம் என்பது அவன் புரிந்துதான் பேசினானா!

எங்கே ஒளிந்துகொள்வது?

குப்பையும், செத்தையுமாகக் கூமா சோமா என்று சாமான்கள் வாரியிறையும் ஆபீஸ் என்றாலாவது எப்படியாவது, எங்கேயாவது குப்பையோடு குப்பையாக மறைந்து கொண்டுவிடலாம். ஆனால், இந்த பாங்க்கில் அது எப்படி சாத்தியம்?

மானேஜர் அறைக்கு வரவேண்டும். அப்புறம் கதவிடம் ஓடவேண்டும். இத்தனையும் எட்டு நிமிஷத்துக்குள்! முடியுமா என்னால்?

செக்யூரிடி ஆள் பார்த்துவிட்டால் என்ன ஆவது? என்ன காரணம் சொல்லிச் சமாளிப்பது? ஒரு செக்யூரிடி ஆள், கிழே டெல் டேல் க்ளாக்கில் பஞ்ச் பண்ணப் போகும்போது இன்னொருவன் எங்கே இருப்பான்? இதையெல்லாம் யாரைப் போய்க் கேட்பது?

நடக்கிற காரியமாகத் தோன்றவில்லையே!

காரில் போகும்போதும், பாங்க்கை அடைந்து ஸ்ட்ராங் ரூமைத் திறந்தபோதும் கெளரி இதைப்

பற்றியே யோசித்துக்கொண்டிருந்தவள் - லாக்கர் அறையைத் திறந்துவிட்டதும் மௌலியுடன் சேர்ந்து மாடிக்குப் போகாமல் கீழேயே தங்கிவிட்டாள்.

எங்கே ஒளிவது? இங்கு ஏதாவது இடம் இருக்குமா?

லாக்கரில் நகை எடுக்க வரும் பெண்களின் உபயோகத்துக்காகப் பக்கத்தில் ஒரு சின்ன அறை உண்டு. கௌரி அதைத் திறந்து பார்த்தாள். ஒரு ட்ரெஸிங் டேபிள், ஸ்டூல், பக்கத்தில் பாத்ரூம்.

இந்த அறைக்குள் யாரும் சாதாரணமாக வர மாட்டார்களே, இங்கே ஒளிந்துகொண்டால் என்ன?

நான்கு மணிக்கு லாக்கர் அறையை மூடிவிடுவோம். மௌலியும் நானும் அறையைப் பூட்டினதும், ஆபீஸர் ரிஜிஸ்தருடன் மேலே போய்விடுவார். அப்புறம் ஈ காக்காய் இங்கு வராது- ஸோ-ஆறுமணி வரை பைல்களைப் படிப்பது போல பாவனை செய்துவிட்டு யாரும் பார்க்காத சமயமாய் இங்கு வந்து புகுந்துகொண்டால் என்ன?

யோசித்துப் பார்க்கையில் இதில் இரண்டு சங்கடங்கள் இருப்பது கௌரிக்குப் புரிந்தது.

என் இடத்திலிருந்து கிளம்பி, அத்தனை டிபார்ட்மெண்டுகளையும் கடந்து, மாடிப்படி இறங்கி வரும் வரை யாரும் பார்க்காமல் இருப்பார்களா? வழி நெடுக க்ளார்க்குகள், பர்ஸனல் மனேஜர் இருப்பார்களே; இவர்களில் அத்தனைபேருமா ஆறு மணிக்குள் வீட்டுக்குப் போய்விடுவார்கள்? யாராவது ஓரிருவர் உட்கார்ந்திருந்தால் கூடக் கஷ்டம் ஆயிற்றே! ஆறு மணிக்கு மேல் போகலாம் என்றால் ஆறரைக்கு நைட் ட்யூடி செக்யூரிடி கார்ட்ஸ் வந்துவிடுவார்கள். அப்புறம் கீழே போவது சிரமம்!



இன்னொரு சங்கடம் இதில் என்னவென்றால், கீழே ஒளிந்துகொண்டால் பன்னண்டரைக்கு எப்படி மேலே வர முடியும்? டெல் டேல் க்ளாக், பஞ்ச் பண்ண வரும் செக்யூரிடி கண்களில் படாமல் எப்படி மாடிக்குப் போக முடியும்?

நோ-முடியாது.

இங்கே ஒளிவது சரிப்பட்டு வராது.

அப்புறம் வேறு எங்கே?

கௌரி மாடிக்குப் போனாள்.

பர்ஸனல் டிபார்ட்மெண்டிலிருந்து ஒவ்வொரு இடமாக நிதானமாய் பார்வையால் அளந்துகொண்டு போனாள்.

ம்ஹூம், எதுவும் சரிப்பட்டு வருகிற மாதிரித் தோணவில்லையே!

பதினோரு மணிக்கு கௌதம் சொல்லியிருந்தபடி அழைத்தான்.

"எஸ்!"

"நாதான் மேடம்."

"எஸ்.."

"ஒண்ணுமில்லே, சும்மா எப்படி இருக்கீங்கனு கேட்கத்தான்... ஃபிரான்ஸிஸ்ஸை ஒரு மணிக்கு அனுப்பட்டுமா?"

"ஒரு மணிக்கு வேண்டாம், ரெண்டரைக்கு-"

"ஓ.கே. அப்புறம் விஜய்கிட்ட பேசினேன். அவன் மானேஜர் பாத்ரூம் அலமாரியை உங்களைப் பார்க்கச் சொன்னான், பார்க்கறீங்களா?"

"எதுக்கு?"

"பாருங்க மேடம், நீங்களே புரிஞ்சிப்பீங்க."

"எனக்கு விஜய்கூடப் பேசணும்."

பக்கத்தில் பார்த்தஸாரதி இல்லாததால் கௌரி துணிந்து பேசினாள்.

"ஸாரி மேடம்.. அது முடியாது."

"அவன்கிட்ட போய் என்ன சொன்னேள்? அவனைச் சும்மா விடமாட்டேளா?"

"கோபம் வேண்டாம், மேடம்-நா வெச்சிடறேன். விஜய் சொன்ன இடத்தைப் பார்க்க மறக்காதீங்க."

ரிஸீவரை வைத்துவிட்டு கௌரி டாய்லெட்டுக்குப் போனாள்.

அறைக்கதவைச் சாத்தினபிறகு பேஸினுக்குப் பக்கத்தில் சுவரில் பொதிந்திருந்த அந்தப் பெரிய சுவர் அலமாரியைப் பார்த்தாள்.

இதை ஏன் பார்க்கச் சொல்கிறான்?

அதுவும் விஜய்?

நான்கடிக்கு மூன்றடி சைஸில் அந்த அலமாரி இருந்தது. இரண்டு தள்ளு கதவுகள்.



யோசனையுடன் ஒரு கதவை கௌரி தள்ளினாள். தள்ளப்பட்ட கதவு இரண்டாம் கதவுக்குப் பின்னால் போய் நின்றுகொண்டது. இந்தப் பக்கம் ஏதாவது எடுக்கவேண்டுமானால் திரும்ப இரண்டு கதவுகளையும் எதிர்ப்பக்கம் தள்ளினால்தான் உண்டு.

இதில் என்ன பார்க்கச் சொல்கிறான்? மேல் பகுதியில் இரண்டு தட்டுகள். பாங்க்குக்கு வரும் பிரமுகர், மானேஜர் உபயோகிக்கச் சலவை செய்த டவல்கள் அந்தத் தட்டுகளில் இருந்தன. கூடவே ஒரு டால்கம் பவுடர் டப்பா, இரண்டு லக்ஸ் சோப், சில டாய்லெட் பேப்பர் உருளைகள்.

அலமாரியின் கீழ்ப்பகுதி மழைக்கோட்டு, குடைகள் வைக்கவென்று காலியாய் இருந்தது. ஹாங்கர் வசதியுள்ள அந்த இடத்தில் தட்டுப்பலகை இல்லாததால் இரண்டாவது தட்டுக்கும் தரைக்கும் கிட்டத்தட்ட இரண்டடி அகலம் இருந்தது.

ஒரு பழைய ரெயின் கோட்டு, ஒரு குடை மட்டும் இருப்பதைத் தவிர பாக்கி இடம் காலியாக இருந்ததைப் பார்க்கையில் திடுமென்று கௌரிக்கு விஷயம் புரிந்தது.

ஒளிந்துகொள்ள இடமா?

முடியுமா?

நான்கடி நீளமும், இரண்டடி உயரமும் உள்ள அந்த இடத்தில் புகுந்து உட்கார்ந்துகொள்வது சாத்தியமா?

இரண்டு கதவுகளையும் ஒரே சமயத்தில் திறக்க இயலாது. அதனால் ஒரு பக்கக் கதவின் பின் குறுக்கிக் கொண்டு உட்கார முடியும் போலிருக்கிறதே!

பாலாஜி தவிர யாரும் இந்த டாய்லெட்டை உபயோகிப்பதில்லை. அவர் வீட்டுக்குக் கிளம்பின பின்னர், யாருமே பார்க்காத சமயத்தில் கைப்பை யோடு இங்கு வந்து இந்த இடத்தில் உட்கார்ந்து கொண்டு, அலமாரிக் கதவைச் சாத்திக்கொண்டால் யார் பார்ப்பார்கள்?

எல்லோரும் வீட்டுக்குப் போன பின் செக்யூரிடி பாங்க்கை செக் செய்துவிட்டு, அலாரங்களை 'ஆன்' செய்வானே, அப்போது பார்க்கமாட்டானா?

டாய்லெட்டைப் பார்ப்பான், அலமாரியைத் திறந்தா சோதிப்பான்? அப்படி என்ன அவனுக்கு திடீர் சந்தேகம்?

பார்க்கப்பார்க்க இந்த இடம் தேவலை என்று தான் கௌரிக்குத் தோன்றியது.

மானேஜர் அறைக்குப் போவதும் சௌகரியம். அப்புறம் ஒரே ஓட்டமாய்க் கதவிடமும் ஓடிவிடலாம்.

தீர்மானத்தோடு கௌரி வெளியில் வந்தாள். மேஜைமுன் உட்கார்ந்து பல்லைக் கடித்துக்கொண்டு பாங்க் வேலைகளை கவனிக்க முயன்றாள்.

ஒவ்வொன்றையும் நான்கு தரம் படித்துப் புத்தி யில் ஏற்றிக்கொள்ளவேண்டி இருந்தது. அத்தனை பதற்றம் உடம்பில்.



ஒரு மணிக்கு கோபாலன் அவளை போனில் அழைத்தார்.

டெல்லியிலிருந்து முதல் நாள் ராத்திரி வந்து விட்டாராம். பிளேனில் அவரோடு ஷாம்ஸுதீன் பிரயாணம் செய்தாராம். "நல்ல பிஸினஸ் ஆசாமி யாய்த் தெரிஞ்சார்... அவர் கம்பெனி ஃபைலை நா பார்க்க விரும்பறேன். பாலாஜிகிட்டே கேட்டேன், 'கௌரிதான் அந்தக் கம்பெனியை முழுக்கமுழுக்க பார்த்துக்கறா'ன்னான். அந்த ஃபைலோடு மாடிக்கு வரமுடியுமா? உன்னையும் பார்த்த மாதிரி இருக்கும்."

கௌரிக்குக் குரல் எழும்பவேயில்லை.

இவர் ஏன் இன்று வந்தார்?

நாளைக்கு வரக்கூடாதா?

இவரோடு பேச எனக்கு என்ன யோக்கியதை இருக்கிறது?

இவர் முன்னால் போய் நிற்க எனக்கு அருகதை ஏது?

"என்னம்மா, பதிலே காணோம்?"

"இல்லே.. வந்து.. கொஞ்சம் வேலை இருக்கு.."

"அவசரமில்லே.. மெதுவா வா... ரெண்டரைக்கு வரியா?"

இரண்டரைக்கு ஃபிரான்ஸிஸ் வருவதாய்ச் சொல்லியிருக்கிறானே!

"ஒரு கஸ்டமர் அப்போ வரேன்னு சொல்லி இருக்கார். ப்யூன்கிட்டே வேணா ஃபைலைக் குடுத்து அனுப்பட்டுமா?"

"மூணு மணிக்குமேலே முடிஞ்சா நீயே கொண்டு வா, இல்லேனா ப்யூன்கிட்ட அனுப்பு.."

கோபாலனுடன் பேசி ரிஸீவரை வைத்து இரண்டு நிமிஷங்கள் ஆகியும் கௌரியின் படபடப்பு குறையவில்லை.

நெற்றியில் பூத்திருந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டாள். எப்படியோ சமாளித்துக்கொண்டு, பொழுதைத் தள்ளியவள் சரியாய் இரண்டு மணிக் கெல்லாம் சாப்பிடப் போய்விட்டாள்.

சாப்பிட்டு முடிக்கும்போது காலியாய் இருந்த காண்டீனுக்குள் செக்யுரிடி ஆள் ஷர்மா நுழைந்தான்.

அவளைப் பார்த்துவிட்டு சலாம் வைத்தான்.

சாதாரணமாய் ஷர்மா நைட் ட்யூடி பார்க்கும் ஆள் ஆயிற்றே. இன்று பகல் வேலையா?

இவனிடம் கொஞ்சம் பேச்சுக் கொடுத்தால் என்ன?

"இன்னிக்கு பகல் ட்யூடியா, ஷர்மா?"

"ஹாங் மேம் ஸாப்.."

சும்மா கொஞ்சம் மிரட்டிப் பார்த்தால் என்ன?

"நேத்து ட்யூடி பார்த்தது யாரு? டெல் டேல் க்ளாக் பஞ்சிங் ரெண்டு இடத்திலே சரியா பதியலை.. தூக்கமா?"

"நஹி மேம் ஸாப். ராவிக்கோ தன்ஸிங் அவுர் பரமேஸ்வர்தான் ட்யூடி பார்த்தாங்கோ.. தூங்கிப்போற ஆசாமி நஹி மேம் ஸாப்."



தமிழும், ஹிந்தியும் கலந்து திணறித்திணறிப் பேசினான் ஷர்மா.

கௌரி சமாதானம் செய்கிறமாதிரி சிரித்தாள்.

"க்ளாக்லே ஏதாவது மிஸ்டேக் இருக்கலாம். நா செக் பண்ணிப் பார்க்கறேன்..ம்..ஏன் ஷர்மா, ராத்திரி ரெண்டு பேர்ல யார் போய் பஞ்ச் பண்ணுவா? ரெண்டு பேருமாவா போவா?"

இல்லையாம். இரண்டுபேரும் பத்து மணி வரை மெயின் ஹால் மற்ற இடங்களில் ரவுண்டு வந்த பிறகு காண்டீனுக்கு வந்து தாங்களே டீ போட்டுச் சாப்பிடுவார்களாம். அப்புறம் மணிக்கொரு தடவை பாங்க்கைச் சுற்றிவிட்டுத் திரும்ப காண்டீனில்தான் உட்கார்ந்துகொள்வார்களாம். மாற்றிமாற்றிக் கீழே போய் க்ளாக்கில் பஞ்ச் பண்ணிவிட்டு வருவார்களாம். அதாவது தன்சிங் பத்து மணிக்குப் போய் பஞ்ச் செய்துவிட்டுப் பத்து நிமிஷத்தில் மேலே வந்ததும் பரமேஸ்வர் பத்தேகாலுக்குக் கீழே போவானாம்.

திடீரென்று கௌதம் சொன்னது ஞாபகத்துக்கு வர, "நைட் ட்யூடி கார்ட்ஸ் யாருக்காவது ஜுரமா? ஷர்மா?" என்றதும் ஷர்மா கொஞ்சம் விழித்தான்.

"நஹி மேம் ஸாப்.. தன்ஸிங் அவுர் பரமேஸ்வர் நல்லாதானே இருக்காங்கோ.."

கௌரிக்குக் குழப்பமாய் இருந்தது. மேற் கொண்டு இவனோடு என்ன பேசுவது என்று புரியாமல் எழுந்தாள்.

ஷர்மாவிடம் விடைபெற்றுக்கொண்டு தன் இருக்கைக்கு வந்தாள்.

அவள் டேபிள்முன் யாரோ ஒருவன் உட்கார்ந்திருந்தான்.

பார்த்தசாரதி, மானேஜர் அறையில்இருந்தார்.

நாற்காலியில் அமர்ந்து, எதிரில் இருந்தவனை உற்றுப் பார்த்தாள் கௌரி.

"எஸ்?"

பதில் பேசாமல் வெள்ளைக் கவர் ஒன்றை நீட்டினான் அவன்.

ஃபிரான்ஸிஸ்ஸா?

மெல்லிய கண்கள், மொழுமொழுவென்று புதிதாக சவரம் செய்த தாவாங்கட்டை, ஆள் ஒடிசலாக இருந்தான்.

சின்னக் குரலில் பேசினான்.

"அலமாரியைப் பார்த்திங்களா?"

"ம்.."

"சரியா பன்னிரண்டரை-மறக்காதீங்க... என் கடிகாரப்படி உங்க டயத்தைச் சரிபண்ணிக்கங்க. இப்போ மணி ரெண்டு முப்பத்தஞ்சு, பத்து செகண்டு."

"விஜய் எங்கே?"

"எனக்குத் தெரியாது."

"அவனுக்கு எப்படி இந்த அலமாரி தெரியும்?"



"இங்கே டாய்லெட்டை உபயோகம் பண்ணி னப்போ பார்த்திருக்கானாம்."

இவளைப் பார்க்க எப்பவாவது விஜய் பாங்க்குக்கு வந்ததுண்டுதான்.

அப்போது பார்த்ததா இப்படிச் சமயத்தில் நினைவுக்கு வந்திருக்கிறது!

"எனக்கு விஜய்கிட்ட பேசணும்."

"கௌதம்கிட்ட சொல்றேன். இப்போ நா கிளம்பறேன். மறக்காதீங்க."

ஃபிரான்ஸிஸ் எழுந்தான். அவன் திரும்பி மெதுவாய் நடந்து சென்றபோது அந்த உயரமும் உடையும் கௌரியின் மனசில் லேசாய்ப் பிறாண்டியது.

யார் இவன்?

இதற்கு முன் நான் இவனைப் பார்த்திருக்கிறேனா இல்லையா?

ஃபிரான்ஸிஸ்ஸைப் பார்த்துக்கொண்டே பாலாஜியின் அறையிலிருந்து வெளியில் வந்த பார்த்தசாரதி, ஒரு நிமிஷம் கௌரியின் டேபிளிடம் நின்றார்.

"கஸ்டமரா?"

"இல்லே, விஜய் ஃப்ரெண்ட்... அவனைத் தேடிண்டு வந்தான். பெங்களூர் போயிருக்கான்னு சொன்னேன்."

"ஆஸ்த்மா பேஷண்டா?"

"வொய்? தெரியாதே. ஏன் கேட்கறேன்?"

"அவன் சட்டைப் பையிலே வென்டோலின் ஸ்ப்ரே ட்யூப் தெரிஞ்சதே! அது ஆஸ்த்மா ஸ்ப்ரே ஆச்சே- நீங்க பார்க்கலை?"

கௌரி பதில் சொல்லும் முன் டெலிபோன் மணி அடித்தது.

கோபாலன் பேசினார்.

"ஃப்ரெண்ட் ஒருத்தர் வந்திருக்கார், கௌரி. நீ ஷாம்ஸுதீன் ஃபைலோடு நாலு மணிக்குமேல் வாயேன்," என்று சொல்லி வைத்தார்.

பாலாஜி எதற்காகவோ அழைத்தார்.

போய்ப் பேசிவிட்டு வந்தாள்.

டைப்பிஸ்ட் ஸ்டேட்மெண்ட் அடிக்கச் சொன்னதில் விளக்கம் கேட்டாள், சொன்னாள்.

நான்கு மணிக்குப் பணத்தை உள்ளே வைத்துப் பூட்டினார்கள்.

அப்புறமும் சில்லறை சில்லறையாக வேலைகள்.

ஐந்து மணி அளவில் கோபால மாமா நினைவு வர ஃபைலுடன் அவள் எழுந்தபோது பார்த்தசாரதியும், டைப்பிஸ்ட் மாதவியும் வீட்டுக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்தனர். திங்களிலிருந்து ஒரு வாரம் லீவு போட்டிருந்ததால் பாலாஜியிடம் சாவிக்கொத்தைக் கொடுத்துவிட்டு மாடிக்குப் போனாள்.

கோபாலன் போர்ட் அறையில் இருப்பதாக ப்யூன் சொன்னான்.



இருக்கலாமா, போய்விடலாமா என்று யோசித்துக்கொண்டிருக்கையிலேயே கோபாலன் வந்துவிட்டார். சிரித்துக்கொண்டே வந்தவரோடு நெடுநெடுவென்று ஒரு பிள்ளை. முப்பது வயசு இருந்தால் அதிகம்.

படித்தவன்போலத் தெரிந்தவன். பார்க்க கண்ணியமாக இருந்தான்.

"ஓ! கௌரி! ஸாரிம்மா. ரொம்ப நாழியா காத்துண்டு இருக்கியா?" என்றவர், "இது யார் தெரியுமா? மதுசூதன் எண்டர்ப்ரைஸின் மதுசூதன்-கார் ஓட்டறதிலே பெரிய சாம்பியன்" என்று அறிமுகப் படுத்தினார்.

கௌரி கையில் பிடித்திருந்த ஃபைல் நழுவியது.

அவனா? அந்த அயோக்கிய ராஸ்கலா?

செய்வது அத்தனையும் செய்துவிட்டு இங்கு மாமாவோடு என்ன இளிச்சல்?

"போன மாசம் நாங்க ரெண்டுபேரும் ஒண்ணாத்தான் லண்டன் செமினார் அட்டெண்ட் பண்ணோம். பிரில்லியண்ட் மேன்! லண்டன்லேந்து போன வாரம் தான் வந்தார். நம்ம பாங்க் கூட உறவு வெச்சிக்கப் போறார்... ஒரு நிமிஷம் நீங்க பேசிண்டு இருங்கோ... செகரட்டரியைப் பார்த்திட்டு வந்துடறேன்..."

கோபாலன் அடுத்த அறைக்குள் புகுந்து மறைந்தார்.

"நீங்க விஜய் மதர்தானே?"

சடக்கென்று கெளரி நிமிர்ந்தாள். அவனை உற்றுப் பார்த்தாள்.

"விஜய் உங்களைப்பத்தி நிறைய சொல்லி யிருக்கான். தட்ஸ் ஹௌ ஐ நோ... விஜய் எப்படி இருக்கான்? அவனைப் பார்த்து மூணு மாசம் ஆச்சு. மேலே படிக்கப் போறதா சொல்லி ட்ரெய்னிங்கை நிறுத்திட்டான். இன்னிக்கு ஸவேராலே ஒரு லஞ்சுக்குப் போயிருந்தேன். முன்னாலே லிஃப்டுலே ஏறின ஆளைப் பார்த்தா விஜய் மாதிரியே இருந்தது. நா நல்லா பார்க்கறத்துக்குள்ளே லிஃப்ட் கதவு மூடிடிச்சி. அவனைக் கேட்டதாச் சொல்லுங்க..."

கடைசி வரியைக் கேட்டுக்கொண்டே கோபாலன் வந்தார்.

"அடேடே! உங்களுக்கு விஜய்யைத் தெரியுமா? உலகம் ரொம்பச் சின்னது, இல்லே!"

கெளரி ஃபைலை டேபிள்மேல் வைத்தாள்.

"எனக்கு இன்னும் வேலை பாக்கி இருக்கு. நா வரட்டுமா? அப்புறமா பார்க்கறேன்"... என்று விடை பெற்றுக் கொண்டு கீழே வந்தாள்.

நெஞ்சு கொதித்தது.

என்ன நடிப்பு! என்ன பொல்லாத்தனம்! படவா ராஸ்கல்... திட்டம் போட்டு, இருக்கிறவர்கள் அத்தனை பேரையும் மாட்ட வைத்ததும் அல்லாமல் பேச்சு வேறா உனக்கு?

கோபம் பற்றிக்கொண்டு எழுந்தது.



கீழே வந்து முன்ஹாலில் நுழைந்தவளுக்கு நல்ல அதிருஷ்டம். பாலாஜியும், லிண்டாவும் வீட்டுக்குப் போய் விட்டிருந்தார்கள்.

பையை எடுத்துக்கொண்டு மேஜையைப் பூட்டினாள்.

வாட்ச்மேன் என்ன பண்ணுகிறான் என்று பார்த்தாள். சுவாரஸ்யமாய் ஃபாயரில் யாருடனோ அவன் பேசிக்கொண்டிருந்தான்.

வேகமாக நடந்து டாய்லெட்டிடம் போனாள். உள்ளே நுழையும் முன் தன்னை யாராவது பார்க்கிறார்களா என்று பார்த்தாள்.

ம்ஹூம், இல்லை.

நொடியில் உள்ளே நுழைந்தவள், கதவைத் தாளிடாமல் சாத்தினாள். சப்தமில்லாமல் அலமாரிக் கதவைத் திறந்து அடித்தட்டில் இரண்டாய் மடிந்து உட்கார்ந்து, மீண்டும் கதவைச் சாத்தியபோது உள்ளே கும்மென்று இருட்டாய் இருந்தது.

## 29

அலமாரிக்குள் புழுக்கமாய் இருந்தது. ரொம்பக் கறுப்பாக இருந்தது. ஐந்து நிமிஷங்கள் உட்காருவதற்குள் மூச்சுத்திணறிப்போகும்போல இருந்தது.

சுவரின் ஓரமாகச் சாய்ந்துகொண்ட கெளரி மெதுவாக அரை அங்குல இடைவெளிக்குக் கதவைத்

திறந்து வைத்தாள். பாத்ரூமின் விளக்கு வெளிச்சம் கீறலாக உள்ளே பரவியது.

இப்போது கொஞ்சம் தேவலை. கண்ணை மயக்காமலாவது இருக்கிறது.

செண்ட்ரலி ஏர் கண்டிஷண்ட் செய்யப்பட்ட கட்டடம் என்பதால் பாத்ரூமில் லேசாய்க் குளுமை பரவியிருந்தாலும் அலமாரிக்குள் புழுக்கமாகத்தான் இருந்தது.

புடவைத் தலைப்பால் விசிறிக்கொள்ளப் பார்த்தாள் கௌரி. முழங்கை மரக்கதவில் டக்கென்று இடித்து ஓசை உண்டாக்கியது.

ஒரு கணம் தூக்கிவாரிப்போட, நிதானித்தாள்.

யாருக்காவது கேட்டிருக்குமோ? வந்து அலமாரியைத் திறந்துவிடுவார்களோ!

இல்லை-ஒருத்தரும் வரவில்லை.

அசையாமல் உட்கார்ந்திருந்ததில் வளைந்திருந்த முதுகு வலியெடுக்க, கௌரி மணிக்கட்டைத் திருப்பி மணி பார்த்தாள்.

கடிகாரம் ஆறரை என்றது.

ஆயிற்று... முன்வாசலைப் பூட்டிவிடுவார்கள்... கார்டஸ்ட்யூடி மாறிவிடுவார்கள்.

கௌரியின் எண்ணத்தைச் சரி என்று சொல்லுகிற தினுசில் தடதடவென்று ரோலிங் ஷட்டர் கதவு இறங்கும் ஓசையில் அலமாரி நடுங்கியது.



பிரதான வாயிலை அடைத்துவிட்டால், அப்புறம் பாங்கில் யார் உள்ளே இருந்தாலும் பக்க வாட்டுக் கதவு வழியாகத்தான் வெளியே போக வேண்டும்.

ஹால் கார்பெட் மேல் கனத்த காலடிகள் கேட்டன.

தன்சிங்கின் குரல்.

பாலாஜியின் அறைக்கதவைத் திறந்து மூடுவது புரிந்தது.

இங்கு வருவானோ?

காலடிகள் நெருங்கி வந்தன.

பட்டென்று கதவைத் திறந்து, சில நொடிகளில் தன்சிங் மூடுவது கௌரிக்குத் தெரிந்தது.

மூச்சு விடக்கூட பயம்.

காலடிகள் கார்ப்பெட்டில் நடந்து தேய்ந்தன.

கண்களை மூடிக்கொண்டு படபடப்பை அடக்க முயன்றாள்.

விஜய் என்ன பண்ணிக்கொண்டிருப்பான்?

ஒருதரம் பேசக்கூட இவர்கள் அனுமதிக்க வில்லையே!

எல்லாம் இன்று சரியாய் நடந்து முடியுமா? உள்ளே நுழைபவர்கள் காவலாளிகளை எசகுபிசகாய் அடித்து உயிர் போய்விட்டால் அது வேறு வம்பா யிற்றே! செக்யூரிடி ஆட்களிடம் துப்பாக்கிகள் உண்டே! அவர்களை எப்படி சமாளிக்கப்போகிறார்கள்?

சிந்தனையில் ஆழ்ந்திருந்தவளைக் கதவு திறக்கும் சப்தம் தூக்கிவாரிப்போட வைத்தது.

பாலாஜியின் அறைக் கதவைத் திறந்து ஒரு நிமிஷத்தில் மீண்டும் மூடும் சப்தம்.

அலாரம் ஸ்விட்சுகளை 'ஆன்' செய்துவிட்டானா?

பாத்ரூம் விளக்கு அணைந்துபோனதில் சட்டென்று இருட்டு, போர்வை போர்த்தியது.

ரேடியம் டயல் வாட்ச் மணி ஏழரையைக் காட்டியது.

பிரதானக் கூடம், பின் நடை, கீழ்த்தளம், காண்டூன் தவிர பாக்கி இடங்களில் விளக்குகளை காவலாளிகள் அணைத்துவிடுவார்கள் என்பது கௌரிக்குத் தெரிந்ததுதான்... ஆனாலும் இத்தனை இருட்டாக இருக்கும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.

ரொம்பக் கசகசப்பாய் இருந்தது. வியர்வை பெருகியதில் முகத்திலும் கைகளிலும் சொதசொதப்பு.

இன்னும் ஐந்து மணி நேரங்கள். இப்படிக் கூண்டில் அடைபட்டுக் கிடக்கிற மாதிரி அத்தனை மணி நேரங்களைக் கழிக்க முடியுமா?

கௌரிக்குச் சின்ன வயசிலிருந்தே இருட்டு என்றால் பயம்.

அதுவும், அந்த எதிர்வீட்டு கௌசல்யா ஒளிந்து விளையாடலாம் வா என்று கூப்பிட்டுவிட்டு இவள்



போய் அசட்டுத்தனமாக வண்ணான் துணிப் பெட்டிக்குள் ஏறி உட்கார்ந்துகொண்டு கதவைச் சாத்திக்கொள்ள, அப்புறம் திறக்க முடியாமல் பயந்துபோய், அம்மா, அப்பா என்று கதவில் முட்டிக் கொண்டு அழ, மூச்சுத் திணறிப்போய், வியர்த்துப் போய்... அப்பா ஓடிவந்து கதவைத் திறந்து, இவளை அலாக்காய் அணைத்து, 'கௌரிக் கண்ணா, பயப் படாதேம்மா, நா இருக்கேன். ஒண்ணுமில்லே... அப்பாவைப் பாரு... அம்மாடி'-என்று அழைத்துச் சமாதானப் படுத்த...

அதிலிருந்துதான் கௌரிக்கு இருட்டு என்றால் பயம்; மூடின அறை என்றால் பயம்... லிஃப்டில் பயணம் செய்யும் போதுகூடத் தனியாக ஏற மாட்டாள்... பயம்.

பயந்துபோன கௌரியை விட்டு இரண்டு நாட்கள் இந்தண்டை அந்தண்டை அப்பா போகவில்லை. இல்லையா?

அப்பா... அப்பாவான அப்பாவா அவர்? எப் பேர்ப்பட்ட அப்பா? ஊர் புகழ்ந்த அப்பா! நாடு மதித்த அப்பா... எல்லாருக்கும் அப்படி ஒரு அப்பா கிடைத்து விடுவார்களா?

அந்த அப்பாவுக்கு மகளாகப் பிறந்து வளர்ந்து விட்டு இப்போது இப்படி ஒரு ஈனத்தனமான காரியம் செய்ய முனைந்திருக்கிறோமே என்ற தவிப்பு மின்னல் போலத் தாக்க, சடாரென்று நிமிர்ந்த கௌரி, மண்டை, மேல் தட்டில் டொம்மென்று சப்தத்தோடு இடித்ததும் வெலவெலத்துப் போனாள்.

ம்ஹூம், கூடாது. இப்போது அப்பாவை நினைக்கக் கூடாது. அவர் வாழ்ந்த வாழ்க்கையை நினைக்கக் கூடாது. சங்கரை நினைக்கக் கூடாது. அவர் கடைப்பிடித்த நேர்மையை நினைக்கக் கூடாது.

நான் என் விஜய்க்காக இதைச் செய்கிறேன். என் விஜய்க்காக... என் உயிரான பிள்ளைக்காக... அவன், அம்மா ப்ளீஸ்ம்மா என்று கெஞ்சும் கெஞ்சலுக்காக... இப்போது யாரையும் நினைக்கக் கூடாது... அப்பா, சங்கர், கோபால மாமா... கௌதம், மதுசூதன் என்று யாரையும் நினைக்கக் கூடாது... பேசாமல் கண்களை மூடிக்கொண்டு தூங்கப் பார்க்க வேண்டும். கொஞ்சம் தூங்கி எழுந்தால் நேரம் ஓடிவிடும்.

கௌரி கண்களை மூடிக்கொண்டாள். ரொம்ப நாழியாகக் காலை மடித்துக்கொண்டிருப்பதில் முட்டிகள் வலிக்கத் தொடங்கின. பாதங்கள் மரத்துப் போய்விட்ட மாதிரி தோன்றியது.

மணி என்ன?

ஒன்பது. எங்கோ தொலைவில் காவலாளிகள் நடப்பதும், சன்னமாக ஹிந்தியில் பேசிச் சிரிப்பதும் கேட்டன.

எங்கே இருக்கிறார்கள்?

முன் ஹாலிலா?

மணிக்கொரு தடவை ரோந்து சுற்றுவோம் என்றானே, சுற்றுகிறார்களோ?

எத்தனை சுலபமாக அந்த கௌதம் சொல்லிவிட்டான்? 'ஒளிஞ்சிட்டு இருந்து, அலாரம் ஸ்விட்சுகளை அணைச்சிட்டு, கதவைத் திறந்துடுங்க... ரொம்ப சுலபம்!' என்று. நான் படும் கஷ்டம் அவனுக்கு என்ன தெரியும்? அயோக்கிய ராஸ்கல்... அவனும் அவன் மூஞ்சியும், முகரக் கட்டையும்...



இந்த மதுசூதன்! அடேயப்பா! நேர்ப்பார்வைக்கு இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமா என்று இருக்கிறானே! ஆள் உள்ளுக்குள் எத்தனை அழுக்கல்! ஒரு தடவைகூட என்னை வந்து பார்க்கவில்லையே! இவன் கோடீஸ்வரனாக இருந்தால் எனக்கு என்ன? மரியாதைக்கு எட்டிக்கூடப் பார்க்காமல் எதற்கும் கௌதமை அனுப்பினானே... இவனுக்கு என்ன திமிர்!. இன்றைக்குத் திடீரென்று கோபால மாமாவுடன் என்ன இளியல்! என்ன வேஷம் வேண்டிக்கிடக்கிறது! ஆள் டீக்காய் ட்ரெஸ் பண்ணிக்கொண்டு சாது பார்வையுடன் இருந்துவிட்டால் ஆயிற்றா? இவனும் இவன் மீசையும், முட்டைக் கண்களும்... தூத்தேறி... ரோக்...

திடுமென்று தூக்கிவாரிப்போட கௌரி விழித்தாள்.

மீசையா? மதுசூதனுக்கா? இல்லையே! மீசையே இல்லையே! இன்றைக்குக் கிட்டத்தில் பார்த்தேனே! எது மீசை? முட்டைக் கண்களா? இல்லையே! சாதாரணக் கண்களாகத்தானே இருந்தன!

பின் ஏன் நான் எப்போது மதுசூதனை நினைத்துக் கொண்டாலும் இவனும் மீசையும் இவன் முட்டைக் கண்களும் என்று எண்ணுகிறேன்?

என்னவோ எங்கோ உதைக்கிறதே!

என்ன அது? என்ன அது?

சாட்டையடி பட்டமாதிரி சட்டென்று மனசு சிலிர்த்தது.

ஆ! அந்த போட்டோக்கள். அதில் பார்த்தபோது மதுசூதனுக்கு மீசை இருந்ததே! இப்போது வேண்டுமென்றே அடையாளம் தெரியாதிருக்க மீசையை எடுத்துவிட்டானோ? அந்த முட்டைக் கண்?

பரபரவென்று ஓசைப்படாமல் கௌரி கைப்பையைத் திறந்து மடியில் கொட்டினாள். எப்போதும் பையில் வைத்திருக்கும் பென்ஸில் டார்ச்சையும் மதியம் ஃபிரான்ஸிஸ் கொடுத்த கவரையும் எடுத்தாள். கோடாய் விழுந்த வெளிச்சத்தில் படங்களைப் பார்த்தாள்.

ஒரு தரம்- இரண்டு தரம்..

கடவுளே-இது என்ன? ரம்யா விஜய்யுடன் இருந்த ஆள், கட்டைக் குட்டையாய்ப் பருமனாக இருந்தான். கன்னத்தில் கிருதா, அட்டை மாதிரி மீசை, முட்டைக் கண்கள். இல்லை, இவன்வேறு, இன்று பார்த்த ஆள் வேறு.. இன்று நான் பார்த்தவன் மதுசூதன் இல்லையா? போலியா? இருக்காதே.. கோபால மாமா அல்லவா அறிமுகம் செய்தார்!

அப்படியானால் இவன் யார்? இந்தத் தடியன் யார்? மதுசூதன் இல்லையா? போலியா? எதற்காக யாரையோ மதுசூதன் என்று கௌதம் சொல்ல வேண்டும்? ஏன்?



மாமா என்ன சொன்னார்? 'நானும் மதுசூதனும் லண்டனில் ஒன்றாக இருந்தோம்' என்றுதானே? 'நா முதல்லியே வந்துட்டேன், இவர் ஒரு வாரம் முன்னாலேதான் வந்தார்' என்றுதானே! அப்படியென்றால் இந்த அசிங்கமான படங்களைப் பதினைந்து நாட்கள் முன்னால் மதுசூதன் பார்ட்டியில் எடுத்ததாகச் சொன்னது பொய்யா? விஜய் எதற்காகப் பொய் பேச வேண்டும்?

கௌரிக்குத் தலை சுற்றியது.

மடியில் கிடந்த டார்ச் வெளிச்சத்தில் இன்னொரு வெள்ளைக் கவர் கண்ணில் பட, அதை எடுத்துப் பார்த்தாள்.

காலையில் விஜய் அலமாரியிலிருந்து எடுத்த கவர். ரம்யாவும், அவனும் சிரித்துக்கொண்டு நிற்கும் சாதாரணப் படம். இதுவும் அந்தப் பார்ட்டியில் எடுத்ததுதானா?

இரண்டு படங்களையும் அருகில் வைத்து கௌரி பார்த்தபோது அடிவயிற்றில் பட்டாம்பூச்சிகள் பறந்தன.

இரண்டு விஜய்க்கும் வித்தியாசங்கள் இருந்தன. இரண்டு ரம்யாவுக்கும் வித்தியாசங்கள் இருந்தன.

ஒன்றில் விஜய்யின் தலைமுடி கிட்டத்தட்ட தோளைத் தொட்டது. இன்னொன்றில் சாதாரணமாக இப்போது இருக்கிற தினுசில் இருந்தது.

போன ஆறாம் மாசம் திடீரென்று ஒரு மூடு வந்து, விஜய் கிராப் வெட்டிக்கொள்ள மறுத்து

விட்டான். கிடுகிடுவென்று மூன்று மாசத்தில் பிடரியை முடி தொட்டுவிட்டது. அப்புறம் என்ன தோன்றியதோ ஒருநாள் பழையபடி வெட்டிக்கொண்டு வந்து நின்றான்.

ரம்யாவுடன் அவன் இருந்த சாதாரண படத்தில் முடி பிடரிவரை காணப்பட்டது. அப்படியென்றால் இந்தப் படம் மூன்று மாசங்களுக்கு முன் எடுக்கப் பட்டதா? அந்தப் பார்ட்டியில் எடுத்ததில்லையா? அப்புறம் விஜய் ஏன், தான் முன்பின் ரம்யாவைப் பார்த்ததில்லை என்று சொன்னான்? நான் திட்டுவேன் என்ற பயமா?

கவரின் அடியில் வெள்ளை மாத்திரைகள் பல இருந்ததைக் கையில் கொட்டிப் பார்த்தாள் கௌரி.

என்ன மாத்திரைகள்? இத்தனை இருக்கின்றன? ஒன்று, இரண்டு, மூன்று - பத்தொன்பதா?

ஒரு மாத்திரையைக் கையில் பிடித்து டார்ச் அடித்துப் பார்த்தபோது எம்.எக்ஸ். (MX) என்ற எழுத்துக்கள் தெளிவாகத் தெரிந்தன.

'எம்.எக்ஸ்.' என்றால்? மாண்ட்ராக்ஸா? எஸ்-அது தான்-முன்பு ஒருமுறை உடம்பு சரியில்லாதபோது, நன்றாகத் தூக்கம் வருவதற்காக டாக்டர் எழுதிக் கொடுத்து நான் இந்தத் தூக்க மாத்திரைகளைச் சாப்பிட்டிருக்கிறேனே!

என்ன இது? எதற்காக இத்தனை மாண்ட்ராக்ஸ்?

இல்லை- ஏதோ என்னமோ தவறுதான்! என்ன அது?



கௌரி மண்டையை உலுக்கிக்கொண்டு யோசிக்கத் தொடங்கினாள்.

ரம்யாவை முன்கூட்டியே அறிந்திருந்த விஜய் ஏன் தெரியாது என்றான்? இத்தனை தூக்க மாத்திரைகள் ஏது? மதுசூதன் பார்ட்டியில் இந்தப் படங்கள் எடுக்கப்படவில்லையென்றால் இவற்றை, யார், எங்கே எடுத்தார்கள்? நிஜமான மதுசூதன் யார்?

கௌதம், ரம்யா, ஃபிரான்ஸிஸ்ஸை ஒரு தரம் மனசில் முழுமையாக நினைத்துப் பார்த்தாள் கௌரி.

ஃபிரான்ஸிஸ்ஸை ஞாபகப்படுத்திப் பார்க்கையில் மனசுக்குள் சந்தேகம் பிறாண்டியது-

அவன் உயரமும், நடையும் மொழுமொழு தாவாங்கட்டையும்... எங்கேயோ பார்த்த மாதிரி இருந்ததே!

திடுமென்று, 'அவன் ஆஸ்த்மா பேஷண்டா?' என்று பார்த்தசாரதி கேட்டது நினைவில் கூத்தாடியது-

கடவுளே... கடவுளே... அன்று வந்த டாக்டர் ஜெகதீஷ் இந்த ஃபிரான்ஸிஸ்தானே? அன்று இழுப்பு வந்து வெண்டோலின் ஸ்ப்ரே செய்துகொண்டவன் இவன்தானே! தாடியையும் மீசையையும் எடுத்து விட்டால் என்னால் அடையாளம் கண்டுபிடிக்க முடியாது என்று நினைத்தானா?

புதிர்போலத் தோன்றியது கொஞ்சம் தெளியத் தொடங்கியதும், கௌரி ஆரம்பத்திலிருந்து ஒவ் வொன்றாக யோசனை பண்ண முயன்றாள்.

விஜய்யின் அறையில் முதல் நாள் பார்த்த க்ளிஸரின் புட்டி; கண்களில் கண்ணீரைச் செயற்கையாய்ப் பெருக்க உதவும் கிளிஸரின்... உபயோகப் படுத்தப்படாத தூக்க மாத்திரைகள்.. போலி டாக்டர்.. இன்று பார்த்த 'உலகின் பிரசித்தி பெற்ற பாங்க் கொள்ளைகள்' புத்தகம்.. ஐயோ.. இதெல்லாம் என்ன?

கொஞ்ச நேரத்துக்கு முன் மாடியில் மதுசூதன் என்ன சொன்னான்?

மூன்று மாசங்களாக விஜய் ட்ரெயினிங்குக்கு வரவில்லை, மேல்படிப்புப் படிக்க வேண்டும் என்று நின்றுவிட்டான் என்றுதானே? அது என்ன மேல்படிப்பு, எனக்குத் தெரியாமல்?

அப்புறம் என்ன சொன்னான்?

ஆ! ஸவேரா ஹோட்டலில் விஜய்மாதிரி ஒருத்தனை மதியம் பார்த்தேன் என்றுதானே! அப்படியென்றால், விஜய் பெங்களூருக்குப் போகவே இல்லையா? எஸ்டிடி போன் என்று செய்ததெல்லாம் உள்ளூரிலிருந்துதானோ?

கௌரியால் இப்போது இன்னும் தெளிவாய், புதிரைச் சேர்க்க முடிந்தது.

இது மாசக்கணக்காகத் திட்டமிடப்பட்ட கொள்ளைத் திட்டமா? நாம் நம்பி இதில் இறங்க வேண்டும் என்பதற்காக அடியிலிருந்து அத்தனை பேர்களும் நாடகம் ஆடியிருக்கிறார்களா? என்னை முதலில் கதிகலங்க வைக்க ரம்யாவுடன் அந்தப் படங்களா? நான் மறுத்த பிறகு பயமுறுத்த விஜய்யின் தற்கொலை நாடகமா? ஒவ்வொன்றையும் சம்மதிக்க



வைக்க தினம் ஒரு சம்பவமா? ஆக, எல்லாம் பொய்யா? எல்லாம் நாடகமா? கடவுளே! இதில் விஜய்கூடவா முழுக்க முழுக்கச் சம்பந்தப்பட்டு இருக்கிறான்? ஏன்?

சில மாசங்களாய்ச் சாப்பிடும்போதும், சாதாரணமாய் உட்கார்ந்து பேசினபோதும் பேச்சுவாக்கில் பாங்க் பற்றின கேள்விகளைச் சாமர்த்தியமாய் விஜய் கேட்டது இதற்குத்தானா? என்னிடமிருந்து விவரங்களை அறிந்துகொண்டது இந்தக் கொள்ளைத் திட்டத்தைத் தீட்டுவதற்குத்தானா? அப்படியானால் கௌதமுக்கு ஸ்ட்ராங் ரூம் பற்றி, எங்கள் பாங்க் விதிமுறைகள் பற்றி, சாவிக்கொத்தை விரலில் சுழற்றும் மௌலியின் பழக்கம் பற்றி... என், இன்று ரிஸர்வ் பாங்கிலிருந்து பெரிய தொகை வரப்போகிறது என்பதைப் பற்றிக்கூட விளக்கமாய்ச் சொன்னது விஜய்தானா?

எஸ்... நிச்சயம் விஜய்தான்.. இல்லாவிட்டால் எனக்கும், ஒருசில ஆபீஸர்களுக்குமே தெரிந்த விவரங்கள் இவர்களுக்கு எப்படித் தெரிவது சாத்தியமாகும்? இதையெல்லாம் நான் ஏன் முன்பே சிந்திக்கவில்லை? என் பதற்றத்தில் மறந்து போனேனா?

ஐயோ.. கடவுளே!

விஜய்!.. நீயா.. விஜய்!

வி-ஜய், ஏன் விஜய்? உனக்கு எப்படியப்பா மனசு வந்தது? உன்மேல் உயிரை வைத்துவிட்டு, உனக்காகவே வாழும் என்னிடம், உன் அம்மாவிடம், இப்படிக் கேவலமாய் நாடகம் போட உனக்கு எப்படியப்பா மனசு வந்தது? வி-ஜய்.. அந்த அளவுக்கு உன்னைத் தூண்டியது

எதுப்பா? கௌதமின் மிரட்டலா, ரம்யாவின் அழகா, இல்லை பணத்தாசையா?

பணத்தாசையா?

"அம்மா நா பெரியவனானதும் அரண்மனை மாதிரி வீடு வெச்சிப்பேன்... ப்ளேன் வெச்சிப்பேன்... ஹெலிகாப்டர் வெச்சிப்பேன்... பெரி...ய...கார்லே போவேன்... பணக்காரனா இருப்பேன்... என்னம்மா..."

ஐந்து வயசு விஜய்யின் கனவுகள் இவைதானே? ஆறு வயசு விஜய்யின் ஆசைகள் இவைதானே... இருபது வயசு விஜய்யின் விருப்பங்களும் இவை தானே?

பணம்... பணம்... பணம்... அதற்காக இப்படியா? இந்த வயசிலா? இத்தனை பண வெறியா? சொந்தத் தாய் என்ற பாசம் இல்லாமல், அவளுடைய அன்பின் ஆழம் புரியாமல்... பந்தங்களுக்கு மதிப்பு இல்லாமல்... நேர்மை இல்லாமல்... ஒன்றுமே இல்லாமல்...

"வயசுக்கு, தகுதிக்கு, மீறின ஆசை இருக்கிறது தப்பு, கௌரி. அது உன் மகனுக்கு இருக்கு... இதை முளையிலேயே கிள்ளணும்..."

ஐயோ! சங்கர், அன்று நீங்கள் சொன்னபோது நான் கிள்ளி எறியவே முயற்சி பண்ணவில்லையே...

"ஜுரம் வந்த உடம்புக்கு அல்வாவும், குலாப் ஜாமுனும் குடுத்தா சரியாகாது, கௌரி. கசப்பு மருந்தும் ஊசியும் குடுத்துத்தான் கெட்டுப்போன உடம்பைச் சரி பண்ணணும். குழந்தை நமக்கு ரொம்ப



உசத்திதான்... அதுக்காக அவனுக்குத் தேவைக்கு மீறின செல்லத்தைக் குடுத்து குட்டிச்சுவராக்கறதும், நோய்ப்பட்ட உடம்புக்கு அல்வா கொடுக்கறதும் ஒண்ணுதான்... புரியறதா?"

கைகளால் தலையில் ஓங்கிப் பட்பட்டென்று அறைந்து கொண்டாள் கௌரி.

புரியலையே, சங்கர். நீங்க சொன்னது ஒண்ணுகூட அன்னிக்குப் பாவி எனக்குப் புரியலையே... இப்போ நன்னா புரியறது, சங்கர்... நா என்ன பண்ணுவேன்?

'அம்மா ப்ளீஸ்ம்மா... எனக்காகம்மா' என்று போலிப் பாசத்துடன் கெஞ்சி, என்னை உருக்கி, இன்று கொள்ளைக்கு உடந்தையாய் இருக்கப் பண்ணி விட்ட பிள்ளை, நாளைக்கு இதே கெஞ்சலைப் பிரயோகித்து ஒரு கொலையை மறைக்க என் உதவியை நாடமாட்டான் என்பது என்ன நிச்சயம்?

வெடித்துக்கொண்டு எழுந்த விம்மலை அடக்க கௌரி புடவைத் தலைப்பைச் சுருட்டி வாய்க்குள் திணித்துக் கொண்டாள்.

பொய்... வேஷம்... எல்லாமே நாடகம்... முருகா, நான் என்ன பண்ணுவேன்...!

கண்ணீர் பிரவாகமெடுக்கையில் இதுநாழிகை நினைக்காத அப்பா, கணவன், கோபாலனை கௌரி நினைத்தாள். நேர்மையை நினைத்தாள், தர்மத்தை நினைத்தாள்.

முரசம் ஒன்று கொட்டுவதுபோல உடம்பும், மனசும் அதிரத் தொடங்கின.

'போதும்! அஞ்ஞானத்தால் நான் பட்ட கஷ்டங்கள் போதும். வாழ்ந்த வாழ்க்கை போதும்... தர்மத்தை அழிக்கும் பாசம் எனக்கு வேண்டாம்... நேர்மையைக் குழிதோண்டிப் புதைக்கும் இந்தப் போலி அன்பு வேண்டாம்...

"ஒளி படைத்த கண்ணினாய் வா வா வா...
உறுதிகொண்ட நெஞ்சினாய் வா வா வா...

..................

பொய்ம்மை கூற அஞ்சுவாய் வா வா வா...

..................

ஒரு பெருஞ் செயல் செய்வாய் வா வா வா..."

யார்? அப்பாவா? அப்பாவா பாடுகிறார்?

ஆயிரமாயிரம் வேதாசலங்களின் குரல்கள்... வந்தே மாதரம்...

அப்பா... சங்கர்...

என்ன செய்ய வேண்டும் என்பது புரிந்துபோக, கதவைச் சப்தத்துடன் திறந்த கௌரி, அலமாரியிலிருந்து தள்ளாடிக்கொண்டு வெளியில் வந்தாள். எழுந்து நின்ற வேகத்தில் மடியில் இருந்த பொருள்கள் தரையில் விழுந்து உருண்டன.

அறைக்கதவைத் திறந்துகொண்டு ஹாலுக்கு வந்தாள்.

நேராய் மானேஜர் அறைக்குள் போனாள். டைரக்ட்லைன் உள்ள டெலிபோனை எடுத்தாள்.



நானாவிதமான சப்தங்களைக் கேட்டு என்னவோ ஏதோ என்று நீட்டிய துப்பாக்கியுடன் ஓடிவந்த தன்ஸிங்கும், பரமேஸ்வரும் உள்ளே ரிஸீவருடன் கௌரி நின்ற கோலத்தைக் கண்டு திகைத்துப் போனார்கள்.

எதையுமே கௌரி லட்சியம் செய்யவில்லை.

நம்பர்களைச் சுழற்றினாள்.

"ஹலோ, போலீஸ் ஸ்டேஷன்?" என்று வினவின போது, கண்முன் அப்பா நின்று,

"தர்மமே வெல்லுமெனும் சான்றோர் சொல் பொய்யாமோ?

கர்ம விளைவுகள் யாம் கண்டதெல்லாம் போதாதோ?"

என்று பாடுவது போன்ற பிரமை உண்டாக, கண்களிலிருந்து சரமாய் நீர் இறங்கி அவள் பார்வையை மறைக்கத் தொடங்கியது.

**முற்றும்**